கழுக்கம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
முன் வைக்கப்பட்ட நாள்
25 ஆக 2015



நீதியரசர் திரு.ஆர்.ரெகுபதி விசாரணை ஆணைய அறிக்கை.

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம்,
மௌலிவாக்கத்தில் 28.06.2014 அன்று பன்மாடிக் கட்டடம்
இடிந்து விழுவதற்கு வழிவகுத்த சந்தர்ப்ப சூழ்நிலைகள், காரணங்கள்
மற்றும் அனைத்து அம்சங்கள் குறித்து

விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்டது.

நீதியரசர் திரு.ஆர்.ரெகுபதி


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. ஆர். ரெகுபதி விசாரணை ஆணைய அறிக்கையை சட்டப் பேரவையில் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட கால தாமதத்திற்கான காரணங்களை விளக்கும் அறிக்கை.

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், மௌலிவாக்கத்தில் 28.06.2014 அன்று பன்மாடிக் கட்டடம் இடிந்து விழுவதற்கு வழிவகுத்த சந்தர்ப்ப சூழ்நிலைகள், காரணங்கள் மற்றும் அனைத்து அம்சங்கள் குறித்து விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட நீதியரசர் திரு. ஆர். ரெகுபதி விசாரணை ஆணைய அறிக்கை 25.08.2014 ஆம் நாளன்று அரசுக்கு கிடைக்கப்பெற்றது. ஆறு திங்கள் கால அளவு முடிவடைந்த 25–02–2015 ஆம் நாளுக்கு முன்னர் அந்த அறிக்கையைத் தமிழ்நாடு சட்டப் பேரவையில் நிருவாகக் காரணங்களினால் வைக்க இயலவில்லை.

TRUTH ALONE TRIUMPHS

கு. ஞானதேசிகன்,
தலைமைச் செயலாளர்.

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், மௌலிவாக்கத்தில் 28.06.2014 அன்று பன்மாடிக் கட்டடம் இடிந்து விழுவதற்கு வழிவகுத்த சந்தர்ப்ப சூழ்நிலைகள், காரணங்கள் மற்றும் அனைத்து அம்சங்கள் குறித்து விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட நீதியரசர் திரு.ஆர்.ரெகுபதி விசாரணை ஆணைய அறிக்கை.



வ. எண்	பொருளடக்கம்	பக்க எண்
1.	முகவுரை	1–10
2.	கட்டடம் இடிந்து விழுந்த பின்னர் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட தேடுதல் பணி, மீட்புப் பணி மற்றும் மறுவாழ்வுப் பணி	11–27
3.	திட்ட வரைபட அனுமதிக்கான விண்ணப்பம் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் நடவடிக்கைகள்	29–45
4.	கட்டுமானதாரர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் கட்டட திட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டடம் கட்டுதல்	47–53
5.	சிறப்புப் புலனாய்வு குழு ஏற்படுத்தல்	55–90
6.	வல்லுநர் குழு ஏற்படுத்துதலும் அவர்களின் கருத்துகளும்	91–112
7.	இடிபாடுகளில் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்தும், அடுக்குமாடிக் கட்டட உரிமையாளர் சங்கம் / அருகில் வசிப்போர் / காயமடைந்தோர் / கட்டட வரைபடம் தயாரிப்போர் சங்கத்திடமிருந்தும் பெறப்பட்ட முறையீடுகள் / மனுக்கள்	113–118
8.	தவறான எண்ணம் கொண்டு எளிதில் பொதுமக்கள் குற்றஞ்சாட்டுவதற்கு இலக்காக அமைந்துள்ள கட்டுநர்கள், கட்டடக்கலை வல்லுநர்கள் மற்றும் பொறியாளர்கள் தங்கள் தரப்பு விளக்கங்களை எடுத்துரைக்க வழங்கப்பட வேண்டிய வாய்ப்பு	119–174
9.	நிகழ்வுப் பின்னணித் தொகுப்பு விபரங்களுடன் எழுவினாக்கள் மீதான முடிவு / ஆழ்ந்தாராய்வு அறிக்கை	175–225

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், மௌலிவாக்கத்தில் 28.06.2014 அன்று பன்மாடிக் கட்டடம் இடிந்து விழுந்த சம்பவம் தொடர்பாக சென்னை, நீதியரசர் மாண்பமை திரு.ஆர்.ரெகுபதி விசாரணை ஆணையத்தின் அறிக்கை.

இந்த விசாரணை கோரமான விதிவசப்பட்ட நாளன்று அதாவது 28.06.2014 அன்று பிற்பகல் 5.30 மணிக்கு, சென்னை, திருவாளர்கள் பிரைம் சிருஷ்டி ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம், காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், மௌலிவாக்கத்தில் 17/7A, 17/7B, 17/7C, 17/8B3 மற்றும் 17/8B4B ஆம் எண்களுள்ள நில அளவைப் புலத்தில் அடித்தளம், உயர்த்தப்பட்ட இடைத்தளம், மற்றும் 11 மாடிகளுடன் கட்டப்பட்டு வந்த முறையே "பெய்த்" (Faith) மற்றும் பிலீப் (Belief) என்ற பெயர்களைக் கொண்ட "A" மற்றும் "B" என்ற இரட்டை பன்மாடி கட்டடங்களுள் ஒன்றான "B" கட்டடத் தொகுதி இடிந்து தரைமட்டமாகி, அந்த இடத்தில் பணிபுரிந்த பெரும்பாலும் கட்டுமானத் தொழிலாளர்களாக இருந்த 61 நபர்கள் உயிரிழந்தது மற்றும் 27 நபர்கள் கடுமையான காயமடைந்தது தொடர்புடையதாகும்.

கட்டடம் இடிந்து விழுந்தது பற்றி அரசு அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. 28.06.2014 அன்று அது பற்றிய தகவல் வரப்பெற்றவுடன், மாநில நிவாரண ஆணையாளராக உள்ள தமிழ்நாடு அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் / சென்னை வருவாய் நிருவாக ஆணையாளர், மாலை 07.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு விரைந்தார். தேசிய பேரிடர் மீட்பு படை, மாநில பேரிடர் மீட்பு படை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் பணியாளர்களின் உதவியுடன் காவல்துறையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு, மீட்புப்பணிகளை உடனடியாகத் தொடங்கினர். மாவட்ட ஆட்சியரும் அங்கு வந்து சேர்ந்தார். வருவாய்த்துறை அலுவலர்கள் அடங்கிய ஒரு குழுவினரும் காவல்துறை அலுவலர்களடங்கிய ஒரு குழுவினரும் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். சம்பவத்தில் பலியான 61 நபர்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. 27 நபர்கள் மீட்கப்பட்டனர். காயமடைந்தவர்கள், மருத்துவமனைக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டனர்.

மேற்சொன்ன சம்பவத்தின் கடுமையான தன்மையைக் கருத்திற்கொண்டு, மேற்சொன்ன கட்டடம் இடிந்து விழுவதற்கு வழிவகுத்த சந்தர்ப்ப சூழ்நிலைகள், காரணங்கள் ஆகியவை பற்றி விசாரணை செய்வதற்காக, தமிழ்நாடு அரசு, பொதுத் (சட்டம் மற்றும் ஒழுங்கு-F) துறையின் 03.07.2014 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்.557–ல் விசாரணை ஆணையம் ஒன்றை நியமித்தது. அது பற்றிய விவரம் வருமாறு:-

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், மௌலிவாக்கத்தில், 28.06.2014 அன்று பன்மாடிக் கட்டடம் இடிந்து விழுந்து, சுமார் 55 (61) நபர்கள் உயிரிழந்தது மற்றும் பலர் கடுமையான காயம் அடைந்தது ஆகியவற்றுக்கு வழிவகுத்த சந்தர்ப்ப சூழ்நிலைகள், காரணங்கள், மற்றும் அனைத்து அம்சங்கள் குறித்து விசாரணை ஆணையம் ஒன்று சுதந்திரமான முறையில் விசாரணை நடத்த வேண்டும் என்று அரசு முடிவெடுத்துள்ளது.

2. பின்வரும் அறிவிக்கை, 03.07.2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்படும்.

அறிவிக்கை

இனிமேல் குறிப்பிடப்படக்கூடிய பொது மக்களின் நலன் குறித்த முக்கியத்துவம் வாய்ந்த நிச்சயமான விவகாரம் பற்றி விசாரணை செய்வதற்காக, சென்னை உயர்நீதிமன்றத்தின் பணியிலிருந்து ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் விசாரணை ஆணையம் ஒன்றை நியமிப்பது அவசியம் என்று தமிழ்நாடு அரசு கருதுவதால்,

ஏனவே, தற்போது 1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச்சட்டத்தின் (மத்தியச்சட்டம் 60/1952) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழக ஆளுநர் அவர்கள், சென்னை உயர்நீதிமன்றத்தின் பணிஓய்வு பெற்ற நீதிபதியான மாண்பமை திரு.ஆர்.ரெகுபதி நீதியரசர் அவர்களை மட்டுமே உறுப்பினராகக் கொண்ட விசாரணை ஆணையத்தை இதனால் நியமிக்கிறார்.

மேற்சொன்ன விசாரணை ஆணையத்தின் ஆய்வு வரம்பு வருமாறு:-

(a) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், மௌலிவாக்கத்தில் உள்ள பன்மாடிக்கட்டடம், 28.06.2014 அன்று இடிந்து விழுவதற்கு வழிவகுத்த சந்தர்ப்ப சூழ்நிலைகள், காரணங்கள் மற்றும் அனைத்து அம்சங்கள் குறித்து விசாரணை செய்தல்.

(b) அதிக எண்ணிக்கையிலான கட்டுமானத் தொழிலாளர்கள் உயிரிழப்பதற்கும், பலர் காயம் அடைவதற்கும் வழிவகுத்த துயரச்சம்பவத்திற்கு எவருடைய கவனக்குறைவு காரணமாக இருந்ததோ அந்த நபர்கள் மீது பொறுப்பு நிர்ணயித்தல்;

மற்றும்

(c) இனிவருங்காலத்தில் இத்தகைய துயரச்சம்பவம் மீண்டும் நிகழ்வதைத் தவிர்ப்பதற்கு எடுக்கப்படவேண்டிய குறைதீர் நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்.

விசாரணை ஆணையம், இந்த அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாத கால அளவிற்குள், அதனுடைய விசாரணையை நிறைவு செய்து, அதனுடைய அறிக்கையை (ஆங்கிலம் மற்றும் தமிழ்) மாநில அரசிடம் அளிக்கும்.

விசாரணை ஆணையம் மேற்கொள்ளவிருக்கிற விசாரணையின் தன்மை மற்றும் இந்த நேர்வின் பிற சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஆகியவை தொடர்பாக, 1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச்சட்டத்தின் (மத்தியச்சட்டம் 60/1952) 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2), (3), (4) மற்றும் (5) உட்பிரிவின் அனைத்து விதித்துறைகள், விசாரணை ஆணையத்திற்கு பொருந்துமாறு செய்யப்படும் என்று தமிழ்நாடு அரசு கருதுவதாலும்;

எனவே, தற்போது 1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 60/1952) 5–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ் நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன சட்டத்தின் மேற்சொன்ன 5 ஆம் பிரிவின் (2), (3), (4) மற்றும் (5) உட்பிரிவின் அனைத்து விதித்துறைகளும் விசாரணை ஆணையத்திற்குப் பொருந்தும் என்று இதனால் உத்தரவிடுகிறார்.

விசாரணை ஆணையத்தின் நியமனம், தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் 03.07.2014 அன்று அறிவிக்கையிடப்பட்டது. விசாரணை ஆணையம் 09.07.2014 அன்று பொறுப்பேற்றுக் கொண்டது. தொடர்புடைய அலுவலர்களின் முன்னிலையில் 'B' கட்டடத் தொகுதியின் இடிபாட்டையும் 'A' கட்டடத்தொகுதியின் நீடித்த தன்மையையும் மதிப்பீடு செய்வதற்காக 11.07.2014 அன்று சம்பவ இடத்தை விசாரணை ஆணையம் பார்வையிட்டது. விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது பற்றி 24.07.2014 அன்று இரண்டு முன்னணி செய்தித்தாள்களில் அதாவது இந்தியன் எக்ஸ்பிரஸ் (ஆங்கிலம்) மற்றும் தினத்தந்தி (தமிழ்) ஆகியவற்றில் செய்தி வெளியிடப்பட்டது. அதில், விசாரணை ஆணையத்தின் மேற்சொன்ன கூறப்பட்ட செய்தியுடன் தொடர்புடைய அல்லது அது குறித்த தகவல் மற்றும் ஆவணங்களை வைத்துள்ள அனைத்து நபர்களும் செய்தியில் குறிப்பிட்டுள்ள விவகாரம் தொடர்பாக, 11.08.2014–ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் உறுதிமொழிப் பத்திரம் வடிவில், வாக்குமூலம் ஒன்றை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது.

விசாரணை ஆணையத்தின் கீழ் பணிபுரிவதற்காக 14 பணியாளர்களுக்கு அனுமதியளித்து, தமிழ்நாடு அரசு, பொதுத் (சட்டம் மற்றும் ஒழுங்கு–F) துறையின் 15.07.2014 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்.611–ஐ வெளியிட்டது.

சென்னை, மௌலிவாக்கத்தில் கட்டப்பட்டு வந்த 11 மாடிக்கட்டடம் இடிந்து விழுந்தது தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்கைப் புலனாய்வு செய்வதற்காக, சென்னை, காவல்துறை ஆணையாளர், 15.07.2014ஆம் நாளிட்ட 201/COP/Camp/2014-ல் செயல்முறை ஆணை மூலம் சிறப்பு புலனாய்வுக் குழு ஒன்றை அமைத்தார்.

செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பொருண்மையின் தன்மையை கருதிப் பார்த்த விசாரணை ஆணையம், அப்பொருண்மை குறித்து விசாரணை ஆணையத்திற்கு உதவி செய்வதற்காக, வல்லுநர்கள் அடங்கிய தொழில்நுட்பக்குழு ஒன்றை அமைக்க விசாரணை ஆணையம் விழைந்தது. அதன் அடிப்படையில் அரசு முதன்மைச் செயலர், 17.07.2014ஆம் நாளிட்ட 3309/L & O-F/2014-1 ஆம் எண்ணுள்ள கடிதம் ஒன்றை, இந்த ஆணையத்திற்கு வழங்கியது. விசாரணை ஆணையம், விசாரணை ஆணையத்திற்கு உதவி செய்வதற்காக, 1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் 5B பிரிவின் கீழ், பொறியியல் வல்லுநர்கள் / பணியிலிருந்து ஓய்வு பெற்ற சில அலுவலர்கள் அடங்கிய தொழில்நுட்ப வல்லுநர்களின் குழு ஒன்றை, 21.07.2014 ஆம் நாளிட்ட 01/Admn./2014 ஆம் எண்ணுள்ள செயல்முறை ஆணை மூலம் அமைத்தது. அது பற்றிய தகவல், அதே நாளன்று அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

விசாரணை ஆணையத்திற்கு உதவி செய்வதற்காகவும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவற்றுக்கு பதிலளிப்பதற்கு ஆவணங்களை சேகரிப்பதற்காகவும் விசாரணை ஆணையம், மேற்படி சட்டத்தின் 5A பிரிவின் கீழ், சென்னை சிறப்பு புலனாய்வுக்குழுவுக்கு, 24.07.2014 ஆம் நாளிட்ட 6/Admn//2014 ஆம் எண்ணுள்ள செயல்முறை ஆணை மூலம் அதிகாரமளித்துள்ளது. அது பற்றிய தகவல், சிறப்பு புலனாய்வுக் குழுவுக்கு தெரிவிக்கப்பட்டது.

மௌலிவாக்கத்திலுள்ள மேற்சொன்ன இடிந்து விழுந்த கட்டடத்தின் கட்டுமானம் தொடர்பாக, விசாரணை ஆணையம், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து அனைத்து மூல ஆவணங்களையும் கோரியது. அவை, 31.07.2014 அன்று விசாரணை ஆணையத்திற்கு வரப்பெற்றன. அதைப்போன்றே மேற்சொன்ன கட்டடத்திற்கு அரசாணை பிறப்பிப்பதற்கு வழிவகுத்த அனைத்து மூல ஆவணங்களும் தலைமைச் செயலகத்திலுள்ள வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறையிடமிருந்து கோரப்பட்டன. அவை, 30.07.2014 அன்று விசாரணை ஆணையத்திற்கு வரப்பெற்றன.

உண்மைத்தகவலறியும் அமைப்பாக உள்ள விசாரணை ஆணையம், பல்வேறு ஆதாரங்கள் மூலம் வாய்மொழி ஆவணங்களையும், எழுத்துமூலமான ஆவணங்களையும் சேகரிக்கிற முயற்சியில் ஈடுபட்டது. சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு

அரசு ஆகியவற்றிடமிருந்து ஆவணங்கள் வரப்பெற்றதுடன், சிறப்பு புலனாய்வுக்குழு, தொழில் நுட்ப வல்லுநர்கள் குழு ஆகியவற்றிடமிருந்தும் தொடர்புடைய ஆவணங்கள் வரப்பெற்றுள்ளன. விசாரணை ஆணையம், செய்தித்தாள்களில் வெளியிட்டவற்றுக்கு பதிலளிக்கும் வகையில் திட்ட வரைபடம் தயாரிப்பவர் சங்கம், அடுக்கக உரிமையாளர்கள் சங்கம், இடிந்து விழுந்த கட்டடத்திற்கு அண்மையில் வசிப்பவர்கள், காயமடைந்தவர்கள் மற்றும் ஏனையோரிடமிருந்தும் முறையீடுகள் வரப்பெற்றுள்ளன. ஆவணங்கள் வரப்பெற்றவுடன், ஒவ்வொரு ஆவணம் பற்றியும் அந்தந்த அத்தியாயங்களில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது. வாய்மொழி மற்றும் எழுத்து மூலமான ஆவணங்கள் தனியே இணைக்கப்பட்டுள்ளன. அந்த ஆவணங்கள் தொடர்பான தகவலும் அந்தந்த அத்தியாயங்களில் அளிக்கப்பட்டுள்ளன.

சேகரிக்கப்பட்ட ஆவணங்கள் வரப்பெற்றவுடன், விசாரணை ஆணையம், இயற்கை நீதிக்கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக, வாய்ப்பு அளிப்பதன் வாயிலாக, விசாரணை ஆணையத்தின் கருத்துரை மற்றும் முடிவு மூலம் பாதிக்கப்படக்கூடிய நபர்களை ஆஜராகுமாறு கோரியது. ஆஜராவதற்காக, அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக அழைப்பாணைகளும் வழங்கப்பட்டுள்ளன.

அதற்கிணங்க, வேலூர், மத்தியச் சிறையிலிருந்த அவர்கள் விசாரணை ஆணையம் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் அவ்வாறு ஆஜர் செய்யப்பட்டவுடன், இந்த விசாரணை ஆணையம் தயாரித்த வினாப்பட்டிக்கு பதிலளிப்பதற்காக, அவர்களுக்கு வாய்ப்புகள் அளிக்கப்பட்டன. தமிழ்நாடு அரசிடமிருந்து அரசாணை வரப்பெறுகிற வரையில் திட்டவரைபடத்திற்கு அனுமதி கோரி, கட்டடம் கட்டுநர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமத்திடம் அளித்த விண்ணப்பத்திலிருந்து தொடங்கி, இந்த விசாரணை ஆணையத்திடம் தாக்கல் செய்த அனைத்து உறுதிமொழிப்பத்திரங்கள், இணைப்புடன் கூடிய சிறப்பு புலனாய்வுக்குழுவின் அறிக்கை, தொழில்நுட்பக் குழுவின் அறிக்கை, ஏனைய அனைத்து வாய்மொழி மற்றும் எழுத்துமூலமான ஆவணங்கள் ஆகியவற்றை ஆஜர் செய்யப்பட்ட நபர்கள் பரிசீலித்துள்ளனர்.

18.08.2014 அன்று முற்பகல் 11.00 மணிக்கு அவர்கள் ஆஜர் செய்யப்பட்டவுடன், வினாப்பட்டிக்கு பதில்களைத் தயாரிப்பதற்கு சிறிது கால அவகாசம் தேவை என்று பிற்பகல் 5.00 மணிக்கு கட்டடம் கட்டுபவரும், கட்டடக்கலை வல்லுநர்களும் கருதியதால், அவர்கள் கேட்டுக்கொண்டவாறு அவர்களுக்குக் கால அவகாசம் அளிக்கப்பட்டது. அடுத்த நாள் அதாவது 19.08.2014 அன்று முற்பகல் 10.30 மணிக்கு ஆஜராக வேண்டுமென்று அவர்கள்

அனைவருக்கும் உத்தரவிடப்பட்டது. 19.08.2014 அன்று கூட அனைத்து ஆவணங்களையும் பரிசீலித்த பின்னர், அவர்களுக்கு அளிக்கப்பட்ட வினாப்பட்டிக்கு பதில் தயாரித்து, அளிப்பதற்கு, மேலும் சிறிது கால அவகாசம் அளிக்குமாறு பிற்பகல் 05.00 மணிக்கு அவர்கள் கோரிக்கை விடுத்தனர். அவர்களுக்கு, மீண்டும் கால அவகாசம் அளிக்கப்பட்டது. 20.08.2014 அன்று முற்பகல் 10.30 மணிக்கு அவர்கள் அனைவரையும் ஆஜர்படுத்தியவுடன், அவர்கள், வினாப்பட்டிக்கு, தனித்தனியாக அவர்களுடைய பதில்களைத் தயாரித்தனர். அவர்களுடைய பதில்களை, இந்த ஆணையத்தின் முன்னிலையில், அவர்கள் தனித்தனியாக அளித்தனர். வினாப்பட்டி, அவர்கள் அளித்த பதில்கள் ஆகியவற்றின் நகல்கள், அவர்களுக்கு தனித்தனியாக அளிக்கப்பட்டுள்ளன. விசாரணை ஆணையத்தின் செயல்முறை ஆணைகள், இணைப்பில் அளிக்கப்பட்டுள்ளன.

சேகரிக்கப்பட்ட அனைத்து உறுதிமொழிப் பத்திரங்கள் மற்றும் ஆவணங்களை வரிசைப் படுத்தியதன் பேரிலும், அந்த ஆவணங்களை / உறுதிமொழிப்பத்திரங்களை அத்தியாயம் வாரியாக விரிவாக விவாதித்த பின்னரும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள குறிப்பிற்கு பதிலளிப்பதென்று இந்த ஆணையம் முடிவெடுத்துள்ளது. அரசாணை இக்குடன் இணைக்கப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

03.07.2014 ஆம் நாளிட்ட
தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு
வெளியீட்டில் வெளியிடப்படவுள்ளது.

சுருக்கம்

விபத்து – காஞ்சிபுரம் மாவட்டம் – சுமார் 55 நபர்கள் உயிரிழப்பதற்கும் பலர் காயமடைவதற்கும் வழிவகுத்த காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், மௌலிவாக்கத்தில் பன்மாடிக் கட்டடம் 28.06.2014 அன்று மாலை, இடிந்து விழுந்த சம்பவம் – 1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) கீழ் விசாரணை ஆணையத்தை நியமித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பொதுத் (சட்டம் மற்றும் ஒழுங்கு – F) துறை

அரசாணை (நிலை) எண்.557

நாள்: 03.07.2014
ஜெய வருடம், ஆனி மாதம் 19 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு – 2045

படிக்கவும்:

ஆணை:

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், மௌலிவாக்கத்தில், 28.06.2014 அன்று பன்மாடிக்கட்டடம் இடிந்து விழுந்து, சுமார் 55 (61) நபர்கள் உயிரிழந்தது மற்றும் பலர் கடுமையான காயம் அடைந்தது ஆகியவற்றுக்கு வழிவகுத்த சந்தர்ப்ப சூழ்நிலைகள், காரணங்கள், மற்றும் அனைத்து அம்சங்கள் குறித்து விசாரணை ஆணையம் ஒன்று சுதந்திரமான முறையில் விசாரணை நடத்த வேண்டும் என்று அரசு முடிவெடுத்துள்ளது.

2. பின்வரும் அறிவிக்கை, 03.07.2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்படும்.

அறிவிக்கை

இனிமேல் குறிப்பிடப்படக்கூடிய பொது மக்களின் நலன் குறித்த முக்கியத்துவம் வாய்ந்த நிச்சயமான விவகாரம் பற்றி விசாரணை செய்வதற்காக, சென்னை உயர்நீதிமன்றத்தின் பணியிலிருந்து ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் விசாரணை ஆணையம் ஒன்றை நியமிப்பது அவசியம் என்று" தமிழ்நாடு அரசு கருதுவதால்;

எனவே, தற்போது 1952 ஆம் ஆண்டு விசாரணை, விசாரணை ஆணையச்சட்டத்தின் (மத்தியச்சட்டம் 60/1952) 3–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழக ஆளுநர் அவர்கள், சென்னை உயர்நீதிமன்றத்தின் பணிஓய்வு பெற்ற நீதிபதியான மாண்பமை திரு.ஆர்.ரெகுபதி நீதியரசர் அவர்களை மட்டுமே உறுப்பினராகக் கொண்ட ஒரு நபர் விசாரணை ஆணையத்தை இதனால் நியமிக்கிறார்.

3. மேற்சொன்ன விசாரணை ஆணையத்தின் ஆய்வு வரம்பு வருமாறு:-

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், மௌலிவாக்கத்தில் 28.06.2014 அன்று மாலை 55 பேர் உயிரிழக்கவும், பலர் காயமுறவும் காரணமாய் அமைந்த பன்மாடிக் கட்டடம் இடிந்து விழுந்து நொறுங்கிய நிகழ்வு குறித்து அதன் பல்வேறு கூறுகள், நிகழ்வுக்கான காரணங்கள் மற்றும் சூழ்நிலைகளை விசாரித்தல்;

(ஆ) அதிக எண்ணிக்கையிலான கட்டுமானத் தொழிலாளர்கள் உயிரிழப்பதற்கும், பலர் காயம் அடைவதற்கும் வழிவகுத்த துயரச்சம்பவத்திற்கு எவருடைய கவனக்குறைவு காரணமாக இருந்ததோ, அந்த நபர்கள்மீது பொறுப்பு நிர்ணயித்தல்; மற்றும்

(இ) இனிவருங்காலத்தில் இத்தகைய துயரச்சம்பவம் மீண்டும் நிகழ்வதைத் தவிர்ப்பதற்கு எடுக்கப்படவேண்டிய குறைதீர் நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்.

4. விசாரணை ஆணையம், இந்த அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாத கால அளவிற்குள், அதனுடைய விசாரணையை நிறைவுசெய்து, அதனுடைய அறிக்கையை (ஆங்கிலம் மற்றும் தமிழ்) மாநில அரசிடம் அளிக்கும்.

5. விசாரணை ஆணையம் மேற்கொள்ளவிருக்கிற விசாரணையின் தன்மை மற்றும் இந்த நோ்வின் பிற சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஆகியவை தொடர்பாக, 1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச்சட்டத்தின் (மத்தியச்சட்டம் 60/1952) 5–ஆம் பிரிவைச் சேர்ந்த (2), (3), (4) மற்றும் (5) உட்பிரிவின் அனைத்து விதித்துறைகள், விசாரணை ஆணையத்திற்கு பொருந்துமாறு செய்யப்படும் என்று தமிழ்நாடு அரசு கருதுவதாலும்;

6. எனவே, தற்போது 1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 60/1952) 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன சட்டத்தின் மேற்சொன்ன 5 ஆம் பிரிவின் (2), (3), (4) மற்றும் (5) உட்பிரிவின் அனைத்து விதித்துறைகளும் விசாரணை ஆணையத்திற்குப் பொருந்தும் என்று இதனால் உத்தரவிடுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

யத்தீந்திர நாத் ஸ்வேன்,
முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

நீதியரசர் திரு.ஆர்.ரெகுபதி,
சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி.(ஒய்வு)
NCB-1, பி.எஸ்.குமாரசாமிராஜா சாலை, சென்னை–28.
எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநர், சென்னை–2.
பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–79.
(03.07.2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடுவதற்காக) (2 நகல்கள்).
ஆளுநரின் செயலாளர், ராஜ்பவன், சென்னை–22.
கூடுதல் தலைமைச்செயலாளர் / முதலமைச்சரின் செயலாளர்–1, சென்னை–9.
காவல்துறை தலைமை இயக்குநர், சென்னை–4.
மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் மாவட்டம்.
முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி துறை, சென்னை–9.
இயக்குநர், செய்தி மற்றும் மக்கள்தொடர்புத்துறை, சென்னை–9.
உயர்நீதிமன்ற தலைமைப்பதிவாளர், சென்னை–104.

நகல்

காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு), சென்னை–4.
மத்திய அரசு செயலாளர், உள்விவகாரங்கள் அமைச்சகம், புதுதில்லி,

மத்திய அரசின் செயலாளர், சட்டம், நீதி மற்றும் கம்பெனி விவகாரங்கள் அமைச்சகம், புதுதில்லி.

கருவூலங்கள் மற்றும் கணக்குகள் இயக்குநர், சென்னை–15.

சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், சென்னை–9.

மாநிலக்கணக்குத்துறைத் தலைவர், சென்னை–9 / 18.

நிதித்துறை, உள்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி துறை, சட்டத்துறை, சென்னை–9.

பொதுத் (மிகக்கமுக்கம் / சிறப்பு–A) துறை, சென்னை–9.

இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

(ஒப்பம்)

பிரிவு அலுவலர்

கட்டடம் இடிந்து விழுந்த பின்னர் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட தேடுதல் பணி, மீட்புப்பணி மற்றும் மறுவாழ்வுப்பணி.

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், மௌலிவாக்கத்தில் 17/7A, 17/7B, 17/7C, 17/8B3 மற்றும் 17/8B4B ஆம் எண்களுள்ள நிஅ புலங்களில் கட்டப்பட்டு வந்த 11 மாடிக்கட்டடம் ஒன்று இடிந்து விழுந்தது பற்றி 28.06.2014 அன்று பிற்பகல் சுமார் 5.30 மணிக்கு தகவல் வரப்பெற்றவுடன், தமிழ்நாடு அரசு, மாநில நிவாரண ஆணையாளர் என்ற வகையில் கூடுதல் தலைமைச் செயலாளரை / வருவாய் நிருவாக ஆணையாளரை அனுப்பிவைத்தது. அவர், பிற்பகல் 7.00 மணிக்கு சம்பவ இடத்தை அடைந்தார். இக்கட்டடம் இரண்டு தொகுதிகளாகக் கட்டப்பட்டிருந்தது. "A" கட்டடத் தொகுதி "பெய்த்" (Faith) என்று பெயரிடப்பட்டிருந்தது. B கட்டடத்தொகுதி "பிலீப்" (Belief) என்று பெயரிடப்பட்டிருந்தது. அதில், B கட்டடத்தொகுதி இடிந்து விழுந்துள்ளது. இக்கட்டடம், திருவாளர்கள் "பிரைம் சிருஷ்டி ஹவுசிங் பிரைவேட் லிமிடெட்" என்ற நிறுவனத்தால் கட்டப்பட்டிருந்தது.

விசாரணை ஆணையத்தின் முன்னிலையில் உறுதிமொழிப்பத்திரத்தைத் தாக்கல் செய்த மாநில நிவாரண ஆணையாளர், அதில் அரசு மேற்கொண்ட நிவாரணப்பணிகளை விவரித்திருந்தார். 28.06.2014 அன்று பிற்பகல் 7.00 மணியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட மீட்புப்பணி மற்றும் நிவாரணப்பணி பற்றி உறுதிமொழிப்பத்திரத்தில் அவர் விளக்கியுள்ளார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு:-

தேசிய பேரிடர் மீட்புப்படை, மாநில பேரிடர் மீட்புப்படை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை தேடுதல் பணியை மேற்கொண்டு, மீட்புப்பணிகளை உடனடியாகத் தொடங்கிவிட்டது. மருத்துவக்குழுக்களும் அவசர சிகிச்சை நோயாளர் வண்டிகளும் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. காஞ்சீபுரம் மாவட்ட ஆட்சியர் அவருடைய வருவாய் அலுவலர்களின் குழுவுடன் சம்பவ இடத்திற்கு வந்திருந்தார். தேடுதல் பணியும், மீட்புப்பணியும் அதே நாளன்று தொடங்கப்பட்டது.

2. மாநில அவசரப் பணிகள் மையம், 1070 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணுடன், என்னுடைய அலுவலகத்தில் 24 மணி நேரமும் இயங்கி வந்தது. உதவி ஆணையாளர் மற்றும் கண்காணிப்பாளர்கள் பதவித்தரத்தில் கூடுதல் பணியாளர்களைக் கொண்டு மாநில அவசரப் பணிகள் மையத்தை நிருவாகிக்குமாறு இணை ஆணையாளருக்கு (பேரிடர் மேலாண்மை மற்றும் துயர் தணிப்பு) உத்தரவிடப்பட்டது. தேடுதல் பணி மற்றும் மீட்புப்பணி 04.07.2014 அன்று படிப்படியாகக் குறைகிற வரையில் இந்த ஏற்பாடு தொடர்ந்து விபத்து தொடர்பாக பொதுமக்கள் கோரிய

தகவல் உடனடியாக அளிக்கப்பட்டது. தேவையான தகவல் கோரி பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற சுமார் 448 தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கப்பட்டது.

3. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 29.06.2014 அன்று கட்டடம் இடிந்து விழுந்த இடத்தைப் பார்வையிட்டார். பின்னர், ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையைப் பார்வையிட்டார். மாண்புமிகு முதலமைச்சர் உயிர் பிழைத்த தொழிலாளர்களுக்கு ஆறுதல் கூறி, அவர்களுக்கு சிறந்த சிகிச்சை அளிக்கப்படும் என்று உறுதியளித்தார். உயிர் பிழைத்தவர்கள், இடிபாடுகளிலிருந்து மீட்கப்படுகிறவரையில் தேடுதல் பணியையும் மீட்புப்பணியையும் தொடருமாறு அலுவலர்களுக்கு உத்தரவுகள் அளிக்கப்பட்டன.

தேடுதல் பணி மற்றும் மீட்புப்பணிகளில் கீழ்க்காணும் முகவரமைப்புகள் ஈடுபடுத்தப்பட்டன.

1. தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை.
2. தேசிய பேரிடர் மீட்புப்படை.
3. சென்னை மாநகர காவல்துறை.
4. தமிழ்நாடு அதிரடிப்படை (கமாண்டோ படை) மற்றும் மாநில பேரிடர் மீட்புப்படை.
5. வருவாய் துறை.
6. மக்கள் நல்வாழ்வுத் துறை.
7. 108 ஆம்புலன்ஸ் மற்றும் அமரர் ஊர்தி.
8. நகராட்சி நிருவாகத்துறை.
9. ஊரக வளர்ச்சி துறை.
10. பொதுப்பணித் துறை.
11. நெடுஞ்சாலைகள் துறை.
12. சென்னை மாநகராட்சி.
13. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்.
14. தமிழ்நாடு ஊர்க்காவல் படை.
15. சென்னை தொழில்நுட்பவியல் நிறுவனம்.
16. மோப்ப நாய் படை.

4. கால இடைவெளியின்றி மீட்புப்பணிகளை இரவு பகல் பாராமல் மேற்கொள்வதற்காக, தகுதிபெற்ற தொழில்நுட்பப்பணியாளர்கள், பல்வேறு இயந்திரங்களையும், அனைத்து நவீன சாதனங்களையும் பயன்படுத்தினர். காயமடைந்தவர்களையும், இறந்தவர்களின் உடல்களையும் மருத்துவமனைகளுக்கு எடுத்துச் செல்வதற்காக, 108 ஆம்புலன்ஸ் மற்றும் அமரர் ஊர்தி ஆகியவை ஆயத்தமாக வைக்கப்பட்டிருந்தன.

5. மீட்புப்பணிகளில் ஈடுபட்ட பல்வேறு முகவரைமைப்புகளின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தை, பேரழிவு நடைபெற்ற இடத்திலேயே கூட்டியதன் மூலம் காலை, மாலை ஆகிய இரு நேரங்களிலும் அனைத்து மீட்புக்குழுக்களுக்கும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. விபத்து நடைபெற்ற இடத்தில் ஒன்று, இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் ஒன்று, போரூர், இராமச்சந்திரா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஒன்று என மூன்று தகவல் மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றுக்கும் துணை மாவட்ட ஆட்சியர் பதவித்தரத்தில் ஓர் அதிகாரி தலைமை வகித்தார். உயிரிழந்த / காயமடைந்த நபர்களின் உறவினர்களுக்கு உதவி செய்வதற்காக, இராயப்பேட்டை அரசு மருத்துவமனையிலும், ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும் வருவாய் அலுவலர்களின் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்தது. நிவாரணம் மற்றும் மீட்புப்பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்வதற்காக, அனைத்து முகவரமைப்புகளும் முதலாம் நாளிலிருந்தே ஒருங்கிணைந்த முறையில் பணிகளில் ஈடுபட்டனர். தேசிய பேரிடர் மீட்புப்படை, விபத்து நடைபெற்ற இடத்தில் உயிருடன் இருப்பவர்களைக் கண்டுபிடிக்கிற கேமரா, தெர்மல் இமேஜ் கேமரா, காற்றை மேலே எழுப்புகிற பை மற்றும் பேரிடர் சமிக்ஞை யூனிட் போன்ற நவீன சாதனங்களைப் பயன்படுத்தியது. இரவு நேரத்திலும் மீட்புப்பணி இடைவிடாமல் தொய்வின்றி நடைபெறுவதை உறுதிசெய்வதற்காக, விபத்து நடைபெற்ற இடத்தில் ஒளிவெள்ளவிளக்குகள் போன்ற போதிய விளக்குவசதி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மீட்புக்குழுவினர் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, சென்னை மாநகர காவல் துறை, அந்தப்பகுதியில் தடுப்பெல்லை வேலி அமைத்திருந்தனர். பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிவதற்காக, தேசிய பேரிடர் மீட்புப்படை மற்றும் தீயணைப்புப்படையினர் மோப்ப நாய்களையும் பயன்படுத்தினர். உயிர்பிழைத்தவர்களும் மற்றும் இறந்துபோனவர்களின் உடல்களும் மீட்கப்படுகிறவரையில் துறை அலுவலர்கள் அனைவரும் சம்பவ இடத்தில் முகாமிட்டிருந்தனர்.

6. பேரழிவு ஏற்பட்ட இடத்திலும் அதைச் சுற்றிலும் உள்ள பகுதிகளில் துப்புரவைப் பராமரிப்பதற்காகவும், இறந்த உடல்கள் மீட்கப்படுகிறபோது நோய்கள் பரவுவதைத் தடுப்பதற்காகவும், உள்ளாட்சி அமைப்புகள், துப்புரவுப் பணிகளை மேற்கொண்டுள்ளன. இவை தவிர, மீட்புக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும், நோய்த்தடுப்பு மருந்துகள் அளிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டனர்.

7. உயிர்பிழைத்தவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, கவனமாக மீட்கப்பட்டபோது உரிய கவனம் செலுத்தப்பட்டது. ஏனெனில் இடிபாடுகளின் கீழே சிக்கியிருந்தவர்கள் உடல்ரீதியான பாதிப்பு மற்றும் மன அழுத்தத்தில் இருந்தனர். மீட்பு முகவரமைப்புகள், தரைத்தளம் வரையிலும் சுமார் 500 லாரி சுமைகளை, மெதுவாகவும் நிதானமாகவும் அகற்றியிருந்தனர். தேடுதல் பணி மற்றும் மீட்புப்பணிகளில் ஒட்டுமொத்தமாக சுமார் 3,600 நபர்கள், இரவு, பகல் நேரங்களில் பல்வேறு முறைமாற்றப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

8. பேரழிவு ஏற்பட்ட இடத்திலிருந்து காயமுற்ற மொத்தம் 27 நபர்கள் மீட்கப்பட்டு, ஆம்புலன்ஸ்கள் மூலம் உடனடியாக எடுத்துச்செல்லப்பட்டு, தீவிர சிகிச்சை அளிப்பதற்காக, ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், அரசு பொது மருத்துவமனைகளிலும் அனுமதிக்கப்பட்டனர். கட்டடம் இடிந்து விழுந்த இடத்திலிருந்து மொத்தம் 61 உடல்கள், சவப்பரிசோதனை செய்யப்படுவதற்காக, ஸ்ரீஇராமச்சந்திரா மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் இராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கும் எடுத்துச்செல்லப்பட்டன.

9. காயமடைந்த 27 நபர்கள் மற்றும் உயிரிழந்த 61 நபர்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:

காயமடைந்த / உயிருடன் இருந்த நபர்களின் பட்டியல்

தமிழ்நாடு மாநிலம் (ஆண் 13 + பெண் 0 = மொத்தம் 13)

தொடர் எண்.	பெயர்	வயது மற்றும் பாலினம்	முகவரி	மாவட்டம்
1.	மருதமுத்து	ஆண், வயது 25	195/4, வடக்கு தெரு, எஸ்.வலையப்பட்டி, திருமங்கலம்.	மதுரை.
2.	முத்துபாண்டி, த.பெ. குருசாமி	ஆண், வயது 23	புதுப்பட்டி கிராமம், திருமங்கலம்.	மதுரை.
3.	செல்வபாண்டி, த.பெ. பாண்டி	ஆண், வயது 29	2 ஆம் வார்டு, பன்னீர்குண்டு, அம்மாபட்டி, திருமங்கலம்.	மதுரை.
4.	ராஜா, த.பெ. குமரேசன்	ஆண், வயது 21	எம்.ஜி.ஆர்.நகர், தேனி.	தேனி.

5.	பஞ்சாட்சரம், த.பெ. சுப்பிரமணி.	ஆண், வயது 67	ரங்கா நகர், மௌலிவாக்கம், சென்னை–124.	காஞ்சீபுரம்.
6.	ராஜூ, த.பெ. சிவனாண்டி.	ஆண், வயது 28	65, சுந்தரம் தியேட்டர் தெரு, தேனி.	தேனி.
7.	பூமிநாதன், த.பெ. குருசாமி.	ஆண், வயது 40	காந்திநகர், வடிவேலுக்கரை கிராமம், திருமங்கலம்.	மதுரை.
8.	கௌரிசங்கர் பிரபு, த.பெ. சுப்பிரமணியன்.	ஆண், வயது 22	8/54, ஜோசியர் தெரு, டி.கல்லுப்பட்டி, பேரையூர் வட்டம்.	மதுரை.
9.	பாண்டியராஜ், த.பெ. தங்கபாண்டி.	ஆண், வயது 27	12/12 ராஜீவ் காலனி, காரியாப்பட்டி.	விருதுநகர்.
10.	பெக்காமன், த.பெ. முத்து.	ஆண், வயது 22	10A பழைய அஞ்சலகம், ஒடை தெரு.	தேனி.
11.	கந்தசாமி, த.பெ. ராஜகோபால்.	ஆண், வயது 53	1, முத்துராமலிங்க தெரு, கலைஞர் நகர், பரங்கிமலை.	காஞ்சீபுரம்
12.	விஜயகுமார், த.பெ. சிவனாண்டி.	ஆண், வயது 36	ஆறுமுகம் சாலை, காமராஜபுரம், திருமங்கலம்.	மதுரை.
13.	திரு.செந்தில், த.பெ. குருவப்பா.	ஆண்	வரதர் நகர், பேரையூர் காலனி.	மதுரை.

ஆந்திரப்பிரதேச மாநிலம் (ஆண் 3 + பெண் 8 = மொத்தம் 11)

தொடர் எண்.	பெயர்	வயது மற்றும் பாலினம்	முகவரி
1.	சதீஷ், த.பெ. ஏரக்னயா	ஆண், வயது 30	ராயமில்லா, மக்குமண்டமம், சௌகார் வட்டம், விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
2.	பாலி நாயுடு, த.பெ. அண்ணா நாயுடு.	ஆண், வயது 25	கருகுபள்ளி, விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
3.	மகேஷ், த.பெ. சௌடய்யா.	ஆண், வயது 23	சீகாங்குளம், ஆந்திரப்பிரதேசம்.
4.	ராவணம்மா, க.பெ. ஜானய்யா.	பெண், வயது 45	26, நாராயணபுரம், மாடலின், குமாரமண்டபம், விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
5.	லெட்சுமி, க.பெ. சூரியநாராயணன்.	பெண், வயது 40	தலபெட்டா, குமாரமண்டபம், விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
6.	சுஜாதா, க.பெ. சிவா நாயுடு.	பெண், வயது 27	உஷ்கர் கிராமம் விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
7.	சுனிதா, த.பெ. சூரியநாராயணன்.	பெண், வயது 18	பார்வதிபுரம், ஜலப்பேடு, விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.

8.	மீனாம்மாள், க.பெ. மந்திரிகோபால்.	பெண், வயது 35	கோரப்பா கிருஷ்ணாபுரம் கிராமம், ஆந்திரப்பிரதேசம்.
9.	கிருஷ்ணவேணி, க.பெ. சீனு.	பெண், வயது 30	கோட்டவில் ஹீரமண்டலம், சிர்காகுளம் வட்டம், ஆந்திரப்பிரதேசம்.
10.	சுசீலா, தபெ. திரிநாதன்.	பெண், வயது 24	கைத்தலா கிராமம், விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
11.	திருமதி அனுசூர்யா, க.பெ. கௌரி நாயுடு.	பெண், வயது 35	ப்டங்கா கிராமம் மற்றும் மண்டல், ஆந்திரப்பிரதேசம்.

ஒடிசா மாநிலம் (ஆண் 3 + பெண் 0 = மொத்தம் 3)

தொடர் எண்.	பெயர்	வயது மற்றும் பாலினம்	முகவரி
1.	வட்டி பாப்பா ராவ்	ஆண், வயது 50	கந்தவால் காசிநகர், கஜபதி மாவட்டம், ஒடிசா.
2.	கோவிந்தா, த.பெ. மோனோ.	ஆண், வயது 19	ஒடிசா.
3.	பிரகாஷ்ரௌத், த.பெ. கௌரவ் ரௌத்.	ஆண், வயது 27	ராஜ்பூர், ராஜ்நகர், கேந்திரிய பாரா, ஒடிசா.

காயமடைந்தவர்களின் பட்டியல் – சுருக்கம்

மாநிலம்	ஆண்	பெண்	மொத்தம்
தமிழ் நாடு	13	0	13
ஆந்திரப்பிரதேசம்	03	8	11
ஒடிசா	03	0	03
மொத்தம்	19	8	27

உயிரிழந்த நபர்களின் பட்டியல்

தமிழ்நாடு மாநிலம் (ஆண் 13 + பெண் 1 = மொத்தம் 14

தொடர் எண்	பெயர்	வயது மற்றும் பாலினம்	முகவரி	மாவட்டம்
1.	மருதுபாண்டி, த.பெ. பாலன்.	ஆண், வயது 25	வேலம்பூர் அஞ்சல், புச்சம்பட்டி, பேரையூர் வட்டம்.	மதுரை
2.	லோகநாதன், த.பெ. கண்ணன்.	ஆண், வயது 45	10, இரண்டாம் முதன்மைச்சாலை, பசும்பொன் நகர், கள்ளிக்குப்பம், அம்பத்தூர்.	திருவள்ளூர்

3.	கணேசன், த.பெ. தங்கவேல்.	ஆண், வயது 42	திலகர் வீதி, தோப்பு தெரு, பரவக்கோட்டை, மன்னார்குடி.	திருவாரூர்
4.	குமார், த.பெ. முருகன்.	ஆண், வயது 32	மாரியம்மன்கோயில் தெரு, இளையனார்குப்பம், சங்கராபுரம் வட்டம்.	விழுப்புரம்
5.	வாசு, த.பெ. அடைக்கலம்.	ஆண், வயது 40	பொய்க்காரபட்டி, கண்ணன்சேரி அஞ்சல், அழகர்கோயில்.	மதுரை
6.	திருவேங்கடம், த.பெ. வள்ளிகண்ணன்	ஆண், வயது 28	கானம்யன் கிராமம்.	விழுப்புரம்
7.	முகமதுஹாசன், த.பெ. முகமது யாசீன்.	ஆண், வயது 25	47/23, பர்மா காலனி.	விருதுநகர்
8.	முருகேசன், த.பெ. ஆறுமுகம், மதுரை.	ஆண், வயது 35	வடமலை ஊராட்சி, பொற்காலம் நகர், திருமங்கலம்.	மதுரை
9.	தினேஷ்குமார், த.பெ. இராமகிருஷ்ணன்.	ஆண், வயது 35	மனை எண்.5, சீனிவாசா நகர், கொளப்பாக்கம், சென்னை–102.	காஞ்சீபுரம்
10.	கருப்பையா, த.பெ. மாரியப்பதேவர்	ஆண், வயது 41	7/19, தவுடாபட்டி, திருமங்கலம் வட்டம்.	மதுரை
11.	சின்ன அழகர்சாமி, த.பெ. ராமர்.	ஆண், வயது 34	எம்.ஜி.ஆர். காலனி, மீசலூர், செவல்பட்டி.	விருதுநகர்
12.	கருப்பையா, த.பெ. ராசுதேவர்	ஆண், வயது 50	ஆகாஷ் நகர், கெருகம்பாக்கம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம்.	காஞ்சீபுரம்
13.	முருகன், த.பெ. மூக்கண்டி.	ஆண், வயது 42	எண்.3/319, படந்தல் கிராமம், சாத்தூர் வட்டம்.	விருதுநகர்
14.	அன்பழகி, க/பெ. குமார்.	பெண், வயது 29	மாரியப்பன் தெரு, இளையனார்குப்பம், சங்கராபுரம் வட்டம்.	விழுப்புரம்

உயிரிழந்த நபர்களின் பட்டியல்

ஆந்திர பிரதேசம் மாநிலம் (ஆண் 21 + பெண் 17= மொத்தம் 38)

தொடர் எண்.	பெயர்	வயது மற்றும் பாலினம்	முகவரி
1.	வேம்பாடுசங்கர், த.பெ. அப்பால நாயுடு	ஆண், வயது 27	கைசாலா கிராமம் மக்குவா வட்டம், விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.

2.	சிரிபுரப்புராமு, த.பெ. எர்ரா நாயுடு.	ஆண், வயது 40	கிருஷ்ணாபுரம், விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
3.	அமலாபுரம், ரமேஷ் என்கிற சீனிவாசராவ், த.பெ.சூரியராவ்.	ஆண், வயது 21	இரப்பாடு கிராமம், கோட்டுறு மண்டல் ஸ்ரீகாகுளம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
4.	உலரவி, த.பெ. கௌரய்யா.	ஆண், வயது 27	வாட்டர் டேங்க் காலனி, பழகொண்டா கிராமம் மற்றும் மண்டல், ஸ்ரீகாகுளம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
5.	முத்தசீனிவாசராவ், த.பெ. லெக்ஷ்மணராவ்.	ஆண், வயது 35	பாயிவலசா கிராமம், கொத்த பொம்மாலி மண்டல், ஸ்ரீகாகுளம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
6.	மேசலா ஸ்ரீனு, த.பெ. ராமமூர்த்தி.	ஆண், வயது 40	கோட்டா கிராமம், ஹிராமண்டலம், ஸ்ரீகாகுளம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
7.	பெக்கெடி அப்பாலராமு.	ஆண், வயது 30	கே.கிருஷ்ணாபுரம் கிராமம், விஜயநகரம், ஆந்திரப்பிரதேசம்.
8.	மாரப்பு வெங்கடா நாயுடு, த.பெ.அபனாசாமி.	ஆண், வயது 35	மூலமாபுரம் கிராமம், வலச மண்டலம், விஜயநகரம், ஆந்திரப்பிரதேசம்.
9.	சிந்தால திருப்பதிராவ், த.பெ. சத்யம்.	ஆண், வயது 25	பெத்தகைசீமா கிராமம், மக்வா மண்டல், விஜயநகரம், ஆந்திரப்பிரதேசம்.
10.	அமலாபுரம் ராஜேஷ், த.பெ. சூர்யராவ்.	ஆண், வயது 19	இரப்பாடு கிராமம், கோட்டுறு மண்டல், ஸ்ரீகாகுளம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
11.	கிமிடி சுப்பாராவ், த.பெ. தவுடு.	ஆண், வயது 50	இரப்பாடு கிராமம், கோட்டுறு மண்டல், ஸ்ரீகாகுளம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
12.	துக்காதவுடு, த.பெ. சிம்மையா.	ஆண், வயது 58	L.N.பெத்தா கிராமம் மற்றும் மண்டல், ஸ்ரீகாகுளம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
13.	தாசரிராமு, த.பெ. கருவு.	ஆண், வயது 40	கோரமா கிராமம், பாமனி மண்டல், ஸ்ரீகாகுளம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
14.	பதிவடு பங்காரு நாயுடு, த.பெ. தவுடு.	ஆண்	கே.கிருஷ்ணாபுரம் கிராமம், தாத்திராஜேரி மண்டல், விஜயநகரம், ஆந்திரப்பிரதேசம்.
15.	மாரப்பு திருப்பதிநாயுடு, த.பெ. அப்பாலசாமிநாயுடு.	ஆண்	நீலம்பராபுரம், அகரம் கிராமம், ஜிய்யம்வலசா மண்டல், விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
16.	ரெட்டி சத்யநாராயணா, த.பெ. அப்பாலசாமி நாயுடு.	ஆண், வயது 45	விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
17.	நாராயணபுரம் ஜெயம்மா, த.பெ. சோமய்யா.	ஆண், வயது 48	விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
18.	கொங்காரப்பு ஸ்ரீனு, த.பெ. ராமுலு.	ஆண், வயது 30	கோட்டா கிராமம், ஹாமாண்டலம் மண்டல், ஸ்ரீகாகுளம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
19.	முடிலிசின்னா நாயுடு, த.பெ.அப்பால நாயுடு.	ஆண்	நீலம்மாபுரம், ஜிய்யம்வலசா மண்டல், விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.

20.	சீரா சத்ய நாராயணா, த.பெ. ராமுலு.	ஆண், வயது 40	சூரிமாமிதி கிராமம், மக்குவாமண்டல், விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
21.	பொம்மிரெளரு நாயுடு, த.பெ. சந்நியாசி நாயுடு.	ஆண், வயது 38	படாங்கி கிராமம், படாங்கி மண்டல், விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
22.	போங்குசாந்தகுமாரி, க.பெ. அப்பாலசாமி.	ஆண், வயது 25	படாங்கி கிராமம் மற்றும் மண்டல், விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
23.	முடிலிராமலெக்ஷ்மி, க.பெ. வேங்கடரமணா.	பெண், வயது 28	ஆக்ரஹாரம், கமலாமண்டபம், விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
24.	துவ்வாரப்பு பத்மா, க.பெ. அப்பண்ணா.	பெண், வயது 35	1/152, பாலசீமா, உருலம், நரசன்னா பேட்டா மண்டல்.
25.	மஜ்ஜிசரஸ்வதி, க/பெ. வேங்கடரமணா.	பெண், வயது 35	கைசாலா, விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
26.	சீராஜெயலெக்ஷ்மி என்கிற ஜெயம்மா, க.பெ. சத்யநாராயணா.	பெண், வயது 35	விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
27.	பாடலா சிம்மம்மாள், க.பெ. வேந்தையா.	பெண், வயது 28	தலபேட்டை கிராமம், குமாரடா மண்டலம், விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
28.	வனம்தூர்கா, த.பெ. திம்மாசலம்.	பெண், வயது 18	கே.கிருஷ்ணாபுரம், சத்யராஜ் மண்டலம், விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
29.	மாரப்புதமயந்தி, த.பெ. வேங்கடநாயுடு.	பெண், வயது 20	விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
30.	மீசால பவானி, த.பெ. ஸ்ரீனு	பெண், வயது 14	எரமண்டலம், ஸ்ரீகாகுளம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
31.	பைசிக்கிஜோதி, க.பெ. சிம்மாசலம்.	பெண், வயது 28	கோட்டா லெக்ஷ்மிபுரம் கிராமம், ஹிராமண்டலம், ஸ்ரீகாகுளம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
32.	ராயபள்ளி பாரதி, க.பெ. சத்யம்.	பெண், வயது 27	பதாகை கிராமம், மக்குவா மண்டல், விஜயநகரம், ஆந்திரப்பிரதேசம்.
33.	தாசரிகலாவதி என்கிற குமாரி, க.பெ. ராமு.	பெண், வயது 28	கோரமா கிராமம், பாமினி மண்டல், ஸ்ரீகாகுளம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
34.	தன்னா அப்பால நரசிம்மா, க.பெ. லெக்ஷ்மிநரசய்யா.	பெண், வயது 40	L.N. பெத்தா கிராமம் மற்றும் மண்டலம், ஸ்ரீகாகுளம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
35.	காரி தவுடம்மா, க.பெ. அப்பால நாயுடு.	பெண், வயது 40	விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
36.	பெக்கட்டி லெக்ஷ்மி, க.பெ. அப்பாலராமு.	பெண், வயது 41	கே.கிருஷ்ணாபுரம் கிராமம், தாத்திராஜேரு மண்டலம், விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
37.	பதிவாட கௌரீஸ்வரி, க.பெ. ராம் பாபு.	பெண், வயது 32	விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.
38.	ரெட்டி சுஜாதா, த.பெ. சூர்யநாராயணா.	பெண், வயது 20	தலைபேட்டை கிராமம், கொமாரடா மண்டலம், விஜயநகரம் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.

உயிரிழந்த நபர்களின் பட்டியல்

ஒடிசா மாநிலம் (ஆண் 7 + பெண் 1 = மொத்தம் 8)

தொடர் எண்.	பெயர்	வயது மற்றும் பாலினம்	முகவரி
1.	அமர்குமார் கீரோ, த.பெ. கந்தசாமிராவ்.	ஆண், வயது 26	ராஜீ நகர், கேந்திரிய பாரா, ஒடிசா.
2.	நிரஞ்சன் கரோ, த.பெ. நாராயண கரோ.	ஆண், வயது 35	ராஜீ நகர், கேந்திரிய பாரா, ஒடிசா.
3.	அலி, த.பெ. சமோரஞ்சன் நைளரி.	ஆண், வயது 17	கௌரி நவ்ன், பாரடஞ்சா, கேந்திரிய பாரா மாவட்டம், ஒடிசா,
4.	குலாக்சுனா, த.பெ. ரபிதுன்னா.	ஆண், வயது 28	கோரிபாதர் கிராமம், நபரங்பூர் மாவட்டம், ஒடிசா.
5.	முகுனிபாஹன், த.பெ. பீனாபாகன்.	ஆண், வயது 53	மாருதுபோத் கிராமம் மற்றும் அஞ்சல், கஞ்சம் மாவட்டம், ஒடிசா.
6.	லோகேஸ்வர ராவ், த.பெ. ராமுலு.	ஆண், வயது 24	லுகலாப்பு ஹவுஸ், ராணிபென்ட்டா கிராமம், கஜபதி மாவட்டம், ஒடிசா.
7.	திரு.கோபாவிதான் ஸ்வைன், த.பெ. சங்கர் ஸ்வைன்.	ஆண், வயது 49	பத்ருகாபாலி கிராமம், கஞ்சம் மாவட்டம், ஒடிசா.
8.	ரோஜி, த.பெ. பாப்பாராவ்.	பெண், வயது 20	குராதிகண்டாப் கிராமம், குராதி மண்டல், கஜபதி மாவட்டம், ஒடிசா.

உயிரிழந்த நபர்களின் பட்டியல் – சுருக்கம்

(அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டவர்கள்)

மாநிலம்	ஆண்	பெண்	மொத்தம்
தமிழ்நாடு	13	01	14
ஆந்திரப்பிரதேசம்	21	17	38
ஒடிசா	07	01	08
மொத்தம்	41	19	60

ஒரு உடல் இன்னும் அடையாளம் கண்டறியப்படவில்லை.

காயமடைந்த 27 நபர்களும் மருத்துவ சிகிச்சைக்குப் பின்னர் பல்வேறு நாட்களில் மருத்துவமனையிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத்தொகைகள் பற்றிய விவரம் வருமாறு:

காயமடைந்த நபர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகை

மாநிலம்	நபர்களின் எண்ணிக்கை	ஒவ்வொரு தனிநபருக்கும் வழங்கப்பட்ட தொகை	மொத்தத் தொகை (ரூபாய்)
தமிழ்நாடு	13	ரூபாய் 50,000/-	ரூபாய் 6,50,000/-
ஆந்திரப்பிரதேசம்	11	ரூபாய் 50,000/-	ரூபாய் 5,50,000/-
ஒடிசா	03	ரூபாய் 50,000/-	ரூபாய் 1,50,000/-
மொத்தம்	27		ரூபாய் 13,50,000/-

உயிரிழந்த நபர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகை

மாநிலம்	நபர்களின் எண்ணிக்கை	ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட்ட தொகை	மொத்தத் தொகை (ரூபாய்)
தமிழ்நாடு	14	ரூபாய் 7,00,000/-	ரூபாய் 98,00,000/-
ஆந்திரப்பிரதேசம்	38	ரூபாய் 2,00,000/-	ரூபாய் 76,00,000/-
ஒடிசா	08	ரூபாய் 2,00,000/-	ரூபாய் 16,00,000/-
மொத்தம்	60		ரூபாய் 1,90,00,000/-

சுருக்கம்

	ரூபாய்
உயிரிழந்த நபர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகை	1,90,00,000
காயமடைந்த நபர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகை	13,50,000
மொத்தம்	2,03,50,000

10. முதல் தகவல் அறிக்கை மற்றும் சவப்பரிசோதனைச் சான்றிதழ் ஆகியவற்றின் நகலுடன் இறப்புச் சான்றிதழ், உயிரிழந்த நபர்களின் குடும்பங்களுக்கு உடனடியாக வழங்கப்பட்டன. உயிரிழந்த நபர்களின் உடல்களை அடையாளம் கண்டறிவதற்காக, உயிரிழந்த நபர்களின் உறவினர்கள், விபத்து நடைபெற்ற இடத்திற்கு அருகிலுள்ள ஆதிதிராவிடர் நலப் பள்ளியில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். உயிரிழந்த நபர்களின் உடல்கள்

அடையாளம் கண்டறியப்பட்ட பின்னர், அவை, உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, அரசின் செலவில் அவர்களுடைய சொந்த கிராமங்களுக்கு / நகரங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

11. கட்டுமான ரீதியான பாதுகாப்பு மற்றும் உறுதித்தன்மை குறித்து நிச்சயமற்றதன்மை நிலவுவதால், தற்போதுள்ள 'A' கட்டடத்தொகுதியின் அபாயத்தைக் கருத்திற்கொண்டு, தற்போது அருகிலுள்ள ஆதிதிராவிடர் மேனிலைப்பள்ளியை, விபத்து நடந்த இடத்திலிருந்து அரை கிலோ மீட்டர் தொலைவிற்குள் அமைந்துள்ள ஆதிதிராவிடர் தொடக்கப்பள்ளிக்கு மாற்றுவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்போதுள்ள "A" கட்டடத் தொகுதிக்கு அருகிலுள்ள ஆதிதிராவிடர் மேனிலைப்பள்ளி, குழந்தைகளின் கல்விக்கு இடையூறு நேராமல், முறைமாற்று அடிப்படையில், ஆதிதிராவிடர் தொடக்கப்பள்ளியில் தற்போது இயங்கி வருகிறது.

12. இடிந்து விழுந்த கட்டடத்திற்கு அருகிலுள்ள கட்டடம் அதாவது "A" கட்டடத்தொகுதி ஒரு பாதுகாப்பு நடவடிக்கையாக, பொதுப்பணித்துறையால் மூடி முத்திரையிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள "A" கட்டடத்தினால் நேரிடக்கூடிய அபாயத்தின் காரணமாக 50 மீட்டர் தொலைவிற்குள் வசித்து வந்த மக்கள், அந்த இடத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். தற்காலிக தகடுகளைக்கொண்டு அந்தப் பகுதி முழுவதும் தடுப்பு வேலி அமைக்கப்பட்டது. அந்தப் பகுதியில், "தடைசெய்யப்பட்ட பகுதி" என்று அறிவிக்கிற பிளெக்ஸ் பேனர்கள் நிறுவப்பட்டன. விசாரணை ஆணையம் அதனுடைய விசாரணையை முடிக்கிற வரையில் அந்த இடத்தைப் பாதுகாப்பதற்காக, அந்த இடம், காவல்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பேரழிவு ஏற்பட்ட பகுதியில் வருவாய்த்துறை அலுவலர்களும் 24 மணி நேரமும் பணிபுரிந்து வந்தனர்.

13. உயிரிழந்த நபர்கள் மற்றும் காயமடைந்த நபர்களின் உறவினர்களுக்கு உதவிசெய்வதற்காகவும், ஆறுதல் கூறுவதற்காகவும் அதிக எண்ணிக்கையில் மிகவும் முக்கியமான பிரமுகர்கள், விபத்து நடந்த இடத்திற்கு வந்து பார்வையிட்டனர். அவர்களுள் மிகவும் முக்கியமானவர் 30.06.2014 அன்று வருகை தந்த ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் மாண்புமிகு திரு.சந்திரபாபு நாயுடு ஆவார். அவர், பாதிக்கப்பட்டவர்கள் தங்கியிருந்த பள்ளிவளாகத்தைப் பார்வையிட்டு, அவர்களுடன் உரையாடி, ஆந்திரப்பிரதேச மாநிலத்தில் அவர்கள் அனைவருக்கும் உதவிசெய்வதாக உறுதியளித்தார். மருத்துவமனைக்குச் சென்று பார்வையிட்டபோது, காயமடைந்த நபர்களுக்கு ஆறுதல் கூறி, அவர்கள் அனைவரும் விரைவில் நலம் பெறுவதற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தார். அதைப்போன்றே ஒடிசா அரசின் உலோகக்கலவை, சுரங்கங்கள் மற்றும் தொழிலாளர் நல அமைச்சர் மாண்புமிகு திரு. பிரபுல்லகுமார் மாலிக், ஒடிசாவின் தொழிலாளர் நல ஆணையாளருடன் சேர்ந்து,

02.07.2014 அன்று விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்டார். அது தவிர, தமிழ்நாடு மாநிலத்தைச் சேர்ந்த பல அரசியல் தலைவர்களும் விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்டு பாதிக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு ஆறுதல் கூறினர்.

அரசு மேற்கொண்ட மீட்புப் பணிகளையும், மறுவாழ்வுப் பணிகளையும் பற்றி மாநில நிவாரண ஆணையாளர் / கூடுதல் தலைமைச்செயலாளர், வருவாய் நிருவாகம், காஞ்சீபுரம் மாவட்ட ஆட்சியர் ஆகியோர் தெரிவித்துள்ளனர். உயிரிழந்த நபர்களின் உறவினர்களுக்கு தகவல் தெரிவிப்பதிலும், கட்டடம் இடிந்து விழுந்த சம்பவத்தின் முக்கியத்துவம் பற்றி செய்திவெளியிடுவதிலும், தற்போதைய நிலையை சரிசெய்வதற்கான கட்டுரைகளை பிரசுரம் செய்வதிலும் பத்திரிகை மற்றும் ஊடகங்கள் பெரும்பங்காற்றியுள்ளன. கட்டுமான நடவடிக்கைகளில் தரத்தை கட்டுப்படுத்தவும் சிறந்த தரத்தை மீண்டும் நிலைநாட்டவும் செய்யவேண்டியவற்றைத் தெரிவிப்பது ஆய்வு வரம்பின் நோக்கமாகும்.








தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திட்ட வரைபட அனுமதிக்கான விண்ணப்பம் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் நடவடிக்கைகள்:

காஞ்சீபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம் மௌலிவாக்கத்தில் 17/7A, 17/7B, 17/7C, 17/8B3 மற்றும் 17/8B4B-ஆம் எண்களுள்ள நி.அ.புலத்தில் அடித்தளம், உயர்த்தப்பட்ட இடைத்தளம் மற்றும் 11 மாடிக்கட்டடத்தைக் கட்டுவதற்காக, திட்ட வரைபட அனுமதி கோரி, கட்டடம் கட்டுநர், இணைப்புகளுடன் கூடிய தேவையான ஆவணங்களை சமர்ப்பித்தார். சென்னை, திருவாளர்கள் பிரைம் ஸ்ருஷ்டி ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் என்ற பெயருள்ள கட்டடம் கட்டுநர், முறையே 'பெய்த்' (Faith), 'பிலீப்' (Belief) என்ற பெயர்களில் A மற்றும் B என்ற இரண்டு கட்டடத்தொகுதிகளைக் கட்டினார். விசாரணையின்போது, இந்த ஆணையம், கட்டடம் கட்டுவதற்கான திட்டவரைபட அனுமதி வழங்குவது தொடர்பான அனைத்து மூல ஆவணங்களையும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடம் கோரியது. அவற்றைப் பரிசீலித்ததில், திட்ட வரைபட அனுமதி கோரி சமர்ப்பித்த விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் அவசியமான ஆவணங்களும் இணைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

(a) நிலத்தின் உடைமை உரிமையை மெய்ப்பிக்கிற விற்பனை ஆவணங்கள் மற்றும் அவசியமான பிற ஆவணங்களின் ஜெராக்ஸ் நகல்.

(b) நிலம் தொடர்பான பட்டா மற்றும் நில அளவீட்டுப் புத்தகத்தின் பகுதி நகல்.

(c) கட்டுமான வடிவமைப்புப் பொறியாளர் திரு.நாகேஷ் என்பவரால் தயாரிக்கப்பட்டு, கையொப்பமிடப்பட்ட கட்டுமான வடிவமைப்பு மற்றும் அதனுடைய திட்ட வரைபடம்; மற்றும்

(d) கட்டடக்கலை வல்லுநர் திருமதி. பி.சுகன்யா, கட்டுமான வடிவமைப்பு பொறியாளர் திரு. எஸ்.நாகேஷ் மற்றும் கட்டடம் கட்டுநர் ஆகியோரால் தயாரிக்கப்பட்டு, கையொப்பமிடப்பட்ட மனை வரைபடம், அனைத்து தளங்களுக்கான விரிவான தளவரைபடம், பிரிவு வாரியான வரைபடங்கள், உயர்த்தப்பட்ட திட்ட வரைபடம் ஆகியவை உட்பட கட்டக் கருதப்பட்ட கட்டடத்திற்கான திட்ட வரைபடம்.

விண்ணப்பத்தையும் அதன் இணைப்புகளையும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அதிகாரிகள் கவனமாகப் பரிசீலித்த பின்னர், பல வினாக்களை எழுப்பினர். கட்டடக்கலை வல்லுநர் திருமதி.பி.சுகன்யா தெளிவுரை பெறுவதற்காக, கட்டடம் கட்டுநருடன் சேர்ந்து, சென்னைப் பெருநகர வளர்ச்சிக்குழுமத்திற்குச் சென்றார். அதன் விளைவாக, மூல திட்டவரைபடத்தைத் திருத்தியமைத்து, இரண்டாவது திட்டவரைபடம் ஒன்றையும் கட்டடக்கலை வல்லுநர் தயாரித்துள்ளார். கட்டுமான வடிவமைப்புப் பொறியாளர்

திரு.எஸ்.நாகேஷ், கட்டடக்கலை வல்லுநர் திருமதி.பி.சுகன்யா, கட்டடம் கட்டுநர் ஆகியோர் கையொப்பமிட்ட மேற்சொன்ன இரண்டாவது திட்ட வரைபடத்தை, கட்டடம் கட்டுநர், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்திடம் சமர்ப்பித்தார். உதவி திட்டவரைபடம் தயாரிப்பவரும் துணை திட்டவரைபடம் தயாரிப்பவரும், சொத்தினை மேற்கொண்டும் கூர்ந்தாய்வு செய்ததன் பேரிலும், பிரச்சினைக்குரிய இடத்தை நேரடியாகச் சென்று சரிபார்த்ததன் பேரிலும் இரண்டு குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளன. அவையாவன (i) பிரச்சினைக்குரிய இடத்தின் நுழைவாயிலில் சாலையின் அகலம் போதுமானதாக இல்லை. (ii) பக்க பின்னடைவு பகுதியைப் பொறுத்தவரையில், அருகிலுள்ள மனையிலுள்ள நுழைவாயிலுக்கு அருகேயிருந்த அகலமும் மனநிறைவளிப்பதாக இல்லை. சென்னைப் பெருநகர வளர்ச்சிக்குழுமம், கட்டடம் கட்டுநரிடமிருந்து தெளிவுரை கோரியது.

இயல்பாகவே 11 தளங்களுடன் கட்டடம் கட்டுவதற்கு, சாலையின் அகலம் 18 மீட்டராக இருக்கவேண்டும். ஆனால், தற்போதைய நேர்வில், இடத்தின் முன்புறத்தில் இரண்டு முனைகளிலும் அது சீரானதாக இல்லை. விதிகளின்படி, ஒரு பக்கத்திலாவது 500 மீட்டர் நீளத்திற்கு சாலையின் அகலம் 18 மீட்டராக இருக்க வேண்டும். போரூர் சந்திப்பு இருந்த பக்கத்தில், சாலையின் அகலம் இருக்க வேண்டிய அளவான 18 மீட்டர் இருந்தபோதிலும், நெடுவெளி முழுவதிலும் அது சீரானதாக இல்லை. நடைமேடையில் மின்னழுத்த மாற்றியை நிறுவியது ஓர் ஆக்கிரமிப்பு என்று கருதியதால், மின்சாரத்துறை மின்னழுத்தமாற்றி ஒன்றை நிறுவியுள்ளது. மேற்சொன்ன மின்னழுத்தமாற்றி அமைந்துள்ள இடத்தின் முன்பக்கம் உள்ள சாலையின் அகலம் 17.9 மீட்டராக உள்ளது. விதிகளின்படி, இத்தகைய சிறிய குறைவுக்கு (தேவைப்படுகிற அளவில் 10 சதவீதத்திற்கும் குறைவானது) மறுப்பு தெரிவிக்கத் தேவையில்லை. அவ்வாறிருந்தும்கூட, விண்ணப்பதாரருக்குச் சொந்தமான மனையின் நுழைவாயிலில் உள்ள நிலத்தின் ஒரு பகுதி, சாலையின் அகலத்திற்காகவும், சாலையின் விரிவாக்கத்திற்காகவும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு தானமாக அளிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக, விண்ணப்பதாரர், தேவையான ஆவணங்களுடன் பதிவுசெய்யப்பட்ட தான பத்திரம் ஒன்றை, சென்னைப் பெருநகர வளர்ச்சிக்குழுமத்திடம் ஒப்படைத்துள்ளார். (தோராயமான வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது). P. 44, 45

அருகிலுள்ள நிலத்தில் நுழைவாயில் அருகிலுள்ள பின்னடைவுப் பகுதியைப் பொறுத்தவரையில், நுழைவாயில் அருகிலுள்ள மேற்சொன்ன இடத்தின் ஒரு பகுதியை விண்ணப்பதாரர், அருகிலுள்ள நில உரிமையாளரிடமிருந்து வாங்கியிருந்தார். இந்தப் பிரிவினை காரணமாக எஞ்சியிருந்த பகுதி அதாவது கொட்டகை, தேவையான இடமான 1.5 மீட்டர் அளவைப் பெற்றிருக்கவில்லை. 05.08.1975–ஆம் நாளுக்குப் பின்னர் நிலத்தைப் பிரிவினை செய்யும்போது, தகுதிவாய்ந்த அதிகாரமன்றங்களிடமிருந்து திட்ட வரைபடத்திற்கு,

முன்அனுமதி பெறவேண்டியது கட்டாயமாகும். இந்த நேர்வில், திட்டவரைபட அதிகாரிகளிடமிருந்து முன்அனுமதி பெறாமல் நிலத்தின் உட்பிரிவு இடம்பெற்றிருந்தது. இருப்பினும், இதை, முறைப்படுத்துவதற்கான கட்டணத்துடன், தேவையான விண்ணப்பங்களைத் தாக்கல் செய்வதன் பேரில், இத்தகைய உட்பிரிவுகளை, சென்னைப்பெருநகர வளர்ச்சிக்குழுமம் வழக்கமாக முறைப்படுத்துகிறது. இத்தகைய உட்பிரிவு, விதிகளுக்கு இணக்கமாக இருக்கவேண்டும். இந்த நேர்வில், மேற்சொன்ன பின்னடைவுப்பகுதி நீங்கலாக, எஞ்சியுள்ள பகுதி மனநிறைவளிப்பதாக உள்ளது. குறைவு ஏற்பட்ட பரப்பு 5 அடி அளவுக்கு மட்டுமே இருந்ததால், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இடத்தின் உட்பிரிவை, எஞ்சியுள்ள மனையின் உரிமையைக் கைதுறப்பு செய்து, முறைப்படுத்துவதென்று முடிவு செய்யப்பட்டது. இருப்பினும், இந்த பின்னடைவுப்பகுதி, நுழைவாயிலில் அதாவது சாலையிலிருந்து கட்டட இடத்திற்குச் செல்லும் ஒரு பாதையாக அமைந்துள்ளது. அது, 18 மீட்டராக உள்ளது. இந்த இடத்தில்கூட, கட்டட இடத்திற்குச் செல்கிற பாதையின் அகலம் 18 மீட்டராக இருந்தபோதிலும், கட்டடம் கட்டுநர், இது குறித்து தேவையான பதிவுசெய்யப்பட்ட ஆவணங்களை எழுதிக்கொடுத்துள்ளார். அதுகுறித்து மனநிறைவடைந்ததன் பேரிலேயே உதவி திட்டவரைபடம் தயாரிப்பவரும், துணை திட்ட வரைபடம் தயாரிப்பவர்களும், திட்ட வரைபட அனுமதி விண்ணப்பத்தில் தேவையான குறிப்புரைகளை எழுதியுள்ளனர். இந்தக் குறைபாடு பற்றி தெளிவுபடுத்தி பத்திரங்களை எழுதிக்கொடுத்தபோதிலும், இவ்விரு பொருண்மைகள் இறுதி முடிவு எடுப்பதற்காக, பன்மாடிக்கட்டடக் குழு முன்னிலையில் வைக்கப்பட வேண்டும் என்று திட்டவரைபட அதிகாரிகள் உட்பட தொடர்புடைய அதிகாரிகள் கருதினர். தொடர்புடைய ஆவணங்கள் கூட்டத்தின் நிகழ்ச்சிநிரல் மற்றும் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளாக உள்ளன. இணைப்பு இக்குழுவின் உறுப்பினர்கள் இந்தப் பொருண்மை குறித்து விரிவாக விவாதித்தனர். முடிவில் பரிந்துரைக்கடிதம் ஒன்று ஒப்புதலுக்காக அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இணைப்பு கோப்பு முழுவதையும் பரிசீலித்ததன்பேரில், தமிழ்நாடு அரசு, தேவைப்படுகிற சாலையின் அகலம் குறித்த வரையறையைத் தளர்த்தியதன்மூலம் மேற்சொன்ன குழு அளித்த பரிந்துரைக்கு ஒப்புதலளித்து, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் (UD-I) துறையின் 08.11.2012–ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்.239–ல் ஆணை ஒன்றைப் பிறப்பித்துள்ளது (இணைப்பு). பின்னடைவு வரையறைகளைப் பொறுத்தவரையில், எஞ்சியுள்ள மனைக்கு உரிமையைக் கைதுறப்பு செய்து, அனுமதியற்ற உட்பிரிவை முறைப்படுத்துவது உட்பட 08.11.2012–ஆம் நாளிட்ட முந்தைய அரசாணை (நிலை) எண்.239–ல் திருத்தம் வெளியிட்டு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித்துறையின் 28.05.2013–ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்.106–ல் மற்றொரு ஆணையை தமிழ்நாடு அரசு வெளியிட்டது (இணைப்பு). எனவே, முதன்மைச்சாலையிலும், கட்டிட இடத்திற்குச் செல்கிற சாலையிலும் 18 மீட்டர் என்ற அளவு பராமரிக்கப்பட்டுள்ளது என்பதே உண்மையாகும்.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், பின்னர், கட்டடம் கட்டுநருக்கு, திட்டவரைபடத்திற்கு அனுமதியளித்துள்ளது (இணைப்பு). அதன் அடிப்படையில், நிருவாக அதிகாரி / மௌலிவாக்கம் ஊராட்சித் தலைவர், 03.07.2013 அன்று க்ட்டடம் கட்டுநருக்கு கட்டட அனுமதி அளித்துள்ளார் (இணைப்பு).

அரசாணை வெளியிடுவதற்கு வழிவகுத்த விதித் தளர்வு தொடர்பாக சென்னைப்பெருநகர வளர்ச்சிக்குழும அதிகாரிகள் தாக்கல் செய்த உறுதிமொழிப் பத்திரங்களில் உள்ள இவ்விரு அம்சங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது. அதில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:-

"…….. 24.06.2011–ஆம் நாளிட்ட 9/2011–ஆம் எண்ணுள்ள அலுவலக ஆணையில் வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி, இடத்தை ஆய்வு செய்வது, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் பணியாகும். அதற்கிணங்க, உயரம், 30 மீட்டருக்கு மேற்பட்டதாக இருக்கிறபோது, துணை திட்டவரைபடம் தயாரிப்பவர் அந்த இடத்தைப் பார்வையிடவேண்டும். மேம்பாட்டு விதிமுறைகளின்படி, திட்டவரைபட உதவியாளர், உதவி திட்டவரைபடம் தயாரிப்பவர் போன்ற சார்நிலை அதிகாரிகள் மேற்கொண்ட நுண்ணாய்வினை மீண்டும் சரிபார்த்து, தலைமை திட்டவரைபட அதிகாரிக்கு / முதுநிலை திட்ட வரைபட வரைவாளருக்குத் தேவையான பரிந்துரைகளை அளிக்க வேண்டும். இந்த நோ்வில்லும் 25.07.2012 அன்று இடஆய்வு செய்யப்பட்டது. மேலும், விண்ணப்பதாரர் திருத்தியமைக்கப்பட்ட திட்டவரைபடங்களை / விவரங்களை அளிக்கும்போதெல்லாம் அவற்றை, திட்டவரைபட உதவியாளர் நிலை–I, உதவி திட்டவரைபடம் தயாரிப்பவர் ஆகியோர் நுண்ணாய்வு செய்துள்ளனர். அவற்றை நான் மீண்டும் சரிபார்த்து, தலைமை திட்டவரைபடம் தயாரிப்பவரிடம் / முதுநிலை திட்ட வரைபட வரைவாளரிடம் அளித்தேன். மேலும், விண்ணப்பதாரரிடமிருந்து விவரங்களைக் கோருகிற வரைவுக் கடிதங்கள், சாலை அகலம் குறித்த குழுக் கூட்டத்தின் நிகழ்ச்சிநிரல், பன்மாடிக் கட்டடக் குழுவின் நிகழ்ச்சிநிரல், அரசுக்கு எழுதிய கடிதம், சாலையை அகலப்படுத்துவதற்காக / தெருவிளக்கு வரிசையமைப்புப் பகுதிக்காக நிலத்தை தானம் அளிக்கிற வகையில் தயாரிக்கப்பட்ட வரைபடம், திறந்தவெளி ஒதுக்கீட்டுக் கட்டணங்கள், பிரிமியம் நில அளவை ஆய்வுக் கட்டணங்கள் ஆகியவற்றைக் கணக்கீடு செய்வதற்காக வழிகாட்டி மதிப்பைக் கோரி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு எழுதப்பட்ட கடிதம், மேம்பாட்டுக்கட்டண அறிவுரைக்கடிதம், திட்டவரைபட உதவியாளரால் தயாரிக்கப்பட்டு, உதவி திட்ட வரைபட வரைவாளரால் சரிபார்க்கப்பட்ட இறுதி ஒப்புதல் கடிதம் ஆகியவற்றை நான் மீண்டும் சரிபார்த்து, தலைமை திட்டவரைபட தயாரிப்பு அதிகாரியிடம் / முதுநிலை திட்டவரைபட வரைவாளரிடம் அளித்தேன்.

வருவாய்த்துறை அலுவலர்கள் அளித்த சாலையின் நிலஅளவீட்டுப் புத்தக வரைபடம், உள்ளாட்சி மன்றம் அளித்த சாலையின் அகலம் குறித்த சான்றிதழ் ஆகியவற்றின் உண்மைத் தன்மையை உறுதிசெய்வதற்காக, உதவி திட்ட வரைபட வரைவாளரின் தொடக்க ஆய்வறிக்கையின் அடிப்படையில் சாலையின் அகலம் குறித்த குழுக்கூட்டம், 19.07.2012 அன்று கூட்டப்பட்டது. வருவாய் அலுவலர்கள் சான்றளித்த நிலஅளவீட்டுப்புத்தகத்தின்படி, 500 மீட்டர் கொண்ட நெடுவரிசைக்கு இருக்கவேண்டிய குறைந்த அளவு, சாலையின் அகலம் 18 மீட்டராகும். 18 மீட்டருக்குமேல் உள்ளது என்று உள்ளாட்சிமன்றமும் சான்றளித்தது. ஆவணங்களும், திட்ட வரைபடங்களும் கூர்ந்தாய்வு செய்யப்பட்ட பின்னர், பன்மாடிக்கட்டடக் குழுவின் முடிவு மற்றும் பரிந்துரைகளுக்காக, செயற்குறிப்பு, தொடர்புடைய மேம்பாட்டு விதிமுறைகளிலுள்ள விரிவான நுண்ணாய்வுக் குறிப்புரைகளுடன், 17.08.2012 அன்று பன்மாடிக்கட்டடக்குழு முன்னிலையில் வைக்கப்பட்டது.

விண்ணப்பத்தை நுண்ணாய்வு செய்தபோது கண்டறியப்பட்ட குறை / குறைபாடு, விண்ணப்பதாரரிடம் தெரிவிக்கப்பட்டது. பின்னர் தேவையான ஆவணங்களையும், திருத்தியமைக்கப்பட்ட திட்டவரைபடத்தையும் விண்ணப்பதாரர் அளித்ததன்மூலம் அவை சரிசெய்யப்பட்டன.

கோப்பினைப் பரிசீலித்தபோது, அருகிலிருந்த சாலையின் அகலம் 16.6 மீட்டரிலிருந்து 20.3 மீட்டர் வரையில் வேறுபட்டிருந்தது தெரியவந்தது. அருகிலுள்ள சாலையில் இருக்கவேண்டிய அகலம் 18 மீட்டராக உள்ளது. மின்னழுத்தமாற்றி இருந்த இடம் தவிர (17.90 மீ.), அருகிலிருந்த சாலையின் அகலம் 18.0 மீட்டருக்கு மேற்பட்டதாக உள்ளது. இடத்திற்கு முன்புறத்தில் தெற்குப் பக்கத்தில் 16 மீட்டர் அளவிலும் வடக்குப் பக்கத்தில் 16.6 மீட்டர் அளவிலும் சாலையின் அகலம் உள்ளது. விண்ணப்பதாரர், சாலையை அகலப்படுத்துவதற்காக, சாலையின் அருகிலுள்ள அவருடைய நிலத்தின் ஒரு பகுதியை, தானமாக அளித்தார். DR 28 (b) விளக்கம் (i) c–யின்படி தானப்பத்திரம் ஒன்றின்மூலம் அதை தானமாக ஒப்படைத்தார். வடிவமைப்பு சாலை அகலத்தை உறுதிசெய்வதற்கு, வருவாய் அதிகாரியிடமிருந்து சாலை நில அளவீட்டுப்புத்தகம், உள்ளாட்சி மன்றத்திடமிருந்து சாலை அகலம் குறித்த சான்றிதழ் ஆகியவை வலியுறுத்தப்பட்டன. 500 மீட்டர் நெடு வரிசைக்கு, குன்றத்தூர் முதன்மைச்சாலையின் அகலம் 20 மீட்டர் என்றும், அச்சாலை, நெடுஞ்சாலைகள் துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றும், தொடர்புடைய உள்ளாட்சி மன்றமான குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் தெரிவித்தார். வட்டாட்சியர், வெவ்வேறு கால இடைவெளிகளில், சாலையின் அகலம் 18 மீட்டர் என்று காட்டுகிற சாலை நிலஅளவீட்டுப் புத்தகத்தை அளித்துள்ளார். சாலை நில அளவீட்டுப் புத்தகமும், சாலையின் அகலம் குறித்த சான்றிதழும் 19.07.2012 அன்று நடைபெற்ற சாலை அகலக் குழுக் கூட்டத்தின் முன்னிலையில்

வைக்கப்பட்டன. தொடர்புடைய அலுவலர்கள், சம்பந்தப்பட்ட அலுவலர்களால் வழங்கப்பட்ட சாலை நில அளவீட்டுப் புத்தகத்தையும், சாலை அகலச்சான்றிதழையும் உண்மைத்தன்மை உடையவை என்று உறுதியளித்தனர்.

"A" மற்றும் "B" கட்டடத் தொகுதிக்கான ஒருங்கிணைந்த அடித்தளம், 'A' கட்டடத் தொகுதியில் உயர்த்தப்பட்ட இடைத்தளம், 44 குடியிருப்புகளுடன் கூடிய 11 தளங்கள் மற்றும் "B" கட்டடத்தொகுதியில் உயர்த்தப்பட்ட இடைத்தளம் Pt. GF pt. (உள் விளையாட்டுப் பகுதி) + 42 குடியிருப்புகளுடன் கூடிய 11 தளங்கள், முதல்தளத்தில் உடற்பயிற்சிக்கூடம் மற்றும் திறந்தவெளி நீச்சல் குளம் என மொத்தம் 86 குடியிருப்புகளைக் கட்டுவதற்கான செயற்குறிப்பு, 17.08.2012 அன்று நடைபெற்ற பன்மாடிக்கட்டடக்குழுக் கூட்டத்தின் முன்னிலையில் வைக்கப்பட்டது. பன்மாடிக்கட்டடக்குழு, இப்பொருண்மை குறித்து விரிவாக விவாதித்தது. சாலையின் அகலம், 1.0 மீட்டர் நீளத்திற்கு 0.10 மீட்டர் அளவுக்கு மட்டுமே குறைவாக இருந்ததால், இக்குழு, சாலையின் அகலத்தில் இருந்த குறைவைத் தளர்த்தியது (DR 28 (b) விளக்கம் (ii)–ன்படி) இருக்கவேண்டிய பின்னடைவுப்பகுதி தொடர்பாக எஞ்சியுள்ள இடத்திற்கு உரிமை துறப்பு செய்தும், சில நிபந்தனைகள் உட்பட திட்ட வரைபடத்திற்கு அனுமதி வழங்குவதற்கு முன்னர் வழக்கமான நிபந்தனைகளுக்கு உட்பட்டும் அனுமதியற்ற உட்பிரிவு முறைப்படுத்தப்படலாம் என்ற பரிந்துரையுடன், மேற்சொன்ன குழு, செயற்குறிப்பை, ஒப்புதல் பெறுவதற்காக, அரசுக்கு அனுப்பிவைக்குமாறு பரிந்துரைத்தது.

விண்ணப்பதாரர் சில கூடுதல் விவரங்களை அளித்துள்ளார். பரப்பளவில் வேறுபாடு இருந்தது தெரியவந்தது. எனவே, செயற்குறிப்பு, 25.09.2012 அன்று பன்மாடிக்கட்டடக்குழு முன் வைக்கப்பட்டது. பன்மாடிக்கட்டடக்குழு, 25.09.2012 அன்று நடைபெற்ற அதனுடைய கூட்டத்தில், பின்னடைவுப்பகுதி தொடர்பாக எஞ்சியுள்ள இடத்திற்கு உரிமைதுறப்பு செய்து, அனுமதியற்ற உட்பிரிவு முறைப்படுத்தப்படலாம் என்றும், திட்ட வரைபடத்திற்கு அனுமதி வழங்கப்படுவதற்கு முன்னர், வழக்கமான நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மேற்சொன்ன குழு பரிந்துரைத்தவாறு, 1.0 மீட்டர் நீளத்திற்கு 0.10 மீட்டர் அளவுக்கு மட்டுமே குறைவாக உள்ள சாலையின் அகலத்தில் உள்ள குறைவை அரசு தளர்த்தலாம் என்றும் பரிந்துரைத்து, செயற்குறிப்பை, அரசுக்கு அனுப்பிவைக்குமாறு பரிந்துரைத்தது.

உதவி திட்டவரைபடம் தயாரிப்பவர் 06.03.2012 அன்று ஆய்வு செய்தார். பின்னர், 25.07.2012 அன்று துணை திட்டவரைபடம் தயாரிப்பவர் ஆய்வு செய்தார். ஆய்வின்போது கட்டக் கருதப்பட்ட கட்டுமானப்பணி தொடங்கப்படவில்லை. கோப்பை பரிசீலிப்பதற்காக, விண்ணப்பதாரர், தேவையான அனைத்து ஆவணங்கள், திட்டவரைபடங்கள் மற்றும் தடையின்மைச் சான்றிதழ்கள் ஆகியவற்றை அளித்துள்ளார்.

அரசாணையில் உத்தரவிட்டவாறு, அது வரப்பெற்றவுடன், அரசுக்கடிதத்தின் நகல் ஒன்று, 22.11.2012 அன்று சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் செயலாக்கப் பிரிவுக்கு அனுப்பப்பட்டது. ஒப்புதலுக்குப் பின்னர், ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட வரைபடத்தின் ஒரு தொகுதியும் 05.06.2013 அன்று செயலாக்கப் பிரிவுக்கு அனுப்பப்பட்டது.

விண்ணப்பம் வரப்பெற்றவுடன், இட ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேம்பாட்டு விதிமுறைகள், அலுவலக ஆணைகள் ஆகியவற்றின்படி ஆவணங்கள் மற்றும் திட்டவரைபடங்கள் நுண்ணாய்வு செய்யப்பட்டன. விண்ணப்பத்தை பரிசீலித்தபோது கண்டறியப்பட்ட குறை / குறைபாடு, விண்ணப்பதாரரிடம் தெரிவிக்கப்பட்டது. தேவையான ஆவணங்களையும் திருத்தியமைக்கப்பட்ட திட்டவரைபடத்தையும் அளித்ததன்மூலம் குறைபாடுகளைச் சரிசெய்ததன்பேரில், பன்மாடிக்கட்டடக்குழுவின் பரிந்துரைக்காக, பன்மாடிக்கட்டடக் குழுவிடம் விண்ணப்பம் அளிக்கப்பட்டது. பின்னர், திட்டவரைபடத்திற்கு அனுமதிவழங்கப்படுவதற்காக, பன்மாடிக்கட்டடக்குழுவின் பரிந்துரையின்பேரில் உரிய ஆணைகளைப் பிறப்பிப்பதற்காக அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. காவல்துறை (போக்குவரத்து), இந்திய விமானநிலைய ஆணையம், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் இயக்ககம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீச்சல்குளத்திற்காக சென்னைப்பெருநகர குடிநீர்வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் ஆகியவற்றிடமிருந்து தேவையான தடையின்மைச் சான்றிதழ்களும் பெறப்பட்டன. அரசாணை வரப்பெற்ற பின்னர், அரசாணையின் நிபந்தனைகளுக்கு இணக்கமாக மேம்பாட்டுக் கட்டணங்கள், முறைப்படுத்தல் கட்டணங்கள், திறந்தவெளி ஒதுக்கீட்டுக் கட்டணம், கட்டடம், கழிவுநீர் சுத்திகரிப்புநிலையம் காட்சிப்பலகை ஆகியவற்றுக்கான வைப்பீட்டுத் தொகை, பிரிமியம், நிலஅளவை ஆய்வுக்கட்டணம் ஆகியவற்றைச் செலுத்துதல் மற்றும் தெருவிளக்கு வரிசையமைப்புக்கான நிலப்பகுதியை சென்னைப்பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு தானமாக வழங்குதல் ஆகியவற்றை நிறைவேற்றியதன்பேரில் கட்டட அனுமதி வழங்கப்படுவதற்காக, இறுதி திட்டவரைபடங்கள், உள்ளாட்சி மன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன.

கட்டடத்தின் உயரம், 30 மீட்டருக்கு மேற்படுகிறபோது, இந்திய விமானநிலைய ஆணையத்திடமிருந்து தடையில்லாச் சான்றிதழ் பெறப்படுகிறது. கட்டடம் கட்டுகிற இடம், கழிவுநீரகற்றப்படாத பகுதியில் இருக்கிறபோது, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்காக சென்னைப் பெருநகர வளர்ச்சிக்குழுமத்திடமிருந்து தடையில்லாச் சான்றிதழ் பெறப்படுகிறது.

மேம்பாட்டு விதிமுறைகளின்படி, கட்டக்கருதுகிற கட்டடத்திற்கு அனுமதி அளிப்பதற்கு, 500 மீட்டர் நீளத்திற்கு, சாலையின் அகலம் 18.0 மீட்டராக இருக்கவேண்டும். இந்த நேர்வில், 2 இடங்களைத் தவிர, சாலையின் அகலம் 18.0 மீட்டராக இருந்தது. மனையின் முன்பக்கத்தில் வடக்குப்பக்கத்தில் சாலையின் அகலம் 16.6 மீட்டராகவும், மின்னழுத்தமாற்றி இருந்த தெற்குப்

பக்கத்தில் சாலையின் அகலம் 16.0 மீட்டராகவும் இருந்தது. மனையின் முன்பக்கத்தில் சாலையின் அகலத்தில் குறைவு ஏற்பட்டதற்காக, விண்ணப்பதாரர், DR 28 (i) b விளக்கம் (c)–யின்படி, சாலையை அகலப்படுத்துவதற்காக, விண்ணப்பதாரர், அவருடைய நிலத்தில் 2.0 மீட்டர் அகலமுள்ள நிலப்பகுதியை தானமாக அளித்தார். அதன்மூலம் இருக்கவேண்டிய குறைந்த அளவு அகலமான 18 மீட்டர் என்ற வரையறை நிறைவு செய்யப்பட்டது. எனவே, இந்த இடத்திற்காக, அரசிடமிருந்து தளர்வு எதுவும் கோரப்படவில்லை.

மின்னழுத்தமாற்றி இருந்த இடத்தில் சாலையின் அகலம் 1.0 மீட்டர் நீளத்திற்கு 0.10 மீட்டர் அளவுக்குக் குறைவாக இருந்தது. DR 28 (i) b விளக்கம் (ii)–ன்படி, பட்டா வழங்கப்படாத அனுமதியற்ற ஆக்கிரமிப்பு இருப்பது இயல்பாக பாதிப்பை ஏற்படுத்தாது. ஆனால் தெரிவிக்கப்பட்ட குறைந்த அளவு நெடுவரிசையில், அகலத்தில் ஏற்படுகிற குறைவு, வரையறுக்கப்பட்ட குறைந்த அளவு அகலத்தில் 10 சதவீதத்திற்கு மேற்படக்கூடாது. இருப்பினும், விதிவிலக்கான நேர்வுகளில் அனுமதிக்கும் தன்மை அல்லது வேறுவகையில் அத்தகைய குறிப்பிட்ட நிலமை, நேர்வுக்கேற்ப தீர்மானிக்கப்படும். இந்த நேர்வில், வட்டாட்சியர் வழங்கிய சாலைக்கான கள அளவீட்டுப்புத்தகத்தின் வரைபடத்தின்படி, ஒன்றுக்கு 500 மீட்டருக்கு மேற்பட்ட நெடுவரிசை வடிவமைப்பு சாலையின் அகலம் 18 மீட்டர் மற்றும் அதற்கும் மேற்பட்டதாக உள்ளது. எனவே, 1 மீட்டர் நீளத்திற்கு, சாலையின் அகலத்தில் 0.1 மீட்டர் குறைவு ஏற்பட்டது குறித்த பிரச்சினை, பன்மாடிக்கட்டடக்குழுவின் பரிந்துரைகளுக்காக, அக்குழுவின்முன் வைக்கப்பட்டது. செயற்குறிப்பு, மேம்பாட்டு விதிமுறைகளின் விதித்துறைகளை வேறுவகையில் நிறைவுசெய்ததால் பன்மாடிக்கட்டடக்குழு, அகலத்தில் ஏற்பட்ட குறைவு மிகவும் குறைவானது (0.55%) என்று கருதி, சாலையின் அகலத்தில் ஏற்பட்ட குறைவை தளர்த்துமாறு பரிந்துரைத்தது. மேற்சொன்ன குழு, 1.0 மீட்டர் நீளத்திற்கு 0.10 மீட்டர் அளவுக்கு மட்டுமே குறைவாக உள்ள சாலையின் அகலத்தில் ஏற்பட்ட குறைவை அரசு தளர்த்த வேண்டும் என்ற பரிந்துரையுடன், செயற்குறிப்பை, அரசுக்கு அனுப்புமாறு பரிந்துரைத்தது.

பன்மாடிக் கட்டடங்களுக்கு திட்டவரைபட அனுமதி வழங்குவது தொடர்பான மேம்பாட்டு விதிமுறைகள் 28–ன்படி, சென்னைப்பெருநகர வளர்ச்சிக்குழுமம், திட்டவரைபட அனுமதி கோருகிற விண்ணப்பத்தை நுண்ணாய்வு செய்து, பன்மாடிக்கட்டடக்குழுவின் பரிந்துரைகளுக்காக, DR 28 (26)–ன் கீழ் தெரிவிக்கப்பட்டவாறு உறுப்பினர்கள் அடங்கிய பன்மாடிக்கட்டடக்குழுவின் முன் வைக்கிறது. பன்மாடிக்கட்டடக்குழு ஒரு பரிந்துரை அமைப்பாக மட்டுமே உள்ளதால், ஏதேனும் விதித்தளர்வு உட்பட, திட்டவரைபடத்திற்கு அனுமதி வழங்கப்படுவதற்காக, செயற்குறிப்பை, அரசுக்கு பரிந்துரைக்கிறது. பன்மாடிக்கட்டடக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், திட்டவரைபடத்திற்கு அரசு அனுமதியளிக்கிறது.

இந்தக் குறிப்பிட்ட நேர்விலும்கூட, பன்மாடிக்கட்டடக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், DR 28 (2) C–யின்படி சாலையின் அகலம் தொடர்பான விதியைத் தளர்த்தியதன் மூலம் அரசு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் (UD-I) துறையின் 08.11.2012–ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்.239–ல், சாலையின் அகலத்தில் ஏற்பட்ட குறைவை தளர்த்தியது.

இருக்கவேண்டிய குறைந்த அளவு பாதையின் அகலம் குறித்த வரையறையை நிறைவு செய்வதற்காக, கொட்டகைக்கான பின்னடைவுப் பகுதியைப் பொறுத்தவரையில் எஞ்சியுள்ள இடத்தின் உரிமையைத் துறந்து, அனுமதியற்ற உட்பிரிவை முறைப்படுத்துவது தொடர்பாக, 10 சென்ட் பரப்புள்ள நிலத்தை வைத்திருந்த அண்டையிலுள்ள நில உரிமையாளரிடமிருந்து அண்டையிலிருந்த 1833 சதுர அடியை, விண்ணப்பதாரர் வாங்கியுள்ளார். அது அனுமதியற்ற உட்பிரிவுக்கு வழிவகுத்தது (உட்பிரிவுக்கு தகுதிவாய்ந்த அதிகாரமன்றத்திடமிருந்து முன்அனுமதி பெறப்படாததே இதற்குக் காரணம்). எஞ்சியிருந்த இடம் (10 சென்ட் பரப்பு–1833 சதுர அடி) குறைந்த அளவு இடப்பரப்பு, முன்பகுதி மற்றும் அணுகு வழிகள் ஆகிய வரையறைகளை நிறைவு செய்தது. இருப்பினும், எஞ்சியிருந்த இடத்தில் இருந்த கட்டுமானங்கள் (கொட்டகை), பின்னடைவுப்பகுதி குறித்த வரையறையை நிறைவு செய்யவில்லை. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பகுதியின் பாதையில் கட்டுமானம் எதுவும் மேற்கொள்ளக் கருதப்படாததால், மேற்சொன்ன கட்டுமானத்தால் வடக்குப் பக்கத்தில் எஞ்சியுள்ள இடத்திற்கான பின்னடைவுப் பகுதியில் ஏற்பட்ட குறைவு, காற்றோட்டத்தையும், வெளிச்சத்தையும் பாதிக்காது. எனவே, மேற்சொன்ன கொட்டகைக்கான பின்னடைவுப்பகுதி தொடர்பாக, எஞ்சியுள்ள இடத்தின் உரிமையைத் துறந்து, அனுமதியற்ற உட்பிரிவு முறைப்படுத்தப்படலாம் என்று பன்மாடிக் கட்டடக்குழு பரிந்துரைத்தது. அதனால் எஞ்சியுள்ள இடத்தின் உரிமையாளர், அவருடைய இடம், தற்போதுள்ள கட்டுமானங்களுடன் சேர்த்து முறைப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கமாட்டார். அவர், அந்த நிலத்தில் கட்டடம் கட்டக் கருதினால், எஞ்சியுள்ள இடத்தில் தற்போதுள்ள கொட்டகை தொடர்பாக, பின்னடைவுப்பகுதியிலுள்ள குறைவுக்கு விலக்களிக்கப்படமாட்டாது என்பது இதற்குப் பொருளாகும். எனவே, பன்மாடிக்கட்டடக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், கொட்டகைக்கான பின்னடைவுப்பகுதி தொடர்பாக, எஞ்சியுள்ள இடத்தின் உரிமையைத் துறப்பதன்மூலம் அனுமதியற்ற உட்பிரிவை முறைப்படுத்தி, திட்டவரைபடத்திற்கு அனுமதி வழங்குவதற்காக, அரசு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் (UD-I) துறையின் 28.05.2013–ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்.106–ல், பன்மாடிக்கட்டடக்குழுவின் பரிந்துரைகளுக்கு ஒப்புதலளித்தது.

பின்னடைவுப்பகுதியைப் பொறுத்தவரையில் எஞ்சியுள்ள இடத்தின் உரிமையைத் துறப்பதன் மூலம் அனுமதியற்ற உட்பிரிவை முறைப்படுத்துவதை ஒரு விதி தளர்வாகக் கருத இயலாது. ஏனெனில், அது, எஞ்சியுள்ள இடம் தொடர்பான ஒரு நிபந்தனை சார்ந்த அறிக்கை மட்டுமேயாகும்.

அனுமதியற்ற உட்பிரிவு பற்றி அரசு எடுத்த முடிவு குறித்து 08.11.2012–ஆம் நாளிட்ட அரசாணை எதுவும் குறிப்பிடாததால், அரசுக்கு மீண்டும் கடிதமெழுதப்பட்டது. அரசு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் (UD-I) துறையின் 28.05.2013–ஆம் நாளிட்ட மற்றொரு அரசாணை (நிலை) எண்.106–ல், முந்தைய அரசாணையில் திருத்தம் வெளியிட்டு சாலையின் அகலம் தொடர்பான DR-28 (2) (c) – விதியைத் தளர்த்தியும் பின்னடைவுப் பகுதியின் வரையறை தொடர்பாக, எஞ்சியுள்ள இடத்தின் உரிமையைத் துறப்பு செய்து அனுமதியற்ற உட்பிரிவை முறைப்படுத்தியும், செயற்குறிப்புக்கு ஒப்புதலளித்தது.

மேம்பாட்டு விதிமுறைகளின் விதித்துறைகளின்படி விண்ணப்பம், முறையாக நுண்ணாய்வு செய்யப்பட்டுள்ளது. பன்மாடிக்கட்ட திட்டவரைபடங்களின் நுண்ணாய்வில், சென்னைப்பெருநகர வளர்ச்சிக்குழுமம், DR 28–ன் கீழ் விளக்கப்பட்டுள்ளவாறு, நிலத்தின் பயன்பாடு, சாலையின் அகலம், மனை சூழ்ந்துள்ள பரப்பு, தள இடக்குறியீடு, வண்டி நிறுத்துமிடம் போன்ற திட்ட வரைபட அளவுகோல்களின்படி விண்ணப்பங்களைப் பரிசீலித்தது. கட்டுமானத்தின் உறுதித்தன்மை அம்சம், கட்டட விதிகளின் செயல் வரம்பின்கீழ் வருவதால், சென்னைப்பெருநகர வளர்ச்சிக்குழுமம் அந்த அம்சம் குறித்து ஆராயவில்லை. "கட்டடங்களுக்கான திட்டவரைபட அனுமதி, 1971–ஆம் ஆண்டு நகர–நாட்டுப்புற அமைப்பு திட்டமிடல் சட்டத்தின் விதிமுறைகளின்படியும், அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளின்படியும் வழங்கப்படுகிறது என்று தெரிவித்து, ஒப்புதலளிக்கப்பட்ட இறுதிக் கடிதத்தில் இந்த அம்சம் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்டுமானத்தின்போது கட்டடப் பாதுகாப்பு உட்பட கட்டடத்தின் கட்டுமான உறுதி அம்சம், இந்த விதித்துறையில் இடம்பெறவில்லை. இருப்பினும், இந்த அம்சங்கள், உள்ளாட்சி மன்றங்கள் சட்டத்தின் விதித்துறைகளின் கீழ் இடம்பெற்றுள்ளன.

கட்டடத்தின் கட்டுமான உறுதி அம்சத்தைப் பொறுத்தவரையில், 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டம், தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம், தமிழ்நாடு ஊராட்சி சட்டம் போன்ற 1920–ஆம் ஆண்டு அந்தந்த உள்ளாட்சி மன்றச்சட்டத்தின்கீழ் தொடர்புடைய கட்டடவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, சம்பந்தப்பட்ட உள்ளாட்சிமன்றத்தின் அதிகாரவரம்பிற்குள் வருகிறது. தமிழ்நாடு 1971–ஆம் ஆண்டு நகர மற்றும் நாட்டுப்புற அமைப்பு திட்டமிடல் சட்டத்தின் விதித்துறையின்கீழ் வழங்கப்படுகிற திட்டவரைபட அனுமதியில், கட்டுமானத்தின் உறுதித்தன்மை அம்சம் இடம்பெறவில்லை. இருப்பினும்,

கட்டுமானத்தின்போதும், கட்டுமானத்திற்குப் பின்னரும் பாதுகாப்பை உறுதிசெய்வதும், கட்டடங்களின் நீடித்த கட்டுமான உறுதித்தன்மையை உறுதிசெய்வதும் திட்ட வரைபடத்தில் கையொப்பமிடுகிற விண்ணப்பதாரரின் / கட்டடம் கட்டுநரின் / பகராள் செயலுரிமைப் பத்திரம் வைத்திருப்பவரின் மற்றும் கட்டுமான அமைப்பு பொறியாளரின் / உரிமம்பெற்ற நில அளவையாளரின் / கட்டடக்கலை வல்லுநரின் முழுப்பொறுப்பாகும்".

திட்ட வரைபடங்களுக்கும் திட்டவரைபட அனுமதி விண்ணப்பத்திலும் கையொப்பமிட்டு, கட்டுமான உறுதித்தன்மை சான்றிதழ் அளித்துள்ள வகுப்பு–I LS பதிவுபெற்றுள்ள கட்டமைப்புப் பொறியாளர், நடைமுறையிலுள்ள விதிக்கோவைகளின்படி மண் பரிசோதனைக்கும், கீழ் கட்டமைப்பு மற்றும் மேல் கட்டமைப்பு வடிவமைப்புக்கும் பொறுப்பானவர் ஆவார்.

கட்டடக் கலைஞர் அளித்த உறுதிமொழியின்படி, எப்போது கட்டுமானம் தொடங்கப்படுகிறது, மற்றும் பல்வேறு நிலைகளில் கட்டுமான பணிமுன்னேற்ற நிலை மற்றும் ஏதேனும் கட்டுமான மாறுபாடு இருப்பின் அதுகுறித்து சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு தெரிவிக்க வேண்டியுள்ளது. கட்டடக் கலைஞர் அந்தப் பணியிலிருந்து விலகிவிட்டாலும்கூட, இதனை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு தெரிவிப்பது கட்டடக் கலைஞரின் கடமையாகும்.

இந்த வழக்கிற்கு தொடர்புடைய மற்றும் பொருந்தத்தக்க மேம்பாட்டு விதிமுறைகளின் விதித்துறைகளுக்கேற்ப இந்த திட்டவரைபடத்திற்கான அனுமதி விண்ணப்பம் முறையாக கூர்ந்தாய்வு செய்யப்பட்டது".

பன்மாடி கட்டட பட்டியல் உறுப்பினர்களின் பங்கினைப் பொறுத்தவரையில், கட்டுமான பணிக்கு அவர்கள் மறுப்பின்மை சான்றிதழ் வழங்கியுள்ளதுடன், அவர்கள் தாக்கல் செய்த உறுதிமொழிப்பத்திரத்தில் அவர்களின் பங்களிப்பினை விவரித்துள்ளனர்.

சென்னையிலுள்ள போக்குவரத்துகாவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், சென்னை விமானநிலைய ஆணையம் ஆகியவை மறுப்பின்மை சான்றிதழ்களை வழங்கியுள்ளன.

இதுகுறித்து மனநிறைவுற்றப் பின்னர், அரசு, தேவையான கட்டட அனுமதி வழங்கி அரசாணைகள் பிறப்பித்த பின்னர், மேற்சொன்ன கட்டடத்தை கட்டுவதற்கு கட்டட அனுமதி வழங்கியதாக மௌலிவாக்கம் ஊராட்சியின் செயல்அலுவலர் / தலைவர் தன்னுடைய உறுதிமொழிபத்திரத்தில் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக திட்ட வரைப்பட உதவியாளர் / உதவி திட்ட வரைபடம் தயாரிப்பவர் / துணை திட்ட வரைபடம் தயாரிப்பவர் / முதன்மை திட்ட வரைபடம் தயாரிப்பவர் / உறுப்பினர்–செயலாளர் இந்த ஆணையம் முன்னிலையில் அவர்களின்

அந்தந்த உறுதிமொழி பத்திரங்களை தாக்கல் செய்துள்ளனர் (இணைப்பு). சென்னை பெருநகர வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பரிந்துரைகள் பெறப்பட்டதன் பேரில், அரசாணையினை பிறப்பிப்பதற்காக, தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறையுடன் இணைக்கப்பட்ட முதன்மைச் செயலாளரும் அவரது உறுதிமொழிப்பத்திரத்தை தாக்கல் செய்துள்ளார். இந்த நபர்கள் அனைவரின் உறுதிமொழிப்பத்திரங்களும் கோப்புகளாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன (இணைப்பு). திட்ட வரைபடத்திற்கு அனுமதி கோருகின்ற விண்ணப்பம் தொடர்புடைய ஆவணங்கள் இணைப்பு ..... இல் காட்டப்பட்டுள்ளன.

தான பத்திரத்தையும் ஏனைய பதிவுப்பெற்ற ஆவணங்களையும் பெற்ற பின்னர், பிரதான சாலையிலும், வழிப்பாதையிலும் 18 மீட்டர் அகலம் விடப்படவேண்டும் என்பதற்கேற்ப அவ்வாறு விடப்பட்டது என்றும் கட்டுமானதாரர் எந்த விதிகளையும் / விதிமுறைகளையும் மீறவில்லை என்றும் மேற்சொன்ன நபர்களின் அனைத்து உறுதிமொழிபத்திரங்களையும் பார்வையிட்டதன்பேரில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிரதான சாலையிலும் அடுக்குமாடி குடியிருப்பின் நுழைவு பகுதியிலும் 18 மீட்டர் அகலம் பராமரிக்கப்படுவது தொடர்பான அனைத்து நடைமுறைகளையும் கடைபிடித்த பின்னர், கட்டப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட கட்டடமானது அடுக்குமாடி கட்டடமாக இருப்பதால், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் குறைபாடுகளை தளர்த்தி தானாகவே சொற்குறிப்புக்கு ஒப்புதல் அளிக்க இயலாது. கட்டுமானதாரர் முழுவதும் ஒத்திசைவாக நடந்துகொண்டபோதிலும், தளர்வு செய்யுமாறு பரிந்துரைப்பதற்கு, குழு நடவடிக்கை எடுத்ததற்கான காரணம் இதுவே ஆகும்.

பின்னர் கட்டுமானதாரர் தாக்கல் செய்த விண்ணப்பத்தினை பெற்று பார்வையிட்ட பின்னரே, தளர்வு செய்வதற்கான அத்தகைய கோரிக்கையும் அரசாணையும் பிறப்பிக்கப்பட்டன.

இந்த கட்டடம் இடிந்து விழுந்ததற்கான காரணத்தை கண்டறிந்து, அவ்வாறு கட்டடம் இடிந்து விழுந்ததற்கு காரணமான நபர்மீது பொறுப்பு நிர்ணயிப்பது இந்த குழுவின் நோக்கமாகும். பிரதான சாலை மற்றும் அடுக்குமாடி குடியிருப்புக்கு செல்லும் சாலையின் அகலமானது 18 மீ இருக்கவேண்டுமென்பதால் இந்த வழக்கில் தளர்வு தேவைப்படாது என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவராலும் மீண்டும் மீண்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த குறிப்பிட்ட அம்சமானது, ஆய்விலுள்ள பிரச்சினையுடன் அதாவது கட்டடம் இடிந்து விழுந்ததற்கான காரணத்துடன் செய்வதற்கு ஒன்றுமில்லை. இவ்வாறு தளர்வு செய்யப்பட்டதால்தான் கட்டடம் இடிந்து விழுந்ததாக ஊடகமும் ஒரு சாராரும் பொதுமக்கள்

மனதில் ஒரு கருத்தை உருவாக்க முயற்சித்த காரணத்தால், இந்த குறிப்பிட்ட விவகாரம் குறித்து விரிவாக விவாதிக்கப்படவேண்டியுள்ளது. ஆனால் கட்டுமான தன்மை காரணமாக கட்டடத் தொகுதி B (பிலீப்) இடிந்து விழுந்தது என்பதை மெய்ப்பிப்பதற்கு ஏராளமான பதிவுரு ஆவணங்கள் உள்ளன. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் தரப்பில் மீறல் ஏதுமில்லை என்பதும் அரசு தளர்வு செய்வதற்கு பரிந்துரைக்கிறது என்பதும் முதல்நோக்கிலேயே தெரியவருகிறது.

கட்டுமானதாரர், திட்டவரைபடத்திற்கு அனுமதி கோருகின்ற விண்ணப்பத்தில், D.R. எண்.4(i)(c)–இன் படிவம் B இணைப்பு II–இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் பின்பற்றி நடப்பதாக ஏற்றுக்கொண்டுள்ளார். அந்த நிபந்தனைகள் வருமாறு:-

" .....ஒப்புதலளிக்கப்பட்டுள்ள மனை மற்றும் கட்டட திட்ட வரைப்படங்களுக்கு மாறாக அல்லது சட்டம் 22/1974–இல் திருத்தப்பட்டவாறாக தமிழ்நாடு 1971–ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்பு திட்டமிடல் சட்டத்தின் (சட்டம் 35/1972) யாதொரு விதித்துறைகளுக்கு மாறாக அல்லது இவற்றின் கீழ் இயற்றப்பட்ட யாதொரு விதி, துணை விதிகள், ஆணை அல்லது யாதொரு அறிவிப்புக்கு மாறாக அல்லது மேற்சொன்ன சட்டம், விதிகள் அல்லது துணை விதிகளின்கீழ் யாதொரு சட்டரீதியான உத்தரவு அல்லது கோரிக்கை அளிக்கப்பட்டிருப்பின் அல்லது இயற்றப்பட்டிருப்பின் நீங்கலாக வேறுவகையில் யாதொரு மேம்பாட்டு பணியை மேற்கொள்ளமாட்டேன் என்பதை நான் ஏற்கிறேன்".

மேலும், விண்ணப்பதாரர் படிவம் C-இல் இணைப்பு–III–ல் (DR. எண்.4 (i) (d) (நில உரிமையாளரால் அல்லது பகராள் உரிமைப்பத்திரம் வைத்திருப்பவரால் அல்லது கட்டுமானதாரரால் அல்லது ஊக்குநரால் தனித்தனியாக உறுதிமொழிப்பத்திரம் எழுதிக்கொடுக்கப்படவேண்டும்) நிபந்தனைகளை பின்பற்றுவதாக திட்டவட்டமாக ஒப்புக்கொண்டுள்ளார். அதாவது, 'யாதொரு மாறுபாடு இல்லாத வகையில், ஒப்புதலளிக்கப்பட்ட திட்டவரைபடத்தின்படி மட்டுமே நான் கட்டுமானம் அமைப்பேன் என்றும் ஒப்புதலளிக்கப்பட்ட திட்டவரைபடத்தின்படி கட்டுமானம் அமையவில்லை எனவும் யாதொரு அனுமதியற்ற வகையில் கூடுதல் கட்டுமானம் மேற்கொள்ளப்பட்டது எனவும் பின்னர் கண்டறியப்படுமாயின், திட்டவரைபட அனுமதி வழங்கப்பட்டபோது வசூலிக்கப்படும் பிணை வைப்புத்தொகையை பறிமுதல் செய்வதற்கு நான் ஒப்புக்கொள்வதுடன் அத்தகைய அறிவிப்பு வெளியான முப்பது நாட்களுக்குள் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் குறியீடு செய்த அத்தகைய விதிமுறைகளுக்கு வேறுபட்டு கட்டப்பட்ட கட்டுமானத்தை இடித்துவிடுவதற்கு ஒப்புக்கொள்கிறேன். அவ்வாறு செய்யத்தவறுகின்ற நேர்வில், பிணை வைப்புத்தொகையை

பறிமுதல் செய்வதுடன், இதில் குறிப்பிடப்பட்டுள்ள மனையிலுள்ள அத்தகைய அனுமதியற்ற அல்லது விதிமுறைகளுக்கு வேறுபட்டு கட்டப்பட்ட கட்டுமானத்தை சென்னை பெருநகர வளர்ச்சிக் கழகம் இடித்துவிடலாம் அல்லது இடித்துவிடுமாறு கேட்டுக்கொள்ளலாம்".

மேம்பாட்டு பணிகளை, வழங்கப்பட்ட அனுமதியின்படி மேற்கொள்வதற்கும், மேம்பாட்டு கட்டணங்கள், பிணை வைப்புத்தொகை, கூர்ந்தாய்வு கட்டணம் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் அவ்வப்போது விதிக்கப்பட்ட ஏனைய அனைத்து கட்டணங்களை செலுத்துவதற்கும் மற்றும் மேம்பாட்டு விதிமுறைகளுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட மேம்பாடுகளுக்கான தண்டனை விதிமுறைகளுக்கு உட்படுவதாகவும் நான், கூட்டாகவும், தனித்தனியாகவும் நில உரிமையாளருடன் / பகரார் உரிமைபத்திரம் வைத்திருப்பவருடன் / கட்டுமானதாரருடன் / ஊக்குநருடன் நான் இதனால் உறுதியளிக்கின்றேன்.

மேலும், பிரச்சினைக்குரிய கட்டடத்தின் கட்டுமானத்திற்கும் பொருந்துகின்ற தமிழ்நாடு 1997–ஆம் ஆண்டு ஊராட்சி கட்டட விதிகளின் விதிமுறைகளானது, ஒப்புதலளிக்கப்பட்ட திட்டவரைபடத்தில், யாதொரு விதிமுறைகளுக்கு மாறுபட்ட கட்டுமானத்தை கட்டுவதற்கு தடைசெய்கிறது. இது தொடர்பான பகுதிகள் வருமாறு:-

"மனித உயிருக்கு ஆபத்தை விளைவிக்கின்ற பணியை நிறுத்துதல்:-

முந்தைய விதித்துறைகளின் சட்டத்தில் என்ன சொல்லியிருப்பினும், செயல் அதிகாரியானவர், நடைபெற்றுக்கொண்டிருக்கும் பணியானது மனித உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடியது என அவர் கருதுவாராயின், யாதொரு கட்டடத்தின் கட்டுமானப் பணியை அல்லது மறுகட்டுமானப் பணியை எந்த நேரத்திலும் நிறுத்தலாம்.

34. சட்டத்திற்கும் புறம்பாகத் தொடங்கப்பட்ட மேற்கொள்ளப்படுகின்ற அல்லது நிறைவேற்றப்பட்ட கட்டடப் பணிகளை அகற்றுதல் அல்லது மாற்றியமைத்தல்:-

1. செயல்படுத்தும் அதிகாரம் பெற்ற அலுவலர் கீழ்க்கண்டவாறு ஐயமற தெளிவாராயின்

(i) எந்தவொரு கட்டடத்தின் கட்டுமானம் அல்லது மறுகட்டுமானம்,

(a) செயல்படுத்தும் அலுவலருடைய அனுமதி பெறப்படாமல் தொடங்கப்பட்டுள்ளது; அல்லது


(b) ஒப்புதல் அல்லது ஆணை பிறப்பிக்கப்பட்ட கட்டட அமைப்புத் திட்டத்திற்கு புறம்பாக பணிமேற்கொள்ளப்பட்டு வருகிறது அல்லது நிறைவேற்றப்பட்டுவிட்டது, அல்லது

(c) இவ்விதிகளின் எந்தவொரு வழிவகையையும் மீறி கட்டுமானப்பணி மேற்கொள்ளப்படுகிறது அல்லது நிறைவேற்றப்பட்டது;


(ii) இவ்விதிகளின்கீழ் வெளியிடப்பட்ட ஏதேனுமொரு அறிவிப்பு வாயிலாக மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய மாற்றங்கள் முறையாக நிறைவேற்றப்படவில்லை; அல்லது

(iii) ஏதேனும் நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனும் பணி குறித்து ஏதேனும் கட்டடத்தில் ஏதேனும் மாற்றம் அல்லது சேர்க்கை ஏதேனும் கட்டடத்தின் உள்ளே அல்லது வெளியே விதிகளுக்கு மாறாக தொடங்கப்பட்டுள்ளது அல்லது மேற்கொள்ளப்பட்டு வருகிறது அல்லது முடிக்கப்பட்டு வருகிறது எனில், செய்யப்பட்டுள்ள வேலையை இடிக்குமாறு கட்டட உரிமையாளர் அல்லது கட்டுமானதாரரை பணிக்கின்ற வகையில் தற்காலிகமானதோர் ஆணை பிறப்பிக்கலாம் அல்லது நிருவாக அலுவலரின் கருத்தின்படி, அது சட்டத்திற்குப் புறம்பாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக கருதினால் எந்த விதிகள், ஆணைகளின்பேரில், அப்பணிக்குரிய அமைப்புத் திட்டவரைபடங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டதோ அதற்கிணங்க அக்கட்டடத்தை மாற்றியமைக்குமாறு கட்டட உரிமையாளரை அல்லது கட்டுமானதாரரை பணிக்கலாம்; அத்துடன் மேற்சொல்லப்பட்ட ஆணைகளுக்கு இணக்கமாக மாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்ற வரையில் கட்டட உரிமையாளர், கட்டுமானதாரர் தொடர்ந்து கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளலாகாது என்றும் ஆணையிடலாம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


ROUGH SKETCH - A
Site u/r
15.25m
16.0m
16.6m
3.0m
3.25m
Street Alignment
Road Widening
Center Line
17.0m
Transformer
To Kundrathur
To Porur
To Guindy
PORUR JUNCTION
To Poonamallee
To Vadapalani

ROUGH SKETCH - B



Legend

- Site Boundary
- Passage - 17/8B3 & 17/8B4B
- residuary Plot - 17/8B4A

Note

Site u/r

S.No.17/7A, 7B & 7C - 89 cents

S.No.178B3 - 10 cents

S.No.17/8B4B - 1833 sq.ft

To satisfy the minimum passage width requirement of 18m, the adjacent land of extent 1833 sq.ft (S.No.17/8B4B) was purchased, resulting to unauthorized subdivision from land of extent 10 cents


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கட்டுமானதாரர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் கட்டட திட்ட வரைபடத்திற்கு மாறாக, கட்டடம் கட்டுதல்.

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் பதிவுருக்களை பார்வையிட்டபோது, கட்டுமானதாரரான திருவாளர்கள் பிரைம் சிருஷ்டி ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனம், மௌலிவாக்கத்தில் அடித்தளம் மற்றும் உயர்த்தப்பட்ட இடைத்தளம் + 11 மாடிகள் கொண்ட இரண்டு கட்டடத்தை கட்டுவதற்காக கட்டுமான பொறியாளர் திரு.எஸ்.நாகேஷ் என்பவரால் தயாரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்ட கட்டுமான வடிவமைப்பு திட்டத்துடன் ஒப்புதல் கோருகின்ற விண்ணப்பம் ஒன்றை சென்னை பெருநகர வளர்ச்சி கழகத்திடம் அளித்தது. கட்டட வல்லுநர் திரு.எஸ்.நாகேஷ் தயாரித்த கட்டுமான திட்ட வரைபடத்தின் அடிப்படையில் மட்டுமே சென்னை பெருநகர வளர்ச்சி கழகம் ஒப்புதல் அளித்தது. இந்த ஆணையம் முன்னிலையில் அளிக்கப்பட்ட அவரது உறுதிமொழிப் பத்திரத்தில், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் முன்னிலையில் அளிக்கப்படுவதற்கான கட்டட திட்டவரைபடத்தின் தயாரிப்பு பணிகுறித்து அவரால் பேசப்பட்டது. கட்டுமானதாரரின் கலந்தாலோசகரான திரு.விஜய் பார்கோத்ரா என்பவரின் கீழ் திட்ட கட்டட வல்லுநராக பணியாற்றி வந்த திருமதி சுகன்யா என்பவர் இந்த ஆணையம் முன்னிலையில் அளித்த அவருடைய உறுதிமொழிப்பத்திரத்தில், திரு.எஸ்.நாகேஷ் அளித்த வாக்குமூலத்தை விவரித்ததுடன் அல்லாமல், கட்டட கலைஞர் திரு.எஸ்.நாகேஷ் தயாரித்த கட்டுமான வடிவமைப்பு திட்டவரைபடத்தின் அடிப்படையில் மட்டுமே, கட்டுமானதாரரின் விண்ணப்பம் செய்முறைபடுத்தப்பட்டது என்பதை உறுதிபடுத்தியதுடன், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் அதிகாரிகள் எழுப்பிய வினாக்களுக்கு விளக்கம் அளிப்பதற்காக பலமுறை கட்டுமானதாரரான மனோகரனுடன் அவர் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அலுவலகத்திற்கு அவர் சென்றதையும் அவர் மேலும் உறுதிபடுத்தினார். அதன்பின்னர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் ஒப்புதல் அளித்தப்பின்னர், கட்டுமானதாரர், பார்கோத்ராவுடன் கலந்தாலோசித்து, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடம் அளிக்கப்பட்ட ஒப்புதலளிக்கப்பட்ட திட்டவரைபடத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட கட்டுமான வடிவமைப்பு திட்டவரைபடத்தை கட்டட கலைஞர் திரு.எஸ்.வெங்கட்டசுப்பிரமணியத்திடமிருந்து பெற்றார். மதுரை கட்டட கலைஞரான திரு.எஸ்.வெங்கட்டசுப்பிரமணியன் தயாரித்த திட்டவரைபடங்கள் விதிமுறைகளுக்கு முரணாக இருப்பதை கண்டறிந்து, திருமதி சுகன்யா பல்வேறு வினாக்களை எழுப்பி விளக்கி கோரினார். இதற்கு, அத்தகைய விளக்கத்திற்கான பதில் திரு.எஸ்.வெங்கட்டசுப்ரமணியத்திடமிருந்து பெறப்பட்டது என திரு.பார்கோத்ரா தெரிவித்தார் என்பதும் உண்மையில், அவரது தொலைபேசி உரையாடலில் கட்டட வடிவமைப்பில் அத்தகைய மாறுபாடு அவரால்தான் மேற்கொள்ளப்பட்டது என்றும் இரட்டை கட்டடத்தை கட்டுவதற்கு அவற்றை பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதும்

திருமதி சுகன்யாவின் வாக்குமூலத்தில் தெரியவருகிறது. அதன்பின்னரும்கூட, கட்டுமானதாரர் சில தூண்களை அகற்றியபோது, கட்டுமானத்தின் நிலைத்தன்மை குறித்து அவர் ஐயம் எழுப்பியுள்ளார் என திருமதி சுகன்யா தன்னுடைய உறுதிமொழிபத்திரத்தில் மேலும் தெரிவித்துள்ளார். அந்த தூண்களை அகற்றியபோதிலும்கூட, திரு.எஸ். வெங்கட்டசுப்ரமணியமுடன் கலந்தாலோசித்ததன்பேரில் மட்டுமே தூண்களும் விட்டங்களும் அமைக்கப்பட்டன என கட்டுமானதாரரும் திரு.பார்கோத்ராவும் பதிலளித்தனர். கட்டுமானதாரர் மற்றும் திரு.எஸ்.வெங்கட்டசுப்ரமணியமின் உத்தரவுகளை மதித்து நடக்குமாறு அவருக்கு வெறுமனே உத்தரவிடப்பட்டது. கட்டுமானத்தின் உறுதித்தன்மை தொடர்பாக அவர் மீண்டும் மீண்டும் மறுப்புகள் தெரிவித்தப்போதிலும்கூட, கட்டுமானதாரர், கலந்தாலோசகர் திரு.பார்கோத்ரா, கட்டட கலைஞர் திரு.எஸ்.வெங்கட்டசுப்ரமணியம் ஆகியோரால் அறிவுறுத்தப்பட்டு, திட்டப்பணியை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு அவரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

திரு.எஸ்.நாகேஷ், அவராலும் திரு.எஸ்.வெங்கட்டசுப்ரமணியத்தாலும் அளிக்கப்பட்ட வடிவமைப்பு திட்டவரைபடத்தை பார்வையிட்டபோது, பல முரண்பாடுகள் கண்டறியப்பட்டதாக தன்னுடைய உறுதிமொழிப்பத்திரத்தில் திட்டவட்டமாக அவர் தெரிவித்தார். அவரது உறுதிமொழிப்பத்திரத்தில் அவர் தெரிவித்தவை வருமாறு:-

"கடைக்காலில் நான் 59' ஆழம் கொண்ட நிலத்தூணும் 20' விட்டம் கொண்ட நிலத்தூணும், பாதுகாப்பான தாங்குத் திறன் 105 டன்னும் என குறிப்பிட்டுள்ளேன்". திரு.எஸ்.வெங்கட்டசுப்ரமணியனின் திட்ட வரைபடத்தில் நிலத்தூண் 13" ஆழம் என்றும் 12" விட்டம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. பாதுகாப்பான தாங்குத்திறன் குறிப்பிடப்படவில்லை. 65 எண்ணிக்கைகள் கொண்ட நிலத்துாண்கள் ராப்ட் பலகம் 13" ராப்ட் பீம் 13" x 2' 2" உயரம் அவரால் கருதப்பட்டன. மற்றும் வலுவூட்டல் குறித்த விவரங்கள் தெளிவாக குறிப்பிடப்படவில்லை. இதைத்தவிர, எனது தூண் வடிவமைப்பில் 1' x 0' x 2' 0' மனை மற்றும் 255 மிமீ விட்டம் கொண்ட 8 எண்ணிக்கைகள் ரீபார்களுடன் கூடிய M35 கிரேடு சிமிட்டிகார்காரையுடன் 60 எண்ணிக்கைகள் கொண்ட தூண் மற்றும் உயரளவு இடைவெளியுடன் கூடிய தூண் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் திரு. எஸ்.வெங்கட்டசுப்ரமணியனின் திட்டவரைபடத்தில், 1' x 1' 6" அளவு மற்றும் 200 மிமீ விட்டம் கொண்ட 8 எண்ணிக்கையிலான தூண் வடிவமைப்பு கருதி பார்க்கப்பட்டது. 38 எண்ணிக்கைகள் கொண்ட தூண்களுடன் M25 கிரேடு சிமிட்டிகற்காரையுடன் கூடிய ரீபார்களும் உயரளவு 23' 0" இடைவெளி தூணுடன் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் அவர்கள் 2 எண்ணிக்கைகள் கொண்ட மிதவை தூணினை மேல் நிலையிலிருந்து

எடுத்துக்கொண்டனர். எனது திட்டவரைபடத்தில் மேற்கூரை பலகம் தடிமன் 5" என குறிப்பிடப்பட்டது. ஆனால் திரு.வெங்கட்டசுப்ரமணியனின் திட்டவரைபடத்தில் மேற்கூரை பலகம் தடிமன் தெளிவாக குறிப்பிடப்படவில்லை. எனது வடிவமைப்பில், ஒவ்வொரு கட்டடத்திற்கான அடிமானங்கள் தனியாக இருந்தன. திரு.வெங்கட்டசுப்ரமணியனின் வரைபடத்தில், இரண்டு கட்டட தொகுதிகளுக்கும் பொதுவான ராப்டு அடிமானம் (Raft foundation) கட்டப்பட்டது. இதைத்தவிர, தடுப்புச்சுவரிலிருந்து மிதவை தூண் கட்டப்பட்டது. எனவே இந்த தூணிண் சுமை தடுப்புச்சுவரில் விழுகிறது".

திருமதி சுகன்யா தன்னுடைய உறுதிமொழிப் பத்திரத்தில், திரு. எஸ். வெங்கட்டசுப்ரமணியன் அளித்த கட்டுமான வடிவமைப்பு திட்டவரைபடமும் அதனை தொடர்ந்து கட்டுமானதாரர் திரு.மனோகரன் செய்த மாறுபாடுகளும் அவருக்கு மனநிறைவு அளிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார். அவர் தன்னுடைய உறுதிமொழிப் பத்திரத்தில் நிகழ்வினை விவரித்துள்ளார். அவை வருமாறு:-

"கட்டட கட்டுமானப்பணி எனது பணியின் ஒரு அங்கம் அன்று. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு B கட்டட தொகுதிக்கு ஒப்புதல் பெறுவதற்காக நாங்கள் அனுப்பிய திட்டவரைபடத்தில் 46 தூண்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. மேற்சொன்ன திட்டவரைபடத்தின்படி கட்டடம் கட்டப்படவில்லை. கட்டுமானதாரரின் கோரிக்கையின்படி, திரு.விஜய் பார்கோத்ரா தூண்களின் எண்ணிக்கையை 37–ஆக குறைத்துவிட்டார்.

நான் இது குறித்து எனது நிருவாக இயக்குநர் திரு.விஜய் பார்கோத்ராவிடம் பேசினேன். கார் நிறுத்துமிடத்திற்கு இடவசதி செய்துகொடுப்பதற்காக இவ்வாறு செய்யப்பட்டது என அவர் என்னிடம் கூறியதுடன், இது குறித்து வெங்கட்டசுப்ரமணியத்துடன் பேசுமாறு என்னிடம் கூறினார். தூண்களின் எண்ணிக்கையை குறைப்பது கட்டடத்தின் உறுதித்தன்மையை பாதிக்காதா என நான் அவரிடம் கேட்டேன். எனது நிருவாக இயக்குநர், கார் நிறுத்துமிடத்திற்காக தூண்களின் எண்ணிக்கையை குறைத்ததாக வெங்கட்டசுப்ரமணியன் என்னிடம் கூறி, கட்டுமான வடிவமைப்பு குறித்து அவர் கவனித்துக்கொள்வதாக தெரிவித்தார். வெங்கட்டசுப்ரமணியன் என்னிடம் தெரிவித்ததை நான் நிருவாக இயக்குநரிடம் கூறினேன். எனக்கு கட்டுமான வடிவமைப்பு பற்றிய அடிப்படை அறிவே உள்ளது. வெங்கட்டசுப்ரமணியன் இந்த விவகாரம் குறித்து கவனித்துக்கொள்வார் என நான் கருதினேன்.

மேலும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் ஒப்புதலளித்த திட்டவரைபடத்தின்படி, 11 மாடி கட்டடம் கட்டப்படவில்லை. அவ்வப்போது எனது நிருவாக இயக்குநர் விஜய் பார்கோத்ராவும் பொறியாளர் வெங்கட்டசுப்ரமணியமும் விவாதித்து திட்ட வரைபடங்களை தயாரித்தனர். நான், அவர்களின் தேவைப்படி திட்டவரைபடங்களை தயாரித்தேன். நான்

தொகை பெறும் பணியாளர் மட்டுமே. நான் பணி நடைபெறும் இடத்தை 3 – 4 தடவைகள் சென்று பார்த்தேன். பொறியாளர்கள் சங்கர் ராமகிருஷ்ணனும் தினேஷ்உம் பணியிடத்தில் இருப்பர். நான் பணியிடத்தை கடைசியாக பார்வையிட்டபோது, கட்டடத்தொகுதி A–க்கான அடிக்கட்டுமானம் பாதி முடிவடைந்திருந்தது. கட்டடத்தொகுதி B–க்கான கட்டட அடித்தளமும், இடைத்தளமும் நிறைவடைந்தன. தரைத்தளத்திற்கான கட்டுவேலை நடைபெற்று வந்தது. மேலும் கட்டடத்தொகுதி B–இல், L & M தூணிற்கு இடையே தடுப்புச்சுவரிலிருந்து மிதவை தூண் ஒன்று நிறுவப்பட்டது. இந்த மிதவை தூண் அமைப்பது சரிதானா என்றும், இது கட்டடத்தின் உறுதித்தன்மையை பாதித்துவிடாதா என்றும், 11 மாடி சுமையை அது தாங்குமா என்றும் நான் வெங்கட்டசுப்ரமணியனிடம் கேட்டேன். அது ஒரு பிரச்சினை இல்லை என்றும், அதை தான் பார்த்துக்கொள்வதாகவும் வெங்கட்டசுப்ரமணியன் என்னிடம் தெரிவித்தார். வெங்கட்டசுப்ரமணியன் என்னிடம் சொன்னதை நான் என்னுடைய நிருவாக இயக்குநரிடம் கூறினேன்.

நாகேஷின் கட்டுமான வடிவமைப்பின்படி தூண் அளவு 1' x 2' என அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் வெங்கட்டசுப்ரமணியனின் கட்டுமான வடிவமைப்பின்படி, தூண் அளவு 1' x 1' 6" என அளிக்கப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட தூண் அளவு, 11 மாடி கட்டடத்திற்கு உரியதாக அல்ல என நான் எனது நிருவாக இயக்குநர் விஜய் பார்கோத்ராவிடம் கூறினேன். கட்டுமான பொறியாளர் வெங்கட்டசுப்ரமணியன் அதனை பார்த்துக்கொள்வார் என எனது நிருவாக இயக்குநர் என்னிடம் கூறினார். நாகேஷ் அந்த கட்டடத்திற்கு பைல் அடிகட்டுமானம் (Pile foundation) பற்றி குறிப்பிட்டிருந்தார். நாகேஷ், அவருடைய கட்டுமான உறுதித்தன்மை சான்றிதழில் 18மீ ஆழம் கொண்ட பைல் அடிகட்டுமானம் குறித்து குறிப்பிட்டிருந்தார். பின்னர், வெங்கட்டசுப்ரமணியன் அவரது அடிகட்டுமான வடிவமைப்பில் 4 மீட்டர் ஆழம் கொண்ட பைல் அடிகட்டுமானத்தை மட்டுமே குறிப்பிட்டிருந்தார். எனவே 18 மீட்டருக்குப் பதிலாக 4 மீட்டருக்கு மட்டுமே அடிகட்டுமானம் போடப்பட்டது. இது குறித்து வெங்கட்டசுப்ரமணியனிடம் பேசுமாறு எனது நிருவாக இயக்குநரிடம் நான் கூறினேன். கட்டுமானதாரர் மனோகரனும் கட்டுமான பொறியாளர் வெங்கட்டசுப்ரமணியனும் இந்த பிரச்சினைகளை கவனித்துக்கொள்வார்கள் என்றும், நாம் இதுகுறித்து பேசத்தேவையில்லை என்றும் நிருவாக இயக்குநர் என்னிடம் கூறினார். கட்டடம் முறையாக வடிவமைக்கப்படாததாலும் காரணமின்றி தூண்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதாலும் கட்டடத்தின் உறுதித்தன்மை பாதிக்கப்பட்டு சுமை தாளாமல் கட்டடத்தின் உறுதியற்ற தன்மை காரணமாக இடிந்து விழுந்துவிட்டது.

அத்தகைய வடிவமைப்புகளையும் திட்டவரைபடங்களையும் தயாரிக்கும் பணியில் ஈடுபட்ட நபர்களுடன், கட்டட கட்டுமானத்துடன் சம்பந்தப்பட்ட ஏனைய பல நபர்களும் இந்த ஆணையம் முன்னிலையில் தத்தம் உறுதிமொழிப் பத்திரங்களையும் தாக்கல் செய்துள்ளனர்.

குறிப்பிடத்தக்க நபரான முதலாளாக பணியமர்த்தப்பட்ட திரு.ஐயப்பன் அவருடைய வாக்குமூலத்தில், 4 மீ x 1" 2 சுற்றளவு கொண்ட 17 பைல்களை (Piles) அமைத்துள்ளதாக தெரிவித்துள்ளார். மணல் தளர்வாக இருந்ததால் பைல் அமைக்கும் பணியை முனைப்புடன் செயல்படுத்த இயலவில்லை. எனவே அவரது பணியை அவர் தொடர இயலாமல் போனது. கட்டுமானதாரர் மனோகரனின் உத்தரவுப்படி அவர் மேற்கொண்ட பைல் அமைக்கும் பணியானது சுற்றுச்சுவர் கட்டுமானத்திற்கு மட்டுமே தகுந்ததாகும் என்றும் பன்மாடி கட்டடத்திற்கு தகுந்ததாக இல்லை என்றும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

பைல் அடிகட்டுமானத்திற்காக கட்டுமானதாரரால் பணியமர்த்தப்பட்ட திரு.ஏழுமலை என்பவர் அவரது வாக்குமூலத்தில், 3 மீ x 1" சுற்றளவு கொண்ட 30 பைல்களுடன் பைல் அடிகட்டுமானம் அமைந்திருந்ததாக தெரிவித்துள்ளார். அவரின் கூற்றுப்படி, மண் மணற்பாங்காக இருந்ததுடன் அவர் அமைத்த பைல்-ஆனது, சுற்றுச்சுவர் அமைப்பதற்கு மட்டுமே தகுந்தவாறாக இருந்தது.

கம்பி வளைப்பவராக கட்டுமானதாரரால் பணியமர்த்தப்பட்டுள்ள திரு. மாரி என்பவர், திட்டவரைபடத்தில் போதிய தூண்கள் இல்லாததால், அவற்றால் சுமையை தாங்க இயலவில்லை என குற்றஞ்சாட்டினார்.

கட்டுமான பணியின் மேஸ்த்திரியான திரு. மணி என்பவர் அவருடைய வாக்குமூலத்தில், கான்கிரீட் பலகைகளை அமைப்பதற்கு கட்டுமானதாரர் 15 நாட்கள் கால அவகாசம் மட்டுமே அவருக்கு அளித்தார் என்றும் ஆனால் அத்தகைய பணிக்கு 25 நாட்கள் காலஅளவு தேவைப்படும் என தெரிவித்து, கட்டடம் இடிந்துவிழுந்ததற்கான காரணங்களில் இதுவும் ஒன்றென அவர் தெரிவித்தார்.

மற்றொரு மேஸ்த்திரியான திரு. மணி என்பவர் தன்னுடைய வாக்குமூலத்தில், தூண்களின் எண்ணிக்கை போதுமான வகையில் இல்லை என்றும், வளையங்கள் கொண்ட தூண்கள் போதிய பைல்களுடன் இணைக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். கான்கிரீட் கலப்பதற்கு மணலுக்கு பதிலாக நிலக்கரி சாம்பல் பயன்படுத்தப்பட்டதுடன் சரியான விகிதமும் பின்பற்றப்படவில்லை. சாதாரண செங்கல்லுக்குப் பதிலாக, நிலக்கரி செங்கல் பயன்படுத்தப்பட்டதால் ஏற்பட்ட அளவிற்கதிகமான அந்த சுமையை, போதுமான தூண்கள்

இல்லாததால் தாங்க இயலாமற் போனது. அவரின் கூற்றுப்படி, படிகட்டுகளில் இரண்டு பாகங்களாக கட்டடம் உடைந்ததன் காரணமாக கட்டடம் இடிந்து விழுந்தது.

முறையற்ற கட்டுமானத்தால், கட்டடம் இடிந்து, அண்டைவீட்டாரின் குடியிருப்பு பகுதிகளில் விழுந்து அவர்களின் குடியிருப்புக்கும், உடைமைக்கும் சேதம் விளைவித்தது. காயமுற்ற நபர்கள், கட்டுமானம் முறையாக இல்லாததால், நேர்விற்கேற்ப அவர்களுக்கு பெரிய மற்றும் சிறிய காயங்கள் ஏற்பட்டன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்சொன்ன நபர்களின் உறுதிமொழிப் பத்திரங்களை கவனமுடன் கூர்ந்தாய்வு செய்ததன்பேரில், கட்டுமானதாரர், ஆலோசகர், கட்டடக் கலைஞர் திரு. எஸ்.வெங்கட்டசுப்பிரமணியம் ஆகியோர் வேண்டுமென்றே 1971–ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் விதிமுறைகளையும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளையும் மீறியுள்ளனர் என தெரிகிறது. திட்டவரைபட அனுமதி வழங்குவது தொடர்பான சட்டத்தை அவர்கள் அவமதித்துள்ளனர் என்பது முதல் நோக்கிலேயே தெரியவந்ததுடன் முதலாவது இனத்தில், பெயரளவிற்காக மட்டுமே சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடமிருந்து திட்ட வரைபட அனுமதி பெறப்பட்டது என்றும் மேலும் தெரியவந்தது. உண்மையில், திட்டவரைபட அனுமதி கோருகின்ற விண்ணப்பபடிவத்தில் கண்டுள்ள நிபந்தனைகளை கருத்தில் கொள்ளாமல், இதுகுறித்து இயற்றப்பட்ட சட்டத்தினை முழுமையாக அவமதித்ததுடன், கட்டுமானம் குறித்து கட்டுமானதாரர் கண்டிப்பாக பின்பற்றவேண்டியிருந்த ஏனைய பல திட்டவட்டமான நிபந்தனைகளும் பின்பற்றப்படவில்லை. இதனால், கட்டடத்தின் கட்டுமானமே சட்டத்திற்குப் புறம்பானது என்பதால் இரட்டை கட்டட கட்டுமானத்தை சட்டத்திற்குப் புறம்பான கட்டடம் என அறிவிக்கவேண்டும் என்ற முடிவுக்கு இட்டுச் செல்கிறது என்பது முதல் நோக்கிலேயே தெரியவருகிறது.

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மற்றும் ஏனைய தொடர்புடைய விதிகளை முழுமையாக புறக்கணித்து விதிமுறைக்கு மாறாக ஏன் கட்டப்பட்டது என்பது குறித்து இந்த ஆணையம் முன்னிலையில் விளக்கமளிக்குமாறு கட்டுமானதாரர், ஆலோசகர் மற்றும் கட்டடகலைஞர் திரு.எஸ்.வெங்கட்டசுப்ரமணியனுக்கு வாய்ப்பு அளித்தபோது, திரு. எஸ்.வெங்கட்டசுப்ரமணியன் உத்தரவுகளின்படி கட்டுமான திட்டவரைபட வடிவமைப்பு பின்பற்றப்பட்டது என்றும், கட்டுமானதாரரின் வடிவமைப்பு திட்டமும் அதுபோன்றே சிறப்பாக இருந்தது என்றும், முழுகட்டடத்தின் கட்டமைப்பு உறுதித்தன்மையை சந்தேகிக்க முடியாது என்றும் அவர்கள் அனைவரும் பதிலளித்தனர்.

இத்தகைய மழுப்பலான மற்றும் அழுத்தமான பதிலை அனுமதிப்பது நல்வாய்ப்பற்ற நிலையாகும். கட்டுமானதாரர், தொடக்கத்திலேயே கட்டட கலைஞர்

திரு. எஸ்.வெங்கட்ட சுப்ரமணியத்தை பணியமர்த்தி, அவர் தயாரித்த கட்டட வடிவமைப்பு திட்ட வரைபடத்தை ஒப்புதல் கோருகின்ற விண்ணப்பத்துடன், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடம் அளித்திருக்கலாம்.

கட்டுமானதாரர், ஆலோசகருடனும், கட்டட கலைஞருடனும் வஞ்சக நோக்கத்துடன் ஒன்றுகூடி சதிசெய்து அதிகாரிகளை ஏமாற்றியதுடன், ஒப்புதல் பெறப்பட்ட அசல் திட்டவரைபடத்திலிருந்து மாறுபட்டு செயல்பட்டதால் சட்டத்திற்கு புறம்பாகவும், முறைகேடான வகையிலும் கட்டுமானத்தை மேற்கொண்டதோடு மட்டுமல்லாமல், கட்டுமானத்தில் உறுதியற்ற தன்மையை ஏற்படுத்தி எதிர்பாராத வகையில் கட்டடம் இடிந்துவிழும் துரதிருஷ்டமான நிலை ஏற்பட்டது என்பது தெளிவாக தெரிகிறது.

மேஸ்த்திரி, நிலத்தூண்கள் (Piles) அமைத்த நபர்கள் மற்றும் கட்டடம் கட்டுவதற்கு பணியமர்த்தப்பட்ட தொழிலாளர்கள் ஆகியோர் அளித்த உறுதிமொழிப்பத்திரங்களை பார்வையிட்டபோது, உரிய அக்கறையுடனும், கவனத்துடனும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதும், ஆனால், எதிர்கால விளைவுகள் பற்றி கவலைப்படாமல், அசட்டையாகவும், அலட்சிய போக்குடனும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதும் தெரியவருகிறது. நிலத்தூண்கள் அமைத்த நபர்கள் தாக்கல் செய்த உறுதிமொழிபத்திரங்களில், அவர்கள் பணி குறித்த மனநிறைவு கொண்டிராததையே தெளிவாக எடுத்துரைக்கிறது. நிலத்தூண் அமைத்த இருவரும், அவர்கள் அமைக்கவேண்டியிருந்த நிலத்தூணானது சுற்றுச்சுவர் கட்டுமானத்திற்கு மட்டுமே ஏற்றதானதாகும் என்றும், அது, 11 மாடி கட்டடம் எழுப்புதற்கு ஏற்புடையதானதல்ல என ஒரேமாதிரியாகத் தெரிவித்தனர். கட்டுமான பணி முடிவடைந்ததை கண்ட இருவரும் உண்மையில் அவர்களுடைய ஆச்சரியத்தையும், கோபத்தையும் வெளிப்படுத்தியதுடன், அத்தகைய நிலத்தூண் அடிமானத்தில், எதன் அடிப்படையில் அத்தகைய உயரமான கட்டடம் அவர்களால் எழுப்பப்பட்டது என அவர்கள் ஆச்சரியமடைந்தனர். அவ்வாறு அமைக்கப்பட்ட நிலத்தூணானது, உண்மையில் தேவைப்படும் ஆழத்திற்கு ஒத்திசைவாக இல்லாததுடன் அதன் அடிப்படையிலேயே ராப்ட் அடிமானம் (Raft foundation) மேற்கொள்ளப்பட்டது என மேலும் தெரியவருகிறது.

எனவே, கட்டுமானதாரர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடம் அளித்த திட்டவரைபடத்தை மாற்றியதுடன் அல்லாமல் கட்டுமானத்தின் ஒவ்வொரு நிலையையும் சட்டத்திற்கு புறம்பான வகையில் மேற்கொண்டிருக்கிறார். விதிமுறைக்கு மாறான கட்டுமானம் குறித்த தொழில்நுட்ப அம்சம் பற்றி ஏனைய அத்தியாயங்களில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சிறப்பு புலனாய்வு குழு ஏற்படுத்தல்

கட்டடம் இடிந்து விழுந்த உடனேயே, சென்னையிலுள்ள மாங்காடு காவல் நிலையத்தில் இந்திய தண்டனை விதிக் கோவையின் 304(ii), 336, 337, 338ஆம் பிரிவின் கீழ் குற்ற எண்.751/14-இல் வழக்கு ஒன்று பதியப்பட்டு புலனாய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2. வழக்கின் தீவிரத்தை கருதிப் பார்த்து, தமிழ்நாடு அரசு, சிறப்பு புலனாய்வு குழு ஒன்றை ஏற்படுத்த முடிவு செய்தது. அதன்படி, சென்னை, வேப்பேரியிலுள்ள காவல்துறை ஆணையர் 15.7.2014ஆம் நாளிட்ட ந.க.எண்.201/COP/Camp/2014-இல் உள்ள செயல்முறை ஆணை வாயிலாக சிறப்பு புலனாய்வு குழு ஒன்றை ஏற்படுத்தினார். அதன்படி, இந்த ஆணையம், புலனாய்வு முகவரமைப்பு ஒன்றை நியமிப்பதற்காக, 24.7.2014ஆம் நாளிட்ட OP எண்.6/Admn./2014-இல் செயல்முறை ஆணை பிறப்பித்தது.

3. விசாரணை ஆணையம், மேற்சொன்ன அரசாணையில் குறிப்பிடப்பட்ட குறிப்புரைக்கு பதிலளிப்பதற்கு சேகரிக்கப்பட்ட ஆவணங்களை வழங்குவதற்காக ஆணையத்திற்கு உதவுவதற்காக 1952ஆம் ஆண்டு ஆணையங்கள் சட்டத்தின் 5A ஆம் பிரிவின் கீழ் சிறப்பு புலனாய்வு குழுவுக்கு அதிகாரமளித்தது.

4. சிறப்பு புலனாய்வு குழுவானது, புலனாய்வின்போது வாய்மொழியாகவும், ஆவணமாகவும் ஆவணங்களை சேகரித்து விசாரணை ஆணையம் கேட்டுக் கொண்டவாறாக அளித்தது. இந்த ஆணையத்திடம் அளிக்கப்பட்ட ஆவணங்கள் வருமாறு:-

1. மரணமுற்ற **61** பேருக்கான விசாரணை அறிக்கை.
2. மரணமுற்ற 61 பேருக்கான சவப்பரிசோதனை அறிக்கை.
3. காயமுற்ற 27 நபர்களின் காயம் குறித்த சான்றிதழ்.
4. சென்னை கிண்டியிலுள்ள இந்திய தொழில் நுட்ப நிறுவன வல்லுநர்களால் ஆராயப்பட்ட கான்கிரீட் மாதிரி தொடர்பான அறிக்கை நகல்.
5. சென்னையிலுள்ள அண்ணா பல்கலைக்கழகம் நடத்திய மண் பரிசோதனை குறித்த அறிக்கை நகல்.
6. கட்டட இடிபாட்டின் போது எடுக்கப்பட்ட வீடியோ/புகைப்படம் (3 குறுந்தகடுகள்).
7. திரு எஸ்.வெங்கட்டசுப்ரமணியத்தால் தயாரிக்கப்பட்ட கட்டுமான வடிவமைப்பு.

5. மேற்சொன்ன ஆவணங்களுடன், சிறப்பு புலனாய்வு குழு வாயிலாக விசாரணை ஆணையம் உத்தரவிட்டதன் பேரில், கட்டடம் இடிந்து விழுந்தபோது அங்கிருந்த இரட்டை கட்டட கட்டுமானத்துடன் தொடர்புடைய நபர்கள், இந்த ஆணையம் முன்னிலையில் அவர்களின் உறுதிமொழிப் பத்திரங்களை தாக்கல் செய்ய வேண்டியிருந்தன. அதன்படி, அந்த நபர்களின் உறுதிமொழிப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டு பெறப்பட்டன.

6. சிறப்பு புலனாய்வு குழு, 14.8.2014ஆம் நாளிட்ட அதன் அறிக்கையை விசாரணை ஆணையத்திடம் அளித்துள்ளது. அதில், கட்டடம் இடிந்து விழுந்ததற்கான காரணங்கள் குறிப்பிடப்பட்டு ஒரு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. சிறப்பு புலனாய்வு குழுவின் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது.



சென்னை-7. வேப்பேரி காவல்துறை ஆணையாளரின் செயல்முறை ஆணை

முன்னிலை: எஸ்.ஜார்ஜ், இ.கா.ப.

ந.க.எண்.201/COP/CAMP/2014 நாள்: 15/07/2014

குறுந்தலைப்பு: சென்னை பெருநகர காவல் – சென்னை மௌலிவாக்கத்தில் 11 மாடி கட்டட கட்டுமானத்தின்போது இடிந்து விழுந்தது தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்கினை புலனாய்வு செய்வதற்கு சிறப்பு புலனாய்வு குழு ஏற்படுத்தல் – ஆணைகள் பிறப்பிக்கப்படுகிறது.

படிக்கவும்: அரசாணை நிலை எண்.480, உள் (காவல் XVIII) துறை, நாள் 11.7.2014.

*****

ஆணை:-

மேலே குறிப்பிடப்பட்ட அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட அரசின் ஆணைகளுக்கிணங்க, 28.6.2014 அன்று சென்னை மௌலிவாக்கத்தில் கட்டப்பட்டு வந்த பதினோரு மாடி கட்டடம் இடிந்து விழுந்தது தொடர்பாக இந்திய தண்டனை விதிக்கோவையின் 304(ii), 336, 337, 338 ஆகிய பிரிவுகளின் கீழ் மாங்காடு காவல்நிலையத்தில் குற்ற எண் 751/14–இல் பதிவு செய்யப்பட்ட வழக்கினை புலனாய்வு செய்வதற்காக, சிறப்பு புலனாய்வு குழு ஏற்படுத்தப்படுகிறது. இந்த சிறப்பு புலனாய்வு குழுவுக்கு, வடக்கு மண்டல (சட்டம் மற்றும் ஒழுங்கு) காவல் துறை கூடுதல் ஆணையாளர் திரு.கருணாசாகர், இ.கா.ப, அவர்களின் நேரடி கண்காணிப்பின்கீழ், வடக்கு மண்டல காவல்துறை இணை ஆணையாளர், திரு.சி. ஸ்ரீதர், இ.கா.ப. அவர்கள் தலைமை வகிப்பார்.

2. புலனாய்வுப் பணியை முனைப்புடன் மேற்கொள்வதற்காக, இந்த வழக்கில் கிழக்கு மண்டல PEW. ADC-ஆன திரு.டி.பாலசுப்பிரமணியன், புலனாய்வு அதிகாரியாக நியமிக்கப்படுகிறார். இதுவரையில் இந்த வழக்கினை புலனாய்வு செய்த SRMC சரகத்திற்கு பொறுப்பு வகித்து வந்த பூவிருந்தவல்லி காவல்துறை உதவி ஆணையாளரான திரு. ப்பி. சுப்ரமணிக்கு மேலும் புலனாய்வு மேற்கொள்வதற்காக ADC மற்றும் சிறப்பு புலனாய்வு குழுவுக்கு உதவுமாறு உத்தரவிடப்படுகிறது,

3. இந்த குழுவில் பின்வரும் காவல்துறை ஆய்வாளர்களும், காவல்துறை சார் ஆய்வாளர்களும் அடங்குவர். அவர்கள் விவரம் வருமாறு:-

i) திரு. ஜி.சந்துரு, காவல்துறை ஆய்வாளர், R.7. கே.கே.நகர் காவல் நிலையம் (சட்டம் மற்றும் ஒழுங்கு).

அ) திரு. முருகேச பாண்டியன், SSI, R7 கே.கே.நகர் காவல் நிலையம் (சட்டம் மற்றும் ஒழுங்கு).

ii) திரு. டி. ரவிக்குமார், காவல்துறை ஆய்வாளர், R.1. ராயல்லா நகர் காவல் நிலையம்.

அ) திரு. அமர்நாத், SSI, R-3 அசோக் நகர் காவல் நிலையம்.

iii) திரு. கே.புகழேந்தி, காவல்துறை ஆய்வாளர், G.4 IMH காவல் நிலையம்.

அ) திரு. ஏ.வீரமணி, காவல்துறை சார்பு ஆய்வாளர், G5. தலைமைச் செயலக காலனி (சட்டம் மற்றும் ஒழுங்கு).

iv) திரு. ஆர். ரியாசுதீன், காவல்துறை ஆய்வாளர், T.12 பூவிருந்தவல்லி காவல் நிலையம் (குற்றம்).

அ) திரு. மனோகரன், SSI, T.12, பூவிருந்தவல்லி காவல் நிலையம் (குற்றம்).

v) திரு. டி.கனகராஜ், காவல்துறை ஆய்வாளர், SCP.

அ) திரு. செல்லதுரை, V7, நொளம்பூர் காவல் நிலையம், சட்டம் மற்றும் ஒழுங்கு.

ஆ) திருமதி. சுஜாதா, WSI.V.4, ராஜமங்கலம் காவல் நிலையம்.

vi) திரு. சி.மதியழகன், காவல்துறை ஆய்வாளர், T.14 மாங்காடு காவல் நிலையம், (சட்டம் மற்றும் ஒழுங்கு).

அ) திரு. நாகராஜ், SSI, T.4 மதுரவாயல் காவல் நிலையம்.

ஆ) திருமதி ஜெயந்தி, WSI, T.12 பூவிருந்தவல்லி காவல் நிலையம்.

vii) திரு. ஆர்.டி.விவேகானந்தன், காவல்துறை ஆய்வாளர், E.5 பட்டினப்பாக்கம் காவல் நிலையம் (குற்றம்).

அ) திரு ஆர்.ஜி.ஜெயகுமார், காவல்துறை சார்பு ஆய்வாளர், K.3 அமைந்தகரை போக்குவரத்து காவல் நிலையம்.

ஆ) திரு. எம்.ஆர்.ராஜேஷ், காவல்துறை சார்பு ஆய்வாளர், பறக்கும்படை (கிழக்கு).

4. மேற்சொன்ன அரசாணையில், அரசு, சிறப்பு புலனாய்வு குழுவுக்கு பொறியியல் துறையில் வல்லுநர் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் வழங்குவதற்கு பின்வரும் அதிகாரிகளையும் நியமித்துள்ளது.

i) திரு. ப்பி.கே.சத்தியமூர்த்தி, உதவி செயற்பொறியாளர், முதன்மை பொறியாளர் (கட்டடம்) அலுவலகம், பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை.

ii) பேராசிரியர் தேவதாஸ் மேனன், கட்டுமான பொறியியல் கோட்டம், கட்டட பொறியியல் துறை, இந்திய தொழில் நுட்ப நிறுவனம், சென்னை

iii) டாக்டர் மோன்சிங் டி. தேவதாஸ், பேராசிரியர் மற்றும் தலைவர், கட்டட கலைத்துறை, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை.

iv) டாக்டர் சி.உமாதேவி, உதவி பேராசிரியர், பூகம்பம் தாங்கும் வடிவமைப்பு கட்டுமானம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை.

v) டாக்டர் எம்.முத்தாரம், உதவி பேராசிரியர், மண் இயந்திரவியல் மற்றும் அடிமானம், பொறியியல்துறை, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை.

vi) திரு.ட்டி.பாலசுந்தரம், பி.ஏ.,பி.எல், கூடுதல் வழக்கு தொடர்பவர் (ஓய்வு).

5. சிறப்பு புலனாய்வு குழுவானது, உனடியாக செயலுக்கு வரும் வகையில் புதிய CPO (5-ஆவது தளம்)-இல் செயல்படும்.

ஓம்/-

காவல்துறை ஆணையாளர்.

பெறுநர்

அனைத்து காவல்துறை கூடுதல் ஆணையாளர்கள்.

நகல் பெறுவோர்: இணை ஆணையாளர், வடக்கு மண்டலம்.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு நீதியரசர் திரு ஆர்.ரெகுபதி விசாரணை ஆணையம், அரசு மாளிகை NCB.1, பி.எஸ். குமாரசாமி ராஜா சாலை, சென்னை-28.

அலுவலக செயல்முறை ஆணை எண்.06/நிருவாகம்/2014, நாள் 24.7.2014

பொருள்: மாண்பமை நீதியரசர் திரு ஆர்.ரெகுபதி விசாரணை ஆணையம் – விசாரணை தொடர்பான விவகாரங்களை புலனாய்வு செய்வதற்கு, புலனாய்வு முகவரமைப்பினை நியமித்தல் – உத்தரவுகள் – வெளியிடப்படுகிறது.

படிக்கவும்: 1) அரசாணை நிலை எண்.557, பொது (சட்டம் மற்றும் ஒழுங்கு- F) துறை, நாள் 3.7.2014.

2) அரசாணை (நிலை) எண்.480, உள் (காவல்.XVIII) துறை நாள் 11.7.2014.

3) சென்னை காவல்துறை ஆணையாளரின் 15.4.2014ஆம் நாளிட்ட ந.க.எண்.201/COP/Camp/2014 இல் செயல்முறை ஆணை.

28.6.2014 அன்று மாலை சுமார் 55 நபர்கள் இறப்பதற்கும், ஏனைய பலர் காயமடைவதற்கும் காரணமாக இருந்த காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்திலுள்ள மௌலிவாக்கத்தில் பன்மாடி கட்டடம் இடிந்து விழுந்ததற்கான அனைத்து அம்சங்கள், காரணங்கள் மற்றும் சந்தர்ப்ப சூழல்களை விசாரணை செய்வதற்கு அரசு, மேலே படிக்கப்பட்ட முதலாம் அரசாணையில் நீதியரசர் திரு. ரெகுபதி விசாரணை ஆணையத்தை நியமித்துள்ளது. அதன் ஆய்வு வரம்புகள் வருமாறு :

அ) 28.6.2014 அன்று மாலை சுமார் 55 நபர்கள் இறப்பதற்கும், ஏனைய பலர் காயமடைவதற்கும் காரணமாக இருந்த காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்திலுள்ள மௌலிவாக்கத்தில் பன்மாடி கட்டடம் இடிந்து விழுந்ததற்கான அனைத்து அம்சங்கள், காரணங்கள் மற்றும் சந்தர்ப்ப சூழல்களை விசாரணை செய்வதற்கும்;

ஆ) பெரும் எண்ணிக்கையிலான கட்டட தொழிலாளர்களும் மற்றும் பலரும் காயமடைவதற்கும் காரணமான விபத்து ஏற்படும் வகையில் அலட்சியமாக நடந்துகொண்ட நபர்கள் மீது பொறுப்பு நிர்ணயிப்பதற்கும்;

மற்றும்

இ) இனிமேல் இத்தகைய விபத்துகள் நடைபெறாமல் தடுப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய தீர்வுகாண் நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்கும், அரசு, மாண்பமை நீதியரசர் திரு ஆர்.ரகுபதி விசாரணை ஆணையத்தை நியமித்துள்ளதாலும்;

2. மேலே படிக்கப்பட்ட இரண்டாவது அரசாணையில், 06.07.2014ஆம் நாளிட்ட செய்தி குறிப்பில், 28.6.2014 அன்று காஞ்சிபுரம் மாவட்டம் மௌலிவாக்கத்தில் கட்டப்பட்டுவந்த 11 மாடி கட்டடம் இடிந்து விழுந்ததை புலனாய்வு செய்வதற்கு சிறப்பு புலனாய்வு குழுவை ஏற்படுத்துவதற்கும், அக்குழுவுக்கு வல்லுநர் ஆலோசனையும் வழிகாட்டுதலும் வழங்குவதற்கு பொறியியல் துறை வல்லுநர்களை நியமிப்பதற்கும், மாண்பமை முதலமைச்சர் அறிவித்துள்ளது தொடர்பாக, அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. காவல்துறை தலைமை இயக்குநர் 7.7.2014ஆம் நாளிட்ட 191/DGP-TN/Camp/2014-ஆம் எண் கடிதத்தில், 28.6.2014 அன்று காஞ்சிபுரம் மாவட்டம் மௌலிவாக்கத்தில் கட்டப்பட்டு வந்த 11 மாடி கட்டடம் இடிந்து விழுந்தது குறித்த அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளதாலும்;

3. எனவே, தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் சிறப்பு புலனாய்வு குழுவை ஏற்படுத்துவதற்கும், அக்குழுவுக்கு வல்லுநர் ஆலோசனையும், வழிகாட்டுதலும் வழங்குவதற்கு குறிப்பிட்ட சில நபர்களை நியமிப்பதற்கும் ஆணைகள் கோரியுள்ளதால், அரசு, விரிவான ஆய்வுக்குப் பின்னர், காவல்துறை தலைமை இயக்குநரின் செயற்குறிப்பை ஏற்க முடிவு செய்துள்ளது. அதற்கிணங்க, அரசு, சென்னை மாநகர காவலின் மாங்காடு காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட குற்ற எண்.751/2014-இல் உள்ள குற்றவியல் வழக்கை புலனாய்வு செய்வதற்காக, சென்னை பெருநகர காவல்துறை ஆணையாளரின் ஒட்டுமொத்த கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டின்கீழ் சென்னை பெருநகர காவல்துறையின் காவல்துறை இணை ஆணையாளர் (வடக்கு) தலைமையிலான சிறப்பு புலனாய்வு குழுவை ஏற்படுத்தியுள்ளதாலும்;

4. சென்னை பெருநகர காவல் ஆணையாளர், மேலே 3 ஆவதாக படிக்கப்பட்ட அவரது செயல்முறை ஆணையில், முனைப்பாக புலனாய்வு மேற்கொள்ளும் பொருட்டு சட்டம் மற்றும் ஒழுங்கு, வடக்கு, காவல் துறை கூடுதல் ஆணையாளர் திரு. கருணா சாகர், இ.கா.ப., அவர்களின் நேரடி கண்காணிப்பின் கீழ் வடக்கு மண்டல காவல் துறை இணை ஆணையாளர் திரு. சி. ஸ்ரீதர், இ.கா.ப தலைமையிலான சிறப்பு புலனாய்வு குழுவை நியமித்து ஆணைகள் பிறப்பித்து கிழக்கு மண்டலம், PEW, ADC திரு. வி.பாலசுப்பிரமணியத்தை புலனாய்வு அதிகாரியாகவும், பூவிருந்தவல்லி உதவி ஆணையாளர், திரு. ப்பி. சுப்ரமணி மற்றும் அதிகாரிகள் கொண்ட ஒரு குழுவை, காவல் துறை கூடுதல் ஆணையாளருக்கு உதவுவதற்கு நியமித்துள்ளதாலும்;

5. 1952–ஆம் ஆண்டு விசாரணை ஆணைய சட்டத்தின் (மத்திய சட்டம் 60/1952) 5A ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, காயமேற்பட்டது தொடர்பான விவகாரங்களை புலனாய்வு செய்வதற்கு புலனாய்வு முகவரமைப்பாக அரசால் நேமகம் செய்யப்பட்டு சென்னை பெருநகர காவல் துறை ஆணையாளரால், விசாரணை

ஆணைய அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்ட மேற்சொன்ன கிழக்கு மண்டல PEW-இன் ADC மற்றும் பூவிருந்தவல்லி காவல் துறை உதவி ஆணையாளர் மற்றும் ஏனைய காவல் துறை பணியாளர்களின் பணிகளை பயன்படுத்திக் கொள்ள விசாரணை ஆணையம் விழைந்துள்ளதாலும்;

6. விசாரணை ஆணையம் கவனமுடன் பரிசீலித்தப்பின்னர், 1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்திய சட்டம் 60/1952)5A ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக, தேவை அற்றுப்போகும் வரையில் காயமுற்றது தொடர்பான விவகாரங்களை புலனாய்வு செய்வதற்கு விசாரணை ஆணையத்தின் புலனாய்வு முகவரமைப்பாக பின்வரும் காவல் துறை அதிகாரிகள் மற்றும் காவல் துறை பணியாளர்களின் பணிச்சேவைகளை பயன்படுத்திக் கொள்ளுமாறு இதனால் உத்தரவிடுகிறார்.

i) திரு. கருணா சாகர், இ.கா.ப., காவல் துறை கூடுதல் ஆணையாளர், சட்டம் மற்றும் ஒழுங்கு, வடக்கு, கண்காணிப்பு அதிகாரி

ii) திரு. சி. ஸ்ரீதர், இ.கா.ப, காவல் துறை இணை ஆணையாளர், வடக்கு மண்டலம் புலனாய்வு குழு தலைவர்.

iii) திரு. வி. பாலசுப்ரமணியன், ADC, PEW, கிழக்கு மண்டலம், புலனாய்வு அதிகாரி.

iv) திரு. ப்பி. சுப்பிரமணி, AC, பூவிருந்தவல்லி, ADC-க்கு உதவுவதற்கு.

v) திரு. ஜி. சுந்துரு, காவல் துறை ஆய்வாளர் R7, கே.கே. நகர் காவல் நிலையம் (சட்டம் மற்றும் ஒழுங்கு).

அ) திரு. முருகேச பாண்டியன், SSI, R7, கே.கே. நகர் காவல் நிலையம் (சட்டம் மற்றும் ஒழுங்கு)

vi) திரு. டி. ரவிக்குமார், காவல் துறை ஆய்வாளர், R.11 ராயல்லா நகர் காவல் நிலையம்.

அ) திரு. அமர்நாத், SSI, R3, அசோக் நகர் காவல் நிலையம்.

vii) திரு. கே. புகழேந்தி, காவல் துறை ஆய்வாளர், G4, IMH காவல் நிலையம்

அ) திரு. ஏ.வீராசாமி, காவல் துறை ஆய்வாளர், G5, தலைமைச் செயலக காலனி காவல் நிலையம் (சட்டம் மற்றும் ஒழுங்கு).

viii) திரு. ஆர். ரியாசுதீன், காவல் துறை ஆய்வாளர், T12, பூவிருந்தவல்லி காவல் நிலையம் (குற்றம்).

அ) திரு. மனோகரன், SSI, T12, பூவிருந்தவல்லி காவல் நிலையம் (குற்றம்).

ix) திரு. டி. கனகராஜ், காவல் துறை ஆய்வாளர், SCP.

அ) திரு. செல்லத்துரை, V7, நொளம்பூர் காவல் நிலையம் (சட்டம் மற்றும் ஒழுங்கு).

ஆ) திருமதி. சுஜாதா, WSI, V4, ராஜமங்கலம் காவல் நிலையம்.

x) திரு. சி. மதியழகன், காவல் துறை ஆய்வாளர், T.14, மாங்காடு காவல் நிலையம் (சட்டம் மற்றும் ஒழுங்கு).

அ) திரு. நாகராஜ், SSI, T4, மதுரவாயல் காவல் நிலையம்.

ஆ) திருமதி. ஜெயந்தி, WSI, T12, பூவிருந்தவல்லி காவல் நிலையம்.

xi) திரு. ஆர்.ட்டி.விவேகானந்தன், காவல் துறை ஆய்வாளர், E5, பட்டினப்பாக்கம் காவல் நிலையம் (குற்றம்).

அ) திரு. ஆர். ஜி. ஜெயகுமார், காவல் துறை ஆய்வாளர், K3, அமைந்தகரை போக்குவரத்து காவல் நிலையம்.

ஆ) திரு. எம். ஆர். ராஜேஷ், காவல் துறை ஆய்வாளர், பறக்கும் படை (கிழக்கு).

7. விசாரணை ஆணையம், புலனாய்வின் போது கிடைக்கக்கூடிய அத்தகைய ஏனைய ஆவணங்களை சேகரிப்பதற்கு மேற்சொன்ன சட்டம் மற்றும் சட்டத்தின் ஏனைய விதித் துறைகளுக்கிணங்க மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் குறிப்பிடப்பட்ட விசாரணை தொடர்பான விவகாரங்களை புலனாய்வு செய்வதற்கும், யாதொரு நபருக்கு அழைப்பாணை அனுப்பி அவரை வரச் செய்து விசாரணை செய்வதற்கும், யாதொரு ஆவணத்தை கண்டுபிடித்து அளிப்பதற்கும், யாதொரு அலுவலகத்திலிருந்து அது குறித்த யாதொரு பதிவுரு அல்லது நகலினை கோருவதற்கும் விசாரணை ஆணையத்திடம் அறிக்கை அனுப்புவதற்கும் மேற்சொன்ன புலனாய்வு முகவரமைப்புக்கு மேலும் உத்தரவிடுகிறது.

8. விசாரணை ஆணையம், மேற்சொன்னவாறாக விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்திய சட்டம் 60/1952) 5A-ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக, விசாரணை தொடர்பான விவகாரங்களை புலனாய்வு செய்புமாறும் 3 வார கால அளவிற்குள் விசாரணை ஆணையத்திற்கு இதுகுறித்த அறிக்கையை அளிக்குமாறும், குறித்த கால அளவில் புலனாய்வில் ஏற்பட்டுள்ள முன்னேற்ற நிலை தொடர்பாக மதிப்பிடுமாறும் மேற்சொன்ன புலனாய்வு முகவரமைப்புக்கும் உத்தரவிடுகிறது .

ஒம்/–

ஆணையச் செயலாளர்.

பெறுநர்

i) திரு. கருணா சாகர், இ.கா.ப., காவல் துறை கூடுதல் ஆணையாளர், சட்டம் மற்றும் ஒழுங்கு, வடக்கு, கண்காணிப்பு அதிகாரி.

ii) திரு. சி. ஸ்ரீதர், இ.கா.ப, காவல் துறை இணை ஆணையாளர், வடக்கு மண்டலம் புலனாய்வு குழு தலைவர்.

iii) திரு. வி. பாலசுப்ரமணியன், ADC, PEW, கிழக்கு மண்டலம், புலனாய்வு அதிகாரி.

iv) திரு. ப்பி. சுப்பிரமணி, AC, பூவிருந்தவல்லி, ADC–க்கு உதவுவதற்கு.

v) திரு. ஜி. சந்துரு, காவல் துறை ஆய்வாளர் R7, கே.கே. நகர் காவல் நிலையம் (சட்டம் மற்றும் ஒழுங்கு).

அ) திரு. முருகேச பாண்டியன், SSI, R7, கே.கே. நகர் காவல் நிலையம் (சட்டம் மற்றும் ஒழுங்கு).

vi) திரு. டி. ரவிக்குமார், காவல் துறை ஆய்வாளர், R.11 ராயல்லா நகர் காவல் நிலையம்.

அ) திரு. அமர்நாத், SSI, R3, அசோக் நகர் காவல் நிலையம்.

vii) திரு. கே. புகழேந்தி, காவல் துறை ஆய்வாளர், G4, IMH காவல் நிலையம்.

அ) திரு. ஏ.வீராசாமி, காவல் துறை ஆய்வாளர், G5, தலைமைச் செயலக காலனி காவல் நிலையம் (சட்டம் மற்றும் ஒழுங்கு).

viii) திரு. ஆர். ரியாசுதீன், காவல் துறை ஆய்வாளர், T12, பூவிருந்தவல்லி காவல் நிலையம் (குற்றம்).

அ) திரு. மனோகர், SSI, T12, பூவிருந்தவல்லி காவல் நிலையம் (குற்றம்).

ix) திரு. டி. கனகராஜ், காவல் துறை ஆய்வாளர், SCP.

அ) திரு. செல்லத்துரை, V7, நொளம்பூர் காவல் நிலையம் (சட்டம் மற்றும் ஒழுங்கு).

ஆ) திருமதி. சுஜாதா, WSI, V4, ராஜமங்கலம் காவல் நிலையம்.

x) திரு. சி. மதியழகன், காவல் துறை ஆய்வாளர், T.14, மாங்காடு காவல் நிலையம் (சட்டம் மற்றும் ஒழுங்கு).

அ) திரு. நாகராஜ், SSI, T4, மதுரவாயல் காவல் நிலையம்.

ஆ) திருமதி. ஜெயந்தி, WSI, T12, பூவிருந்தவல்லி காவல் நிலையம்.

xi) திரு. ஆர்.ட்டி. விவேகானந்தன், காவல் துறை ஆய்வாளர், E5, பட்டினப்பாக்கம் காவல் நிலையம் (குற்றம்).

அ) திரு. ஆர். ஜி. ஜெயகுமார், காவல் துறை ஆய்வாளர், K3, அமைந்தகரை போக்குவரத்து காவல் நிலையம்.

ஆ) திரு. எம். ஆர். ராஜேஷ், காவல் துறை ஆய்வாளர், பறக்கும் படை (கிழக்கு).

நகல் பெறுபவர்

அரசு செயலாளர், பொது (சட்டம் மற்றும் ஒழுங்கு–F)த்துறை, தலைமைச்செயலகம், சென்னை–9.

காவல்துறை தலைமை இயக்குநர், தமிழ்நாடு, மயிலாப்பூர், சென்னை–4.

காவல்துறை ஆணையாளர், வேப்பேரி, சென்னை–7.

இந்திய தண்டனை விதிக் கோவையின் 304 (II), 336, 337, 338 ஆம் பிரிவின் கீழ் T14–மாங்காடு காவல் நிலைத்தில் குற்ற எண். 751/2014–இல் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

(மௌலிவாக்கம் கட்டடம் இடிந்து விழுந்த வழக்கு)

T14-MANGADU P.S.Cr.No. 751/2014 u/s 304 (II), 336, 337, 338 IPC (Moulivakkam Building Collapse)						
தொடர் எண்.	மரணமுற்றோர்	மருத்துவமனை	விசாரணை நாள்	சவப் பரிசோதனை நடந்த நாள்	சவப் பரிசோதனை எண்	பக்க எண்
1.	மருதுபாண்டி, ஆண்/25, த/பெ பால்பாண்டி, வேம்பூர் அஞ்சல், குச்சம்பட்டி பொறையூர் (வட்டம்), மதுரை.	ஸ்ரீராமசந்திரா மருத்துவ கல்லூரி	29.06.2014	29.06.2014	118/2014	1
2.	சங்கர், ஆண்/27, த/பெ அப்புலு நாயுடு, கைசகி முத்து மண்டல், விஜயநகரம் ஜில்லா, ஆந்திர பிரதேசம்.	ஸ்ரீராமசந்திரா மருத்துவ கல்லூரி	29.06.2014	29.06.2014	119/2014	2
3.	ராஜலட்சுமி, பெண்/28, க/பெ வெங்கட்ட ரமணன், நீலாம்பபுரம், அக்ரகாரம் கிராமம், மல்சா மண்டல், விஜயநகரம் ஜில்லா, ஆந்திர பிரதேசம்.	ஸ்ரீராமசந்திரா மருத்துவ கல்லூரி	29.06.2014	29.06.2014	120/2014	3
4.	சாந்தகுமாரி, பெண்/25, க/பெ அப்புலு நாயுடு என்கிற சின்னா, பனங்கு மங்கலம், விஜயநகரம் ஜில்லா, ஆந்திர பிரதேசம்.	ஸ்ரீராமசந்திரா மருத்துவ கல்லூரி	29.06.2014	29.06.2014	121/2014	4
5.	ராமு, ஆண்/36, த/பெ எர்ரா நாயுடு, கிருஷ்ணாபுரம், தாதி ராஜாரு மண்டல், விஜயநகரம் ஜில்லா, ஆந்திர பிரதேசம்.	ஸ்ரீராமசந்திரா மருத்துவ கல்லூரி	29.06.2014	29.06.2014	122/2014	5
6.	ஜெயலட்சுமி, பெண்/35, த/பெ சத்தியநாராயணன், மக்குவா மண்டல், விஜயநகரம் ஜில்லா, ஆந்திர பிரதேசம்.	ஸ்ரீராமசந்திரா மருத்துவ கல்லூரி	01.07.2014	01.07.2014	125/2014	6

7.	லோகநாதன், ஆண்/45, த/பெ கன்னையா நாயுடு, 101, இரண்டாவது முதன்மைச் சாலை, பசும்பொன் நகர், கள்ளிக்குப்பம், அம்பத்தூர், சென்னை.53.	GRH	29.06.2014	29.06.2014	762/2014	7
8.	அமர்குமார் கரோ என்கிற அமர்குமார் ரவுத், ஆண்/26, த/பெ, கனகசாமி ராவ், ராஜ் நகர், கேந்திர பாரா, ஒடிசா.	GRH	29.06.2014	29.06.2014	763/2014	8
9.	அலி, ஆண்/19, த/பெ கயத்தார் கவுரி, பராடன்கா கிராமம், கேந்திரபாரா மாவட்டம், ஒடிசா.	GRH	29.06.2014	29.06.2014	764/2014	9
10.	நிரஞ்சன் கரோ, ஆண்/35, த/பெ, நாராயண கரோ, கேந்திரபாரா மாவட்டம், ஒடிசா.	GRH	29.06.2014	29.06.2014	765/2014	10
11.	கணேசன், ஆண்/42, த/பெ தங்கவேலு தேவர், திலகர்வீதி, தோப்புத் தெரு, பரவகோட்டை, மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம்.	GRH	29.06.2014	29.06.2014	766/2014	11
12.	அன்பழகி, பெண்/29, க/பெ, குமார், மாரியம்மன் தெரு, இளையான்குப்பம், சங்கராபுரம், விழுப்புரம் மாவட்டம்.	GRH	29.06.2014	29.06.2014	768/2014	12
13.	கோஹர்வாஹன், ஆண்/39, த/பெ சங்கர் சுவான், பதர்கதாபிள்ளை கிராமம், கஞ்சன் மாவட்டம், ஒடிசா.	GRH	30.06.2014	30.06.2014	770/2014	13

14.	வாசு, ஆண்/45, த/பெ அடைக்கண், எண். 2/45, பொய்கை கரை பட்டி, கலந்தாரி அஞ்சல், அழகர் கோவில் (வழி) மதுரை.	GRH	30.06.2014	30.06.2014	771/2014	14
15.	ஷிமாலா, பெண்/28, க/பெ பென்னியா, தலை கிராமம், விஜயநகர் (மாவட்டம்), ஆந்திரபிரதேசம்.	GRH	30.06.2014	30.06.2014	772/2014	15
16.	குமார், ஆண்/29, த/பெ முருகன், எண். 166, மாரியம்மன் கோவில் தெரு, இளையான்குப்பம், விழுப்புரம்.	GRH	30.06.2014	30.06.2014	773/2014	16
17.	முதுலி சின்னம் நாயுடு, ஆண்/48, த/பெ, அப்பால் நாயுடு, நெல்லம்பரம் கிராமம், அனுக்குவாரம் அஞ்சல், ஜெயம்மா வலசா மண்டல், விஜயா நகர் (மாவட்டம்), ஆந்திரபிரதேசம்.	GRH	30.06.2014	30.06.2014	774/2014	17
18.	சரஸ்வதி, பெண்/35, க/பெ, வெங்கட்ட ரமணா, கல்சாலி கிராமம், விஜயாநகர் மாவட்டம், ஆந்திரபிரதேசம்.	GRH	30.06.2014	30.06.2014	775/2014	18
19.	நாராயணபுரம் ஜானய்யா, ஆண்/48, த/பெ சோமைய்யா, மடலங்காய் கிராமம், விஜயநகர் மாவட்டம், ஆந்திரபிரதேசம்.	GRH	30.06.2014	30.06.2014	776/2014	19
20.	கோலாக்ஸ் சுனா, ஆண்/28, த/பெ ரோபி சுனா, பொரிபடா, குடிக்கான் அஞ்சல், நவுராம்பூர் மாவட்டம், ஒடிசா.	GRH	01.07.2014	01.07.2014	784/2014	20

21.	துவரது பத்மா, பெண்/30, க/பெ அப்பண்ணா, நரசிம்மா பேட்டை மண்டல், ஸ்ரீகுளம் மாவட்டம், ஆந்திரபிரதேசம்.	GRH	01.07.2014	01.07.2014	785/2014	21
22.	முகம்மது ஹசன், ஆண்/25, த/பெ முகம்மது, எண். 47/23, B பர்மா காலனி, விருதுநகர் அஞ்சல், விருதுநகர் மாவட்டம்.	GRH	01.07.2014	01.07.2014	787/2014	22
23.	ரெட்டி சரோஜா, பெண்/20, த/பெ. ரெட்டி சுயனா வயனா, சோமவடா மண்டல், டோலிபேட்டை, விஜயநகரம், ஆந்திரப்பிரதேசம்.	GRH	01.07.2014	01.07.2014	788/2014	23
24.	வாணுமுகலவாடி, பெண்/30, க/பெ ராமதாசரி, எண்.336, மங்கள வீதி, கோரமா கிராமம், பாமினி மண்டல், ஆந்திரபிரதேசம்.	GRH	01.07.2014	01.07.2014	789/2014	24
25.	திருவேங்கடம், ஆண்/28, த/பெ வெள்ளிகண்ணன், எண். 101/225, கணையர், தெற்கு தெரு, உளுந்தூர்பேட்டை, விழுப்புரம்.	GRH	01.07.2014	01.07.2014	790/2014	25
26.	தூர்கா, பெண்/18 த/பெ சிமகாசலம், கிருஷ்ணாபுரம், விஜயநகரம் ஜில்லா, ஆந்திரபிரதேசம்.	GRH	01.07.2014	01.07.2014	791/2014	26
27.	முருகேசன், ஆண்/30, த/பெ ஆறுமுகம், எண்.2/308, பாண்டியன் நகர் (பொற்கலா நகர்), திருமங்கலம், மதுரை.	GRH	01.07.2014	01.07.2014	792/2014	27

28.	சித்தாலா திருப்பதி ராவ், ஆண்/21, த/பெ. சத்யா, தூர்மவாடி கிராமம், மக்குவாடா மண்டல், விஜயநகரம் ஜில்லா, ஆந்திரபிரதேசம்.	GRH	01.07.2014	01.07.2014	793/2014	28
29.	சிமன்னா அழகர் சாமி, ஆண்/34, த/பெ ராமர், எண். 4/167, எம்.ஜி.ஆர் காலனி, மிசஸூர், எம்சவல்பட்டி, விருதுநகர்.	GRH	01.07.2014	01.07.2014	795/2014	29
30.	பிசிக்கி ஜோதி, பெண்/25, க/பெ சிம்மாசலம், கோட்டா லட்சுமிபுரம், ஹரி மண்டலம், ஸ்ரீகுளம் மாவட்டம், ஆந்திரபிரதேசம்.	GRH	02.07.2014	02.07.2014	796/2014	30
31.	அமலாபுரம் சீனு, ஆண்/22 த/பெ சூர்யநாராயணன், கோத்தூர் மண்டல், ஸ்ரீகுளம் மாவட்டம், ஆந்திரபிரதேசம்.	GRH	02.07.2014	02.07.2014	797/2014	31
32.	மோதா ஸ்ரீநிவாச ராவ், ஆண்/21, த/பெ மோதாலட்சுமண ராவ், கப்பு வீதி, பாகிவலசா கிராமம், கோட்டா பொம்மாலி மண்டல், ஸ்ரீகாகுளம் மாவட்டம், ஆந்திரபிரதேசம்.	GRH	02.07.2014	02.07.2014	799/2014	32
33.	பாரதி, பெண்/21 க/பெ சத்தியம், பொதிகை சீலா மக்குவா மண்டல், விஜயநகரம், ஆந்திரபிரதேசம்.	GRH	02.07.2014	02.07.2014	800/2014	33

34.	பதிவ்தா பங்காரு, ஆண்/30, த/பெ தாவூது, கிருஷ்ணபுரம் கிராமம், விஜயநகரம், ஆந்திரபிரதேசம்.	GRH	02.07.2014	02.07.2014	801/2014	34
35.	ஓலை ரவி, ஆண்/25, த/பெ ஓலை கவரய்யா, பாலகொண்டா மண்டல், ஸ்ரீகாகுளம், ஆந்திரபிரதேசம்.	GRH	02.07.2014	02.07.2014	802/2014	35
36.	தினேஷ்குமார், ஆண்/38, த/பெ இராகிருஷ்ணன், எண்.5/434, ஸ்ரீநிவாசா தெரு, கொளப்பாக்கம், சென்னை–122.	GRH	02.07.2014	02.07.2014	803/2014	36
37.	மீசலு சீனு, ஆண்/40, த/பெ மீசலு ராமமூர்த்தி, கோட்டா பெரீஷ், ஸ்ரீகாகுளம் மாவட்டம், ஆந்திரபிரதேசம்.	GRH	02.07.2014	02.07.2014	804/2014	37
38.	ரெட்டி சூர்ய நாராயண், ஆண்/48, த/பெ அப்பலாசாமி மக்காவா, தலைபொட்டா மண்டல், விஜயநகரம், ஆந்திரபிரதேசம்.	GRH	02.07.2014	02.07.2014	805/2014	38
39.	மரப்பூ திருப்பதி ராவ், ஆண்/40, த/பெ அப்பாலாசாமி, நீலாம்பபுரம் கிராமம், J.M. வல்சா மண்டல், விஜயநகரம், ஆந்திரபிரதேசம்.	GRH	02.07.2014	02.07.2014	806/2014	39
40.	மரப்பூ தமயந்தி, ஆண்/20, த/பெ வெங்கட நாயுடு, நீலாம்பபுரம் கிராமம், J.M. வல்சா மண்டல், விஜயநகரம், ஆந்திரபிரதேசம்.	GRH	02.07.2014	02.07.2014	807/2014	40

41.	முகுனி பாகன், ஆண்/53, த/பெ பின்னாபகன், மருகோத் கிராமம், கோடாலா காவல் நிலையம் எல்லை, ஒடிசா.	GRH	02.07.2014	02.07.2014	808/2014	41
42.	அப்பாலா நரசிம்மா, பெண்/35, க/பெ லட்சுமிநரசிம்மா, L.N.பேட்டை மண்டல், ஸ்ரீகாகுளம், ஆந்திராபிரதேசம்.	GRH	02.07.2014	02.07.2014	809/2014	42
43.	பெக்கட்டி அப்பாலா நாயுடு, ஆண்/45, த/பெ ரோசைய்யா, கே. கிருஷ்ணாபுரம், தாதி ரெஜேரு மண்டல், விஜயநகரம் மாவட்டம், ஆந்திராபிரதேசம்.	GRH	02.07.2014	02.07.2014	810/2014	43
44.	மரப்பூ வெங்கட்ட நாயுடு, ஆண்/35, த/பெ அப்பாலா நாயுடு, நீலாம்புரம் கிராமம், J.M. வலசா மண்டல், விஜயநகரம், ஆந்திராபிரதேசம்.	GRH	02.07.2014	02.07.2014	811/2014	44
45.	ராஜேஷ், ஆண்/20, த/பெ சூர்யாராவ், எண்.6/28, பிரதான சாலை, எரப்பாடு கிராமம், கோதுகுரு மண்டல், ஸ்ரீகாகுளம், ஆந்திராபிரதேசம்.	GRH	03.07.2014	03.07.2014	812/2014	45
46.	லோகலப்பு லோகேஷ், ஆண்/14, த/பெ லோகலப்பு மாமுலு, ராணிபெத்தா, பரலகிமுண்டி ஜெகபேட்டை, ஆந்திராபிரதேசம்.	GRH	03.07.2014	03.07.2014	813/2014	46

47.	கிமிடி சுப்பையா, ஆண்/48, த/பெ தவுடு, எண்.6/24, ராஜா தெரு, எரப்பாடு கிராமம், ஸ்ரீகாகுளம் மாவட்டம், ஆந்திரபிரதேசம்.	GRH	03.07.2014	03.07.2014	814/2014	47
48.	துர்க்கா டாவுடு, ஆண்/48 த/பெ சிம்மாத்ரி, பிரதான சாலை, மொடுகு வலசா கிராமம், L.N. பொட்டா மண்டல், ஸ்ரீகாகுளம், ஆந்திரபிரதேசம்.	GRH	03.07.2014	03.07.2014	815/2014	48
49.	ராம்தாசரி, ஆண்/30 த/பெ குருவு தாசரி, எண்.1/236, மங்களா வீதி, கோராமா கிராமம், பாமினி மண்டல், ஆந்திரபிரதேசம்.	GRH	03.07.2014	03.07.2014	816/2014	49
50.	மீசலு பவானி, பெண்/14 த/பெ மீசலு சீனு, அல்மா மண்டபம், ஸ்ரீகாகுளம் மாவட்டம், ஆந்திரபிரதேசம்.	GRH	03.07.2014	03.07.2014	820/2014	50
51.	கருப்பையா, ஆண்/51 த/பெ ராசு தேவர், எண். 1110, ஆகாஷ் நகர், கெருகம்பாக்கம், சென்னை–122.	GRH	03.07.2014	03.07.2014	821/2014	51
52.	கரித்தவுதம்மா, பெண்/40 க/பெ கரி அப்பலா நாயுடு, கே.கிருஷ்ணாபுரம் கிராமம், தட்டை மண்டல், விஜயநகரம் மாவட்டம், ஆந்திரபிரதேசம்.	GRH	03.07.2014	03.07.2014	822/2014	52

53.	சீரானு கொங்கா பாபு, ஆண்/32, த/பெ கொங்கார புலு, கோட்டா சிரமண்டல், ஸ்ரீகாகுளம், பாமினி மண்டல், ஆந்திரபிரதேசம்.	GRH	03.07.2014	03.07.2014	823/2014	53
54.	கருப்பையா, ஆண்/41, த/பெ மாரியப்ப தேவர், எண். 7/19, செலடர் பட்டி அஞ்சல், திருமங்கலம் வட்டம், மதுரை.	GRH	03.07.2014	03.07.2014	824/2014	54
55.	சத்தியநாராயணன், ஆண்/40, த/பெ ஸ்ரீராமுலு, இருமாமுடி காலனி, விஜயநகரம், ஆந்திரபிரதேசம்.	GRH	03.07.2014	03.07.2014	825/2014	55
56.	முருகன், ஆண்/38, த/பெ மூக்காண்டி, எண்.2/319, படன்தாங்கி கிராமம், சாத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம்.	GRH	03.07.2014	03.07.2014	826/2014	56
57.	பெக்ட்டி லட்சுமி, பெண்/41, க/பெ அப்பாலா நாயுடு, கிருஷ்ணாபுரம், விஜயநகரம், ஆந்திரபிரதேசம்.	GRH	03.07.2014	03.07.2014	827/2014	57
58.	படிவாடா, ஆண்/32, த/பெ ராமபாபு, கிருஷ்ணாபுரம், ராஜகுரு மண்டலா, விஜயநகரம் ஜில்லா, ஆந்திரபிரதேசம்.	GRH	03.07.2014	03.07.2014	828/2014	58
59.	ஒடிரோஜி, ஆண்/20, த/பெ பாப்பாராவ், கௌடி தெரு, கந்த்வாடா கிராமம், காசிநகர் மண்டல், கஜபதி மாவட்டம், ஒடிசா.	GRH	03.07.2014	03.07.2014	829/2014	59

60.	கௌரி நாயுடு, ஆண்/35, த/பெ சன்செனா நாயுடு, பாடங்கி கிராமம் மற்றும் அஞ்சல், விஜயநகரம், ஆந்திரபிரதேசம்.	GRH	03.07.2014	03.07.2014	830/2014	60
61.	நொறுங்கிய மனித தொடை சதை மற்றும் கால் அழுகிய நிலை	GRH	25.07.2014	25.07.2014	946/2014	61

காயமுற்றோர் பட்டியல்

இந்திய தண்டனை விதிக் கோவையின் 304 (II), 336, 337, 338 ஆம் பிரிவின் கீழ் T14– மாங்காடு காவல் நிலைத்தில் குற்ற எண். 751/2014–இல் வழக்கு பதிவு செய்யப்பட்டது.
(மௌலிவாக்கம் கட்டடம் இடிந்து விழுந்த வழக்கு)

தொடர் எண்.	பெயர்	காய மேற்பட்ட இடம்	காயத்தின் தன்மை	மருத்துவ மனை	AR எண்.	காயம் குறித்த சான்றிதழ் எண்.	MLC எண்.	பரிசோதித்த நாள்
1.	விஜயகுமார், 36, ஆண், த/பெ சிவனாண்டி, எண்.36, காமராஜபுரம், வடக்குபகுதி, திருமங்கலம் (வட்டம்), மதுரை.	1. இடது காலில் சிராய்பு 2. முதுகெலும்பில் வலி	பெரிய காயம்	ஸ்ரீராம சந்திரா மருத்துவக் கல்லூரி	21558 60	2827	76360	29.06.2014
2.	பஞ்சாட்சரம், 66, ஆண், த/பெ சுப்பிரமணியம், எண். 6, கங்கை நகர், மௌலிவாக்கம், சென்னை–112.	1. முன்புறத்தில் சிராய்ப்பு 2. இடது கையிலும், கணுக் காலிலும் வலி	பெரிய காயம்	ஸ்ரீராம சந்திரா மருத்துவக் கல்லூரி	21557 88	2811	76327	29.06.2014
3.	ரவணம்மாள், 40, பெண், கொன்னையா, மதுலிங்கம் கிராமம், குமராடா மங்கலம், விஜயநகரம் ஜில்லா, ஆந்திரபிரதேசம்.	உடல் முழுவதும் காயங்கள்	பெரிய காயம்	ஸ்ரீராம சந்திரா மருத்துவக் கல்லூரி	21557 98	2816	76337	29.06.2014
4.	சுஜாதா, 27, பெண், சிவன் நாயுடு, குச்சு கிராமம், தெல்லம் மண்டல், விஜயநகரம் ஜில்லா, ஆந்திரபிரதேசம்.	இடுப்பெலும்பில் வலி	பெரிய காயம்	ஸ்ரீராம சந்திரா மருத்துவக் கல்லூரி	21558 44	2825	76356	29.06.2014

5.	லட்சுமி, 40, பெண் , சூர்யநாராயண வேலு, பிரைம் சிருஷ்டி பிரைவேட் லிமிடெட், சென்னை.	உடலின் பல பாகங்களில் சிராய்ப்பு	பெரிய காயம்	ஸ்ரீராம சந்திரா மருத்துவக் கல்லூரி	21557 97	2815	76338	29.06.2014
6.	பிரபு, 22, ஆண், த/பெ சுப்பிரமணி, எண். 8254, ஜோசியர் தெரு, T. கல்லுபட்டி, பேரையூர் வட்டம், மதுரை மாவட்டம்.	முட்டியில் சிராய்ப்பு	சாதாரண காயம்	ஸ்ரீராம சந்திரா மருத்துவக் கல்லூரி	21557 86	2812	76330	29.06.2014
7.	பால் நாயுடு, 24, ஆண், த/பெ நல்லம்பா நாயுடு, பொத்தூர் கிராமம், கெருகம்பட்டா மண்டல், விஜயநகரம் ஜில்லா, ஆந்திரபிரதேசம்.	1. நெற்றியில் பல சிராய்ப்புகள் 2. இடது தோள் பட்டையில் சிராய்ப்பு 3. வலது தொடையில் இரத்தக்கட்டு	பெரிய காயம்	ஸ்ரீராம சந்திரா மருத்துவக் கல்லூரி	21558 17	2820	76343	29.06.2014
8.	கிருஷ்ணவேணி, 28, பெண், சீனு, கொட்டா பேரணி கிராமம், ஸ்ரீகாகுளம் மாவட்டம், ஆந்திரபிரதேசம்	1. முகத்தின் இடது பக்கத்தில் வீக்கம் 2. இடுப்பெலும்பு அமுக்கங்கள் 3. இடது இடுப்பில் சிராய்ப்பு	பெரிய காயம்	ஸ்ரீராம சந்திரா மருத்துவக் கல்லூரி	21558 94	2829	76369	29.06.2014
9.	ராஜி என்ற ராஜா. 28 , ஆண், த/பெ சிவனாண்டி, எண்.65, தேனி சுந்தரம் தியேட்டர் தெரு, தேனி.	1. வலது முன்கையில் இரண்டு எலும்பு முறிவுகள் 2. வலது முன்கையில் சிராய்ப்புகள்	பெரிய காயம்	ஸ்ரீராம சந்திரா மருத்துவக் கல்லூரி	21557 90	2810	76328	30.06.2014
10.	மருதமுத்து, 27, ஆண், த/பெ அழகர், எண். 195/4, வடக்கு தெரு, வலப்பட்டி, சவுகார்பட்டி அஞ்சல், திருமங்கலம், மதுரை மாவட்டம்	நெற்றியில் சிராய்ப்பு	பெரிய காயம்	ஸ்ரீராம சந்திரா மருத்துவக் கல்லூரி	21557 87	2809	76329	30.06.2014

11.	பூமிநாதன், 40, ஆண், த/பெ குருசாமி, காந்தி நகர், வடிடேவில் கரை, மதுரை.	இடது கணுக் காலிலும், வலது காலிலும் சிராய்ப்பு	பெரிய காயம்	ஸ்ரீராம சந்திரா மருத்துவக் கல்லூரி	21557 89	2813	76332	30.06.2014
12.	முத்துபாண்டி, 23, ஆண், த/பெ குருசாமி, புதுப்பட்டி கிராமம் மற்றும் அஞ்சல், திருமங்கலம்.	1. வலது முழங்காலில் எலும்புமுறிவு 2. வலது முழங்காலில் சிராய்ப்பு	பெரிய காயம்	ஸ்ரீராம சந்திரா மருத்துவக் கல்லூரி	21857 91	2818	76335	30.06.2014
13.	செல்வபாண்டியன், 29, ஆண், த/பெ பாண்டி, பன்னிகுண்டா கிராமம், அம்மாப்பேட்டை அஞ்சல், திருமங்கலம் வட்டம், மதுரை.	1. வலது தொடையில் சிராய்ப்பு 2. இடது முழங்கையில் சிராய்ப்பு	பெரிய காயம்	ஸ்ரீராம சந்திரா மருத்துவக் கல்லூரி	21557 94	2817	76336	30.06.2014
14.	சுசிலா, 24, பெண், க/பெ சீனிவாசன், விஜயநகரம் மாவட்டம், மக்குவா மண்டல், ஆந்திரபிரதேசம்	மேற்புறத்தி லும், கீழ்ப்புறத்தி லும் எலும்பு முறிவு	பெரிய காயம்	ராஜீவ் காந்தி மருத்து வமனை	20654	463824	64685	01.07.2014
15.	பாண்டியராஜ், 27, ஆண், த/பெ தங்க பாண்டியன், எண். 122/2, தொனுகல் கிராமம், வத்தலகுண்டு அஞ்சல், காரியாப்பட்டி வட்டம், விருதுநகர் மாவட்டம்.	1. இடுப்பெலும் பு அமுக்கங்கள் 2. உடலின் பல பாகங்களில் சிராய்ப்பு	பெரிய காயம்	ஸ்ரீராம சந்திரா மருத்துவக் கல்லூரி	21858 05	2814	76339	30.06.2014
16.	பாப்பா ராவ், 55, ஆண், த/பெ ஒட்டி செட்டோடு, ஸ்ரீகாகுளம் ஜில்லா, கண்டக கிராமம், காசி அஞ்சல், ஆந்திர பிரதேசம்.	1. இடது கையின் பெருவிரலில், மோதிர விரலில் மற்றும் நடுவிரலில் நசுங்கின காயம் 2. இடது காலில் எலும்பு முறிவு	பெரிய காயம்	ஸ்ரீராம சந்திரா மருத்துவக் கல்லூரி	21558 11	2819	76341	30.06.2014

17.	சதீஷ், 30, ஆண், த/பெ எரையாகாயா, பெத்தாகியல்லாஹ் கிராமம், விஜயநகரம், சாலூர் வட்டம், மக்குவா மண்டல், மார்கண்டம்பட்டி அஞ்சல்.	1. முதுகெலும்பில் சிராய்ப்பு 2. கழுத்து வலி	பெரிய காயம்	ஸ்ரீராம சந்திரா மருத்துவக் கல்லூரி	21558 27	2821	76346	30.06.2014
18	ராஜா, 21, ஆண், த/பெ.குமரேசன், அண்ணா தெரு, எம்.ஜி.ஆர் நகர், தேனி.	1. கழுத்தின் இடது பக்கத்தில் தழும்பு 2. முதுகெலும்பு மேலே உள்ள தழும்பு 3. தலையின் பின்பக்கத்தில் சிராய்ப்பு 4. இடுப்பெலும்பில் சுருக்கம்	கடுமை	ஸ்ரீராம சந்திரா மருத்துவமனை	21558 26	2822	76347	30.06.2014
19	பெக்காராம், 22, ஆண், த/பெ. முத்து, எண்.10அ, பழைய தபால் நிலையம் சாலை, ஓடை தெரு, தேனி	1. இடது முன்பக்க பகுதியில் சிராய்ப்பு 2. இடது காலில் சிராய்ப்பு	கடுமை	ஸ்ரீராம சந்திரா மருத்துவமனை	21558 30	2824	76350	30.03.2014
20	சுனிதா, 18, பெண், த/பெ. சூரிய நாராயணன், தெல்லாபெட்டா கிராமம், குமார மணகலம், விஜயநகரம் மாவட்டம், ஆந்திர பிரதேசம்.	1. முகவாய்க் கட்டை மற்றும் தாடையில் தேய்மானங்கள்	கடுமை	ஸ்ரீராம சந்திரா மருத்துவமனை	21558 67	2828	76362	30.03.2014
21	சுந்தரமி, 52, ஆண், த/பெ. ராஜகோபால், எண்.1, முத்துரங்கம்தெரு, கலைஞர் நகர், பாங்கி மலை, சென்னை–16.	1. இடது கால் பாதத்தின் தழும்பு 2. இடது கையில் சிராய்ப்பு 3. முன்பகுதியில் சிராய்ப்பு	கடுமை	ஸ்ரீராம சந்திரா மருத்துவமனை	21558 44	2825	76355	30.06.2014
22	மேனம்மாள், 35, பெண், க/பெ. கோபால், விகடபுரம் கிராமம், ஆந்திர பிரதேசம்.	1. கண்இமைகளில் கருப்பு நிறப் படிதல் 1. காயம் படிந்த கண்கள்	கடுமை	ஸ்ரீராம சந்திரா மருத்துவமனை	21559 43	2830	76374	30.06.2014

23	கோவிந்த டொங்கரி, 19, ஆண், தபெ. மனோ டொங்கரி, வரிப்ரதர் கிராமம், பப்பு கா காவல் நிலையம் அஞ்சல், நவரம்பூர் மாவட்டம், ஒடிசா	1. இடுப்பெலும்பில் தழும்பு	கடுமை	ஸ்ரீராம சந்திரா மருத்துவமனை	21560 84	2831	76389	01.07.2014
24	சுக்கா மகேஷ், 23, பெண், த/பெ.தவடையா சித்தக்குளம் மாவட்டம், பொட்டம் பட்டி அஞ்சல், குடிவடி கிராமம், ஆந்திர பிரதேசம்.	1. மார்பு, தோள்கள் மற்றும் வயிற்றுப் பகுதியில் பல்வேறு தேய்மானங்கள்	கடுமை	ஸ்ரீராம சந்திரா மருத்துவமனை	21562 39	2832	76389	01.07.2014
25	அனு சூர்யா, 30, பெண், த/பெ. கௌரி நாயுடு, படங்கி மண்டல், விஜயநகரம் தாலுக்கா, ஆந்திர பிரதேசம்.	1. முதுகு வலி	கடுமை	ஸ்ரீராம சந்திரா மருத்துவமனை	21562 51	2833	76391	01.07.2014
26	செந்தில், 30, ஆண், த/பெ. குருவய்யா (எ) குருசாமி, பாரத பாண்டியா நகர், பெரியூர் தாலுகா, மதுரை.	1. பொதுவான உடல் வலி	கடுமை	ஸ்ரீராம சந்திரா மருத்துவமனை	21562 49	2834	76892	01.07.2014
27	பிரகாஷ் குமார், 25, ஆண், த/பெ. கௌரா ரவுத், கேந்திரபட மாவட்டம், பிள்ளை மதன்பிரஸ் வில்லாஸ், ராஜ் நகர், ஒடிசா.	1. வலது கீழ் அங்கத்தில் தேய்மானங்கள் 2. வலது முழங்கையில் தேய்மானங்கள்	கடுமை	ஸ்ரீராம சந்திரா மருத்துவமனை	21564 88	2841		01.07.2014

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

காவல்துறை

அனுப்புநர்

நாள் : 14.08.2014

வி. பாலசுப்பிரமணியன்,
காவல் துறை கூடுதல் துணை ஆணையர்,
பி.இ.டபள்யூ (கிழக்கு) & விசாரணை அதிகாரி,
எஸ்.ஐ.டி., வேளச்சேரி, சென்னை.

பெறுநர்

ஆணையத்தின் செயலாளர்,
மாண்புமிகு நீதியரசர் திரு ஆர். ரகுபதி விசாரணை ஆணையம்,
அரசு பங்களா என்.சி.பி.1,
பி.எஸ். குமாரசாமி ராஜா சாலை,
சென்னை – 28.

ஐயா,

பொருள் சென்னை பெருநகர காவல் – சென்னை, மௌலிவாக்கத்தில் 11 அடுக்குமாடி கட்டடம் இடிந்து விழுந்தது பற்றிய ஆணையத்திற்கு சிறப்பு புலனாய்வுக் குழுவின் நிலை அறிக்கை – தொடர்பாக.

பார்வை
1. 11.07.2014 தேதியிட்ட உள் (காவல் XVIII) துறை அ.உ.எம்.எஸ்.எண்.480.
2. 15.07.2014 தேதியிட்ட ஆர்.சி.எண்.201/சி.ஒ.பி/ முகாம்/2014 இல் வேப்பேரி காவல்துறை ஆணையரின் விசாரணை.
3. 24.07.2014 தேதியிட்ட எண்.06/நிர்வாகம்/2014 ஆணையத்தின் விசாரணைகள்.
4. டி14, மாங்காடு காவல் நிலையம் இ.த.சட்டம் 338, 337, 304 (ii), 336 பிரிவுகளின் கீழ் சி.ஆர்.எண்.751/2014.

*****

சென்னை, மௌலிவாக்கம், எண்.52, குன்றத்தூர் பிரதான சாலையில் கட்டுமானத்தில் இருந்த பலஅடுக்குமாடி கட்டடம் இடிந்து விழுந்ததாக டி14, மாங்காடு காவல் நிலையத்தின் சட்டம் மற்றும் ஒழுங்கு ஆய்வாளருக்கு 28.06.2014 அன்று மாலை 5 மணி அளவில் தகவல் வந்தது. அந்த தகவல் வந்ததும், அவர் அந்த இடத்திற்கு விரைந்தார். பிரைம் ஸ்ருஷ்டி ஹவுசிங் பிரைவேட் லிமிடெடின் கட்டுமானத்தின் கீழ் டவர் 'ஏ' மற்றும் டவர்– 'பி' என்று பதினோரு அடுக்குகள் மற்றும் தூண்களுடன் கூடிய தரைத்தளம் என்று இரண்டு அடுக்குமாடி கட்டடங்கள் திட்டமிடப்பட்டன. அவற்றில் டவர்–B பிளாக் கட்டடம் முழுமையாக இடிந்து

விழுந்து, பணியில் இருந்த 50 க்கும் மேற்பட்ட பணியாளர்கள் இடிபாடுகளில் சிக்கியதாகக் கண்டறியப்பட்டது. அவர்கள் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தார்கள். சிலர் இறந்துவிட்டார்கள். டி.14, மாங்காடு காவல் நிலையத்தின் காவல்துறை ஆய்வாளர் தனது உயரதிகாரிகளுக்கு அளித்த அறிக்கையில், கட்டடத்தின் ஒழுங்கற்ற திட்டங்கள், தரம் குறைந்த சாதனங்கள், மோசமான முறையில் பணிகளை நிறைவேற்றுதல் ஆகியவையே இடிபாடுகளுக்கு காரணம் என்று தெரிவித்தார். அதற்கு காரணமான கட்டுமான நிறுவனத்தின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினார்.

2. புகார் பெறப்பட்டதன் பேரில், பூந்தமல்லி சரகம், ஸ்ரீராமசந்திரா மருத்துவக் கல்லூரி சரகம் (பொ) காவல்துறை உதவி ஆணையாளர், இந்தியக் குற்றத்தண்டனை விதித்தொகுப்பின் 304(ii), 336, 337,338 ஆம் பிரிவுகளின் கீழ் குற்ற எண்.751/2014-ஆக மாங்காடு டி–14 காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து புலனாய்வு மேற்கொண்டார். அவர் சம்பவம் குறித்து உயர் அதிகாரிகளுக்குத் தெரிவித்து, மீட்பு நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்தார். சுமார் 1100 சென்னை காவல்துறையினர், சிறப்புப் படைப்பிரிவினர் 150 பேர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிப்பிரிவுத் துறையைச் சேர்ந்த 450 பேர், தேசிய பேரிடர் மீட்புப் படையைச் சேர்ந்த 400 பேர், வருவாய் துறையினர் 250 பேர், சுகாதாரத் துறையினர் 450 பேர், சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த 50 பேர், பொதுப் பணித்துறையினர் 100 பேர், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தைச் சேர்ந்த 50 பேர் L & T நிறுவனத்தைச் சேர்ந்த 50 பேர், என மொத்தம் 3050 பேர் ஒருங்கிணைக்கப்பட்டு இந்த மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இந்த மீட்பு நடவடிக்கை 04.07.2014 வரையில் தொடர்ந்து நடைபெற்றது. இந்த துயர சம்பவத்தில் 61 நபர்கள் உயிரிழந்தனர். 27 நபர்கள் காயத்துடன் மீட்கப்பட்டனர்.

3. காயமுற்ற அனைத்து 27 நபர்களுக்கும், போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், சென்னை ராயப்பேட்டை அரசு மருத்துவமனையிலும் சிகிச்சையளிக்கப்பட்டது. புலனாய்வு மேற்கொண்ட நேரத்தில், வெவ்வேறு தினங்களில் ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் 55 சடலங்கள், போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியில் 6 சடலங்கள் குறித்து இறப்பு விசாரணை நடத்தப்பட்டு, 60 சடலங்கள் அவர்களுடைய உறவினர்கள் மூலம் அடையாளம் கண்டறியப்பட்டு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. எஞ்சிய ஒரு சடலத்தை அடையாளம் கண்டறிவதற்கு தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. சம்பவம் நடைபெற்ற போது 10 பணியாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர். எந்தவொரு காயத்திற்கும் ஆளாகாத அவர்களிடம் விசாரணை செய்யப்பட்டு அவர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன. புலன் விசாரணையின் போது, முதல் நோக்கில் பின்வரும் குற்றம்சாட்டப்பட்டவர்களான :––

1) எம். மனோகரன், M/A.60, (நிருவாக இயக்குநர்), த/பெ. முத்துக் காமாட்சி, B–9, லேக் வியூ எஸ்டேட், எண்.11, குன்றத்தூர் பிரதான சாலை, மௌலிவாக்கம், சென்னை–125.

2) எம். முத்துக் காமாட்சி, M/A.22, (இயக்குநர்), த/பெ. மனோகரன், B–9, லேக் வியூ எஸ்டேட், எண்.11, குன்றத்தூர் பிரதான சாலை, மௌலிவாக்கம், சென்னை–125.

3) எஸ். வெங்கடசுப்ரமணி, M/A.74, (கட்டுமான அமைப்புப் பொறியாளர்), த/பெ. சுப்ரமணி ஐயர், ஹோம்பர்சன் அபார்ட்மெண்ட், பாத்திமா கல்லூரி எதிரில், மதுரை – 625 018.

4) ஆர். துரைசிங்கம் (பணியிடப் பொறியாளர்) த/பெ. இராதாகிருஷ்ணன், வேலூர் கிராமம், வேலூர் பிரதான சாலை, திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம்.

5) சங்கர் இராமகிருஷ்ணன் (பணியிடப் பொறியாளர்) த/பெ. சீத்தாராமன், எண்.72/17, சங்கர் நிவாஸ், குண்டலகேசி, வெங்கடாசலபதி நகர், விலாங்குடி, மதுரை.

6) விஜய் பார்கோத்ரா (கட்டடக் கலைஞர்) த/பெ. ஷ்யாம்லால் பார்கோத்ரா, எண்.20, 13 வது குறுக்குத் தெரு, டெலிபோன் நகர், பெருங்குடி, சென்னை – 96.

ஆகியோர் மீது குற்றச்சாட்டு பதிவு செய்து 29.06.2014 அன்று கைது செய்து ஸ்ரீபெரும்புதூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தின் முன் ஆஜர் படுத்தப்பட்டு, வேலூர் மத்திய சிறைச்சாலையில் நீதித்துறை காவலில் வைக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து, A7 பாலகுருசாமி (A1 ன் மைத்துனர், இயக்குநர்களில் ஒருவர்) A8 கார்த்திக் (பணியிடப் பொறியாளர்) ஆகியோரும் இச்சம்பத்திற்கு பொறுப்பானவர்கள் என தொடக்கப் புலனாய்வில் தெரியவந்ததால், அவர்கள் 08.07.2014 அன்று கைது செய்யப்பட்டு, ஸ்ரீபெரும்புதூர் மாவட்ட முன்சீப் நீதித்துறை நடுவர் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டு, வேலூர் மத்திய சிறைச்சாலையில் ரிமாண்டு காவலில் வைக்கப்பட்டனர்.

4. பொதுப்பணித்துறை வல்லுநர்களின் உதவியுடனும், தனிப்பட்ட சாட்சிகளின் முன்னிலையிலும் சம்பவ இடத்திலிருந்து 43 எண்ணிக்கை கான்கிரீட் மற்றும் எஃகு மாதிரிகள் எடுக்கப்பட்டன. இந்த துயர சம்பவத்தைத் தொடர்ந்து, இடிந்து விழுந்த கட்டடத்தின் அருகிலுள்ள 12 கட்டடங்களும் சேதமடைந்திருந்தன. சேதமடைந்த கட்டடத்தின் இடிந்து விழுந்த பகுதி ஒன்று அடுத்துள்ள கட்டடத்தில் குடியிருப்பவர்களில் ஒருவரான கணேசனின் வீட்டின் மீதும் விழுந்ததால் அவர் மரணமடைந்தார். அருகிலுள்ள கட்டடங்களின் அனைத்து உரிமையாளர்களிடமும் விசாரணை செய்யப்பட்டு அவர்களுடைய வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன.

5. குற்றம் சாட்டப்பட்ட A1, A4, A5, A6 ஆகியோர் 03.07.2014 அன்றும் A3 மற்றும் A6 07.07.2014 அன்றும் காவல்துறை கட்டுப்பாட்டில் எடுக்கப்பட்டு விரிவான விசாரணை மேற்கொள்ளப்பட்டது. A1 மனோகரன் 05.07.2014 அன்று அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இடிந்து விழுந்த கட்டடத்திற்கு அருகில் உள்ள சிறுகட்டடத்தில் உள்ள அவருடைய அலுவலகத்திலிருந்து கட்டட கட்டுமானங்களுக்காக தயாரிக்கப்பட்ட திட்ட வரைபடங்கள், வரைபடங்கள் அடங்கிய நிலைவட்டுடன் கூடிய கணினிகள் ஆகியவை கைப்பற்றப்பட்டன என தெரிவித்தார். குற்றம் சாட்டப்பட்ட பணியிடப் பொறியாளர்களான A4 துரைசிங்கம், A5 சங்கர் ராமகிருஷ்ணன் ஆகியோர் அளித்த ஒப்புதல் வாக்குமூலங்கள் 06.07.2014 அன்று பதிவு செய்யப்பட்டன. அவற்றில் இருவரும் இடிந்து விழுந்த கட்டடத்தின் கட்டுமான அமைப்பு, கட்டடம் குறித்த வரைபடங்கள் மற்றும் அவர்களுடைய பணிநியமன ஆணைகள் ஆகியவை 07.07.2014 அன்று பெறப்பட்டன என்று தெரிவித்தனர். A3 வெங்கட சுப்ரமணியன், கட்டுமான அமைப்புப் பொறியாளர், A6 விஜய் பர்கோத்ரா, கட்டடக் கலைஞர் ஆகியோர் 07.07.2014 அன்று காவலில் எடுத்து விசாரணை செய்யப்பட்டனர். மேலும் அவர்களுடைய ஒப்புதல் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன. 10.07.2014 அன்று 54 எண்ணிக்கை கொண்ட கட்டமைப்பு திட்ட வரைபடங்கள், கட்டமைப்பு திட்ட ஆவணங்கள் பெருங்குடியில் அவருடைய அலுவலகத்திலிருந்து பெறப்பட்டன. அவருடைய ஒப்புதல் வாக்குமூலத்தைத் தொடர்ந்து, மதுரையில், A3 வெங்கடசுப்ரமணியனின் வீட்டிலிருந்து இரண்டு கணினி மையச் செயலகங்கள் (CPUs), ஒரு சாம்சங் கணித்திரை ஆகியவை 12.07.2014 அன்று கைப்பற்றப்பட்டன. 08.07.2014 அன்று A7 பாலகுருசாமி, A8 கார்த்திக் ஆகியோர் அவரவர் வீட்டிற்கு அருகில் கைது செய்யப்பட்டு வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன. கட்டுமான வரைபடம் மற்றும் கட்டடக்கலை வரைபடம் A1 ஆல் அளிக்கப்பட்டது. அவருடைய பணி நியமன ஆணைகள் A8யிடமிருந்து கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட பொருட்கள் ஆய்வுக்காக நீதிமன்றம் மூலமாக தமிழ்நாடு தடய அறிவியல் ஆய்வுக் கூடத்துக்கு (TNFSL) அனுப்பி வைக்கப்பட்டன.

6. விசாரணையின் போது, கட்டடம் இடிந்ததை நேரடியாகப் பார்த்த 10–க்கும் மேற்பட்ட நபர்களிடம் விசாரணை செய்யப்பட்டன. காயமடைந்த அனைத்து 27 பேரிடமும் விசாரணை செய்யப்பட்டு அந்தந்த நபர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன. இடிந்து விழுந்த கட்டடத்திற்கு அருகில் குடியிருப்போர், கடை வைத்திருப்போர் என 35 பேரிடம் விசாணை செய்யப்பட்டு அவர்களுடைய வாக்குமூலங்களும் பதிவு செய்யப்பட்டன.

7. பின்னர், காவல்துறையின் புலனாய்வுக்குழுவுக்கு உதவி செய்வதற்காக 17.07.2014 ஆம் நாளிட்ட உள் (காவல் XVIII) துறையின் 480 ஆம் (நிலை) எண் அரசாணையின் படி வடக்கு மண்டல காவல்துறை, இணை ஆணையாளரின் தலைமையின் கீழ் இந்திய தொழில்நுட்ப

நிறுவனம் (IIT), அண்ணா பல்கலைக் கழகத்தின் வல்லுநர்கள் அடங்கிய சிறப்புப் புலனாய்வுக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. 201/COP/Camp/2014 ஆம் நடப்புக் கோப்பில் வெளியிடப்பட்ட காவல்துறை ஆணையாளரின் (COP) செயல்முறை ஆணையின்படி, ADC/PEW (East) தலைமை புலனாய்வு அதிகாரியாகவும், அவருக்கு உதவிபுரிய வேண்டி காவல்துறை ஆய்வாளர்கள் ஐவரும் நியமனம் செய்யப்பட்டனர். மேற்சொன்ன ஆணைகளின்படி 17.07.2014 லிருந்து காவல் துறை துணை ஆணையாளரால் (PEW/கிழக்கு மண்டலம்) புலனாய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்சொன்ன அரசாணையில், பொறியியல் துறையில் வல்லுநர்களாக உள்ள பின்வரும் நபர்கள் தங்களுடைய வழிகாட்டல்களையும், சிறந்த கருத்துக்களையும் வழங்க வேண்டி அவர்களை அரசு நியமனம் செய்தது.

திரு P.K. சத்தியமூர்த்தி, உதவி செயற்பொறியாளர், தலைமைப் பொறியாளர் அலுவலகம் (கட்டடங்கள்), பொதுப்பணித் துறை, சேப்பாக்கம், சென்னை.

பேராசிரியர் தேவதாஸ் மேனன், கட்டுமான அமைப்பு பொறியியல் துறை, கட்டடப் பொறியியல் துறை, இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (IIT), சென்னை.

டாக்டர் மான்சிங் D. தேவதாஸ், பேராசிரியர் மற்றும் தலைவர், கட்டடக்கலைத் துறை, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை.

டாக்டர் C. உமாராணி, இணை பேராசிரியர், கட்டுமான அமைப்பு பொறியியல் பிரிவு, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை.

டாக்டர் M, முத்துராம், உதவிப் பொறியாளர், மண்ணியல் தொழில்நுட்பம் மற்றும் கட்டுமானப் பொறியியல் துறை, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை – 25. மேலும்

திரு T. பாலசுந்தரம், B.A., B.L., அரசு கூடுதல் வழக்குரைஞர் (ஓய்வு) அவர்கள் சிறப்பு புலனாய்வுக் குழுவுக்கான சட்ட அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

8. 28.06.2014 அன்று மாலை, காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், மவுலிவாக்கத்தில் உள்ள பல அடுக்குமாடிக் கட்டடம் இடிந்து விழுந்ததற்கான காரணங்கள், சூழ்நிலைகள் மற்றும் அதன் காரணமாக மரணமடைந்த சுமார் 55 நபர்கள் மற்றும் பெரியளவில் காயமடைந்த ஏனைய பலர் குறித்த அனைத்து அம்சங்களையும் விசாரணை செய்ய வேண்டி, 03.07.2014 ஆம் நாளிட்ட பொதுத் (சட்டம் மற்றும் ஒழுங்கு) துறையின் 557 ஆம் (நிலை) எண் அரசாணையின்படி, நீதியரசர் திரு. ஆர். ரகுபதியைக் கொண்ட ஒரு நபர் விசாரணை ஆணையத்தை அரசு நியமித்துள்ளது. இதனைத் தொடர்ந்து, 1952 ஆம் ஆண்டு ஆணையங்களின் விசாரணைச் (மத்தியச்சட்டம் LX/1952) சட்டத்தின் 5A பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு சிறப்புப் புலனாய்வுக் குழுவில் சேர்க்கப்பட்டுள்ள அதிகாரிகளைக்

குறிப்பிட்டும், விரிவான புலனாய்வை மேற்கொள்ள அவர்களுக்கு உத்தரவு பிறப்பித்தும், அதுகுறித்த அறிக்கையினை அளிக்க வேண்டியும் விசாரணை ஆணையம் செயல்முறை ஆணைகளை வழங்கியுள்ளது. (காண்க 6/Admn/2014 நாள் 24.07.2014). சுமார் 25 சாட்சியங்கள் வெவ்வேறு நாட்களில், விசாரணை ஆணையத்தின் முன் தங்களுடைய வாக்குமூலங்களை / உறுதிமொழிப்பத்திரங்களை தாக்கல் செய்துள்ளனர்.

9. திண்காரை (கான்கிரீட்) எஃகு ஆய்வுக்காக சம்பவ இடத்தில் இருந்து சேகரிக்கப்பட்ட திண்காரை (கான்கிரீட்) எஃகு மாதிரிகள் நீதிமன்றம் மூலமாக கிண்டி IIT க்கு அனுப்பி வைக்கப்பட்டது. மண் பரிசோதனை செய்ய வேண்டி, அண்ணா பல்கலைக்கழக கட்டுமான பொறியியல் துறையின் மண்ணியல் தொழில்நுட்பத் துறையின் சம்மந்தப்பட்ட அதிகாரிக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு நீதிமன்றத்திடம் கோரிக்கை வைக்கப்பட்டது. இவ்வழக்கு தொடர்பான ஆவணங்களை மீட்டெடுக்க வேண்டி, A3 வெங்கடசுப்பிரமணியன், A1 மனோகரன் அலுவலகங்களில் இருந்து கைப்பற்றப்பட்ட நிலைவட்டுடன் (hard disc) கூடிய கணினி மையச் செயலகங்கள் (CPUs) சான்றாவணங்கள் 4 எண்ணிக்கையையும் 31.07.2014 அன்று நீதிமன்றம் மூலமாக தமிழ்நாடு தடயஅறிவியல் ஆய்வுக்கூட (TNFSL) கணினி வழி குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. A6 விஜய் பார்கோத்ரா அலுவலகத்திலிருந்து வரைபடங்களும் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேலும், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், புலனாய்வு நோக்கத்திற்காக SIT க்கும், தங்களுடைய ஒப்புதலுக்காகவும், A1 நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவரான A7 பாலகுருசாமியின் மைத்துனர் A1 மனோகரன் அளித்த வரைபடங்கள்/திட்டவரைபடங்களின் விவரங்களை அளிக்க வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளது.

10. மேலும், புலனாய்வு உதவி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட அண்ணா பல்கலைக்கழகம், இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தைச் (IIT) சேர்ந்த வல்லுநர் குழு சம்பவ இடத்திற்கு அடிக்கடிச் சென்று பார்வையிட்டு, கட்டடம் இடிந்து விழுந்ததற்கான உண்மையான காரணத்தை கண்டறிவதற்கான விரிவான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. தொழிலாளர்கள், காயமடைந்தவர்கள், சேதமடைந்த வீடுகளில் தங்கியிருந்தோர், அருகிலுள்ள கடைக்காரர்கள் வீடுகள் மற்றும் ஏனையோர் என சுமார் 160 நபர்களிடம் விசாரணை செய்யப்பட்டு, அவர்களுடைய வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன.

11. மேற்சொன்ன வழக்கு தொடர்பாக உள்ளபடியாக திட்ட வரைபடங்களைத் தயாரித்த கட்டுமான அமைப்புப் பொறியாளர் திரு. நாகேஷ், சென்னை பெரு நகர வளர்ச்சிக் குழுமத்தின் ஒப்புதலுக்காக அளிக்கப்பட்டன. அவர் விசாரணை செய்யப்பட்டு, அவரது வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது. கட்டடக் கலைஞர் A6 விஜய் பார்கோத்ரா இந்த திட்ட ஏற்பாட்டு முறையுடன் அவரை அணுகியதாகவும், அவருடைய வேண்டுகோளின்படி, அவர் (திரு. நாகேஷ்)

வரைபடங்கள் தயாரித்து, கையொப்பமிட்டதாகவும் அவர் எடுத்துரைத்தார். கட்டுமானதாரர் குறித்து அவர் அறிந்திருக்கவில்லை. அவர் A6ஐ தொடர்பு கொண்டபோது, அவரும் இத்திட்டம் குறித்து இவரிடம் எதுவும் தெரிவிக்கவில்லை. மேலும், இடிந்து விழுந்த கட்டடத்தைக் கட்டும்போது இவருடைய வரைபடங்கள்/திட்ட வரைபடங்கள் எதுவும் பின்பற்றப்படவில்லை என்றும், கட்டுமானதாரர் அறிந்திருந்த மதுரையைச் சேர்ந்த A3 வெங்கடசுப்ரமணியன் என்ற மற்றொரு கட்டுமான அமைப்புப் பொறியாளரை கட்டுமானதாரர் திட்டம் தயாரிப்பதற்கு அமர்த்திக் கொண்டார். சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஒப்புதலளித்த திட்டத்தின் ஒட்டு மொத்த அமைப்பினையும், அவர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப மாற்றிக்கொண்டனர். ஒப்புதலுக்காக சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு அளிக்கப்பட்ட தன்னுடைய திட்ட வரைபடத்திற்கும், உள்ளபடியாக கட்டுமானத்திற்குப் பயன்படுத்தப்பட்ட A3 வெங்கடசுப்ரமணியனின் திட்ட வரைபடத்திற்குமிடையே வேறுபாடுகள் உள்ளன என்று திரு. நாகேஷ் எடுத்துரைத்தார். இதேபோன்று, தன்னுடைய நிருவாக இயக்குநர் A6 விஜய் பர்கோத்ரா கேட்டுக் கொண்டவாறு, ஒப்புதலுக்காக சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு அனுப்பப்பட்ட திட்ட வரைபடங்களில் திருமதி சுகன்யா கையொப்பமிட்டிருந்தார். அவர் திட்ட வரைபடங்களில் கையொப்பமிடுவதற்குத் தகுதியுடையவர் அல்லர். அவர் சென்னை மாநகர வளர்ச்சி குழுமத்துக்கான திட்ட வரைபடங்கள் / வரைபடங்களில் கையொப்பமிட்டிருந்தபோதிலும், சென்னை மாநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு அளிக்கப்பட்ட திட்ட வரைபடத்திலும், அவருடைய நிருவாக இயக்குநர் A6 விஜய் பர்கோத்ராவுக்கு அளிக்கப்பட்ட A3 வெங்கடசுப்ரமணியனின் திட்ட வரைபடத்திற்குமிடையே மாறுபாடுகள் இருந்ததை அவர் சுட்டிக்காட்டினார். இருப்பினும், அவர் A1 மற்றும் A3 யுடன் மோசடிக்கு உடந்தையாக இருந்து மாற்றி வியாபார நோக்குடன் தங்களுடைய வசதிக்கேற்ப A3 வெங்கடசுப்ரமணியத்தின் திட்ட வரைபடங்களைப் பயன்படுத்தி அவ்வாறே கட்டடம் கட்டப்பட்டது. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் திட்ட வரைபட ஒப்புதலுக்காக கையொப்பமிட்ட கட்டுமான அமைப்புப் பொறியாளர் திரு. நாகேஷ் மற்றும் கட்டடக் கலைஞர் திருமதி சுகன்யா ஆகிய இருவரும் காஞ்சிபுரம் நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட்–II மற்றும் நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட்–I முன்னிலையில் வாக்குமூலங்கள் அளித்தனர். அவர்களுடைய வாக்குமூலங்கள் குற்றவியல் நடைமுறை விதிக் கோவை 164 ன் கீழ் பதிவு செய்யப்பட்டன.

12. இதனிடையே, 43 மாதிரிப் பொருட்கள், மண், திண்காரை (கான்கிரீட்) மற்றும் எஃகு போன்ற கைப்பற்றப்பட்ட பொருட்கள் குறித்த ஆய்வு அறிக்கைகள், ஆகஸ்ட் திங்கள் 2–வது வாரத்தில் அண்ணா பல்கலைக் கழகம் மற்றும் இந்திய தொழில்நுட்ப நிறுவனத்திடமிருந்து நீதிமன்றத்தால் பெறப்பட்டன. சென்னை, தமிழ்நாடு தடய அறிவியல் ஆய்வுக் கூடமும் (TNFSL) நிலைவட்டுடன் (hard disc) கூடிய கணினி மையச் செயலகங்கள் (CPUs)

நான்கினை நிதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளது. அரசாணையின் மூலம் நியமனம் செய்யப்பட்ட ஏற்கெனவே சம்பவ இடத்தைப் பார்வையிட்ட வல்லுநர்களுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு நீதிமன்றத்தை கேட்டுக் கொள்ளப்பட்டது. A1, A3 மற்றும் A6 யிடம் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு வழங்கப்பட்ட வரைபடங்கள், குற்றம் சாட்டப்பட்டவர்கள் முன்னரே மேற்கொண்ட மண் பரிசோதனை விவரங்கள் ஆகியவை ஒப்புமை செய்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டன.

13. கட்டுமானதாரர்களால் வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்ட கட்டடத்தின் அஸ்திவாரம் / கடைக்கால், பதினோரு அடுக்குமாடி கட்டடத்தின் நிலைத்தன்மைக்கு போதுமானதாக இல்லை என்பது இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட தொடக்க புலனாய்விலேயே தெரிய வந்தது. தூண் வடிவமைப்புகளும், இத்தகைய பெரிய வடிவமைப்பை தாங்கக்கூடிய அளவுக்கு நிலைச்சுமை கொண்டதாகவும் இல்லை. வண்டி நிறுத்தத்துக்கு அதிக இடவசதியை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக அடித்தளத்திலுள்ள பல்வேறு தூண்கள் கட்டுமானதாரர்களால் அவர்களுடைய விருப்பத்திற்கு தக்கவாறு நீக்கப்பட்டன. இடிந்து விழுந்த கட்டடத்தின் வீடியோ பதிவு மற்றும் புகைப்படங்களை வல்லுநர்கள் பார்வையிட்டதில், உத்தரங்கள் மற்றும் தூண்களில் பயன்படுத்தப்பட்ட இரும்புக்கம்பிகள், தேசிய கட்டட விதித்தொகுப்பின் வழிகாட்டி குறிப்புகளின்படி உரியவாறு இணைக்கப்படவில்லை. கட்டுமானதாரர் அனுபவமற்ற பணியிடப் பொறியாளர்களை ஈடுபடுத்தியிருந்ததால், கட்டுமானப்பணிகள் உரியவாறு மேற்கொள்ளப்படவில்லை. கட்டுமான வடிவமைப்பு இல்லாத மிகவும் மோசமான வகையில் கட்டடப்பணிகள் மேற்கொண்டிருந்த காரணங்களால், கட்டுமானப்பணி நடந்தேறி வந்த கட்டடத்தொகுதி "B" இடிந்து விழுந்தது என்று சாட்சியங்களின் மூலமும், வல்லுநர்களின் தொடக்க விசாரணையில் தெரிய வந்தது.

14. தேசிய கட்டட விதித்தொகுப்பில் குறிப்பிட்டுள்ளவாறும், வல்லுநர்களின் கருத்துப்படியும், கட்டடக் கலைஞர், கட்டுமான அமைப்புப் பொறியாளர்கள், பணியிடப் பொறியாளர்களின் கடமைகளும், பொறுப்புகளும் பின்வருமாறு:–

கட்டுமானதாரர்கள்:–

- கட்டுமானதாரர்கள், கட்டுமானப் பணியை தொடங்குவதற்கு முன்னர், கட்டடம் அல்லது வடிவமைப்பு குறித்த அடிப்படை, தொழில்நுட்ப அறிவை புரிந்து கொள்ளும் திறன் ஆகியவற்றையும் பெற்றிருக்க வேண்டும்.
- கட்டடப்பகுதியில் இருக்கின்ற பிரச்சினைகளுக்கு முடிவுகாணும் திறன் பெற்றிருக்க வேண்டும்.
- கட்டுமான பகுதியில் உள்ள பல்வேறு பணிகளைக் கையாளுவதற்குரிய போதுமான திறன்களை கட்டுமானதாரர்கள் பெற்றிருக்க வேண்டும்.

- நிகழக்கூடிய பிரச்சினைகளை அடையாளங் கண்டறிந்து, தீர்வு வழங்கக் கூடியவர்களாகவும், எத்தகைய பிரச்சினை என்பதை விளக்கி, அதனை அணுகக்கூடியவர்களாகவும் கட்டுமானதாரர்கள் இருக்க வேண்டும்.
- சமீபத்திய புதிய உற்பத்திப் பொருட்களை பயன்படுத்துகின்ற அனுபவம் மற்றும் அது குறித்த பரந்துபட்ட அறிவு.
- 2005 ஆம் ஆண்டு இந்திய தேசிய கட்டட விதித் தொகுப்பின் படி தேவைப்படுகிறவாறு, தரம், பாதுகாப்பு, கட்டுமான நடைமுறைகளுக் கிணங்க உறுதி செய்வதற்கு அதிகாரமன்றத்தால் முடிவு செய்யப்பட்டவாறு கட்டுமானத்தின் பல்வேறு வகைகள், உள்கட்டமைப்பு வசதி மேம்பாடுகளுக்கான கட்டுமானதாரர் / கட்டடம் கட்டுவோருக்கான குறைந்தளவு தகுதி.
- பல்வேறு வடிவமைப்பு உள்ளீடுகளின் முறையான ஒருங்கிணைப்புக்காக தொழில்நுட்ப வல்லுநர்களிடையே ஒருங்கிணைந்த அணுகுமுறை அவசியம் என்பதோடு, பெரியளவிலான திட்டங்களுக்கான பல்வகை ஒழுங்குமுறை உள்ளீட்டுக்கான அமைப்பு முறையையும் கட்டுமானதாரர்கள் விளக்க வேண்டும். இக்குழு கட்டடக்கலைஞர், கட்டுமானப் பொறியாளர், கட்டுமான அமைப்புப் பொறியாளர், மின் பொறியாளர், குழாய்கள் சீர் செய்வோர், தீத்தடுப்பு பொறியாளர், நகர திட்டமிடுவோர், நகர்ப்பகுதி வடிவமைப்போர், சுற்றுச்சூழல் வல்லுநர், பாதுகாப்புமுறை வல்லுநர், அக வடிவமைப்பாளர், நில அளவையர், திட்டம் / கட்டுமான மேலாளர் மற்றும் ஏனைய துறை சார்ந்த வல்லுநர்களைக் கொண்டிருக்க வேண்டும். குழுவின் கூட்டமைவு, திட்டத்தின் தன்மை மற்றும் முக்கியத்துவத்தை சார்ந்து இருக்க வேண்டும். கட்டுமானதாரர் / உரிமையாளர் அனைத்து நிலைகளிலும் மிகவும் முக்கியமான செயல்பாடுகளை இணைந்து உருவாக்க வேண்டும். அவை வடிவமைப்புக் குழுவால் உறுதிபடுத்தப்பட வேண்டும்.
- இதுவரையில் மேலே குறிப்பிடப்பட்ட குழு, திட்ட மேலாண்மை மற்றும் கட்டுமான மேலாண்மை குழு என்று அழைக்கப்படும். இக்குழு நாளதுவரையில் / அன்றாடம் மேற்கொள்ளப்பட்ட பணி, கண்காணிப்பு, தரக்கட்டுப்பாடு முதலியனவற்றிற்கு பொறுப்பானதாக இருக்க வேண்டும் என்பதுடன், கட்டுமான நிலையின் போது குழுக்களுக்கிடையிலான ஒழுங்குமுறை ஒருங்கிணைப்பையும் உறுதி செய்யவேண்டும். இக்குழு, இத்துறையில் தகுதி, அனுபவம், நிபுணத்துவம் ஆகியவற்றை கவனமுடன் பரிசீலித்து இக்குழு தெரிவு செய்யப்பட வேண்டும்.

கட்டுமான அமைப்புப் பொறியாளர்கள்:–

- பதிவு பெற்ற கட்டுமான அமைப்புப் பொறியாளர் அனைத்து கட்டடங்களுக்கான கட்டுமான வடிவமைப்பு, கணக்கீடு மற்றும் விவரங்களை தயாரிப்பதற்கும், மேற்பார்வையிடுவதற்கும், தகுதி வாய்ந்தவராக இருக்க வேண்டும்.
- கட்டுமான அமைப்புப் பொறியாளரின் முக்கிய நோக்கமானது கட்டுமான அமைப்பு பகுப்பாய்வு மற்றும் வடிவமைப்பு எத்தகைய நிலையிலும் ஈடுகொடுக்கக் இயலக்கூடியது என்பதை உறுதி செய்யும்.
- கட்டுமான அமைப்புப் பொறியாளர், கட்டுமான அமைப்பு முழுமையடைய உறுதி செய்வதன் மூலம், கட்டட கட்டுமானத்தின் வடிவமைப்பு நிலையில் முக்கிய பங்காற்ற வேண்டும்.
- கட்டுமான அமைப்புப் பொறியாளர், கட்டடத்தின் கட்டமைப்பு அல்லது உள்கட்டமைப்பு பகுதி சூறாவளி, பூகம்பம் போன்ற இயற்கை பேரிடர்களை எவ்வாறு எதிர்கொள்ளும் என்பதை மதிப்பீடு செய்வதற்கு கருத்தியல் நோக்கம் மற்றும் அனுபவ அறிவைப் பயன்படுத்த வேண்டும்.
- கட்டுமான பகுப்பாய்வு வடிவமைப்புகளை அளிப்பதில் உள்ள பாதுகாப்பு, திறன் ஆகியவற்றில் கட்டுமான அமைப்புப் பொறியாளரின் பங்கு முக்கியமானதாகும்.
- கட்டடப்பணிகள் நடைபெற்று, கட்டுமான அமைப்பில் முன்னேற்றம் ஏற்படும்போது, கட்டுமான அமைப்புப் பொறியாளர்கள், பணியிட ஆய்வாளர்களாகப் பணியாற்ற வேண்டும். மேலும், முதனிலை உருவரை படத்தை நிறைவேற்றி, தங்களின் வடிவமைப்புகளை செயல்படுத்துகின்ற பணியிடப் பொறியாளர்களுக்கு உதவ வேண்டும்.
- கட்டுமான அமைப்புப் பொறியாளர், தொழில் நுட்ப விவரங்களை கட்டுமானதாரர், கட்டுமானம் / பணியிடப் பொறியாளர், கட்டடங்கள் மற்றும் ஏனைய தொழிலாளர்களை மேற்பார்வையிடும் மேலாளர்கள் ஆகியோருக்கு தெரிவிக்க வேண்டும்.
- திட்ட வடிவமைப்பு நிலையில் அல்லது கருத்தாய்வு நிலையில் ஏனைய உத்திகளை கண்டறிவதுடன் நீடித்த இலக்குகளை கூராய்வு செய்ய தேவையான நபர்களுடன் அதாவது கட்டுமானதாரர், கட்டடக் கலைஞர், பணியிடப் பொறியாளர் அல்லது வாடிக்கையாளர்களுடன் கூட்டங்களில் கலந்து கொள்ளல்.

- விரும்பத்தக்க தரங்களை இனம் காணுதல், அதாவது பாளங்களிலும், உத்தரங்களிலும் ஏற்படக்கூடிய வளைவு சாத்தியமாகக்கூடிய அதிர்வு, பக்கவாட்டு இடப்பெயர்ச்சி, கான்கிரீட்டிலும், கெட்டிக்கலவையிலும், கட்டுமான வேலைபாட்டிலும் ஏற்படக்கூடிய விரிசல்களை கட்டுப்படுத்துதல், அடிக்கட்டுமானத்தில் ஏற்படக்கூடிய பிளவுகள், மண் கட்டமைப்பினால் ஏற்படக்கூடிய உள்ளார்ந்த வினைகள் நிரந்தரமான நிலநடுக்கம் போன்ற பாதிப்புகள் ஆகியவை
- புவிசார் தொழில் நுட்பம், கட்டுமானப் பொருட்கள் ஆய்வு, அதிர்வாய்வு மற்றும் ஏனைய தேவையான கருத்துக்கள் போன்ற வல்லுநர்களின் அறிக்கைகளின் ஆய்வு.
- புவிசார் தொழில் நுட்ப பொறியாளரின் பரிந்துரைகளின் அடிப்படையில் அடிமான கட்டமைப்பின் வடிவமைப்பு மற்றும் வரைபடங்கள் அளித்தல்.
- வாடிக்கையாளர் கேட்டுக் கொண்டதன்படி அல்லது கட்டட திட்ட அமைப்பு விதிகளின்படி, இயங்கு சுமைகள், காற்று, நிலநடுக்க அளவுகோல் மற்றும் கட்டட விதித் தேவைகளுக்கு மிகையான வகைபாடுகளுடன் கூடிய சிறப்புச் சுமைகள் போன்ற சுற்றுச் சூழல் சுமைகள் ஆகியவை அடங்கிய பட்டியல்.
- செங்குத்தான சுமை பகுப்பாய்வு, கூரைக் கட்டுமான வடிவமைப்பு, கூரைக் கட்டுமானம், தரைத்தள கட்டுமானம், அமைப்பு அல்லது ஆதாரக்கட்டுகள், தூண்கள் மற்றும் அடிக்கட்டுமானங்களுக்கான வடிவமைப்பு.
- கணினி பகுப்பாய்வு, வடிவமைப்பு முடிவுகள், இயக்க நிலை, அதிர்வு பகுப்பாய்வு போன்ற சிறப்பு பகுப்பாய்வுகள்.

<u>கட்டடக் கலை:–</u>

கட்டடக்கலை விதிகள், கட்டடக்கலைஞரின் பணிகளாக பின்வருவனவற்றை குறிப்பிடுகின்றன.

- பணிமுன்னேற்ற பதிவேடு ஒன்றை கட்டடக்கலைஞர் தன் அலுவலகத்தில் வைத்துவர வேண்டும்.
- அவசியமெனில், சிறப்பு கலந்தாய்வாளர்களை நியமித்துக்கொள்ள வேண்டும்.

- ஒருங்கிணைப்பு ஆலோசனைப்பணியிலும், வழிகாட்டுதலுக்கும் கட்டடக் கலைஞரே பொறுப்பாவார்.

- இருப்பினும், தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகுறித்து கணக்கீடுகள், விரிவான வடிவமைப்பு, அவ்வப்போது மேற்கொள்ளப்படவேண்டிய ஆய்வு மற்றும் பணிமதிப்பீடு ஆகியற்றிற்கு ஆலோசகர்களே பொறுப்பாவர்.

- முன்ஒப்புதலின்றி, ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைபடங்களில் இருந்து மாற்றம்செய்தல், திருத்தம்செய்தல், விடுபாடுகள் எதனையும் கட்டடக்கலைஞர் மேற்கொள்ளக்கூடாது.

- கட்டடக்கலைஞர், நிபந்தனைகளுக்கிணங்க பணிகள், நிறைவேற்றப்பட்டு வருகின்றனவா என்பது குறித்து தேவையான ஆய்வையும் பொதுவான கண்காணிப்பையும், மேற்கொண்டு, உரிய அனைத்து திறமைகள், கவனம் ஆகியவற்றைக்கொண்டு கடுமையான உழைப்புடன், தங்களுடைய பணிகளை நிறைவேற்ற வேண்டும்.

- கட்டடக்கலைஞரின் இசைவின்றி ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடத்திலும், குறிப்பீடு களிலும் எந்தவொரு மாற்றமும் செய்யக்கூடாது.

15. மேற்சொன்ன கட்டுமான அமைப்பு பொறியாளர்கள், கட்டுமானதாரர்கள், கட்டடக்கலைஞர்கள், பணியிடப்பொறியாளர்கள் ஆகிய அனைவரும் தங்களுடைய கடமைகளில் இருந்தும், பொறுப்புகளில் இருந்தும் வழுவியுள்ளதுடன், கட்டடம் கட்டுவதற்கான நிபந்தனைகளையும், வழிகாட்டி குறிப்புகளையும் புறந்தள்ளிவிட்டு, சென்னை மௌலிவாக்கத்தில் 11 தளம் கொண்ட அடுக்குமாடிக்குடியிருப்பு 'B' கட்டடத்தொகுதியின் மொத்த அடித்தளமும் அபாயமான நிலையில் இருக்கும் என்றும், இடிந்துவிழுந்து மனித உயிர்களை பலிவாங்கக்கூடிய வாய்ப்புகள் உண்டு என்பதை நன்கறிந்த நிலையிலேயே, ஆதாய நோக்குடன், பணம் ஈட்டுவது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டுள்ளனர் என்பது தெள்ளத்தெளிவாகிறது.

16. புலனாய்வு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இறுதி முடிவுகள், வல்லுநர்கள் கருத்தளிக்கைக்குப் பின்னும், புலனாய்வு நிறைவுற்ற பின்னும் தெரியவரும்.

(ஒப்பம்)
கூடுதல் காவல்துறை துணை ஆணையாளர்,
மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை (கிழக்கு) &
புலனாய்வு அதிகாரி, சிறப்பு புலனாய்வுக்குழு.

வல்லுநர் குழு ஏற்படுத்துதலும் அவர்களுடைய கருத்துக்களும்.

விசாரணை ஆணையம் பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர், உடனடியாக காஞ்சீபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், மௌலிவாக்கத்தில் பலஅடுக்கு மாடிக்கட்டடம் இடிந்து விழுந்ததற்கு வகைசெய்த காரணங்கள், சூழ்நிலைகள் ஆகியவற்றை அனைத்து கோணங்களிலும் விசாரிக்கவேண்டும் என்ற நோக்குடன், மேற்சொன்ன கட்டடம் இடிந்து விழுந்ததற்கான காரணங்கள், கட்டடத்தின் சரிநிலை தொடர்பான ஐயப்பாடுகளை ஆராய்வதற்கு, தொழில்நுட்ப வல்லுநர் குழு ஒன்றை ஏற்படுத்துவது அவசியம் என்று விசாரணை ஆணையம் கருதுகிறது.

28.06.2014 அன்று மாலை காஞ்சீபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், மௌலிவாக்கத்தில் பல அடுக்குமாடிக்கட்டடம் இடிந்து விழுந்து, அதன் விளைவாக 67 நபர்கள் உயிரிழந்தனர், 27 நபர்கள் காயமுற்றனர். எனவே, அந்த இடிந்துவிழுந்த பலஅடுக்குமாடிக் கட்டடத்தில் பயன்படுத்தப்பட்ட பயன்பாட்டு பொருட்கள், தரக்கட்டுப்பாடு, கட்டமைப்பு நிலைத்தன்மை குறித்து கருத்து வழங்குவதற்கேற்ப அரசால் வெளியிடப்பட்ட அறிவிக்கை அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு விசாரணை தொடர்பான விஷயங்களில் விசாரணை ஆணையத்திற்கு உதவிபுரியவும், ஆலோசனை வழங்கவும் ஆணையத்தின் 21.07.2014–ஆம் நாளிட்ட 01/நிருவாகம்/2014–ஆம் எண் அலுவலக செயல்முறை ஆணைமூலம் 1952–ஆம் ஆண்டு விசாரணை ஆணையச்சட்டத்தின் 5B பிரிவின்கீழ் வல்லுநர் குழு ஏற்படுத்தப்பட்டது. அதற்கிணங்க தமிழ்நாடு அரசு 17.07.2014–ஆம் நாளிட்ட 3309/L & O-F/2014-1-ஆம் எண் கடிதத்தில் விசாரணை ஆணையத்திற்கு உதவிசெய்யும்பொருட்டு, பின்வரும் அதிகாரிகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களை நியமனம் செய்துள்ளது:–

1. டாக்டர் A.R.சாந்தகுமார், கட்டடப் பொறியியல் துறை பேராசிரியர் (ஓய்வு),
அண்ணா பல்கலைக் கழகம்,
தற்போது ஓய்வுபெற்ற பேராசிரியர், இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (IIT), சென்னை,
எண்.38, பிரகாசம் தெரு, தியாகராய நகர், சென்னை–17.
தொலைபேசி எண்.044–2834 2210, 98401 42384.

2. டாக்டர் எஸ்.நரசிம்மன்,
அண்ணா பல்கலைக்கழக முன்னாள் வருகைதரு பேராசிரியர் மற்றும் செயற்பொறியாளர், த.நா.வீ.வ.வாரியம், AJ-41, 4வது தெரு, அண்ணா நகர், சென்னை–40. கைபேசி எண்.9382851710.

3. டாக்டர் கே.நாகமணி,
துறைத் தலைவர்,
கட்டடப் பொறியியல் துறை, அண்ணா பல்கலைக் கழகம், சென்னை–40.
கைபேசி – 9445253006, 044–22357633.

4. டாக்டர் ஜே.இராம ஆஞ்சநேயலு,
தலைமை விஞ்ஞானி, சி.எஸ்.ஐ.ஆர். கட்டுமான அமைப்புப் பொறியியல் ஆராய்ச்சி மையம்,
சி.எஸ்.ஐ.ஆர். வளாகம், தரமணி, சென்னை–113.
தொலைபேசி எண். 94431 11568, 044–22549198.

5. திரு. ஏ.பூமிநாதன்,
பேராசிரியர் மற்றும் தலைவர்,
புவிசார் தொழில்நுட்பத் துறை, இந்திய தொழில்நுட்ப நிறுவனம், சென்னை.
தொலைபேசி எண். 98403 78960, 044–22574273.

6. திரு. என்.வி.ஆர்.ரகுநாத்,
கட்டடக்கலைஞர் / முன்னாள் தலைமை திட்டவியலார்,
சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், எண்.34/42 பொன்னியம்மன் கோயில் தெரு,
கோட்டூர்புரம், சென்னை–85.
கைபேசி–98411 34741.

சிறப்புப்புலனாய்வுப் பிரிவு, புலனாய்வு மேற்கொண்டபோது சேகரிக்கப்பட்ட தொடர்புடைய ஆவணங்கள், பொருட்கள் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து பெறப்பட்ட மேற்சொன்ன கட்டடத்தின் கட்டுமானத்திற்கான அனுமதி வழங்கிய அனைத்து ஆவணங்கள் ஆகியவை தொழில்நுட்பக் குழுவுக்கு வழங்கப்பட்டது. குழு, இடிந்துவிழுந்த கட்டடம் உள்ள இடத்திற்குச் சென்று பல்வேறு தருணங்களில் புலனாய்வு மேற்கொண்டதோடு, விசாரணை ஆணைய அலுவலகத்தில் பல்வேறு நேரங்களில் கூட்டங்களும் நடைபெற்றது. தொழில்நுட்ப வல்லுநர்கள், 'B' கட்டடத் தொகுதி இடிந்து விழுந்தது, 'A' கட்டடத் தொகுதி அமைப்பின் நிலைத்தன்மை ஆகியவற்றிற்கான காரணங்களை தனக்கே உரிய முறையிலும், தனித்தனியாகவும் மதிப்பீடு செய்தனர்.

இதனிடையே, மண் பரிசோதனை செய்யப்பட்டு, மாதிரிகள் சென்னை–25, கிண்டி, அண்ணா பல்கலைக்கழக கிண்டி பொறியியல் கல்லூரியின் கட்டடப் பொறியியல் துறைக்கு, அனுப்பிவைக்கப்பட்டது. மண்ணியல் வழிமுறை மற்றும் அடிமானப் பொறியியல் துறையின் தலைமை ஆசிரியர், மண் மாதிரிகள் பரிசோதனைக்குப் பின்னர், அது தொடர்பான அறிக்கையை 08.08.2014 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தார். இதேபோன்று, தின்காரை (கான்கிரீட்) மாதிரிகள் எடுக்கப்பட்டு, சென்னை–36, மெட்ராஸ், இந்திய தொழில் நுட்ப நிறுவனத்தின் (IIT) கட்டடப் பொறியியல் துறை, கட்டுமான அமைப்புப் பொறியியல் பிரிவுக்கு அனுப்பிவைக்கப்பட்டு, மாதிரிகள் ஆய்வுசெய்யப்பட்டு, பொருட்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, அது தொடர்பான கருத்து 12.08.2014 அன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதில், குறிப்பிடத்தக்க வகையில் கூர்ந்தாய்வு மேற்கொள்ளப்பட்டு, பின்வரும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன:—

1) B1 (R) மற்றும் B2 (R)–ன் மையப்பகுதி தின்காரை (கான்கிரீட்) மாதிரிகள், தின்காரை அடர்த்தியின் குறைந்தளவு தேவையை பூர்த்தி செய்யவில்லை.

2) C2 (R), C3 (R), S2 (R) மற்றும் S3 (R) மாதிரிகள், விதித்தொகுப்பு தேவையை (cl.5.6/IS 516 – 1959) பூர்த்தி செய்யவில்லை. அதாவது எந்தவொரு தனித்தூணின் அழுத்தம்பெறும் விசையின் சராசரி வலிமையைக் காட்டிலும் +15 விழுக்காட்டிற்கும் மேலாக இருக்கக்கூடாது.

3) செங்கல் மாதிரிகளின் உயரம், அனுமதிக்கத்தக்க உயரளவு வரையறைக்குள் இல்லை.

4) SR 1 (R) எஃகு மாதிரிகளின் கூறுபாடுகளின் / பரிவுக்கூறுகளின் நிறையானது – 12 mm விட்டம் என்ற தாங்கக்கூடிய குறைந்தளவு வரையறையை பூர்த்திசெய்யவில்லை. மற்றும்;

5) SR 1 (R) – 12 mm, SR2 (R) – 12 mm, SR3 (R) – 12 mm, SR1 (R) – 10 mm, SR2 (R) – 10 mm, SR3 (R) – 8 mm ஆகிய எஃகு மாதிரிகளின் வலிமையின் அளவு குறைந்தளவு தேவையை நிறைவு செய்யவில்லை.

கிடைக்கப்பெற்ற பொருட்கள் முழுவதையும் தொழில்நுட்பக்குழு ஆய்வு செய்த பின்னர், கட்டுமான நிலைத்தன்மை வடிவமைப்பு, அடித்தள (கடைக்கால்) வடிவமைப்பு மற்றும் அவை நிறைவேற்றப்பட்ட முறை, கட்டுமான அமைப்புத் திட்ட நோக்கங்கள் ஆகியவை குறித்த அவர்களுடைய தனிப்பட்ட கருத்துக்களை வழங்கியதுடன், பின்னர் அவர்களுக்கிடையே கலந்தாலோசித்து, கட்டுமான அமைப்பின் நிலைத்தன்மை, 'B' கட்டடத்தொகுதி

இடிந்துவிழுந்ததற்கான காரணங்கள், 'A' கட்டடத்தொகுதியின் நிலை மற்றும் வல்லுநர் குழுவின் கருத்து ஆகியவை அடங்கிய அறிக்கை ஒன்றை விசாரணை ஆணையத்திற்கு அளித்தது. பின்னர், இந்த அனைத்து பொருட்கள் தொடர்பான கருத்துக்களும், அந்தந்த பொருள் குறித்த ஏனைய வல்லுநர்களின் கருத்துக்களும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அவை இணைப்பில் வைக்கப்பட்டுள்ளது. கட்டட அமைப்பின் நிலைத்தன்மை தொடர்பான விவரங்கள் குறித்து வல்லுநர் குழுவின் அறிக்கை விவாதிக்கிறது. அறிக்கையின் முழு விவரங்கள் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது.

இணைப்பு – A

மாண்பமை நீதியரசர் திரு.ஆர்.ரகுபதி விசாரணை ஆணையத்துக்கு அளிக்கப்பட்ட அறிக்கை:

1. முன்னுரை:

மௌலிவாக்கத்தில் பலஅடுக்குமாடிக் கட்டடம் இடிந்து விழுந்ததற்கு வழிவகுத்த சூழ்நிலைகள் குறித்தும், 21.07.2014–ஆம் நாளிட்ட 1/நிருவாகம்/2014–ஆம் எண் அலுவலக செயல்முறை ஆணைகளின் படியும், இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட 4 புலனாய்வுகள், சம்பவ இடத்தை பார்வையிட்டபோது, கட்டமைப்பு நிலைத்தன்மை, தரக்கட்டுப்பாடு, பயன்படுத்தப்பட்ட பொருட்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தொடக்க அறிவிக்கை தயாரித்து அளிக்கப்பட்டுள்ளது.

காஞ்சீபுரம் மாவட்டம், போரூர் – குன்றத்தூர் பிரதான சாலையில், 52–ஆம் எண்ணில் உள்ள 'B' கட்டடத்தொகுதியானது 28.06.2014 அன்று மாலை சுமார் 04.30 மணியளவில் இடிந்து விழுந்தது. இக்கட்டடம் குடியிருப்புக்கான பலஅடுக்கு மாடிகளைக் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு ஆகும். இக்கட்டட அமைப்பு முறையின் வகையானது மறுவலுவூட்டப்பட்ட சிமிட்டி கற்கலவை அமைப்பு என வகைபடுத்தப்பட்டுள்ளது. இக்கட்டடம் அடித்தளம் + தரை நடுத்தளம் + 11 அடுக்குகளைக் கொண்டது. 'A' கட்டடத்தொகுதியானது, இதேபோன்ற பல அடுக்குமாடி குடியிருப்புகளைக் கொண்ட 'B' கட்டடத்தொகுதியிலிருந்து சுமார் 25 அடி தூரத்தில் அமைந்துள்ளது. கட்டமைப்பு வரைபடத்தின்படி கட்டமைப்பு 9 அங்குல தடிமன் கொண்ட தெப்பப்பலகத்தின் கட்டமைப்பிற்கு ஆதாரமாக இருந்தது. அளிக்கப்பட்ட வரைபடத்தின்படி, 12 அடி ஆழ நிலத்தாண்கள் அல்லது தூண் அமைவிடத்திற்கருகில், 1' – 0" அளவு விட்டத்துடன் பலகைக்கு வகைசெய்யப்பட்டிருந்தது. 'A' கட்டடத்தொகுதி மற்றும் 'B' கட்டடத்தொகுதியின் கட்டட வடிவமைப்புக்கான திட்டம் ஆய்வுசெய்யப்பட்டன. 'A' மற்றும் 'B' கட்டடத் தொகுதிகள் முறையே 3 படுக்கையறை, கூடம், சமையலறை மற்றும் 2 படுக்கையறை, கூடம், சமயலறை கொண்ட குடியிருப்புகளாக இருந்தது.

'B' கட்டடத்தொகுதி இடிந்து விழுந்துள்ளது. 'A' கட்டடத்தொகுதி படம்–1–இல் காட்டப்பட்டுள்ளவாறு சிதைவடைந்த கட்டடத்திற்கு அடுத்து அமைந்துள்ளது.



படம் – 1

2. இடிந்துவிழுந்த கட்டடம் குறித்த ஆய்வுகள்:

28.06.2014 அன்று கடுமையான மழை மற்றும் பலத்த காற்றுக்குப் பின்னர் மாலை சுமார் 4.30 மணியளவில் 'B' கட்டடத்தொகுதி இடிந்து விழுந்தது. இக்கட்டடம் இரு பகுதிகளாக பிளவுற்று காணப்பட்டது. கட்டடத்தில் இருந்த பல்வேறு தொழிலாளர்கள் இடிபாடுகளில் மாட்டிக்கொண்டனர். அரசு இயந்திரம் மீட்புப்பணிகளை உடனடியாக ஆரம்பித்தது. கட்டடச் சிதைவுகள் குவிந்து கிடந்தது கண்டறியப்பட்டது. மண் அல்லது தரைதள இடிபாடுகளின் குவியல் கண்டறியப்படவில்லை.

சம்பவ இடத்தின் புவிசார்தொழில்நுட்ப அறிக்கை, சென்னை அரவிந்த் அசோசியேட்ஸ் மூலம் 26.01.2012 முதல் 09.02.2012 வரையிலான கால அளவில் தயாரிக்கப்பட்டது. 15 முதல் 17 மீ வரையிலான ஆழத்திற்கு சுழற்சிமுறையில் ஆழ்துளையிட்டு, 3 ஆழ்துழைகளை ஏற்படுத்தியும், நிலையான ஊடுருவு ஆய்வுகள் மேற்கொண்டும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட ஆழ்துளை மூலம், மண் அடுக்கானது அடர்த்தி குறைந்த மணல்

மற்றும் விறைப்பான களிமண் அடுக்குகளை கொண்டது என்பதையும் காட்டுகிறது. மண் முகவரமைப்பு, கடைக்கால் 400 mm / 300 mm விட்டம் கொண்ட பெரியளவிலான நிலத்தூண்களுக்கு பரிந்துரை செய்திருந்தது. இந்த ஆய்வின் முக்கியமான குறைபாடு, கெட்டித்தன்மைவாய்ந்த தரை கிட்டும் அல்லது மறுப்பு வரை மேலும் துளையிடப்படாத நிலையை எட்டும்வரை துளையிடாதது பெருங்குற்றமாகத் தோன்றவில்லை. அடுக்கு (refusal strata) வரையில் ஆழ்துளையிடப்படவில்லை. ஆனால், நடுத்தர பிசுபிசுத்த களிமண் அடுக்கு எட்டிய இடத்தில் துளையிடுவதை நிறுத்தியதுதான். ஆயினும் பெருங்குறை ஒப்புதலுக்காக சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு அளிக்கப்பட்ட வரைபடம் அல்லது அடித்தளங்களின் கட்டுமானத்திற்காக பயன்படுத்தப்பட்ட கட்டமைப்பு இறுதி வரைபடத்தின் பரிந்துரைக்கப்பட்ட அடித்தள வகை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு அளிக்கப்பட்ட வரைபடம், 500 mm விட்டத்துடன் 18m நீளத்துடன்கூடிய நிலத்தூண்களின் பயன்பாடு காட்டப்பட்டிருந்தது. ஆனால் இறுதிகட்டமைப்பு வரைபடங்களில், 'A' மற்றும் 'B' கட்டடங்களை தாங்குவதற்கு பொதுவான தெப்பஅடிமானம் குறிப்பிடப்பட்டிருந்தது. மறுவலுவூட்டப்பட்ட தின்காரை தெப்பத்தின் தடிமன் 30/35 செமீ மட்டுமே ஆகும். 300 mm விட்டத்துடன் 4m நீளம்கொண்ட குட்டையான நிலத்தூண்கள்மீது தெப்பம் தாங்கியுள்ளது. நிலத்தூண்கள் கெட்டித்தன்மைவாய்ந்த நிலஅடுக்கு வரை அமைக்கப்படவில்லை. எனவே அவை தாங்குதூண்களாக சுருத இயலவில்லை. நிலத்தூண்கள் உறுதித்தன்மையற்ற மண்ணில் நிறுவப்பட்டுள்ளது. எனவே தூண்களுக்கு வருகின்ற சுமைகளைத் தாங்குவதற்குப் போதுமான உராய்வு நகல்களைக் கொண்டிருக்கவில்லை. நிலத்தூண்கள் அனைத்தும் துளையுடன் கூடியவையாக இருந்தன. எனவே, சுற்றுப்புறங்களில் உள்ள மண்ணுடன் நெருக்கமாக இணைப்பதற்கு போதுமானதாக அமையவில்லை. இத்தகைய சூழ்நிலைகளின் கீழ், அவை தாங்கக்கூடிய நிலத்தூண்களாகவோ அல்லது உராய்வுத்தன்மை கொண்டதாகவோ இல்லை. நிலத்தூண்கள் மீது தாங்கக்கூடிய பொதுவான ராஃப்ட் அடித்தளம் அமைப்பதற்கு, யாதொரு விரிவான புவிசார்தொழில்நுட்ப அல்லது கட்டட வடிவமைப்பு கணக்கீடுகள் மேற்கொள்ளப்படாமல் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதை இங்கு வலியுறுத்துவது முக்கியமானதாகும். பதினோரு தளங்களில் இருந்து வரக்கூடிய தூண்களின் சுமைகளைத் தாங்குவதற்கு அளிக்கப்பட்டிருந்த ராஃப்ட் பலகையின் பருமன் / தடிமன் முற்றிலும் போதுமானதாக இல்லை. எனவே, ஏற்றுக்கொள்ளப்பட்ட அடித்தள அமைப்புமுறை ஐயத்திற்கிடமானதாக உள்ளது.

மண், அண்ணா பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்யப்பட்டது. அந்த ஆய்வுகளின் அடிப்படையில் பின்வரும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. நிலத்தூண்களின் ஆழம் மற்றும் விட்டம் நேரிடையாக ஆய்வு செய்யப்பட்டு சரிபார்க்கப்பட்டது.

26.07.2014 முதல் 01.08.2014 வரையில், சம்பவ இடத்தில் மண் பரிசோதனையை உறுதிபடுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு, கெட்டித்தன்மை வாய்ந்த நில அடுக்கு வரையில் இரண்டு ஆழ்துளைகளிட்டும், நான்கு இடங்களில் எளிய கூம்பினை உட்புகுத்தும் ஆய்வு என இரண்டுவகை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆழ்துளைகளில் SPT ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. சுமார் 25 மீட்டர் ஆழம் வரையில் மட்டுமே கெட்டித்தன்மை வாய்ந்த நிலஅடுக்கு உள்ளது இந்த ஆய்வில் தெரியவந்தது. இதற்கும் அதிகமான அல்லது இதற்கும் குறைவான மண் அடுக்கு இருப்பதை ஒருவர் ஆய்வில் கண்டறிந்திருக்க வேண்டும். ஆனால், சற்று ஆழமான பகுதிகளில் மிகவும் நெகிழ்வன / தளர்வான வகையிலான மண் உள்ளது கண்டறியப்பட்டது. முழுமையான ராஃப்ட் (Raft) அடிக்கட்டுமானம் என்பது போன்ற வலுவற்ற அடிக்கட்டுமானத்தின் ஆதிக்கப்பரப்பிற்குள் மிருதுவானதும் / தளர்வானதுமென மண் அடுக்குப்பகுதியாக இருப்பதால், கெட்டித்தரையில் நிற்கக்கூடிய நிலத்தூண் அடிக்கட்டுமானமே பொருத்தமான தேர்வாக அமையும். அடிக்கட்டுமானத்தின் தாங்குதிறன் கணக்கீடுகள் பொதுவாக அமைக்கப்பெற்ற "Raft" அடிக்கட்டுமானத்தின் கீழ் களிமண் அடுக்குகளும், தளர்வான மணற்பாங்கு அடுக்குகளும் இருப்பதனால் முழுப் பளுவும் செயல்படும் சமயங்களில் அடிக்கட்டுமான அமைப்பு / ஒட்டுமொத்த கட்டடமும் உறுதி இழக்கவும், இடிந்துவிழவும் வாய்ப்புகள் மிகவும் அதிகம் என்பதையே இது காட்டுகிறது.

3. <u>"B" கட்டடத்தொகுதி ஏன் இடிந்து விழுந்தது?</u>

வடிவமைக்கப்பட்ட கட்டுமான அமைப்பானது, அதன் சொந்த சுமை, அவற்றை பயன்படுத்தும் மக்களின் இயக்குசுமை, காற்று அல்லது பூகம்பம் போன்ற பிந்தைய சுமைகள் முதலியவற்றை தாங்கக்கூடியதாக வடிவமைத்திருக்க வேண்டும். கட்டடம் இடிந்து விழுந்த நேரத்தில் குடியிருப்புகளை எவரும் பயன்படுத்தவில்லை. அடிக்கட்டுமான மட்டஅளவில், தூண்களின் மீதான சுமையை அடையாளம் கண்டறிய வேண்டி, இந்திய தொழில்நுட்ப நிறுவனம் / அண்ணா பல்கலைக்கழகத்தால் கணினி பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதில் மொத்தத் தூண்களின் எண்ணிக்கை 37 என தெரிவிக்கப்பட்டது. உயரளவாக சுமையேற்றப்பட்ட தூண் L19 ஆகும். காரணிகளைக் கருதிப்பார்க்காமல், நிலைச்சுமையின் கீழ்மட்டும் இத்துடன் மீதானசுமை 420டன் என மதிப்பீடு செய்யப்பட்டது. இது கணக்கீடுகள் செய்யப்பட்டு உறுதிபடுத்தப்பட்டதன் வாயிலாக சரிபார்க்கப்பட்டது. இத்தூணின்

பரிமானங்கள் பயன்படுத்தப்பட்ட சம்பவஇடத்தில் சரிபார்க்கப்பட்டும், வரைபடங்களில் இருந்தும் அளிக்கப்பட்டவை மறுவலிவூட்டப்பட்டவை என எடுத்துக்கொள்ளப்பட்டன. தூணின் பரிமானங்கள் 1' – 0" X 1' 6" ஆக இருந்தது. மேலும் அவை 200 mm விட்டம் கொண்ட எஃகுகள் 8 எண்ணிக்கையில் இருந்தன. 220 டன் தூணின் இறுதியாக சுமையை சுமக்கும் திறனுக்கு மாறாக, தற்போது நிலைச்சுமையுடன், பயன்பாட்டில் உள்ளபோது இருக்கும் சுமையைச் சேர்த்து (யாதொரு இயங்குசுமை நீங்கலாக) அதில் 420 டன்கள் சுமை இருந்தன. இயங்கு சுமையானது, தரைகளின் பயன்பாட்டில் உள்ளபோதான சுமையையும் சேர்த்து 500 டன்களாக அதிகரிக்கும் என்பது வெளிப்படையாகும். தூண்களின் மீதான இறுதியான சுமையைப் பெறுவதற்கு 1.5 காரணியால் இதனை பெருக்கவேண்டும். தூண்களின் இறுதியான இந்த பருமனுடன், தூண் திறன் 420 டண்ணையும் ஒப்பிடுகையில் தூணின் திறன் முற்றிலும் போதுமானதாக இல்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. சம்பவ இடத்தை நேரிடையாக ஆய்வு செய்தபோது, L9 நொறுங்கி, எஃகு கம்பிகள் முறுக்கிக்கொண்டும், பிணைப்புகள் முறிந்து விழுந்திருப்பதும், தூண் மிகைச் சுமைகாரணமாக சுமை, தாங்க இயலாமல் நொறுங்கி விழுந்திருப்பதை தெளிவாக சுட்டிக்காட்டுகிறது.



படம்: 2

மொத்தமுள்ள 37 தூண்களில், 22 தூண்களில், (நிலைச்சுமை நிலையின்கீழ் மட்டும்) இறுதி தாங்குதிறனுக்கும் மிகையாக, சுமை ஏற்றப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

4. கட்டட வடிவமைப்பிலும், நிறைவேற்றலிலும் விதிமீறல்கள்:

கட்டுமான அமைப்பு ஆவணங்களை ஆய்வுசெய்ததன் அடிப்படையிலும், இந்த திட்டங்களுக்கான சம்பவ இடத்தை நேரில் சென்று ஆய்வு செய்ததன் அடிப்படையிலும் பின்வரும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

(a) IS 456 – 2000 விதித்தொகுப்பு, செங்குத்து மற்றும் கிடைமட்ட சுமைகளுக்கான, பக்கம் 33–ல் 204 மற்றும் 205–ஆம் பகுதிகளின்படி நிலைத்தன்மை பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யப்படவில்லை. கடைக்காலுக்கு அனைத்து கிடைமட்ட விசைகளை செம்மையான முறையில் அனுப்பிவைப்பதற்கும், கட்டடப்பகுதியின் தளைக்கட்டு போதிய அளவு இருப்பதையும் இப்பகுதி வரையறுக்கிறது.

(b) பிந்தைய ஊசலாட்ட சரிபார்ப்பும் செய்யப்படவில்லை. கணப்பொழுதில் தோன்றி மறைகின்ற காற்றுச்சுமையின் பிந்தைய ஊசலாட்டம் H/500–க்கு மிகையாக இருக்கக்கூடாது. இங்கு 'H' என்பது கட்டடத்தின் / அமைப்பின் மொத்த உயரத்தையும் குறிக்கும். இதனை சரிபார்க்கவில்லை.

(c) பல அடுக்குக் கட்டடங்கள் போன்ற இத்தகைய பெரியளவிலான திட்டங்களுக்கு வடிவமைப்பு அடிப்படையிலான அறிக்கை (DBR) இருக்கவேண்டியது அவசியமாகும். 4.1/NBC 2005 மற்றும் 4.2/NBC 2005 பகுதிகளின்படி, தேவையான குறியீட்டுக்கிணங்க, போதுமான பாதுகாப்பு அளவீட்டு விவரங்கள் இதில் அளிக்கப்பட்டிருக்க வேண்டும். இது அதற்கிணங்கவும் இருக்கவில்லை.

(d) 6 பக்கங்களில் உள்ள NBC 4.1 பகுதியின் சுருக்கம் வருமாறு:

பல்வேறு வடிவமைப்புகளை உட்பொருளாகக் கொண்டு இணைக்கப்படவேண்டிய, இத்திட்டத்தின் ஒரு ஒருங்கிணைப்பில் தொழில் வல்லுநர்களிடையே பல்வேறுவகை கூறுகளைக் கொண்ட இத்திட்டத்திற்கு ஒருங்கிணைந்த அணுகுமுறை இன்றியமையாததாகிறது. பொருத்தமான ஒருநிலையில் இவ்வளவு வல்லுநர்களையும் கொண்ட ஒரு குழுவானது பல்வேறு அமைப்புகளான பணிகளின்மீது போதிய கவனம் செலுத்தும் வகையில் உருவாக்கப்படவேண்டும். இந்தக் குழுவே திட்டவரைபடத்தை இறுதி செய்யவேண்டும். இக்குழுவின் கூட்டு முயற்சியானது இத்திட்டத்தின் தன்மையும், உருவளவையும் சார்ந்திருக்கவேண்டியுள்ளது. வடிவமைப்பானது புதுமையான முறையிலும், முழு ஈடுபாட்டுடனும் கூடிய செயல்பாடு கொண்டதாகவும் இருக்கவேண்டும். ஆனால், கட்டுமானத்தின் அனைத்து நிலைகளும் உரிமையாளரின் பங்களிப்பு முக்கியமான

பங்குவகிக்கிறது. வடிவமைப்புக்குழு இதனை உறுதிசெய்ய வேண்டியது மிகவும் அவசியம். வடிவமைப்பை முறையாக செயல்படுத்துவதை உறுதிசெய்ய, வடிவமைப்புக்குழு, கட்டுமானப்பணி நடக்கும்போதும் / கட்டுமானப்பணி நிறைவடையும் நிலையிலும், பிற பணியாளர்களுடன் இணைந்து செயல்படவேண்டும்.

(e) பின்வரும் வரையறைகளின்படி, NBC–ன் 4.2–ஆம் பகுதி பின்பற்றப்படவில்லை.

இத்தகைய பெரியளவிலான திட்டத்திற்காக, திட்டமேலாண்மை மற்றும் திட்டத்தின் கடுஞ்சிக்கல்கள் தொடர்பான கட்டுமான மேலாண்மைக்காகவும், தேவையான துறைகளிலிருந்து அனுபவமுள்ள தொழில் நுட்ப வல்லுநர்கள்கொண்ட தனியானதொரு குழுவை ஏற்படுத்தலாம்.

திட்டத்தின் அளவு மற்றும் சிக்கல்களைச் சார்ந்து, அவற்றிற்கேற்ப, திட்ட மேலாண்மை / கட்டுமான மேலாண்மைக் குழுவின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களை அந்தந்த துறைகளில் அவர்களின் தகுதி மற்றும் அனுபவத்தை கருதிப்பார்த்து அவர்களை கவனமுடன் தெரிவு செய்வது மிகவும் முக்கியமானதாகும்.

(f) வடிவமைப்பு, NBC பகுதி 6–ன், கட்டுமான வடிவமைப்பு பிரிவு 1–ன் சுமைகள், விசைகள், விளைவுகளுக்கிணங்க தயாரிக்கப்படவில்லை.

(g) IS 456 – 2000–ன் பகுதி 17, மூடிய மூலப்பொருட்கள், பதிவுருக்கள், தொழிலாளர்கள் மற்றும் கட்டுமானத்தை ஆய்வு செய்வதற்கான ஆய்வு நடைமுறையை வரையறுக்கிறது. இருக்கக்கூடிய பதிவுருக்கள், இத்தகைய வழிவகைகள் பின்பற்றப்பட்டுள்ளது என்பதை காட்டவில்லை.

(h) தற்போது, கட்டுமானப்பொருட்கள் ஆய்வுக்காக பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டு, அதன் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

5. திடீரென இடிந்துவிழுந்த கட்டடம் விதித்தொகுப்பு வரையறைகளுக்கு இணக்கமின்றி உள்ளது தொடர்பான ஆய்வுகள்:—

I. பயன்படுத்தப்பட்ட தின்காரையில் ஒட்டுமொத்த அளவான 20 mm உள்ளீட்டுக்கலவை போதுமானதல்ல என்று கருதப்படுகிறது. இது ஆய்வில் சரிபார்க்கப்பட்டிருக்க வேண்டும்.

II. பிளாஸ்டிக் வளையப்பகுதியில் உள்ள அடிக்கொளவி (வளையங்கள்) களுக்கிடையேயான இடைவெளி IS 13920 : 1993–ன் 6.3.3 பகுதியின்படி d/4 ஆக

இருக்கவேண்டும். உத்தரத்தின் இரு துருவங்களில், வளையங்களின் இடைவெளி 2d நீளத்திற்கு அதிகமாகவும், தின்காரையின் எல்லைக்கு உட்பட்டு d/4–க்கு மிகையாக இருக்கவேண்டும் என்றும் இப்பகுதி வரையறை செய்கிறது. இது சுமார் 100 mm என கணக்கிடப்பட்டது. களச்சரிபார்ப்பு மற்றும் வரைபட சரிபார்ப்புப்படி இடைவெளி 200 mm–க்கும் மிகையாக விடப்பட்டிருந்தது.

III. கட்டடத்தின் மீது அமைக்கப்பெறும் அலங்கார அமைப்புக்கான IS 13920: 1993-ன் 8.1–ஆம் பகுதி பின்பற்றப்படவில்லை. தூண்களின் இறுதிவரையில் செய்யப்படவேண்டிய மீண்டும் வலுவூட்டப்பட்ட அடைவுப்பகுதியை இணைப்பு வழியாக வகைசெய்ய வேண்டும்.



படம்–3

IV. IS 13920 : 1993-ன் 6.2.6–ஆம் பகுதியின்படி மேற்பகுதியில் பிளாஸ்ட்டிக் ஆதாரப் பகுதி அனுமதிக்கப்படக்கூடாது. இப்பகுதிகளிலும், இடிந்துவிழுந்த பாளங்களிலும் லேப்ஸ் அமைந்துள்ளது (படம்: 3 இணைக்கப்பட்டுள்ளது). இணைப்பு முகப்பிலிருந்து 2d அளவிலான தூரத்திற்குள் ஒன்றின்மீது ஒன்றுவைத்து பிணைக்கப்பட்ட லேப் (lap) அமைக்கப்படவில்லை. படம்: 3 இப்பகுதியை மீறியுள்ளதை சுட்டிக்காட்டுகிறது. இக்காரணங்களால் இழுத்துதள்ளப் பட்ட ரீபார்கள் (rebars) திடீரென இடிந்துவிழுவதற்கு வழிவகுத்தது.

V. மேற்பகுதி (விதானம்) அமைந்துள்ள இடத்தில், 150 mm C/C-க்கு அதிகமாக வளையங்களின் இடைவெளி அமைக்கப்படவில்லை. நீளப்பாங்கான பாளங்கள் ஒன்றின்மீது

ஒன்றுவைத்து இணைக்கப்படும்போது வளையங்களின் இடைவெளி 150 mm–க்கும் அதிகமாக இருக்கக்கூடாது. ஆனால் இவ்வாறு மீறப்பட்டிருப்பது நிழற்படம் 3–லிருந்து தெரியவருகிறது.

VI. IS 13920 : 1993-ன் பகுதி 7.2.1–ன்படி, அனைத்து மேற்பகுதியிலும் ஒரே அளவிலான குறுக்கமைவுகள் அனுமதிக்கப்படவில்லை. 7.2.1–ஆம் பகுதி 50 விழுக்காட்டிற்கும் மிகைப்படாத பாளங்கள் ஒரு பிரிவில் அடுக்கப்பட்டிருக்க வேண்டுமென வரையறை செய்கிறது.


VII. வலையமைப்பு வலுவூட்டல் IS13920 : 1993 பகுதி 6.3–ன்படி இல்லை (135 பாகைகள்).

VIII. நீளத்தை மேம்படுத்துவது IS 13920 : 1993 பகுதி 6.2.5.–ன்படி இல்லை.

(பக்கம்: 3–இல், IS 13920/1–ஆம் படத்தைக் காண்க).

6. 'A' கட்டடத்தொகுதியில் விதிமீறல்:


1. உத்தரத்தின் அகலப்பகுதி தொடர்ச்சியாக இல்லை (படம் 4 இணைக்கப்பட்டுள்ளது). இணைப்பு நெடுகிலும் ஒரு உத்தரத்திலிருந்து மறு உத்தரத்திற்கு மறுவலுவூட்டப்பட்ட தின்காரை பயன்படுத்தப்படவில்லை.



படம்–4

2. கட்டடத்தொகுதி–A–ன் தற்போதுள்ள தூண்களில் காணப்பட்ட விரிசல்கள், அவை விழத்தொடங்குவதை சுட்டிக்காட்டுகிறது.

3. தூண்களின் உதவியின்றி உள்ள இரண்டாம் நிலை உத்தரங்கள் சுமார் முதன்மை உத்தரத்தைப் போன்ற அதே பருமனிலேயே உள்ளது (படம் 5 இணைக்கப்பட்டுள்ளது). எனவே இரண்டாம் நிலை உத்தரமானது முதன்மைத் தூணுக்கு சுமையை திறம்பட மாற்ற இயலாது.



படம்: 5


4. ஒரு இடத்தில் இடைப்பகுதி வீச்செல்லையில் உத்தரத்தின் பருமன் குறைக்கப்பட்டுள்ளது.

5. இணைப்பு உத்தரங்கள் துளைகளுடன் உருவாக்கப்பட்டு, அவை வலிவற்றதாக உள்ளன (படம் : 6 இணைக்கப்பட்டுள்ளது).



படம்: 6

6. தூண் ஏடாகூடமான தாங்கு நிலைகளை / தாங்குதானங்களைக் கொண்டுள்ளது (படம் 7 இணைக்கப்பட்டுள்ளது). அடிப்பகுதியைத் தாங்கும் அமைப்புக்கு ஒரு பக்கத்தில் படம்: 7–இல் காட்டப்பட்டுள்ளவாறு தூண் தொங்கிக்கொண்டிருக்கும் நிலையில் உள்ளது.



படம்: 7

7. தாங்கு தூண் இல்லாத இரண்டாம்நிலை உத்தரம் சுமார் 30' – 0" வீச்செல்லைக்கான குறுக்குவாக்கிலமைந்த உத்திரத்தை தாங்கிக்கொண்டிருக்கிறது (படம்: 5).

8. ஏனைய தொழில்நுட்ப பிரச்சினைகள்:

நிலநடுக்க மண்டலம் III-க்கான IS 1893 – 2002–ன் வரையறையின்படி, 'A' மற்றும் 'B' கட்டடத்தொகுதிகள் ஒழுங்கற்றவையாக உள்ளன. எனவே, உரியவாரான புதிய உத்திகளை பயன்படுத்தி நன்கு ஆய்வு செய்து அவர்கள் வடிவமைக்கவேண்டுமென பரிந்துரைக்கப்பட்டது.

2. பலஅடுக்குமாடிக் கட்டடங்கள் அண்மையில் கட்டும்பொழுது காற்றுச்சூழலில் மாற்றம் ஏற்படும். எனவே, IS 875–ன்படி காற்றுத்திறனை கணக்கில் எடுத்துக்கொண்டு கட்டடங்களின் வடிவமைப்பு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

9. 'A' கட்டடத்தொகுதியின் நிலை:

'A' கட்டடத்தொகுதியின் தூண்கள் மீதிருந்த தற்போதுள்ளவாறான நிலையில் சுமைகள் (நிலைச்சுமை மட்டும்) அண்ணா பல்கலைக்கழகத்தால் கணினி செயல்பாடுகள் வாயிலாக கணக்கிடப்பட்டது. கட்டுமான அமைப்பு வரைபடத்தில் அளிக்கப்பட்ட தூண் அமைப்புத் திட்டத்தின்படி, உயரளவு சுமையேற்றப்பட்ட தூண்களாக M5 மற்றும் M9 அடையாளம் கண்டறியப்பட்டுள்ளது. இந்த தூண் மீதான மதிப்பீடு செய்யப்பட்ட சுமை சுமார் 350 டன்கள் ஆகும் (நிலைச் சுமையின் கீழ் மட்டும்). இந்த தூணின் தாங்குதிறன் 210 டன் மட்டுமே ஆகும். நிலைச்சுமை நிலையிலேயே தூண் அதன் இறுதியான திறனுக்கும் மிகையான திறனைக் கொண்டிருந்ததை இதன் மூலம் தெளிவாக அறிந்துகொள்ள இயலும். இயங்கு சுமையும், நிலநடுக்க சுமையும் செயல்படும்போது சுமைகள் 460 டன்கள் வரை அதிகரிக்கும். மேலும், சுமைக்காரணி 1.50 ஆக இருக்கும் நேர்வில், தூண் 690 டன் வரை சுமக்க இயலும் என நம்பப்படுகிறது. தூணின் தாங்குதிறன் 210 டன் வரை மட்டுமே இருப்பதால் கட்டட அமைப்பின் அழிவுக்கு வழிவகுத்து இந்த தூண்கள் இடிந்துவிழக்கூடும். இந்த தூண் மட்டுமின்றி ஏனைய 6 தூண்களும், இறுதிச் சுமைக்கும் அதிகமான இயக்கு சுமைகளை இத்தூண்கள் கொண்டுள்ளன என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே 'A' கட்டடத்தொகுதியின் தூண்கள் எந்த நேரத்திலும் இடிந்து விழக்கூடும்.

இந்த கட்டடத்தொகுதியும், 'B' கட்டடத் தொகுதிக்கு பின்பற்றப்பட்டுள்ள அதே கடைக்கால் அமைப்புமுறையைக் கொண்டுள்ளது. ராஃப்ட் (raft)–ன் பருமன் போதுமானதாக இல்லை. கட்டப்பட்டுள்ள நிலத்தூண்களும் பயனற்றதாகவே உள்ளன. முழுஅளவிலான

சுமையின்கீழ், கட்டுமான அமைப்புமுறை இடிந்துவிழுவதற்கு வழிவகுத்து, ராஃப்ட் (raft)–ல் பெரியளவில் விரிசல்கள் ஏற்படும்.

கட்டடம் முழுமையாக பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. கட்டடத்தின் நிலை 'B' கட்டடத்தொகுதி போன்று திடீரென இடிந்து விழும் நிலையில் உள்ளது. நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம், இடித்துத்தள்ளும் நடவடிக்கையை மேற்கொள்ளும்போது அதிர்வு ஏதும் ஏற்படாமல் 'A' கட்டடத்தொகுதியை இடித்து தரைமட்டம் ஆக்கவேண்டுமென பரிந்துரைக்கப்படுகிறது. கட்டடத்தை மாற்றியமைக்கும் நேர்வில் ஏதேனும் தாக்குதல் ஏற்பட்டால் அல்லது சிறிய இடையூறு ஏற்பட்டால் கட்டடம் இடிந்துவிழுக்கூடும் என்பதால் இதனை மாற்றியமைப்பது என்பது உகந்ததல்ல.

* * * * *

தமிழ்நாடு சட்டப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



T-15



T-15a

இடிபாடுகளில் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்தும், அடுக்குமாடிக் கட்டட உரிமையாளர் சங்கம் / அருகில் வசிப்போர் / காயமடைந்தோர் / கட்டட வரைபடம் தயாரிப்போர் சங்கத்திடமிருந்தும் பெறப்பட்ட முறையீடுகள் / மனுக்கள்.

(a) அடுக்குமாடிக்குடியிருப்பு உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவராக உள்ள திருமதி. ரத்னா மிஸ்ரா என்பவர் 13.08.2014 அன்று தாக்கல்செய்துள்ள அவருடைய உறுதிமொழிப்பத்திரத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:—

கட்டுமானதாரருக்கு, 53 நபர்கள் தாங்கள் ஈட்டிய வருமானத்தின் மூலம் வழங்கிய தொகை குறித்த, தொகுக்கப்பட்ட விவரங்கள் கீழே அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு நபரும் அளித்த தொகை பற்றிய தனித்தனி விவரங்கள் இணைப்பு–B–இல் அளிக்கப்பட்டுள்ளது.

Trust Heights	The Faith (collapsed)	The Belief (Standing)	**மொத்தம்**
வாங்குவோர் எண்ணிக்கை	18	35	53
வழங்கப்பட்ட கடன்	41,793,203	30,162,608	71,955,811
கையிலிருந்து வழங்கப்பட்ட தொகை	103,181,571	62,148,781	165,330,352
கட்டுமானதாரருக்கு வழங்கப்பட்ட மொத்த தொகை	144,974,774	92,311,389	237,286,163

கட்டுமான மேம்பாட்டாளர்களையும், அவர்களுடைய கூட்டாளிகளையும் கைதுசெய்து நீதித்துறை காவலில் வைத்துள்ளதால் அவர்களை சந்திப்பதற்காக நாங்கள் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் பயனற்றதாகப் போயின.

மோசமான விளைவின் காரணமாக இடிந்துவிழுந்த கட்டடம், சொந்தமாக ஒரு வீடு என்ற எங்களுடைய கனவை அழித்ததோடு மட்டுமின்றி, கடினமாக உழைத்து ஈட்டிய எங்களது பணத்தையும் இழந்து மீளமுடியாத நிதிச் சிக்கலிலும் நாங்கள் சிக்கித் தவிக்கின்றோம். மேலும், கட்டட மேம்பாட்டாளர்களுக்கு வழங்கிய பணத்தை எவ்வாறு மீளப்பெறுவது என்ற வழிவகையும் எங்களுக்குத் தெரியவில்லை.

ஓரளவு கிடைக்கக்கூடிய ஆதாரங்களைக்கொண்டு (நிறுவனங்களின் பதிவாளருடைய வலைதளம், வங்கி மற்றும் ஈட்டுறுதி நிறுவன அதிகாரிகளுடன் விவாதித்ததன் பேரில்) நிறுவனத்தின் மொத்த மதிப்பு / கட்டுமானதாரர்கள் உண்மையாக அடுக்குமாடிக் குடியிருப்பு வாங்கிய 72 பேருக்கும் இழப்பீடு வழங்க இயலாது என்பதை எங்களால் உணர்ந்துகொள்ள முடிகிறது. இதுதான் இந்த மிக அழுத்தமான நிலைதான் எங்களை பெரும் சோகத்திலும், துயரத்திலும் ஆழ்த்தியுள்ளது. ஏனெனில் யாதொருவர் தான் செலுத்தவேண்டிய தொகைகளுக்கு தன்னிடம் ஒருகாசும் இல்லை என்று சட்டப்பூர்வமாக உறுதியளித்துவிட்டால், அவ்வித நொடிப்புநிலை அறிவிப்பு செய்தவர்மீது இந்திய சட்டப்படி ஒரு சில வாரங்கள் வேண்டுமானால் சிறையில் வைத்திருக்கலாமே ஒழிய வேறொன்றும் செய்ய இயலாது.

இந்த கட்டுமானத் திட்டத்தில், கட்டுமான பணிக்காலத்தின்போது கட்டட மேம்பாட்டாளர்/கட்டுநர் கட்டடத்திற்கான எவ்வித ஈட்டுறுதிக்கும் வழிவகை செய்யாது போயிருந்துள்ளனர் என்றும் மேற்சொன்னவற்றின் அடிப்படையிலும், ஆதரவற்ற இக்கட்டான இச்சூழலிலும், எங்களுக்கு நீதி வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுப்பதுதான் எங்களுக்குள்ள ஒரே நம்பிக்கை ஒளியாக விளங்கும் என்றும்

எங்கள் கடின உழைப்பில் நாங்கள் ஈட்டிய பொருட்செல்வத்தை இழந்து தவிக்கும் துயர்மிகுந்த இத்தருணத்தில் எங்களுக்கு மீட்டுத்தருவதற்கான பொருத்தமான வழிகாட்டுதல் நெறிகளை வழங்கியருளுமாறு மாண்பமை ஆணையத்தைக் கேட்டுக்கொள்ளுகிறோம் என்றும் தெரிவித்துக் கொள்வதுடன் இந்தச் சூழ்நிலைகளில் நாங்கள் அனைவரும் பணிவுடனும் ஒட்டுமொத்தமாகவும் மாண்பமை ஆணையத்திற்கு கீழ்க்கண்டவாறு கோரிக்கைகள் வைக்கிறோம்:—

i) முழு இழப்பீடு வழங்கிட

ii) எங்கள் வங்கிக்கடன்களை தள்ளுபடி செய்திட மைய அரசுக்குப் பரிந்துரை செய்திட

iii) பாதிப்புக்குள்ளான ஒவ்வொரு வாங்குநருக்கும், அருகாமைப் பகுதியிலேயே மாற்று மனைகட்டு ஒன்று ஒதுக்கித்தந்து இலவச வீடு கட்டித்தர அல்லது வீட்டுவசதி வாரியம் மூலமாக அடுக்ககம் ஒன்று ஒதுக்கித்தர

(iv) இத்தகையதொரு சோக நிகழ்ச்சிக்குப் பொறுப்பான கட்டுநர்கள், இதரர்கள் அல்லது முகவரமைப்புக்கள் மீது நடவடிக்கை எடுப்பதுடன் அவர்களது வங்கிக்கணக்குகளையும் சொத்துக்களையும் முடக்கிட நாங்கள் அனைவரும் வேண்டுகிறோம்!

1975 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களுக்கான விதியின்படி பதிவுசெய்யப்பெற்ற தொழில்முறை சார்ந்த நகரமைப்பாளர்கள் சங்கத்தின் தலைவர் என்ற முறையில் திரு. K.M.சதாநந் என்னும் ஒருவர், மாண்பமை விசாரணை ஆணையம் முன்பாக உறுதி மொழி ஆவணம் (ஆணை உறுதி ஆவணம்) ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

(1) **இந்திய தேசிய கட்டட விதிக்கோவை, 2005**, இந்திய நகர அமைப்பாளர்கள் நிறுவனம், தேசியப் பேரிடர் மேலாண்மைப் பிரிவு (NDMA) மற்றும் 1972–ஆம் ஆண்டைய கட்டடக்கலை வல்லுநர்க்கான விதிமுறைகள் இவற்றிற்கு இணங்க, திட்ட அனுமதி, கட்டட அனுமதி, மனைத்திட்ட அமைப்பு ஏற்பளித்தல் – இவ்வகை சார்ந்த துறைகளில் அனுபவம் மிக்க கட்டட வல்லுநர்கள், பொறியாளர்கள், கட்டுமான அமைப்புப் பொறியாளர்கள், கட்டுமானப் பொறியாளர்கள், தரத் தணிக்கையாளர்கள், புவிசார் தொழில் நுட்பப் பொறியாளர்கள் நகரத்திட்ட அமைப்பு மற்றும் வளர்ச்சி அலுவலர்கள் – இவர்களைக் கொண்ட தகுதியான குழு ஒன்றைப் பணியில் அமர்த்தப் பொருத்தமான நடைமுறை ஒன்றைஉருவாக்கி, அதை அப்படியே பின்பற்றவேண்டும்.

(2) a) **தேசிய கட்டுமான விதிகள் (NBC 2005)**

b) இந்திய நகர அமைப்பாளர்கள்

c) தேசியப் பேரிடர் மேலாண்மைப்பிரிவு (NDMA) மற்றும்

d) கட்டடக்கலை வல்லுநர்களுக்கான விதிமுறைகள் 1972 இவர்களுக்கு / இவற்றுக்கு ஏற்ப (MAWS).

கடித எண்.29262 / MA–1 / 2012–1–ல் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு பொது கட்டுமான விதிகளை எங்கள் சங்கக் கடிதம் எண். Ref/TP/MAWS/D5, நாள் 18.07.2014–ன்படி ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் ஏற்பளிக்கப்பட மாநில அரசுக்குப் பரிந்துரைப்பது.

3) "குஜராத் தொழில்முறை சார்ந்த கட்டடப் பொறியாளர்கள் சட்டம், 2006"–க்கு ஏற்ப, கட்டடப் பொறியாளர்கள், நகர அமைப்பாளர்கள் மற்றும் இதர தொழில்துறை சார்ந்தவர்களுக்குச் சட்டம் ஒன்றை உருவாக்க (இயற்ற) பரிந்துரைக்கப்படுகிறது.

(b) விபத்து நடந்த இடத்தில் 'B' கட்டடத்தொகுதி இடிந்தபோது, அந்த இடிபாடுகளும், அந்த கட்டமைப்பும், அங்கு வசிப்பவர்கள்மேல் விழுந்து, சிலர் காயம் அடையவும், வசிப்புப்பகுதி கடுமையாக சேதமுறவும் நேர்ந்தது.

இவ்வாணையத்தின் முன்பாக, சிலர் தனித்தனியே உறுதிமொழி ஆவணங்களைத் தாக்கல் செய்துள்ளனர். அவற்றில் அவர்கள் அந்தத்துயர நாளன்று விபத்து எப்படி நிகழ்ந்திருந்தது என்பது பற்றியும் கட்டடம் இடிந்துவிழுந்ததில் மனிதர்களுக்கும் சொத்துக்களுக்கும் எவ்விதம் சேதம் விளைந்தது என்பது பற்றியும், அவர்கள் விளக்கியிருந்தனர். கட்டடம் இடிந்து விழுந்ததால், அவர்கள் அங்கு தங்கியிருக்க முடியாமல் போய், அதைக் காலிசெய்துவிட்டு வெளியேறினர்.

கட்டடத்தின் இடிந்த கட்டமைப்பு இன்னும் அங்கு அப்படியே இருந்துவருகிறது. இவ்வாறான நிலையில் வீடிழந்தோர், திரும்பவும் வீடு கட்டிக்கொள்ள உதவியையும் நிதி உதவியையும் நாடி நிற்கின்றனர்.

திரு. K.அப்துல்காதர் என்றொருவர், தன்மனுவில், மௌலிவாக்கம், இராஜராஜன் முதல் தெரு, 4/10 கதவெண் கொண்ட வீட்டுக்குச் சொந்தக்காரர் தாம் என்றும், விபத்துக்குள்ளான கட்டடம் தம் வீட்டின் மேற்கட்டமைப்பின்மீது இடிந்து விழுந்ததால், மௌலிவாக்கத்திலுள்ள தம்முடைய அந்த வீடு வசிக்கமுடியாத அளவிற்குச் சேதமுற்றுவிட்டதாக முறையிட்டுள்ளார்.

தாம் வசித்துவந்துள்ள அந்த வீடு வங்கிக்கடன் பெற்று தம் நகைகளை விற்றும் பெறப்பட்ட நிதிகொண்டும் கட்டப்பட்டதாகவும், அது இப்போது முற்றிலும் சேதமுற்றதால், புதிதாக வீடு கட்டிக்கொள்ளவும், சேதமுற்றுள்ள தம் வீட்டுக்கு இழப்பீடாகவும் தமக்கு ரூ.25 லட்சம் தேவைப்படுகிறது எனவும் அவர் தம் முறையீட்டில் தெரிவித்துள்ளார்.

திரு. S.M.டேனியல் என்ற மற்றொருவர், தாம் மௌலிவாக்கத்தில் பிளாட் எண்.48–B கதவு எண்.4/11, இராஜராஜன் நகர் முதல் தெரு என்ற முகவரியில் தாம் வசித்து வருவதாகவும், திடீரென்று, கட்டடத்தின் 'B' தொகுதி அவரது வீட்டின்மேல் விழுந்து நொறுங்கியதில் (இடிந்து விழுந்ததில்) தமது விடு முற்றிலும் சேதமடைந்ததாகவும் கூறியுள்ளார். மேலும், அவர்தாம் வங்கியில் கடனுதவி பெற்று அந்த வீட்டை வாங்கியதாகவும் அந்த வீடு தற்போது முற்றிலும் சேதமாகிவிட்டதால், அவர்தம் குடும்பம் வீடின்றித் தவிப்பதாகவும் தனது முறையீட்டில் தெரிவித்துள்ளார்.

மௌலிவாக்கத்தில் பிளாட் எண்.50, (4/12) இராஜராஜன் நகர் முதல் தெருவில் வசித்துவரும் ஒருவரான திரு.T.நடனசபாபதி என்பார், கட்டடம் இடிந்து விழுந்ததில் அவர் வீடும் எவ்வாறு சேதமுற்றது என்பதை விளக்கமாகக் குறிப்பிட்டு தனக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்களுக்கும் இன்னல்களுக்கும் ஈடாக ரூ.6 இலட்சம் தமக்குக்கிடைக்க வழிசெய்யுமாறு முறையிட்டுள்ளார்.

திரு. M.முகம்மது ஷாஜஹான் என்று இன்னொருவர். இவர் மௌலிவாக்கத்தில் பிளாட் எண்.4/10 இராஜாஜான் நகர் முதல் தெருவில் வாடகைக்குக் குடியிருந்து வருபவராவர். தம் வீடும், அந்தக் கட்டடம் இடிந்து விழுந்ததில் முழுமையாக சேதமுற்றதாகவும், தமது கஷ்டங்களுக்கு ரூ.2.5 லட்சம் இழப்பீடு கோரியும் முறையீடு செய்துள்ளார்.

சென்னை, மௌலிவாக்கத்தில் 3/39 குன்றத்தூர் சாலையில் ஒரு தச்சுப்பட்டறை வைத்திருக்கும் திரு. தட்சிணாமூர்த்தி என்பார், சம்பவத்தன்று, திடீரென இடிந்துவிழுந்த அக்கட்டடம் மேற்கண்ட அந்த முகவரியுள்ள தச்சுக்கூடத்தின்மேல் விழுந்ததாகவும், இடிபாடுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டோர் தமது பட்டறை வழியாகச் செயல்பட்டதால் விற்பனைக்காக அங்கு குவித்துவைக்கப்பட்டிருந்த தமது மரச்சாமான்கள் முழுவதும் சேதமாகிவிட்டதாகவும், வியாபாரம் திடீரென நின்றுபோனதால், அவர் தாம் வாங்கியிருந்த கடனுக்கு அசலும் வட்டியுமாக ரூ.2.5 இலட்சம் செலுத்த வேண்டியிருப்பதாகவும், எனவே ஏற்பட்ட இழப்பை ஈடுகட்ட அரசாங்கத்திடம் தாம் நிதியுதவி கோருவதாகவும் தெரிவித்துள்ளார். மௌலிவாக்கம், இராஜராஜான் முதல் தெரு 50–ஆம் எண் முகவரியில் வசித்து வரும் திரு. அ.குமார் என்பவர், கட்டடம் திடீரென இடிந்து விழுந்ததில், தமது வீடு முற்றிலும் சேதமுற்றதாகவும், தமது வீட்டில் வாடகைக்கு குடியிருந்து வந்திருந்தவர்களுள் ஒருவரான திரு. கணேசன் என்பவர் விபத்தில் இறந்துவிட்டதாகவும் தனது முறையீட்டில் தெரிவித்துள்ளார்.

மகளிர் அமைப்பு / பெண்கள் சங்கம் / மாதர் சங்கம் ஒரு முறையீட்டு மனுவை அளித்துள்ளது. அதில் தற்போதிருக்கும் அக்கட்டடத் தொகுதியான 'A' பிளாக்கையும் (தொகுதியையும்) உடனே அகற்றவேண்டுமெனவும், ஏனெனில் அதுவும் எந்த நேரத்திலும் இடிந்து விழக்கூடிய அபாயம் இருப்பதாகவும், அப்படிவிழுந்தால், அருகாமையிலிருக்கும் பள்ளியில் பயின்றுவரும் மாணவர்களின் உயிருக்கு ஊறுவிளைவிக்கக் கூடுமெனவும் அது தெரிவித்துள்ளது.

மற்றொரு முறையீடு, மௌலிவாக்கத்திலும், அதைச்சுற்றிலும் உள்ள மக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. அவர்களும், அந்தக் கட்டட 'A' தொகுதியும் விழுந்துவிடக்கூடிய வாய்ப்பு உள்ளதாகவும், அதனால் விளையக்கூடிய அவர்களது வாழ்வு ஆதாரபாதிப்புக்களையும், அவர்களது குழந்தைகளது எதிர்காலத்தையும் கருத்திற்கொண்டும் விரைவில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

சென்னை–23, அயனாவரம் (அயன்புரம்), பட்டாச்சாரித் தெரு, எண்.23 இல்லத்தில் வசித்துவரும் திரு. S.முருகன் என்பவர் மௌலிவாக்கத்தில், விபத்து நடந்த இடத்தில் தாம் ஒரு கொட்டகை அமைத்து வசித்து வந்ததாகவும், அந்தக் கொட்டகையில் கட்டடங் கட்டுதற்குத் தேவையான கட்டுமானப் பொருள்களை வைத்திருந்ததாகவும் அங்கிருந்தபடியே கட்டட வேலைகளைச் செய்துவந்ததாகவும், விபத்தில் அந்தக் கொட்டகை பாதிப்புக்குள்ளாகி, அங்கிருந்த பொருட்கள் அனைத்தும் முழுமையாக சேதமடைந்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த திரு. R.சந்திரசேகரன் என்பவர், கட்டடம் இடிந்ததற்கான காரணங்களைக் கண்டறிந்து, அங்கிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்கள் அடிப்படையில் விரிவான ஆய்வுகளையும் நடத்தி, விபத்தில் உயிரிழந்தவர்களால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உரிய இழப்பீடு வழங்குவதற்கான நிவாரண நடவடிக்கைகளை தக்க முறையில் மேற்கொள்ளவேண்டுமென முறையிட்டுள்ளார்.

இயற்கைச் சீற்றம், பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களின் நிலை, ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, இத்தகைய துயர சம்பவம் மீண்டும் நிகழ்வதைத் தவிர்ப்பதற்காக, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுக்கவேண்டிய குறைதீர் நடவடிக்கைகள் குறித்து இந்த ஆணையம் அதனுடைய அறிக்கையில் குறிப்பிட்டு அளிக்கவேண்டும் என்று மதுரையில் வசிக்கிற திரு.எஸ்.சந்திரசேகரன் அவருடைய மனுவில் இறைஞ்சி கேட்டுக்கொண்டுள்ளார்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தவறான எண்ணம் கொண்டு எளிதில் பொதுமக்கள் குற்றஞ்சாட்டுவதற்கு இலக்காக அமைந்துள்ள கட்டுநர்கள், கட்டடக்கலை வல்லுநர்கள் மற்றும் பொறியாளர்கள் இவர்களுக்கு, 1952–ஆம் ஆண்டின் விசாரணை ஆணையச் சட்டம் பிரிவு 8–B–யின்கீழ் (தங்கள் தரப்பு விளக்கங்களை எடுத்துரைக்க) வழங்கப்படவேண்டிய வாய்ப்பு:-

பல்வேறு வழிகளிலும் பெறப்பட்ட வாய்மொழி மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் இயற்கை நீதிக்கோட்பாடுகளுக்கு ஏற்ற வகையில் தவறான எண்ணத்தின்பேரில் குற்றச்சாட்டுக்கு இலக்காக அமைந்துள்ள கட்டுநர்கள், கட்டடக்கலை வல்லுநர்கள் மற்றும் பொறியாளர்களுக்குத் தங்கள் தரப்பிலான விளக்கங்களைக் கூற வாய்ப்பளித்திட அவர்களை நேரில் வரவழைக்க உத்தரவிட்டது. ஆணையத்தின்முன் விசாரணைக்கு வருகைதர, அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

அதன்படி, சென்னை புழல் மத்தியச் சிறையிலிருந்து கீழ்க்கண்ட நபர்கள் விசாரணை ஆணையத்தின்முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டுள்ளனர். அவர்களைப் பற்றிய குறிப்புக்கள் வருமாறு:-

1) திரு. M.மனோகர், நிருவாக இயக்குநர், பிரைம் சிருஷ்டி ஹவுஸிங் பிரைவேட் லிமிடெட்.
2) திருமதி / செல்வி மு.முத்துகாமாட்சி, இயக்குநர், பிரைம் சிருஷ்டி ஹவுஸிங் பிரைவேட் லிமிடெட்.
3) திரு. M.பாலகுருசாமி, இயக்குநர், பிரைம் சிருஷ்டி ஹவுஸிங் பிரைவேட் லிமிடெட்.
4) திரு. S.வெங்கடசுப்ரமணியம், கட்டமைப்புப் பொறியாளர்.
5) திரு. விஜய் பர்கோட்ரா, கட்டடக்கலை வல்லுநர்.
6) திரு. R.துரைசிங்கம், பணியிடப் பொறியாளர்.
7) திரு. K.கார்த்திக், பணியிடப் பொறியாளர்.
8) திரு. S.சங்கர் இராமகிருஷ்ணன், பணியிடப் பொறியாளர்.

மேற்குறித்த வரிசை எண்கள் 1–லிருந்து 6 வரையிலுள்ள பெயர்களைக் கொண்டோர், விசாரணை ஆணையத்தின் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்ட நிலையில், அவர்கள் அனைவருக்கும் கேள்வித்தாள்கள் வழங்கப்பட்டு பதில்கள் அளிக்கப் பணிக்கப்பட்டனர்.

காஞ்சிபுரம் மாவட்டம், திருபெரும்புதூர் வட்டம், மௌலிவாக்கம் கிராமத்தில் நில அளவை சர்வே எண்கள் 17/7A, 17/7B, 17/7C, 17/8B மற்றும் 4B–ல் அடிக்கட்டுமானம், இடைத்தளம் மற்றும் அதற்குமேல் எழுப்பப்படவுள்ள 11 தளங்களைக் கொண்ட இரட்டைக் கட்டடத்தொகுதிகளுக்கு கட்டுநர் பிரைம் சிருஷ்டி ஹவுஸிங் பிரைவேட் லிமிடெட்

நிறுவனத்தால் கட்டடம் கட்ட அனுமதி கோரி சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடம் விண்ணப்பித்திருந்த விண்ணப்ப படிவத்தையும், அதுதொடர்பான பிற ஆவணங்களையும் நுண்ணாய்வு செய்துள்ளனர். அவர்களுக்கு சிறப்பு புலனாய்வுக்குழு அறிக்கை, தொழில்நுட்ப வல்லுநர் குழு அறிக்கை இவற்றோடு அனைத்து ஆணை உறுதி ஆவணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

18.8.2014 அன்று மாலை, அவர்கள் அனைவரும் தங்களுக்கு வழங்கப்பட்ட வினாக்களுக்கு பதில்கள் அளித்திட ஆவணங்களை நுண்ணாய்வு செய்ய மேலும் கால அவகாசம் தேவையெனக் குறிப்பிட்டு அதை வழங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அதன்படி அவர்கள் யாவரும் விசாரணை ஆணையத்தின்முன், அதற்கு அடுத்த நாளான 19.8.2014 அன்று கொண்டுவரப் பணிக்கப்பட்டனர். அவர்கள் மீண்டும் அழைத்து வரப்பட்டபோது, அவர்கள் கோரியிருந்த ஆவணங்கள் வழங்கப்பட்டன. எனினும், அவர்கள் ஆவணங்களைப் படித்துப் பார்த்துவிட்டு உடனடியாகத் தங்களால் பதிலளிக்க இயல வில்லையென்றும், 20.8.2014 வரை மேலும் கால அவகாசம் தங்களுக்குப் பதிலளிக்கத் தேவைப்படுவதாகவும் அதை வழங்குமாறும் வேண்டுகோள் வைத்தனர். அவர்களின் வேண்டுகோள் ஏற்கப்பட்ட நிலையில், இரு பணியிடப் பொறியாளர்களான திரு எம்.கார்த்திக் மற்றும் திரு எஸ்.சங்கர் இராமகிருஷ்ணன் ஆகியோருடன் சேர்த்து 20.8.2014 அன்று காலை 10.30 மணிக்கு திரும்ப அழைத்து வரப்பட்டனர். அவர்கள் ஆவணங்களை படித்தாய்ந்து பதில்களை மாலை 5 மணிக்கு சமர்ப்பித்துவிட்டனர். கேள்வித்தாள்களின் படிகளும், விடைகளும் தனித்தனியே அவர்களால் வழங்கப்பட்டுள்ளன.

18.8.2014, 19.8.2014 மற்றும் 20.8.2014க்குரிய மூலமனு எண்/"ஒ.பி." எண்கள் முறையே 17, 18 மற்றும் 19ன்படி, ஒவ்வொரு நாளும் நடவடிக்கைகள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

நடவடிக்கைக் குறிப்புக்கள், வினாக்கள் மற்றும் விடைகள் இத்துடன் உள்ள இணைப்பில் தரப்பட்டுள்ளன.

மாண்பமை நீதியரசர் திரு ஆர்.ரெகுபதி அவர்களின் விசாரணை ஆணையம்

NCB.1. பி.எஸ். குமாரசாமி ராஜா சாலை, சென்னை-600 028.

அலுவலக நடவடிக்கைகள் எண்.17/நிருவாகம்/2014, நாள் 18.8.2014

பொருள்: காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்திலுள்ள. மௌலிவாக்கத்தில் உள்ள பலமாடிக் கட்டடம் இடிந்து விழுந்ததற்கான சூழ்நிலைகள், காரணங்கள் மற்றும் கூறுகள் பற்றி விசாரணை மேற்கொள்ள 28.6.2014ல் அமைக்கப்பட்ட நீதியரசர் திரு.ஆர்.ரெகுபதி விசாரணை ஆணையம்.

பார்வை: அரசு ஆணை எம்.எஸ். எண்.557, பொது (சட்டம் மற்றும் ஒழுங்கு-எப்) துறை, நாள் 3.7.2014.

விசாரணைகள் ஆணையச் சட்டம் 1952 பிரிவு 8-Bன்படி விடுக்கப்பட்ட அழைப்பின்கள் பேரில், வேலூர் மத்தியச் சிறையில் நீதித்துறைக் காவலில் இருந்து வரும்

1) எம்.மனோகர்
2) எம். முத்து காமாட்சி
3) விஜய் பர்கோட்ரா
4) எஸ்.வெங்கட சுப்பிரமணியன்
5) எஸ்.சங்கர் ராமகிருஷ்ணன்
6) ஆர். துரை சிங்கம்

ஆகிய ஆறு பேரும் 18.8.2014 ஆன இன்று விசாரணை ஆணையத்தின்முன் வருகை தந்தனர்.

2. விசாரணையின்போது சேகரிக்கப்பட்ட தகவல்கள் அடிப்படையில் (விசாரணை) ஆணையம் பட்டியலிட்டுத் தயாரித்த வினாத்தாட்கள் மேற்குறிப்பிடப்பட்ட அறுவருக்கும் விடையளிப்பதற்காக, தனித்தனியே வழங்கப்பட்டது. அந்த அறுவரும் விடைகள் அளிப்பதற்காக தங்களுக்கு வழங்கப்பட்ட வினாத்தாள்களை மிகக் கவனமுடன் உற்றாய்வு செய்துள்ளனர்.

3. அந்த அறுவரும் வினாத்தாட்களுக்குத் தாங்கள் விடைகள் தயாரிப்பதற்கு ஏதுவாக அவர்களுக்கு கீழ்க்கண்ட ஆவணங்கள்/தகவல் குறிப்புக்கள் கிடைக்குமென்றும், விசாரணை ஆணையம் அவர்களுக்குத் தெரியப் படுத்தியுள்ளது.

அவையாவன:-

a) விபத்து பற்றிய உண்மைகளையும், விபத்துக்கான சூழ்நிலைகளையும் பற்றி அறிந்தவர்கள் விசாரணை ஆணையம் முன்பாக அளித்த ஆணை உறுதி ஆவணங்கள்

b) விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத் (CMDA) திடமிருந்தும், S.I.T. இடமிருந்தும் பெறப்பட்ட ஆவணங்கள் மற்றும்

c) விசாரணை ஆணையத்தால் நியமிக்கப்பட்ட தொழில் நுட்ப வல்லுநர்கள் அளித்துள்ள அறிக்கை.

4. அந்த அறுவருக்கும், வழங்கப்பட்ட வினாத்தாட்களுக்கு விடைகள் தயாரிப்பதற்கு மேற்குறித்த ஆவணங்களையும் / அறிக்கைக் குறிப்புகளையும் பயன்படுத்திக் கொள்ள அனுமதியை விசாரணை ஆணையம் வழங்கியது.

அதன்படியே, அந்த அறுவரும் தாங்கள் பெற்றுக்கொண்ட ஆவணங்களை 18.8.2014ஆன இன்று மாலை 5 மணிவரை மிகக்கவனமாக ஆய்வு செய்துள்ளனர். பின்னர் அவர்கள், ஆவணங்களைத் தாங்கள் இன்னும் நுணுக்கமாக ஆய்வு செய்ய வேண்டியுள்ளதால், தங்களுக்கு மேலும் கால அவகாசம் தர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். அவர்கள் கோரிக்கையை ஏற்று, ஆணையம் அவர்களைத் திரும்ப, அடுத்த நாள், அதாவது 19.8.2014 அன்று காலை 10.30 மணிக்கு அழைத்துவர உத்தரவு பிறப்பித்தது.

அந்த அறுவரும் வேலூர் மத்தியச் சிறைக்குத் திரும்ப அழைத்துச் செல்லப்பட காவலர்களிடம் ஒப்படைக்கப் பட்டார்கள்.

ஜி.ஜேம்ஸ்

18.8.2014

ஆணையச் செயலாளர்.

மாண்பமை நீதியரசர் திரு ஆர்.ரெகுபதி அவர்களின் விசாரணை ஆணையம்

NCB.1. பி,எஸ். குமாரசாமி ராஜா சாலை, சென்னை-600 028.

அலுவலக நடவடிக்கைகள் எண்.18/நிருவாகம்/2014, நாள் 19.8.2014

பொருள்: காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்திலுள்ள. மௌலிவாக்கத்தில் உள்ள பலமாடிக் கட்டடம் இடிந்து விழுந்ததற்கான சூழ்நிலைகள், காரணங்கள் மற்றும் கூறுகள் பற்றி விசாரணை மேற்கொள்ள 28.6.2014ல் அமைக்கப்பட்ட மாண்பமை நீதியரசர் திரு. ஆர்.ரெகுபதி விசாரணை ஆணையம்.

பார்வை: அரசு ஆணை எம்.எஸ். எண்.557, பொது (சட்டம் மற்றும் ஒழுங்கு-எப்) துறை, நாள் 3.7.2014.

2014ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 18ஆம் நாளைய நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக,

1) எம்.மனோகர்
2) எம். முத்து காமாட்சி
3) விஜய் பர்கோட்ரா
4) எஸ்.வெங்கட சுப்பிரமணியன்
5) எஸ்.சங்கர் ராமகிருஷ்ணன்
6) ஆர். துரை சிங்கம்

நேற்று அவர்கள் கால அவகாசம் கோரியதால், வினாக்களுக்கு விடையளிக்க தகவல் குறிப்புகள் / ஆவணங்களை நுண்ணாய்வு செய்வதற்காக இன்று 19.8.2014 (2014 ஆகஸ்ட் திங்கள் பத்தொன்பதாம் நாளகிய இன்று) ஆணையத்தின் முன்பாக ஆஜர்படுத்தப்பட்டனர்.

ஆனால் அவர்கள் அனைவருமே தங்களுக்குத் தரப்பட்ட அந்தத் தகவல் குறிப்புகளை / ஆவணங்களை மற்றும் வினாத்தாட்களைப் படித்த பின்னர், தாங்கள் அவற்றிற்கு பதலளிக்க இயலவில்லை என்று கூறி மேலும் தங்களுக்குக் கால அவகாசம் தருமாறு கேட்டுக் கொண்டனர். அதன்படியே நாளை (20.8.2014) வரை அவர்களுக்குக் கால அவகாசம் தரப்பட்டு மீண்டும் அவர்கள் 20.8.2014 காலை 10.30 மணிக்கு ஆணையம் முன் ஆஜர் படுத்தப்படவேண்டும் என ஆணையிட்டது.

ஜி.ஜேம்ஸ்

19.8.2014

ஆணையரின் செயலாளர்.

மாண்பமை நீதியரசர் திரு ஆர்.ரெகுபதி அவர்களின் விசாரணை ஆணையம்

NCB.1. பி,எஸ். குமாரசாமி ராஜா சாலை, சென்னை-600 028.

அலுவலக நடவடிக்கைகள் எண்.19/நிருவாகம்/2014, நாள் 20.8.2014

பொருள்: காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்திலுள்ள. மௌலிவாக்கத்தில் உள்ள பலமாடிக் கட்டடம் இடிந்து விழுந்ததற்கான சூழ்நிலைகள், காரணங்கள் மற்றும் கூறுகள் பற்றி விசாரணை மேற்கொள்ள 28.6.2014ல் அமைக்கப்பட்ட மாண்பமை நீதியரசர் திரு. ஆர்.ரெகுபதி விசாரணை ஆணையம்.

பார்வை: அரசு ஆணை எம்.எஸ். எண்.557, பொது (சட்டம் மற்றும் ஒழுங்கு-எப்) துறை, நாள் 03.7.2014.

2014ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 19ஆம் நாளைய நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக,

1) எம்.மனோகர்
2) எம். முத்து காமாட்சி
3) விஜய் பார்கோட்ரா
4) எஸ்.வெங்கட சுப்பிரமணியன்
5) எஸ்.சங்கர் ராமகிருஷ்ணன்
6) ஆர். துரை சிங்கம்

இந்த அறுவரோடு இன்னும் இருவராக

எம்.பாலகுருசாமி மற்றும்
கார்த்திக் என்பாரும்

வேலூர் மத்தியச் சிறைக் காவலர்களால் வினாத்தாட்களுக்கு அவர்களுக்கு மீண்டும் அளிக்கப்படவுள்ள ஆவணங்கள்/தகவல் குறிப்புக்கள் அடிப்படையில் நுண்ணாய்ந்து பதில்கள்

அளிக்கப்படுவதற்கு ஏதுவாக, விசாரணை ஆணையம் முன்பாக 20.8.2014ஆம் நாளான இன்று காலை 10.30 மணிக்கு கொண்டுவந்து நிறுத்தப் பட்டனர்.

2. திரு எஸ்.வெங்கடசுப்ரமணியமும், திரு பர்கோட்ராவும் முறையே தங்களுக்கு வழங்கப்பட்ட வினாத்தாள்களுக்கு, அவர்கள் விடைகள் தயாரித்த பின்னர், விசாரணை அலுவலகத்திலுள்ள கணினியில் அவை தட்டச்சு செய்யப்பட்டு ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டினர். அதற்கு ஆணையமும் இசைவு அளித்தது. விடைகள் தனித்தனியே கணிப்பொறியில் தட்டச்சு செய்யப் பெற்றன. தட்டச்சு செய்யப் பெற்றவற்றை அவர்களிருவரும் சரிபார்த்த பின்னர், அந்த விடைகள் அதற்குரிய வினாத்தாள்களுடன் ஆணையத்திடம் தனித்தனியே சமர்ப்பிக்கப்பட்டன. அவரவர்களுக்குரிய வினாத்தாள்களின் படிவங்களையும், விடைகளின் படிகளையும், விசாரணை ஆணையரும், நீதிமன்ற அலுவலரும் கையொப்பமிட்டு அவர்களிருவரிடமும் அளித்தனர்.

ஏனையோரும் 20.8.2014 ஆகிய இன்று, அது போன்றே தங்களுக்குரிய வினாக்களுக்குத் தனித்தனியே விடைகள் தயாரித்து முடித்த பின்னர், அவற்றைக் கணிப்பொறி உதவியால் தட்டச்சு செய்யப்பெற வேண்டி, அவை அவ்வண்ணம் செய்யப் பெற்றபின், அவற்றைச் சரிபார்த்து, ஒப்பமிட்டு ஆணையரிடமும், நீதிமன்ற அலுவலரிடமும் வழங்கி, அவர்கள் கையொப்பமிட்ட படிகளின் ஒப்புகை பெற்றனர்.

ஜி.ஜேம்ஸ்

20.8.2014

ஆணையரின் செயலாளர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு மனோகருக்கான வினாக்கள்

1. தொடக்கத்தில் திரு எஸ். நாகேஷ் என்பவரை கட்டட அமைப்பிற்குரிய வடிவமைப்பு (உருவாக்கல்)/வரைபடம் எழுதுதல் பணிக்கு அமர்த்தியிருந்தார்கள் . இல்லையா?

2. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் (சமர்ப்பிக்கப்பட்ட) அளிக்கப்பட்டுள்ள வரைபடங்களில் திரு எஸ்.நாகேஷ் மற்றும் திருமதி B.சுகன்யா என்னும் கட்டடக் கலைஞர்களின் கையொப்பங்கள் இடம் பெற்றுள்ளன / அப்படித்தானே?

3. பிறகு கட்டடம் கட்டுவதற்கான பணியை திரு வெங்கட சுப்பிரமணியத்திடம் விடுத்துள்ளீர்கள்!

   திரு பர்கோத்ரா என்பவரிடம் நீங்கள் விரும்பியவண்ணம், கட்டுமானப் பணி குறித்து கட்டடக்கலைக்கான வடிவமைப்பை/வரைபடத்தை மாற்ற கலந்து ஆலோசித்துள்ளீர்கள். அந்த நோக்கத்திற்காகவே திரு வெங்கட சுப்பிரமணியனின் சேவையைப் பயன்படுத்தியுள்ளீர்கள். திரு வெங்கடசுப்பிரமணியனோ, திரு நாகேஷ் கொடுத்திருந்த கட்டடக்கலை வடிவமைப்பில்/வரைபடத்தில் பல மாற்றங்களைச் செய்துள்ளார். இது சரியா?

4. திருத்தப்பெற்ற கட்டுமான வடிவமைப்பும் பின்னர் மாற்றப்பட்டுள்ளது! அதன் மூலம் தூண்களின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டுள்ளது. இது குறித்து தங்கள் கருத்து என்ன?

5. ஆணையத்தின் முன்பாக திரு. எஸ்.நாகேஷ் அளித்துள்ள வாக்குமூலமானது/ அறிக்கையானது கட்டுமான வடிவமைப்பில் இடம்பெற்றுள்ள குறிப்பீடுகளில், திரு. வெட்கடசுப்பிரமணியம் மேற்கொண்டவற்றிற்கும், அவர்தாம் (எஸ்.நாகேஷ்) வழங்கியிருந்ததற்கும் இடையே உள்ள வேறுபாடுகளைத் தெள்ளத்தெளிவாக நிரூபிக்கின்றன.

   அவை பின்வருமாறு:—

   "அடித்தள அமைப்பில் நாகேஷ் என்கிற நான் தந்திருந்த அளவீட்டுக் குறிப்பீடுகளாவன:-

நிலத்தூண் ஆழம்	.. 59 அடி
நிலத்தூண் விட்டம்	.. 20 அடி
பாதுகாப்பு தாங்கு திறன்	.. 105 டன்கள்

ஆனால், திரு. வெங்கடசுப்பிரமணியத்தின் வரைபடமோ இவ்வாறு நிர்ணயம் செய்துள்ளன:—

நிலத்தூண் .. 13 " கனம்

(குறுக்குவெட்டு விட்டம்) நிலத்தூண் விட்டம்.. 12"

பாதுகாப்பான தாங்குதிறன் அதில் குறிப்பிடப்படவில்லை.

65 எண்ணிக்கை கொண்ட நிலத்தூண்கள்

தெப்பபலகம் 13"

தெப்ப உத்தரம் - 13" x 2' 2" உயரம்

இவையே திரு. வெங்கடசுப்ரமணியம் கருதிய அளவைகள்.

வலிவு, ஊக்கம் பற்றிய விவரங்கள் அவரால் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

இதைத்தவிர, எனது தூண் வடிவமைப்பின்படி, 1' x 0' x 2' 0' கொண்ட நிலப்பரப்பில் 25 மி.மீ விட்டங்கொண்ட, 8 முறுக்குக் கம்பிகளைக்கொண்டு, M35 தர உறுதிப்பாட்டுடன் 60 தூண்கள், ஒவ்வொன்றிற்குமிடையே உயரளவு இடைவெளி 20' (20 அடிகள்) இருக்கும் வகையில் எழுப்பப்பட வேண்டும்.

ஆனால் M 25 உறுதிப்பாடு கொண்ட முறுக்குக் கம்பிகளைக் கொண்டு எழுப்பப்பட்ட 38 தூண்கள் ஒவ்வொன்றிற்கும் இடையே உயரளவாக 23 அடி இடைவெளி விடப்பட்டுள்ளது. மேலும் மேலிருந்து கீழாக இரண்டு தொங்கு தூண்களும் அமைக்கப்பட்டுள்ளன.

எனது வரைபடத்தில் கூரைத் தளத்தினுடைய பருமன் 5 அங்குலம் என்று குறிப்பிடப் பட்டிருந்தது. ஆனால் திரு வெங்கடசுப்பிரமணியத்தின் வரைபடத்தில் கூரைத்தளத்தினுடைய பருமன் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. என்னுடைய வரைபடத்தின் தேவைப்படி ஒவ்வொரு கட்டடத்திற்கும் தனித்தனி அடிக்கட்டுமானம் வலியுறுத்தப்பட்டிருந்தது.

திரு. வெங்கடசுப்பிரமணியத்தின் வரைபடத்தில் இரு கட்டடத் தொகுதிகளுக்கும் பொதுவான 'RAFT' 'ராப்ட்' அடிக்கட்டுமானம் கட்டப்பட்டுள்ளது. இதைத்தவிர, தாங்கி நிற்கும் சுவரிலிருந்து, தொங்கு தூண் அமைக்கப்பட்டிருந்தது. எனவே, இந்தத்தூணின் பளு தாங்கி நிற்கும் தூணை அழுத்துகிறது.

இதற்கு உங்களுடைய பதிலென்ன?

6. திருஷ்டிகம் ஆர்க்கிடெக்சுரல் கம்யூனிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு பர்கோத்ராவை நீங்கள் பணியில் அமர்த்தியுள்ளீர்கள்/நியமித்துள்ளீர்கள். அந்த நிறுவனத்தில் திட்ட கட்டடக் கலைஞராகப் பணிபுரிந்து வந்த திருமதி B.சுகன்யாவோ கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் தந்துள்ளார்:-

"கட்டடக் கட்டுமானப் பணி எனது வேலைத் திட்ட வரையறையில் ஒரு பகுதி அல்ல. சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு (B) 'பி' கட்டடத் தொகுதிக்கான ஒப்புதல் கோரி நாங்கள் அனுப்பியிருந்த வரைபடத்தில் 46 தூண்கள் இருந்தன. கட்டடம் மேற்குறித்த/மேற்குறிப்பிட்ட வரைபடத்தின்படி கட்டப்படவில்லை. கட்டுமானதாரர் கேட்டுக் கொண்டதற்கு இணங்கி, திரு விஜய் பர்கோத்ரா ஊர்தி வழிப்பாதை அமைப்பதற்காகத் தூண்களின் எண்ணிக்கையை 37 ஆகக்குறைத்தார். நான் என்னுடைய மேலாண் இயக்குநர் திரு விஜய் பர்கோத்ராவிடம் இது குறித்துப் பேசினேன். ஊர்தி நிறுத்துமிடம் அமைப்பதற்காக அவ்வாறு செய்யப்பட்டுள்ளதாகவும், இது குறித்து வெங்கடசுப்பிரமணியத்திடம் பேசுமாறும் என்னிடம் கூறினார். நான் வெங்கடசுப்ரமணியத்திடம் பேசும்போது, தூண்களின் எண்ணிக்கையைக் குறைப்பதால் கட்டடத்தின் உறுதி பாதிக்கப்படாதா எனக் கேட்டேன். அதற்கு வெங்கடசுப்பிரமணியம் என்னிடம் எனது மேலாண் இயக்குநர்தான் ஊர்தி வழிப்பாதைக்கு இடம் வேண்டி தூண்களின் எண்ணிக்கையைக் குறைத்ததாகவும், இது குறித்து அவரே (வெங்கட சுப்பிரமணியமே) கட்டுமான வடிவமைப்பின்போது கவனமெடுத்துப் பார்த்துக் கொள்வதாகவும் தெரிவித்தார். வெங்கடசுப்ரமணியம் என்னிடம் கூறியதை நான் எனது மேலாண் இயக்குநரிடம் தெரிவித்தேன். கட்டுமான வடிவமைப்பு குறித்து எனக்கு அடிப்படை அறிவு மட்டுமே உள்ளது. இப்பிரச்னை குறித்து வெங்கடசுப்ரமணியம் பார்த்துக் கொள்வார் என நான் நினைத்தேன்.

மேலும் 11 மாடிக் கட்டடம் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒப்பளிப்பு வழங்கிய வரைபடத்தின்படி கட்டப்படவில்லை. அவ்வப்போது, எனது மேலாண் இயக்குநர் திரு. விஜய் பர்கோத்ராவும், திரு. வெங்கடசுப்பிரமணியமும் விவாதித்து வரைபடங்களைத் தயார் செய்தனர். நான் ஊதியத்திற்குப் பணிபுரியும் ஒரு பணியாளராக இருந்ததால் அவர்கள் கூறியபடி வரைபடங்களைத் தயாரித்தேன். கட்டுமானம் நடைபெறுகிற புலத்திற்கு நான் மூன்று, நான்கு முறைகள் சென்று பார்த்தேன். பொறியாளர்கள் சங்கர் இராமகிருஷ்ணனும், தினேசும் வழக்கமாக கட்டுமான புலத்தில் இருப்பார்கள். நான் கடைசியாக கட்டுமானப் புலத்துக்குச் சென்றபோது (A) 'ஏ' கட்டடத் தொகுதிக்கான அடிமானப் பணி பாதி முடிவடைந்திருந்தது. (B) 'பி' தொகுதிக்கான அடித்தளம் மற்றும் தரை, நடுத்தளம் (Stilt) கட்டி முடிக்கப்பட்டிருந்தது. தரைத் தளத்திற்கான செங்கற்பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. மேலும் (B) 'பி' கட்டடத் தொகுதியில் 'எல்' மற்றும் 'எம்' தூண்களுக்கு நடுவில் தாங்கு சுவரில் மிதவைத் தூண் ஒன்று

எழுப்பப்பட்டிருந்தது. மிதவைத் தூண் அமைப்பது சரியா என்றும், அது கட்டடத்தின் உறுதிப்பாட்டினை பாதிக்காதா என்றும், அது 11 மாடிக்கான (தளங்களுக்கான) சுமையைத் தாங்குமா என்றும் நான் வெங்கடசுப்பிரமணியத்தைக் கேட்டேன். அதற்கு வெங்கடசுப்பிரமணியமோ, அது ஒரு பிரச்சினையே இல்லையென்றும், அதை அவர் பார்த்துக் கொள்வதாகவும் கூறினார். வெங்கடசுப்பிரமணியம் என்னிடம் கூறியதை நான் எனது மேலாண் இயக்குநருக்குத் தெரிவித்தேன்.

நாகேஷின் கட்டுமான வடிவமைப்பின்படி தூணின் அளவு 1' x 2'. ஆனால் வெங்கடசுப்பிரமணியத்தின் கட்டுமான வடிவமைப்பின்படி தூணின் அளவு 1' x 1'.6" எனக் கொடுக்கப்பட்டிருந்தது. மாற்றியமைக்கப்பட்ட தூண் அளவு 11 மாடிக் கட்டடம் ஒன்றுக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை என நான் எனது மேலாண் இயக்குநர் திரு விஜய் பர்கோத்ராவிடம் கூறினேன். அதற்கு எனது மேலாண் இயக்குநர், அதை கட்டுமானப் பொறியாளர் திரு வெங்கடசுப்பிரமணியம் பார்த்துக்கொள்வார் எனத் தெரிவித்தார். கட்டடத்திற்கு நிலத்தூண் அடிமானம் ஒன்றினையும் நாகேஷ் குறிப்பிட்டிருந்தார். நாகேஷ் அவரது கட்டட உறுதிச் சான்றில் 18 மீட்டர் ஆழமுள்ள நிலத்தூண் அடிமானத்தைக் காட்டியிருந்தார். பின்னாளில், வெங்கடசுப்பிரமணியம், அவரது அடிமான வடிவமைப்பில் 4 மீட்டர் ஆழமுள்ள நிலத்தூண் அடிமானத்தைக் குறிப்பிட்டுள்ளார். எனவே, அடிமானம் 18 மீட்டருக்குப் பதிலாக 4 மீட்டர் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. இது குறித்து திரு. வெங்கடசுப்பிரமணியத்திடம் பேசுமாறு எனது மேலாண் இயக்குநரிடம் கூறினேன். அதற்கு கட்டுமானதாரர் மனோகரும், கட்டுமானப் பொறியாளர் வெங்கடசுப்பிரமணியமும் இப்பிரச்சினைகள் குறித்துப் பார்த்துக்கொள்வார்கள் என்றும், நாம் இதில் அதிகமாகச் சொல்லிக்கொள்வதற்கில்லை என்றும் எனது மேலாண் இயக்குநர் கூறினார். கட்டடம் உரிய முறையில் வடிவமைக்கப்படாததாலும் எவ்விதக் காரணங்களும் இன்றித் தூண்களின் எண்ணிக்கையைக் குறைத்ததாலுமே கட்டட உறுதி பாதிக்கப்பட்டு, சுமையைத் தாங்க இயலாமல் கட்டடம் இடிந்து விழுந்தது.

இதற்கு உங்கள் பதிலென்ன?

7. திரு இலட்சுமணமூர்த்தி என்னும் கட்டடக் கலைஞர் தனது வாக்குமூலத்தில், சென்னைப் பெருநகர வளர்ச்சிக்குழுமத்திடம் தாங்கள் ஒப்புதல் பெறவேண்டி அளித்துள்ள வரைபடங்கள் ஒன்றில் அவரது பெயரையும் பொய்யாகப் பயன்படுத்தியுள்ளீர்கள் என்று பதிவு செய்திருக்கிறார்.

இதற்கான தங்கள் பதிலென்ன?

8. திரு ஐயப்பன் என்னும் தெழிலாளர் மேன்முறையாள் (Foreman) ஆணையத்தின் முன் அளித்துள்ள வாக்குமூலத்தில் 4m x 1" விட்ட அளவில் 17 நிலத்தூண்களைத்தான்

பதித்துள்ளதாகக் கூறியுள்ளார். மேலும், நிலத்தூண்களைப் பதியவைக்கத் தான் மேற்கொண்ட இடமானது தளர்ச்சியானதும், உதிரியானதுமான மண்ணும் மணலும் நிறைந்த இடமாக இருந்ததால் அப்பணியை செவ்வனே செய்து முடிக்கப்பட முடியாமல் தான் அரைகுறையாக நிறுத்த வேண்டியதாயிற்று என்றும் அவர் கூறியுள்ளார்.

தொடர்ந்து அவர் குறிப்பிடுகையில், தங்களுடைய அறிவுறுத்துதலின் பேரில் அவர் எழுப்பியுள்ள/பதித்து முடித்துள்ள நிலத்தூண் சுற்றுச் சுவராக எழுப்ப மட்டுமே தகுதியானதென்றும், பல மாடி கட்டடத்திற்கு ஏற்றதில்லை என்றும் தெளிவாக்கியுள்ளார்.

இதற்குத் தங்கள் விடை என்ன?

9. தாங்கள் பணியமர்த்தியுள்ள திரு ஏழுமலை என்பவர் தனது வாக்குமூலத்தில் 3m x 1" விட்ட அளவில் (முப்பது) 30 நிலத்தூண்களுக்கு அடித்தளம் நிறுவியுள்ளதாகக் கூறியுள்ளார். மண்ணும் மணலும் நிறைந்த அந்தப் பகுதியில் பதிக்கப்படும் நிலத்தூண் சுற்றுச் சுவர் எழுப்ப மட்டுமே (compound wall) தகுதியானதென்று கூறியுள்ளார்.

இது குறித்த தங்கள் பதில் என்ன?

10. இரும்புக் கம்பிகளை வளைக்கும் பணியில் தாங்கள் ஈடுபடுத்தியிருந்த திரு. மாரி என்னும் ஒருவர், வரைபடத்தில் காட்டியுள்ள தூண்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லையென்றும், அந்தக் குறைவான எண்ணிக்கை கொண்ட தூண்கள் பளுவைத் தாங்கும் சக்தியற்றவை என்றும் கூறியுள்ளார்.

இது பற்றித் தாங்கள் கூறுவதென்ன?

11. தாங்கள் பணியமர்த்திய திரு. மணி என்னும் கொத்தனார், காரைக்கட்டு/திண்காரை/பசைமண் கூழாங்கற்கலவைப் பிழம்புப் பாளங்கள் கடினமான/கெட்டிப்பட 15 நாட்கள் மட்டுமே கால அவகாசம் தாங்கள் தந்துள்ளதாகவும், ஆனால் அக்காரைப் பாளங்கள் உறுதிப்பட/இறுகிட 25 நாட்கள் தேவைப்படுமெனவும், கட்டடம் இடிந்து விழுதற்கான காரணங்களுள் இதுவும் ஒன்றாக அமைந்துவிட்டதாகவும் கூறியுள்ளார்.

இதைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

12. தாங்கள் பணியமர்த்திய கொத்தனார் திரு. மணி என்பார், தூண்கள் போதிய அளவில் ஆன எண்ணிக்கையில் இல்லையெனவும், உட்சுற்று இரும்புக் கம்பி வளையங்களைக் கொண்ட தூண்கள் போதிய அளவிலான நிலத்தூண்களுடன் இணைக்கப்படவில்லையெனவும், காரைக் கட்டு/திண்காரை (concrete) கலவையில் மணலுக்குப் பதிலாக நிலக்கரிச் சாம்பல் பயன்படுத்தப்பட்டுள்ளதெனவும், சரியான விகிதத்தில் கலவை (காரைக்கலவை) அமைந்திருக்கவில்லையெனவும், சாதாரண செங்கலுக்குப் பதிலாக நிலக்கரிச் சாம்பல் செங்கல் (கட்டிகள்) பயன்படுத்தப்பட்டதன் விளைவாக எடை அளவுக்குமேல்கூடிப் போனதாகவும், போதிய அளவிலான தூண்கள் இல்லாது போனதால்

அவை சுமையைத் தாங்க முடியாது போய்விட்டதாகவும், தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

நேரில் பார்த்த சாட்சியாக உள்ள அவர், கட்டடத்தின்படிக்கட்டுகள் (படிக்கட்டுகள் பகுதி) இரண்டு பகுதிகளாகப் பிளவுபட்டதால் கட்டடம் திடீரெனக் கீழே இடிந்து வீழ்ந்தது எனத் தெரிவித்துள்ளார்.

இதற்கு என்ன விடை சொல்லப் போகிறீர்கள்?

13. கட்டடத்தின் 'B' தொகுதி இடிந்துவிழுந்ததில், அண்டையிலுள்ளோரின் வசிப்பிடப் பகுதியின்மீது வீழ நேரிட்டதால், அவர்களது வசிப்பிடமும், சொத்துக்களும் சேதத்திற்குள்ளாயின.

கட்டடம் இடிந்து விழுந்ததற்கு முறையற்ற/சரியில்லாத கட்டுமானம் காரணமாக அமைந்துள்ளது எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தங்கள் பதில் என்ன?

14. கட்டடம் இடிந்துவிழுந்ததில் காயம்பட்டவர்கள், தாங்கள் பட நேர்ந்த காயங்களுக்கு, முறையற்ற/தரமற்ற/சரியில்லாத (கட்டடக்) கட்டுமானம் காரணமெனக் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இதைப் பற்றி என்ன சொல்லப் போகிறீர்கள்?

15. கட்டடங்களின் 'A' தொகுதியையும், 'B' தொகுதியையும் வாங்கியுள்ளவர்கள், தாங்கள் மிகப்பெரும் விலை தந்து சொத்து வாங்கியுள்ளதாகக் கூட்டாகவும்/தங்கள் சங்க அமைப்புக்கள் மூலமும்/தனிப்பட்ட முறையிலும் அளித்துள்ள வாக்குமூலங்களில் பதிவு செய்துள்ளனர்.

ஆனால் 'B' தொகுதிக் கட்டடம் இடிந்து விழுந்ததன் காரணமாகவும் (எந்த நேரத்தில் இந்தத் தொகுதியும் இடிந்து விழுமோ என்று அச்சுறுத்துகின்ற வகையில்) உறுதித் தன்மை பற்றிய உறுதியில்லாத நிலையிலுள்ள 'A' கட்டடத் தொகுதியினாலும் தாங்கள் வீதிக்கே வந்துவிட்டதாக பாதிக்கப்பட்டவர்கள் கூறியுள்ளனர்!

விடையுண்டா தங்களிடம் இதற்கு?

16. முறையற்ற/ஒழுங்கில்லாத திட்டமிடலும், அவ்வழியமைந்த செயல்முறையும் கட்டடம் இடிந்துவிழுந்ததற்குக் காரணங்கள் என சிறப்பு புலனாய்வுக்குழுவானது, தனது புலனாய்வில் கண்டறிந்துள்ளது.

கட்டட வீழ்ச்சியானது 61 பேர்களை உயிர்ப்பலி கொண்டது; 21 பேர்களுக்குக் காயங்களை ஏற்படுத்தியது. கட்டட 'B' தொகுதிக்கு அண்மையில் உள்ளவசிப்பிடங்களை நாசப்படுத்தியது. பல அப்பாவிகள் காயம்படவும் காரணமாகியது; பாதிக்கப்பட்டவர்கள்

பதறுகிறார்கள், கூக்குரலிடுகிறார்கள்; இவையனைத்திற்கும், கட்டுநர், கட்டடக் கலைஞர்கள் மற்றும் பொறியாளர்களே பொறுப்பு என்று பொங்கி எழுகிறார்கள்!

தாங்கள் என்ன பதில் தரப்போகிறீர்கள்?

17. கட்டமைப்புப் பொறியாளரான திரு நாகேஷ், கட்டடம் கட்டுதற்கான கட்டுமான விவரங்களைச் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அவற்றை ஆய்ந்து அதனடிப்படையில் ஒப்புதல் அளித்து, அரசாங்கமும் கட்டடம் கட்ட அனுமதி வழங்கியிருந்த நிலையில், அவற்றைப் பின்பற்றாமலும், கட்டுமானப் பொறியாளர் அனுமதி பெற்ற வண்ணம் அந்தத் திட்டத்தைத் தொடர அனுமதிக்கப்படாமலும் போனது ஏன்?

18. திரு. நாகேஷ் அல்லாத வேறொரு கட்டமைப்புப் பொறியாளரிடம் அப்பணி ஒப்படைக்கப்பட்டு, முற்றிலும் மாறான வரைபடத்தின் அடிப்படையில் ஏன் அப்பணி செய்து முடிக்கப்பட்டது?

19. பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் அளிக்கப்பெற்று, குழுமத்தின் ஒப்புதல் பெற்ற திட்டத்தின் அடிப்படையில்லாது ஏன் மாறுபாடான முறையில் கட்டடத்திற்கான அடித்தளம் எழுப்பப்பட்டது.

மாற்றத்தை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் ஏன் தெரிவிக்கவில்லை?

திருத்தங்களுக்கான அனுமதியை குழுமத்திடம் ஏன் கோரிப் பெறவில்லை?

விளக்கம் தேவை.

20. மண் பரிசோதனையை மேற்கொண்ட சென்னை அரவிந்த் அசோசியேட்ஸ் நிறுவனம் அடிக்கட்டுமான அமைப்பானது 400 மி.மீ/300 மி.மீ விட்டங்கொண்ட நிலத்தூண்களைக் கொண்டு அமைக்கப்பட வேண்டுமென்று பரிந்துரைத்துள்ளது. அவ்வாறிருக்க இதிலிருந்து விலகி வேறொரு அடிக்கட்டுமான அமைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதற்கான காரணங்களை விளக்க முடியுமா?

21. தூணைத் தாங்குதற்கு 18 மீட்டர் நீளங்கொண்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிலத்தூண்களுக்கான ஓர் உறுதியான அடுக்குவரையில் ஆழ்துளை நிலத்தூண்களுடன் கூடிய அடித்தள முறையைக் குறிப்பிட்டு கட்டமைப்புப் பொறியாளரான திரு. நாகேஷ் தம்முடைய கட்டமைப்பு வரைபடத்தைத் தயாரித்து திட்ட அனுமதி விண்ணப்பத்துடன் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்துக்கு அளித்திருந்தார். ஏன் இதனைப் பின்பற்றவில்லை? இதற்கு விளக்கம் தருக.

22. யாருடைய திட்டத்தின் வடிவமைப்பில் இக்கட்டடப் பணிகள் மேற்கொள்ளப் பட்டதோ, அந்த கட்டமைப்புப் பொறியாளர், கட்டடப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது குறித்த கால இடைவெளியில் ஆய்வு செய்ய ஏற்பாடுகள் செய்து தரப்பட்டனவா? அப்படியாயின் கட்டமைப்புப் பொறியாளர் மேற்கொண்ட ஆய்வுகளின்

விவரங்களைத் தேதி வாரியாக அளித்திடுங்கள். இதைப்பற்றிய பதிவுருக்கள் ஏதேனும் தாங்கள் வைத்துள்ளீர்களா?

23. கட்டுமானத் திட்டம் செயலாக்கப்படுத்தப்பட்டபோது, கட்டமைப்புப் பொறியாளரின் வரைபடத்திலுள்ள விவரங்களிலிருந்து தாங்கள் விலகி வேறுபட்டுச் சென்றுள்ளீர்களா?

அப்படியாயின் கட்டமைப்புப் பொறியாளரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வந்துள்ளீர்களா?

24. கட்டி முடிக்கப்பட்ட கட்டுமானக் கூறுகளின் மீதான கட்டமைப்புப் பொறியாளரின் கூர்நோக்கு ஏதேனும் இருந்ததா? அவர் ஏதேனும் தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்தங்கள் பற்றிய அறிவுரைகள் வழங்கியுள்ளாரா?

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அனுப்புநர் 20.08.2014

எம். மனோகர்,
நிர்வாக இயக்குநர்
M/s. பிரைம் சிருஷ்டி ஹவுஸிங் பிரைவேட் லிமிடெட்.

பெறுநர்

மாண்பமை நீதியரசர் R.ரெகுபதி விசாரணை ஆணையம்,
(மௌலிவாக்கம்),
NCB-1, P.S. குமாரசாமி ராஜா சாலை,
சென்னை-600 028.

மேன்மைமிகு ஐயா,

கடந்த இரண்டு நாட்களில் சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத் திட்ட வரைபடம், தொழில் நுட்ப வல்லுநர்கள் அறிக்கை, சுகன்யா மற்றும் நாகேஷ் இவர்களின் அறிக்கைகள், இவற்றையெல்லாம் நான் படித்துப்பார்த்துள்ளேன் என்பதைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். என்னிடமிருந்து கோரப்பட்டுள்ள தொழில் நுட்ப விவரங்கள், தொழில் நுட்ப வல்லுநர்களால் மட்டுமே வழங்கப்பட முடியும். மேலும், திட்டத் தொடர்பான எல்லா ஆவணங்களும் கட்டடத் தொகுதி 'A'ஐ அடுத்துள்ள திட்டப்பணி அலுவலகத்தில் இருந்தன. கட்டடம் இடிந்து விழுந்தபோது, அத்திட்டப்பணி அலுவலகத்தை உடனே அரசு அலுவலர்கள் தம் பொறுப்பில் எடுத்துக்கொண்டு விட்டனர்.

நீதிமன்றக் காவலில் மிகுந்த மனஅழுத்தத்தில் இருந்து வருவதைக் கருதியும், உங்களுடைய தனிப்பட்ட/சொந்தப் பதிவுருக்கள் என்வசம் எதுவும் இல்லை என்றளவிலும், என்னால் தங்களுக்கு தெளிவாக நினைவுகூர்ந்து பதிலிறுக்க இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

xxxxxxxxx

(ஒப்பம்) M.மனோகர்

திரு M. முத்துகாமாட்சிக்கான வினாக்கள்

1. தொடக்கத்தில் திரு எஸ்.நாகேஷ் என்பவரை கட்டட அமைப்பிற்குரிய வடிவமைப்பு (உருவாக்கல்) / வரைபடம் எழுதுதல் பணிக்கு அமர்த்தியிருந்தார்கள் . அவர் தயாரித்த வரைபடமானது திட்ட வரைபட அனுமதிக்காக சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் அளிக்கப்பட்டுள்ளது. இல்லையா?

2. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் (சமர்ப்பிக்கப்பட்ட) அளிக்கப்பட்டுள்ள வரைபடங்களில் திரு எஸ்.நாகேஷ் மற்றும் திருமதி B.சுகன்யா என்னும் கட்டடக் கலைஞர்களின் கையொப்பங்கள் இடம் பெற்றுள்ளன / அப்படித்தானே?

3. பிறகு கட்டடம் கட்டுவதற்கான பணியை திரு வெங்கட சுப்பிரமணியத்திடம் விடுத்துள்ளீர்கள்! திரு பர்கோத்ரா என்பவரிடம் நீங்கள் விரும்பியவண்ணம், கட்டுமானப் பணி குறித்து கட்டடக்கலைக்கான வடிவமைப்பை/வரைபடத்தை மாற்ற கலந்து ஆலோசித்துள்ளீர்கள். அந்த நோக்கத்திற்காகவே திரு வெங்கட சுப்பிரமணியனின் சேவையைப் பயன்படுத்தியுள்ளீர்கள். திரு வெங்கடசுப்பிரமணியனோ, திரு நாகேஷ் கொடுத்திருந்த கட்டடக்கலை வடிவமைப்பில்/வரைபடத்தில் பல மாற்றங்களைச் செய்துள்ளார். இது சரியா?

4. திருத்தப்பெற்ற கட்டுமான வடிவமைப்பும் பின்னர் மாற்றப்பட்டுள்ளது! அதன் மூலம் தூண்களின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டுள்ளது. இது குறித்து தங்கள் கருத்து என்ன?

5. ஆணையத்தின்முன்பாக திரு. எஸ்.நாகேஷ் அளித்துள்ள வாக்குமூலமானது / அறிக்கையானது கட்டுமான வடிவமைப்பில் இடம்பெற்றுள்ள குறிப்பீடுகளில், திரு. வெங்கடசுப்பிரமணியம் மேற்கொண்டவற்றிற்கும், அவர்தாம் (எஸ்.நாகேஷ்) வழங்கியிருந்ததற்கும் இடையே உள்ள வேறுபாடுகளைத் தெள்ளத்தெளிவாக நிரூபிக்கின்றன. அவை பின்வருமாறு:-

"அடித்தள அமைப்பில் நாகேஷ் என்கிற நான் தந்திருந்த அளவீட்டுக் குறிப்பீடுகளாவன:-

நிலத்தூண் ஆழம்	.. 59 அடி
நிலத்தூண் விட்டம்	.. 2+0 அடி
பாதுகாப்பு தாங்கு திறன்	.. 105 டன்கள்

ஆனால், திருவெங்கடசுப்பிரமணியத்தின் வரைபடமோ இவ்வாறு நிர்ணயம் செய்துள்ளன:-

நிலத்தூண் .. 13 " கனம்

(குறுக்கு வெட்டுவிட்டம்) நிலத்தூண் விட்டம்.. 12"

பாதுகாப்பான தாங்குதிறன் அதில் குறிப்பிடப்படவில்லை.

65 எண்ணிக்கை கொண்ட நிலத்தூண்கள்

தெப்பலகம் 13"

தெப்ப உத்தரம் - 13" x 2' 2" உயரம்

இவையே திரு வெங்கடசுப்ரமணியம் கருதிய அளவைகள்.

வலிவு, ஊக்கம் பற்றிய விவரங்கள் அவரால் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

இதைத்தவிர, எனது தூண் வடிவமைப்பின்படி, 1' x 2' கொண்ட நிலப்பரப்பில் 25 மி.மீ விட்டங்கொண்ட, 8 முறுக்குக் கம்பிகளைக்கொண்டு, M35 தர உறுதிப்பாட்டுடன் 60 தூண்கள், ஒவ்வொன்றிற்குமிடையே உயரளவு இடைவெளி 20' (20 அடிகள்) இருக்கும் வகையில் எழுப்பப்பட வேண்டும்.

ஆனால் M 25 உறுதிப்பாடு கொண்ட முறுக்குக் கம்பிகளைக் கொண்டு எழுப்பப்பட்ட 38 தூண்கள் ஒவ்வொன்றிற்கும் இடையே உயரளவாக 23 அடி இடைவெளி விடப்பட்டுள்ளது. மேலும் மேலிருந்து கீழாக இரண்டு தொங்கு தூண்களும் அமைக்கப்பட்டுள்ளன.

எனது வரைபடத்தில் கூரைத் தளத்தினுடைய பருமன் 5 அங்குலம் என்று குறிப்பிடப் பட்டிருந்தது. ஆனால் திரு வெங்கடசுப்பிரமணியத்தின் வரைபடத்தில் கூரைத்தளத்தினுடைய பருமன் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. என்னுடைய வரைபடத்தின் தேவைப்படி ஒவ்வொரு கட்டடத்திற்கும் தனித்தனி அடிக்கட்டுமானம் வலியுறுத்தப்பட்டிருந்தது.

திரு வெங்கடசுப்பிரமணியத்தின் வரைபடத்தில் இரு கட்டடத் தொகுதிகளுக்கும் பொதுவான 'RAFT' 'ராப்ட்' அடிக்கட்டுமானம் கட்டப்பட்டுள்ளது. இதைத்தவிர, தாங்கி நிற்கும் சுவரிலிருந்து, தொங்கு தூண் அமைக்கப்பட்டிருந்தது. எனவே, இந்தத்தூணின் பளு தாங்கி நிற்கும் தூணை அழுத்துகிறது.

இதற்கு உங்களுடைய பதிலென்ன?

6. திருஷ்டிகம் ஆர்க்கிடெக்சுரல் கம்யூனிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.பர்கோத்ராவை நீங்கள் பணியில் அமர்த்தியுள்ளீர்கள்/நியமித்துள்ளீர்கள். அந்த நிறுவனத்தில் திட்ட கட்டடக் கலைஞராகப் பணிபுரிந்து வந்த திருமதி B.சுகன்யாவோ, கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் தந்துள்ளார்:-

" கட்டடக் கட்டுமானப் பணி எனது வேலைத் திட்ட வரையறையில் ஒரு பகுதி அல்ல. சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு (B) 'பி' கட்டடத் தொகுதிக்கான ஒப்புதல் கோரி நாங்கள் அனுப்பியிருந்த வரைபடத்தில் 46 தூண்கள் இருந்தன. கட்டடம் மேற்குறித்த/மேற்குறிப்பிட்ட வரைபடத்தின்படி கட்டப்படவில்லை. கட்டுமானதாரர் கேட்டுக் கொண்டதற்கு இணங்கி, திரு விஜய் பர்கோத்ரா ஊர்தி வழிப்பாதை அமைப்பதற்காகத் தூண்களின் எண்ணிக்கையை 37 ஆகக் குறைத்தார். நான் என்னுடைய மேலாண் இயக்குநர் திரு விஜய் பர்கோத்ராவிடம் இது குறித்துப் பேசினேன். ஊர்தி நிறுத்துமிடம் அமைப்பதற்காக அவ்வாறு செய்யப்பட்டுள்ளதாகவும், இது குறித்து வெங்கடசுப்பிரமணியத்திடம் பேசுமாறும் என்னிடம் கூறினார். நான் வெங்கடசுப்ரமணியத்திடம் பேசும்போது, தூண்களின் எண்ணிக்கையைக் குறைப்பதால் கட்டடத்தின் உறுதி பாதிக்கப்படாதா எனக் கேட்டேன். அதற்கு வெங்கடசுப்பிரமணியம் என்னிடம் எனது மேலாண் இயக்குநர்தான் ஊர்தி வழிப்பாதைக்கு இடம் வேண்டி தூண்களின் எண்ணிக்கையைக் குறைத்ததாகவும், இது குறித்து அவரே (வெங்கட சுப்பிரமணியமே) கட்டுமான வடிவமைப்பின்போது கவனமெடுத்துப் பார்த்துக் கொள்வதாகவும் தெரிவித்தார். வெங்கடசுப்ரமணியம் என்னிடம் கூறியதை நான் எனது மேலாண் இயக்குநரிடம் தெரிவித்தேன். கட்டுமான வடிவமைப்பு குறித்து எனக்கு அடிப்படை அறிவு மட்டுமே உள்ளது. இப்பிரச்னை குறித்து வெங்கடசுப்ரமணியம் பார்த்துக்கொள்வார் என நான் நினைத்தேன்.

மேலும் 11 மாடிக் கட்டடம் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஒப்பளிப்பு வழங்கிய வரைபடத்தின்படி கட்டப்படவில்லை. அவ்வப்போது, எனது மேலாண் இயக்குநர் திரு விஜய் பர்கோத்ராவும், திரு வெங்கடசுப்பிரமணியமும் விவாதித்து வரைபடங்களைத் தயார் செய்தனர். நான் ஊதியத்திற்குப் பணிபுரியும் ஒரு பணியாளராக இருந்ததால் அவர்கள் கூறியபடி வரைபடங்களைத் தயாரித்தேன். கட்டுமானம் நடைபெறுகிற புலத்திற்கு நான் மூன்று, நான்கு முறைகள் சென்று பார்த்தேன். பொறியாளர்கள் சங்கர் இராமகிருஷ்ணனும், தினேசும் வழக்கமாக கட்டுமான புலத்தில் இருப்பார்கள். நான் கடைசியாக கட்டுமானப் புலத்துக்குச் சென்றபோது (A) 'ஏ' கட்டடத் தொகுதிக்கான அடிமானப் பணி பாதி முடிவடைந்திருந்தது. (B) 'பி' தொகுதிக்கான அடித்தளம் மற்றும் தரை, நடுத்தளம் (Stilt) கட்டி முடிக்கப்பட்டிருந்தது. தரைத் தளத்திற்கான செங்கற்பணி நடைபெற்றுக்கொண்டிருந்தது. மேலும் (B) 'பி' கட்டடத் தொகுதியில் 'எல்' மற்றும் 'எம்' தூண்களுக்கு நடுவில் தாங்கு சுவரில் மிதவைத் தூண் ஒன்று

எழுப்பப்பட்டிருந்தது. மிதவைத் தூண் அமைப்பது சரியா என்றும், அது கட்டடத்தின் உறுதிப்பாட்டினை பாதிக்காதா என்றும், அது 11 மாடிக்கான (தளங்களுக்கான) சுமையைத் தாங்குமா என்றும் நான் வெங்கடசுப்பிரமணியத்தைக் கேட்டேன். அதற்கு வெங்கடசுப்பிரமணியமோ, அது ஒரு பிரச்சினையே இல்லையென்றும், அதை அவர் பார்த்துக் கொள்வதாகவும் கூறினார். வெங்கடசுப்பிரமணியம் என்னிடம் கூறியதை நான் எனது மேலாண் இயக்குநருக்குத் தெரிவித்தேன்.

நாகேஷின் கட்டுமான வடிவமைப்பின்படி தூணின் அளவு 1' x 2'. ஆனால் வெங்கடசுப்பிரமணியத்தின் கட்டுமான வடிவமைப்பின்படி தூணின் அளவு 1' x 1'.6" எனக்கொடுக்கப்பட்டிருந்தது. மாற்றியமைக்கப்பட்ட தூண் அளவு 11 மாடிக் கட்டடம் ஒன்றுக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை என நான் எனது மேலாண் இயக்குநர் திரு விஜய் பர்கோத்ராவிடம் கூறினேன். அதற்கு எனது மேலாண் இயக்குநர், அதை கட்டுமானப் பொறியாளர் திரு வெங்கடசுப்பிரமணியம் பார்த்துக்கொள்வார் எனத் தெரிவித்தார். கட்டடத்திற்கு நிலத்தூண் அடிமானம் ஒன்றினையும் நாகேஷ் குறிப்பிட்டிருந்தார். நாகேஷ் அவரது கட்டட உறுதிச் சான்றில் 18 மீட்டர் ஆழமுள்ள நிலத்தூண் அடிமானத்தைக் காட்டியிருந்தார். பின்னாளில், வெங்கடசுப்பிரமணியம், அவரது அடிமான வடிவமைப்பில் 4 மீட்டர் ஆழமுள்ள நிலத்தூண் அடிமானத்தைக் குறிப்பிட்டுள்ளார். எனவே, அடிமானம் 18 மீட்டருக்குப் பதிலாக 4 மீட்டர் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. இது குறித்து திரு வெங்கடசுப்பிரமணியத்திடம் பேசுமாறு எனது மேலாண் இயக்குநரிடம் கூறினேன். அதற்கு கட்டுமானதாரர் மனோகரும், கட்டுமானப் பொறியாளர் வெங்கடசுப்பிரமணியமும் இப்பிரச்சினைகள் குறித்துப் பார்த்துக்கொள்வார்கள் என்றும், நாம் இதில் அதிகமாகச் சொல்லிக் கொள்வதற்கில்லை என்றும் எனது மேலாண் இயக்குநர் கூறினார். கட்டடம் உரிய முறையில் வடிவமைக்கப்படாததாலும் எவ்விதக் காரணங்களும் இன்றித் தூண்களின் எண்ணிக்கையைக் குறைத்ததாலுமே கட்டட உறுதி பாதிக்கப்பட்டு, சுமையைத் தாங்க இயலாமல் கட்டடம் இடிந்து விழுந்தது.

இதற்கு உங்கள் பதிலென்ன?

7. திரு இலட்சுமணமூர்த்தி என்னும் கட்டடக் கலைஞர் தனது வாக்குமூலத்தில், சென்னைப் பெருநகர வளர்ச்சிக்குழுமத்திடம் தாங்கள் ஒப்புதல் பெறவேண்டி அளித்துள்ள வரைபடங்கள் ஒன்றில் அவரது பெயரையும் பொய்யாகப் பயன்படுத்தியுள்ளீர்கள் என்று பதிவு செய்திருக்கிறார்.

இதற்கான தங்கள் பதிலென்ன?

8. திரு ஐயப்பன் என்னும் தொழிலாளர் மேன்முறையாள் (Foreman) ஆணையத்தின் முன் அளித்துள்ள வாக்குமூலத்தில் 4m x 1" விட்ட அளவில் 17 நிலத்தூண்களைத்தான் பதித்துள்ளதாகக் கூறியுள்ளார். மேலும் நிலத்தூண்களைப்

பதியவைக்கத் தான் மேற்கொண்ட இடமானது தளர்ச்சியானதும், உதிரியானதுமான மண்ணும் மணலும் நிறைந்த இடமாக இருந்ததால் அப்பணியை செவ்வனே செய்து முடிக்கப்பட முடியாமல் தான் அரைகுறையாக நிறுத்த வேண்டியதாயிற்று என்றும் அவர் கூறியுள்ளார்.

தொடர்ந்து அவர் குறிப்பிடுகையில், தங்களுடைய அறிவுறுத்துதலின் பேரில் அவர் எழுப்பியுள்ள/பதித்து முடித்துள்ள நிலத்தூண் சுற்றுச்சுவராக எழுப்ப மட்டுமே தகுதியானதென்றும், பல மாடி கட்டடத்திற்கு ஏற்றதில்லை என்றும் தெளிவாக்கியுள்ளார்.

இதற்குத் தங்கள் விடை என்ன?

9. தாங்கள் பணியமர்த்தியுள்ள திரு ஏழுமலை என்பவர் தனது வாக்குமூலத்தில் 3m x 1" விட்ட அளவில் (முப்பது) 30 நிலத்தூண்களுக்கு அடித்தளம் நிறுவியுள்ளதாகக் கூறியுள்ளார். மண்ணும் மணலும் நிறைந்த அந்தப் பகுதியில் பதிக்கப்படும் நிலத்தூண் சுற்றுச் சுவர் எழுப்ப மட்டுமே (compound wall) தகுதியானதென்று கூறியுள்ளார்.

இது குறித்த தங்கள் பதில் என்ன?

10. இரும்புக் கம்பிகளை வளைக்கும் பணியில் தாங்கள் ஈடுபடுத்தியிருந்த திரு மாரி என்னும் ஒருவர், வரைபடத்தில் காட்டியுள்ள தூண்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லையென்றும், அந்தக் குறைவான எண்ணிக்கை கொண்ட தூண்கள் பளுவைத் தாங்கும் சக்தியற்றவை என்றும் கூறியுள்ளார்.

இது பற்றித் தாங்கள் கூறுவதென்ன?

11. தாங்கள் பணியமர்த்திய திரு மணி என்னும் கொத்தனார், காரைக்கட்டு/திண்காரை/பசைமண் கூழாங்கற் கலவைப் பிழம்புப் பாளங்கள் கடினமான/கெட்டிப்பட 15 நாட்கள் மட்டுமே கால அவகாசம் தாங்கள் தந்துள்ளதாகவும், ஆனால் அக்காரைப் பாளங்கள் உறுதிப்பட/இறுகிட 25 நாட்கள் தேவைப்படுமெனவும், கட்டடம் இடிந்து விழுதற்கான காரணங்களுள் இதுவும் ஒன்றாக அமைந்துவிட்டதாகவும் கூறியுள்ளார்.

இதைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

12. தாங்கள் பணியமர்த்திய கொத்தனார் திரு மணி என்பார், தூண்கள் போதிய அளவில் ஆன எண்ணிக்கையில் இல்லையெனவும், உட்சுற்று இரும்புக் கம்பி வளையங்களைக் கொண்ட தூண்கள் போதிய அளவிலான நிலத்தூண்களுடன் இணைக்கப்படவில்லையெனவும், காரைக் கட்டு/திண்காரை (concrete) கலவையில் மணலுக்குப் பதிலாக நிலக்கரிச் சாம்பல் பயன்படுத்தப் பட்டுள்ளதெனவும், சரியான விகிதத்தில் கலவை (காரைக்கலவை) அமைந்திருக்கவில்லையெனவும், சாதாரண செங்கலுக்குப் பதிலாக நிலக்கரிச் சாம்பல் செங்கல் (கட்டிகள்) பயன்படுத்தப்பட்டதன் விளைவாக எடை அளவுக்குமேல் கூடிப்போனதாகவும், போதிய அளவிலான தூண்கள் இல்லாது போனதால் அவை சுமையைத் தாங்க முடியாது போய்விட்டதாகவும், தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

நேரில் பார்த்த சாட்சியாக உள்ள அவர், கட்டடத்தின்படிக்கட்டுகள் (படிக்கட்டுகள் பகுதி) இரண்டு பகுதிகளாகப் பிளவுபட்டதால் கட்டடம் திடீரெனக் கீழே இடிந்து வீழ்ந்தது எனத் தெரிவித்துள்ளார்.

இதற்கு என்ன விடை சொல்லப்போகிறீர்கள்?

13. கட்டடத்தின் 'B' தொகுதி இடிந்து விழுந்ததில், அண்டையிலுள்ளோரின் வசிப்பிடப் பகுதியின்மீது வீழ நேரிட்டதால், அவர்களது வசிப்பிடமும், சொத்துக்களும் சேதத்திற்குள்ளாயின.

கட்டடம் இடிந்து விழுந்ததற்கு முறையற்ற/சரியில்லாத கட்டுமானம் காரணமாக அமைந்துள்ளது எனக் குற்றங் சாட்டப்பட்டுள்ளது.

தங்கள் பதில் என்ன?

14. கட்டடம் இடிந்து விழுந்ததில் காயம்பட்டவர்கள், தாங்கள் பட நேர்ந்த காயங்களுக்கு, முறையற்ற/தரமற்ற/சரியில்லாத (கட்டடக்) கட்டுமானம் காரணமெனக் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இதைப் பற்றி என்ன சொல்லப் போகிறீர்கள்?

15. கட்டடங்களின் 'A' தொகுதியையும், 'B' தொகுதியையும் வாங்கியுள்ளவர்கள், தாங்கள் மிகப்பெரும் விலை தந்து சொத்து வாங்கியுள்ளதாகக் கூட்டாகவும்/தங்கள் சங்க அமைப்புக்கள் மூலமும்/தனிப்பட்ட முறையிலும் அளித்துள்ள வாக்குமூலங்களில் பதிவு செய்துள்ளனர்.

ஆனால் 'B' தொகுதிக் கட்டடம் இடிந்து விழுந்ததன் காரணமாகவும் (எந்த நேரத்தில் இந்தத் தொகுதியும் இடிந்து விழுமோ என்று அச்சுறுத்துகின்ற வகையில்) உறுதித் தன்மை பற்றிய உறுதியில்லாத நிலையிலுள்ள 'A' கட்டடத் தொகுதியினாலும் தாங்கள் வீதிக்கே வந்துவிட்டதாக பாதிக்கப்பட்டவர்கள் கூறியுள்ளனர்!

விடையுண்டா தங்களிடம் இதற்கு?

16. முறையற்ற/ஒழுங்கில்லாத திட்டமிடலும், அவ்வழியமைந்த செயல்முறையும் கட்டடம் இடிந்து விழுந்ததற்குக் காரணங்கள் என சிறப்பு புலனாய்வுக் குழுவானது தனது புலனாய்வில் கண்டறிந்துள்ளது.

கட்டட வீழ்ச்சியானது **61** பேர்களை உயிர்ப்பலி கொண்டது; **21** பேர்களுக்குக் காயங்களை ஏற்படுத்தியது. கட்டட 'B' தொகுதிக்கு அண்மையில் உள்ள வசிப்பிடங்களை நாசப்படுத்தியது. பல அப்பாவிகள் காயம்படவும் காரணமாகியது; பாதிக்கப்பட்டவர்கள் பதறுகிறார்கள், கூக்குரலிடுகிறார்கள்; இவையனைத்திற்கும், கட்டுநர், கட்டடக் கலைஞர்கள் மற்றும் பொறியாளர்களே பொறுப்பு என்று பொங்கி எழுகிறார்கள்!

தாங்கள் என்ன பதில் தரப்போகிறீர்கள்?

17. கட்டமைப்புப் பொறியாளரான திரு நாகேஷ், கட்டடம் கட்டுதற்கான கட்டுமான விவரங்களைச் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அவற்றை ஆய்ந்து அதனடிப்படையில் ஒப்புதல் அளித்து, அரசாங்கமும் கட்டடம் கட்ட அனுமதி வழங்கியிருந்த நிலையில், அவற்றைப் பின்பற்றாமலும், கட்டுமானப் பொறியாளர் அனுமதி பெற்ற வண்ணம் அந்தத் திட்டத்தைத் தொடர அனுமதிக்கப்படாமலும் போனது ஏன்?

18. திரு நாகேஷ் அல்லாத வேறொரு கட்டமைப்புப் பொறியாளரிடம் அப்பணி ஒப்படைக்கப்பட்டு, முற்றிலும் மாறான வரைபடத்தின் அடிப்படையில் ஏன் அப்பணி செய்து முடிக்கப்பட்டது?

19. பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் அளிக்கப்பெற்று, குழுமத்தின் ஒப்புதல் பெற்ற திட்டத்தின் அடிப்படையிலல்லாது ஏன் மாறுபாடான முறையில் கட்டடத்திற்கான அடித்தளம் எழுப்பப்பட்டது.

மாற்றத்தை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் ஏன் தெரிவிக்கவில்லை?

திருத்தங்களுக்கான அனுமதியை குழுமத்திடம் ஏன் கோரிப் பெறவில்லை?

விளக்கம் தேவை.

20. மண் பரிசோதனையை மேற்கொண்ட சென்னை அரவிந்த் அசோசியேட்ஸ் நிறுவனம் அடிக்கட்டுமான அமைப்பானது 400 மி.மீ/300 மி.மீ விட்டங்கொண்ட நிலத்தூண்களைக் கொண்டு அமைக்கப்பட வேண்டுமென்று பரிந்துரைத்துள்ளது. அவ்வாறிருக்க இதிலிருந்து விலகி வேறொரு அடிக்கட்டுமான அமைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதற்கான காரணங்களை விளக்க முடியுமா?

21. தூணைத் தாங்குதற்கு 18 மீட்டர் நீளங்கொண்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிலத்தூண்களுக்கான ஓர் உறுதியான அடுக்குவரையில் ஆழ்துளை நிலத்தூண்களுடன் கூடிய அடித்தள முறையைக் குறிப்பிட்டு கட்டமைப்புப் பொறியாளரான திரு. நாகேஷ் தம்முடைய கட்டமைப்பு வரைபடத்தைத் தயாரித்து திட்ட அனுமதி விண்ணப்பத்துடன் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்துக்கு அளித்திருந்தார். ஏன் இதனைப் பின்பற்றவில்லை? இதற்கு விளக்கம் தருக.

22. யாருடைய திட்டத்தின் வடிவமைப்பில் இக்கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதோ, அந்த கட்டமைப்புப் பொறியாளர், கட்டடப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது குறித்த கால இடைவெளியில் ஆய்வு செய்ய ஏற்பாடுகள் செய்து தரப்பட்டனவா? அப்படியாயின் கட்டமைப்புப் பொறியாளர் மேற்கொண்ட ஆய்வுகளின் விவரங்களைத் தேதி வாரியாக அளித்திடுங்கள். இதைப்பற்றிய பதிவுருக்கள் ஏதேனும் தாங்கள் வைத்துள்ளீர்களா?

23. கட்டுமானத் திட்டம் செயலாக்கப்படுத்தப்பட்டபோது, கட்டமைப்புப் பொறியாளரின் வரைபடத்திலுள்ள விவரங்களிலிருந்து தாங்கள் விலகி வேறுபட்டுச் சென்றுள்ளீர்களா?

அப்படியாயின் கட்டமைப்புப் பொறியாளரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வந்துள்ளீர்களா?

24. கட்டி முடிக்கப்பட்ட கட்டுமானக் கூறுகளின் மீதான கட்டமைப்புப் பொறியாளரின் கூர்நோக்கு ஏதேனும் இருந்ததா? அவர் ஏதேனும் தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்தங்கள் பற்றிய அறிவுரைகள் வழங்கியுள்ளாரா?

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அனுப்புநர்

20.08.2014

எம். முத்துகாமாட்சி,
நிர்வாக இயக்குநர்,
M/s. பிரைம் சிருஷ்டி ஹவுஸிங் பிரைவேட் லிமிடெட்.

பெறுநர்

மாண்பமை நீதியரசர் R. ரெகுபதி விசாரணை ஆணையம்,
(மௌலிவாக்கம்),
NCB-1, P.S. குமாரசாமி ராஜா சாலை,
சென்னை-600 028.

மேன்மை மிகு ஐயா,

கடந்த இரண்டு நாட்களில் சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத் திட்ட வரைபடம், தொழில் நுட்ப வல்லுநர்கள் அறிக்கை, சுகன்யா மற்றும் நாகேஷ் இவர்களின் அறிக்கைகள், இவற்றையெல்லாம் நான் படித்துப் பார்த்துள்ளேன் என்பதைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். என்னிடமிருந்து கோரப்பட்டுள்ள தொழில் நுட்ப விவரங்கள், தொழில் நுட்ப வல்லுநர்களால் மட்டுமே வழங்கப்பட முடியும். மேலும், திட்டத் தொடர்பான எல்லா ஆவணங்களும் கட்டடத் தொகுதி 'A'ஐ அடுத்துள்ள திட்டப் பணி அலுவலகத்தில் இருந்தன. கட்டடம் இடிந்து விழுந்தபோது, அத்திட்டப்பணி அலுவலகத்தை உடனே அரசு அலுவலர்கள் தம் பொறுப்பில் எடுத்துக்கொண்டு விட்டனர்.

நீதிமன்றக் காவலில் மிகுந்த மனஅழுத்தத்தில் இருந்து வருவதைக் கருதியும், எங்களுடைய தனிப்பட்ட/சொந்தப் பதிவுருக்கள் என்வசம் எதுவும் இல்லை என்றளவிலும், என்னால் தங்களுக்கு தெளிவாக நினைவுகூர்ந்து பதிலிறுக்க இயலவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

xxxxxxxxx

(ஒப்பம்) M.முத்துகாமாட்சி

திரு M. பாலகுருசாமிக்கான வினாக்கள்

1. தொடக்கத்தில் திரு எஸ்.நாகேஷ் என்பவரை கட்டட அமைப்பிற்குரிய வடிவமைப்பு (உருவாக்கல்) / வரைபடம் எழுதுதல் பணிக்கு அமர்த்தியிருந்தார்கள் . அவர் தயாரித்த வரைபடமானது திட்ட வரைபட அனுமதிக்காக சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் அளிக்கப்பட்டுள்ளது. இல்லையா?

2. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் (சமர்ப்பிக்கப்பட்ட) அளிக்கப்பட்டுள்ள வரைபடங்களில் திரு எஸ்.நாகேஷ் மற்றும் திருமதி B.சுகன்யா என்னும் கட்டடக் கலைஞர்களின் கையொப்பங்கள் இடம் பெற்றுள்ளன / அப்படித்தானே?

3. பிறகு கட்டடம் கட்டுவதற்கான பணியை திரு வெங்கட சுப்பிரமணியத்திடம் விடுத்துள்ளீர்கள்! திரு பர்கோத்ரா என்பவரிடம் நீங்கள் விரும்பியவண்ணம், கட்டுமானப் பணி குறித்து கட்டடக்கலைக்கான வடிவமைப்பை/வரைபடத்தை மாற்ற கலந்து ஆலோசித்துள்ளீர்கள். அந்த நோக்கத்திற்காகவே திரு. வெங்கடசுப்பிரமணியனின் சேவையைப் பயன்படுத்தியுள்ளீர்கள். திரு. வெங்கட சுப்பிரமணியனோ, திரு. நாகேஷ் கொடுத்திருந்த கட்டடக்கலை வடிவமைப்பில்/வரைபடத்தில் பல மாற்றங்களைச் செய்துள்ளார். இது சரியா?

4. திருத்தப்பெற்ற கட்டுமான வடிவமைப்பும் பின்னர் மாற்றப்பட்டுள்ளது! அதன் மூலம் தூண்களின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டுள்ளது. இது குறித்து தங்கள் கருத்து என்ன?

5. ஆணையத்தின் முன்பாக திரு. எஸ்.நாகேஷ் அளித்துள்ள வாக்குமூலமானது / அறிக்கையானது கட்டுமான வடிவமைப்பில் இடம்பெற்றுள்ள குறிப்பீடுகளில், திரு. வெங்கடசுப்பிரமணியம் மேற்கொண்டவற்றிற்கும், அவர்தாம் (எஸ்.நாகேஷ்) வழங்கியிருந்ததற்கும் இடையே உள்ள வேறுபாடுகளைத் தெள்ளத்தெளிவாக நிரூபிக்கின்றன.

அவை பின்வருமாறு:-

"அடித்தள அமைப்பில் நாகேஷ் என்கிற நான் தந்திருந்த அளவீட்டுக் குறிப்பீடுகளாவன:-

நிலத்தூண் ஆழம் .. 59 அடி
நிலத்தூண் விட்டம் .. 20 அடி
பாதுகாப்பு தாங்கு திறன் .. 105 டன்கள்

ஆனால், திருவெங்கடசுப்பிரமணியத்தின் வரைபடமோ இவ்வாறு நிர்ணயம் செய்துள்ளன:-

நிலத்தூண் .. 13" கனம்
(குறுக்கு வெட்டுவிட்டம்) நிலத்தூண் விட்டம் .. 12"
பாதுகாப்பான தாங்குதிறன் அதில் குறிப்பிடப்படவில்லை.
65 எண்ணிக்கை கொண்ட நிலத்தூண்கள்
தெப்பலகம் 13"
தெப்ப உத்தரம் - 13" x 2' 2" உயரம்

இவையே திரு வெங்கடசுப்ரமணியம் கருதிய அளவைகள்.

வலிவு, ஊக்கம் பற்றிய விவரங்கள் அவரால் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

இதைத்தவிர, எனது தூண் வடிவமைப்பின்படி, 1' x 2' கொண்ட நிலப்பரப்பில் 25 மி.மீ விட்டங் கொண்ட, 8 முறுக்குக் கம்பிகளைக்கொண்டு, M35 தர உறுதிப்பாட்டுடன் 60 தூண்கள், ஒவ்வொன்றிற்குமிடையே உயரளவு இடைவெளி 20' (20 அடிகள்) இருக்கும் வகையில் எழுப்பப்பட வேண்டும்.

ஆனால் M 25 உறுதிப்பாடு கொண்ட முறுக்குக் கம்பிகளைக் கொண்டு எழுப்பப்பட்ட 38 தூண்கள் ஒவ்வொன்றிற்கும் இடையே உயரளவாக 23 அடி இடைவெளி விடப்பட்டுள்ளது. மேலும் மேலிருந்து கீழாக இரண்டு தொங்கு தூண்களும் அமைக்கப்பட்டுள்ளன.

எனது வரைபடத்தில் கூரைத் தளத்தினுடைய பருமன் 5 அங்குலம் என்று குறிப்பிடப் பட்டிருந்தது. ஆனால் திரு வெங்கடசுப்பிரமணியத்தின் வரைபடத்தில் கூரைத்தளத்தினுடைய பருமன் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. என்னுடைய வரைபடத்தின் தேவைப்படி ஒவ்வொரு கட்டடத்திற்கும் தனித்தனி அடிக்கட்டுமானம் வலியுறுத்தப்பட்டிருந்தது.

திரு.வெங்கடசுப்பிரமணியத்தின் வரைபடத்தில் இரு கட்டடத் தொகுதிகளுக்கும் பொதுவான 'RAFT' 'ராப்ட்' அடிக்கட்டுமானம் கட்டப்பட்டுள்ளது. இதைத்தவிர, தாங்கி நிற்கும் சுவரிலிருந்து, தொங்கு தூண் அமைக்கப்பட்டிருந்தது. எனவே, இந்தத்தூணின் பளு தாங்கி நிற்கும் தூணை அழுத்துகிறது.

இதற்கு உங்களுடைய பதிலென்ன?

6. திருஷ்டிகம் ஆர்க்கிடெக்சுரல் கம்யூனிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.பர்கோத்ராவை நீங்கள் பணியில் அமர்த்தியுள்ளீர்கள்/நியமித்துள்ளீர்கள். அந்த நிறுவனத்தில் திட்ட கட்டடக் கலைஞராகப் பணிபுரிந்து வந்த திருமதி B.சுகன்யாவோ கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் தந்துள்ளார்:-

" கட்டடக் கட்டுமானப் பணி எனது வேலைத் திட்ட வரையறையில் ஒரு பகுதி அல்ல. சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு (B) 'பி' கட்டடத் தொகுதிக்கான ஒப்புதல் கோரி நாங்கள் அனுப்பியிருந்த வரைபடத்தில் 46 தூண்கள் இருந்தன. கட்டடம் மேற்குறித்த/மேற்குறிப்பிட்ட வரைபடத்தின்படி கட்டப்படவில்லை. கட்டுமானதாரர் கேட்டுக் கொண்டதற்கு இணங்கி, திரு விஜய் பர்கோத்ரா ஊர்தி வழிப்பாதை அமைப்பதற்காகத் தூண்களின் எண்ணிக்கையை 37 ஆகக்குறைத்தார். நான் என்னுடைய மேலாண் இயக்குநர் திரு விஜய் பரிகோத்ராவிடம் இது குறித்துப் பேசினேன். ஊர்தி நிறுத்துமிடம் அமைப்பதற்காக அவ்வாறு செய்யப்பட்டுள்ளதாகவும், இது குறித்து வெங்கடசுப்பிரமணியத்திடம் பேசுமாறும் என்னிடம் கூறினார். நான் வெங்கடசுப்ரமணியத்திடம் பேசும்போது, தூண்களின் எண்ணிக்கையைக் குறைப்பதால் கட்டடத்தின் உறுதி பாதிக்கப்படாதா எனக் கேட்டேன். அதற்கு வெங்கடசுப்பிரமணியம் என்னிடம் எனது மேலாண் இயக்குநர்தான் ஊர்தி வழிப்பாதைக்கு இடம் வேண்டி தூண்களின் எண்ணிக்கையைக் குறைத்ததாகவும், இது குறித்து அவரே (வெங்கட சுப்பிரமணியமே) கட்டுமான வடிவமைப்பின்போது கவனமெடுத்துப் பார்த்துக் கொள்வதாகவும் தெரிவித்தார். வெங்கடசுப்ரமணியம் என்னிடம் கூறியதை நான் எனது மேலாண் இயக்குநரிடம் தெரிவித்தேன். கட்டுமான வடிவமைப்பு குறித்து எனக்கு அடிப்படை அறிவு மட்டுமே உள்ளது. இப்பிரச்னை குறித்து வெங்கடசுப்ரமணியம் பார்த்துக் கொள்வார் என நான் நினைத்தேன்.

மேலும் 11 மாடிக் கட்டடம் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஒப்பளிப்பு வழங்கிய வரைபடத்தின்படி கட்டப்படவில்லை. அவ்வப்போது, எனது மேலாண் இயக்குநர் திரு விஜய் பர்கோத்ராவும், திரு வெங்கடசுப்பிரமணியமும் விவாதித்து வரைபடங்களைத் தயார் செய்தனர். நான் ஊதியத்திற்குப் பணிபுரியும் ஒரு பணியாளராக இருந்ததால் அவர்கள் கூறியபடி வரைபடங்களைத் தயாரித்தேன். கட்டுமானம் நடைபெறுகிற புலத்திற்கு நான் மூன்று, நான்கு முறைகள் சென்று பார்த்தேன். பொறியாளர்கள் சங்கர் இராமகிருஷ்ணனும், தினேசும்

வழக்கமாக கட்டுமான புலத்தில் இருப்பார்கள். நான் கடைசியாக கட்டுமானப் புலத்துக்குச் சென்றபோது (A) 'ஏ' கட்டடத் தொகுதிக்கான அடிமானப் பணி பாதி முடிவடைந்திருந்தது. (B) 'பி' தொகுதிக்கான அடித்தளம் மற்றும் தரை, நடுத்தளம் (Stilt) கட்டி முடிக்கப்பட்டிருந்தது. தரைத் தளத்திற்கான செங்கற்பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. மேலும் (B) 'பி' கட்டடத் தொகுதியில் 'எல்' மற்றும் 'எம்' தூண்களுக்கு நடுவில் தாங்கு சுவரில் மிதவைத் தூண் ஒன்று எழுப்பப்பட்டிருந்தது. மிதவைத் தூண் அமைப்பது சரியா என்றும், அது கட்டடத்தின் உறுதிப்பாட்டினை பாதிக்காதா என்றும், அது 11 மாடிக்கான (தளங்களுக்கான) சுமையைத் தாங்குமா என்றும் நான் வெங்கடசுப்பிரமணியத்தைக் கேட்டேன். அதற்கு வெங்கடசுப்பிரமணியமோ, அது ஒரு பிரச்சினையே இல்லையென்றும், அதை அவர் பார்த்துக் கொள்வதாகவும் கூறினார். வெங்கடசுப்பிரமணியம் என்னிடம் கூறியதை நான் எனது மேலாண் இயக்குநருக்குத் தெரிவித்தேன்.

நாகேஷின் கட்டுமான வடிவமைப்பின்படி தூணின் அளவு 1' x 2'. ஆனால் வெங்கடசுப்பிரமணியத்தின் கட்டுமான வடிவமைப்பின்படி தூணின் அளவு 1' x 1' 0,6" எனக்கொடுக்கப்பட்டிருந்தது. மாற்றியமைக்கப்பட்ட தூண் அளவு 11 மாடிக் கட்டடம் ஒன்றுக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை என நான் எனது மேலாண் இயக்குநர் திரு விஜய் பர்கோத்ராவிடம் கூறினேன். அதற்கு எனது மேலாண் இயக்குநர், அதை கட்டுமானப் பொறியாளர் திரு வெங்கடசுப்பிரமணியம் பார்த்துக்கொள்வார் எனத் தெரிவித்தார். கட்டடத்திற்கு நிலத்தூண் அடிமானம் ஒன்றினையும் நாகேஷ் குறிப்பிட்டிருந்தார். நாகேஷ் அவரது கட்டட உறுதிச் சான்றில் 18 மீட்டர் ஆழமுள்ள நிலத்தூண் அடிமானத்தைக் காட்டியிருந்தார். பின்னாளில், வெங்கடசுப்பிரமணியம், அவரது அடிமான வடிவமைப்பில் 4 மீட்டர் ஆழமுள்ள நிலத்தூண் அடிமானத்தைக் குறிப்பிட்டுள்ளார். எனவே, அடிமானம் 18 மீட்டருக்குப் பதிலாக 4 மீட்டர் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. இது குறித்து திரு வெங்கடசுப்பிரமணியத்திடம் பேசுமாறு எனது மேலாண் இயக்குநரிடம் கூறினேன். அதற்கு கட்டுமானதாரர் மனோகரும், கட்டுமானப் பொறியாளர் வெங்கடசுப்பிரமணியமும் இப்பிரச்சினைகள் குறித்துப் பார்த்துக்கொள்வார்கள் என்றும், நாம் இதில் அதிகமாகச் சொல்லிக் கொள்வதற்கில்லை என்றும் எனது மேலாண் இயக்குநர் கூறினார். கட்டடம் உரிய முறையில் வடிவமைக்கப்படாததாலும் எவ்விதக் காரணங்களும் இன்றித் தூண்களின் எண்ணிக்கையைக் குறைத்ததாலுமே கட்டட உறுதி பாதிக்கப்பட்டு, சுமையைத் தாங்க இயலாமல் கட்டடம் இடிந்து விழுந்தது.

இதற்கு உங்கள் பதிலென்ன?

7. திரு. இலட்சுமணமூர்த்தி என்னும் கட்டடக் கலைஞர் தனது வாக்குமூலத்தில், சென்னைப் பெருநகர வளர்ச்சிக்குழுமத்திடம் தாங்கள் ஒப்புதல் பெற வேண்டி அளித்துள்ள வரைபடங்கள் ஒன்றில் அவரது பெயரையும் பொய்யாகப் பயன்படுத்தியுள்ளீர்கள் என்று பதிவு செய்திருக்கிறார்.

இதற்கான தங்கள் பதிலென்ன?

8. திரு.ஐயப்பன் என்னும் தெழிலாளர் மேன்முறையாள் (Foreman) ஆணையத்தின்முன் அளித்துள்ள வாக்குமூலத்தில் 4m x 1" விட்ட அளவில் 17 நிலத்தூண்களைத்தான் பதித்துள்ளதாகக் கூறியுள்ளார். மேலும் நிலத்தூண்களைப் பதியவைக்கத் தான் மேற்கொண்ட இடமானது தளர்ச்சியானதும், உதிரியானதுமான மண்ணும் மணலும் நிறைந்த இடமாக இருந்ததால் அப்பணியை செவ்வனே செய்து முடிக்கப்பட முடியாமல் தான் அரைகுறையாக நிறுத்த வேண்டியதாயிற்று என்றும் அவர் கூறியுள்ளார்.

தொடர்ந்து அவர் குறிப்பிடுகையில், தங்களுடைய அறிவுறுத்துதலின் பேரில் அவர் எழுப்பியுள்ள/பதித்து முடித்துள்ள நிலத்தூண் சுற்றுச் சுவராக எழுப்ப மட்டுமே தகுதியானதென்றும், பல மாடி கட்டடத்திற்கு ஏற்றதில்லை என்றும் தெளிவாக்கியுள்ளார்.

இதற்குத் தங்கள் விடை என்ன?

9. தாங்கள் பணியமர்த்தியுள்ள திரு ஏழுமலை என்பவர் தனது வாக்குமூலத்தில் 3m x 1" விட்ட அளவில் (முப்பது) 30 நிலத்தூண்களுக்கு அடித்தளம் நிறுவியுள்ளதாகக் கூறியுள்ளார். மண்ணும் மணலும் நிறைந்த அந்தப் பகுதியில் பதிக்கப்படும் நிலத்தூண் சுற்றுச் சுவர் எழுப்ப மட்டுமே (compound wall) தகுதியானதென்று கூறியுள்ளார்.

இது குறித்த தங்கள் பதில் என்ன?

10. இரும்புக் கம்பிகளை வளைக்கும் பணியில் தாங்கள் ஈடுபடுத்தியிருந்த திரு.மாரி என்னும் ஒருவர், வரைபடத்தில் காட்டியுள்ள தூண்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லையென்றும், அந்தக் குறைவான எண்ணிக்கை கொண்ட தூண்கள் பளுவைத் தாங்கும் சக்தியற்றவை என்றும் கூறியுள்ளார்.

இது பற்றித் தாங்கள் கூறுவதென்ன?

11. தாங்கள் பணியமர்த்திய திரு.மணி என்னும் கொத்தனார், காரைக்கட்டு/திண்காரை/பசைமண் கூழாங்கற் கலவைப் பிழம்புப் பாளங்கள் கடினமான/கெட்டிப்பட 15 நாட்கள் மட்டுமே கால அவகாசம் தாங்கள் தந்துள்ளதாகவும், ஆனால் அக்காரைப் பாளங்கள் உறுதிப்பட/இறுகிட 25 நாட்கள் தேவைப்படுமெனவும், கட்டடம் இடிந்து விழுதற்கான காரணங்களுள் இதுவும் ஒன்றாக அமைந்துவிட்டதாகவும் கூறியுள்ளார்.

இதைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

12. தாங்கள் பணியமர்த்திய கொத்தனார் திரு மணி என்பார், தூண்கள் போதிய அளவில் ஆன எண்ணிக்கையில் இல்லையெனவும், உட்சுற்று இரும்புக் கம்பி வளையங்களைக் கொண்ட தூண்கள் போதிய அளவிலான நிலத்தூண்களுடன் இணைக்கப்படவில்லையெனவும், காரைக் கட்டு/திண்காரை (concrete) கலவையில் மணலுக்குப் பதிலாக நிலக்கரிச் சாம்பல் பயன்படுத்தப் பட்டுள்ளதெனவும், சரியான விகிதத்தில் கலவை (காரைக்கலவை) அமைந்திருக்கவில்லையெனவும், சாதாரண செங்கலுக்குப் பதிலாக நிலக்கரிச் சாம்பல் செங்கல் (கட்டிகள்) பயன்படுத்தப்பட்டதன் விளைவாக எடை அளவுக்குமேல்கூடிப் போனதாகவும், போதிய அளவிலான தூண்கள் இல்லாது போனதால் அவை சுமையைத் தாங்க முடியாது போய்விட்டதாகவும், தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

நேரில் பார்த்த சாட்சியாக உள்ள அவர், கட்டடத்தின்படிக்கட்டுகள் (படிக்கட்டுகள் பகுதி) இரண்டு பகுதிகளாகப் பிளவு பட்டதால் கட்டடம் திடீரெனக் கீழே இடிந்து வீழ்ந்தது எனத் தெரிவித்துள்ளார்.

இதற்கு என்ன விடை சொல்லப் போகிறீர்கள்?

13. கட்டடத்தின் 'B' தொகுதி இடிந்து விழுந்ததில், அண்டையிலுள்ளோரின் வசிப்பிடப் பகுதியின்மீது வீழ நேரிட்டதால், அவர்களது வசிப்பிடமும், சொத்துக்களும் சேதத்திற்குள்ளாயின.

கட்டடம் இடிந்து விழுந்ததற்கு முறையற்ற/சரியில்லாத கட்டுமானம் காரணமாக அமைந்துள்ளது எனக் குற்றங் சாட்டப்பட்டுள்ளது.

தங்கள் பதில் என்ன?

14. கட்டடம் இடிந்து விழுந்ததில் காயம்பட்டவர்கள், தாங்கள் பட நேர்ந்த காயங்களுக்கு, முறையற்ற/தரமற்ற/சரியில்லாத (கட்டடக்) கட்டுமானம் காரணமெனக் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இதைப் பற்றி என்ன சொல்லப் போகிறீர்கள்?

15. கட்டடங்களின் 'A' தொகுதியையும், 'B' தொகுதியையும் வாங்கியுள்ளவர்கள், தாங்கள் மிகப் பெரும் விலை தந்து சொத்து வாங்கியுள்ளதாகக் கூட்டாகவும்/தங்கள் சங்க அமைப்புக்கள் மூலமும்/தனிப்பட்ட முறையிலும் அளித்துள்ள வாக்குமூலங்களில் பதிவு செய்துள்ளனர்.

ஆனால் 'B' தொகுதிக் கட்டடம் இடிந்து விழுந்ததன் காரணமாகவும் (எந்த நேரத்தில் இந்தத் தொகுதியும் இடிந்து விழுமோ என்று அச்சுறுத்துகின்ற வகையில்) உறுதித் தன்மை பற்றிய உறுதியில்லாத நிலையிலுள்ள 'A' கட்டடத் தொகுதியினாலும் தாங்கள் வீதிக்கே வந்துவிட்டதாக பாதிக்கப்பட்டவர்கள் கூறியுள்ளனர்.

விடையுண்டா தங்களிடம் இதற்கு?

16. முறையற்ற/ஒழுங்கில்லாத திட்டமிடலும், அவ்வழியமைந்த செயல்முறையும் கட்டடம் இடிந்து விழுந்ததற்குக் காரணங்கள் என சிறப்பு புலனாய்வுக் குழுவானது தனது புலனாய்வில் கண்டறிந்துள்ளது.

கட்டட வீழ்ச்சியானது 61 பேர்களை உயிர்ப்பலி கொண்டது; 21 பேர்களுக்குக் காயங்களை ஏற்படுத்தியது. கட்டட 'B' தொகுதிக்குஅண்மையில் உள்ள வசிப்பிடங்களை நாசப்படுத்தியது. பல அப்பாவிகள் காயம்படவும் காரணமாகியது; பாதிக்கப் பட்டவர்கள் பதறுகிறார்கள், கூக்குரலிடுகிறார்கள்; இவையனைத்திற்கும், கட்டுநர், கட்டடக் கலைஞர்கள் மற்றும் பொறியாளர்களே பொறுப்பு என்று பொங்கி எழுகிறார்கள்.

தாங்கள் என்ன பதில் தரப் போகிறீர்கள்?

17. கட்டமைப்புப் பொறியாளரான திரு நாகேஷ், கட்டடம் கட்டுதற்கான கட்டுமான விவரங்களைச் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அவற்றை ஆய்ந்து அதனடிப்படையில் ஒப்புதல் அளித்து, அரசாங்கமும் கட்டடம் கட்ட அனுமதி வழங்கியிருந்த நிலையில், அவற்றைப் பின்பற்றாமலும், கட்டுமானப் பொறியாளர் அனுமதி பெற்ற வண்ணம் அந்தத் திட்டத்தைத் தொடர அனுமதிக்கப்படாமலும் போனது ஏன்?

18. திரு நாகேஷ் அல்லாத வேறொரு கட்டமைப்புப் பொறியாளரிடம் அப்பணி ஒப்படைக்கப்பட்டு, முற்றிலும் மாறான வரைபடத்தின் அடிப்படையில் ஏன் அப்பணி செய்து முடிக்கப்பட்டது?

19. பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் அளிக்கப்பெற்று, குழுமத்தின் ஒப்புதல் பெற்ற திட்டத்தின் அடிப்படையில்லாது ஏன் மாறுபாடான முறையில் கட்டடத்திற்கான அடித்தளம் எழுப்பப்பட்டது.

மாற்றத்தை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் ஏன் தெரிவிக்கவில்லை?

திருத்தங்களுக்கான அனுமதியை குழுமத்திடம் ஏன் கோரிப் பெறவில்லை?

விளக்கம் தேவை.

20. மண் பரிசோதனையை மேற்கொண்ட சென்னை அரவிந்த் அசோசியேட்ஸ் நிறுவனம் அடிக்கட்டுமான அமைப்பானது 400 மி.மீ/300 மி.மீ விட்டங்கொண்ட நிலத்தூண்களைக் கொண்டு அமைக்கப்பட வேண்டுமென்று பரிந்துரைத்துள்ளது. அவ்வாறிருக்க இதிலிருந்து விலகி வேறொரு அடிக்கட்டுமான அமைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதற்கான காரணங்களை விளக்க முடியுமா?

21. தூணைத் தாங்குதற்கு 18 மீட்டர் நீளங்கொண்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிலத்தூண்களுக்கான ஓர் உறுதியான அடுக்குவரையில் ஆழ்துளை நிலத்தூண்களுடன் கூடிய அடித்தள முறையைக் குறிப்பிட்டு கட்டமைப்புப் பொறியாளரான

திரு. நாகேஷ் தம்முடைய கட்டமைப்பு வரைபடத்தைத் தயாரித்து திட்ட அனுமதி விண்ணப்பத்துடன் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்துக்கு அளித்திருந்தார். ஏன் இதனைப் பின்பற்றவில்லை? இதற்கு விளக்கம் தருக.

22. யாருடைய திட்டத்தின் வடிவமைப்பில் இக்கட்டடப் பணிகள் மேற்கொள்ளப் பட்டதோ, அந்த கட்டமைப்புப் பொறியாளர், கட்டடப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது குறித்த கால இடைவெளியில் ஆய்வு செய்ய ஏற்பாடுகள் செய்து தரப்பட்டனவா? அப்படியாயின் கட்டமைப்புப் பொறியாளர் மேற்கொண்ட ஆய்வுகளின் விவரங்களைத் தேதி வாரியாக அளித்திடுங்கள். இதைப்பற்றிய பதிவுருக்கள் ஏதேனும் தாங்கள் வைத்துள்ளீர்களா?

23. கட்டுமானத் திட்டம் செயலாக்கப் படுத்தப்பட்டபோது, கட்டமைப்புப் பொறியாளரின் வரைபடத்திலுள்ள விவரங்களிலிருந்து தாங்கள் விலகி வேறுபட்டுச் சென்றுள்ளீர்களா?

அப்படியாயின் கட்டமைப்புப் பொறியாளரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வந்துள்ளீர்களா?

24. கட்டி முடிக்கப்பட்ட கட்டுமானக் கூறுகளின் மீதான கட்டமைப்புப் பொறியாளரின் கூர்நோக்கு ஏதேனும் இருந்ததா? அவர் ஏதேனும் தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்தங்கள் பற்றிய அறிவுரைகள் வழங்கியுள்ளாரா?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அனுப்புநர் 20.08.2014

எம். பாலகுருசாமி,
இயக்குநர்,
M/s. பிரைம் சிருஷ்டி ஹவுஸிங் பிரைவேட் லிமிடெட்.

பெறுநர்

மாண்பமை நீதியரசர் R. ரெகுபதி விசாரணை ஆணையம்,
(மௌலிவாக்கம்),
NCB-1, P.S. குமாரசாமி ராஜா சாலை,
சென்னை-600 028.

மேன்மை மிகு ஐயா,

கடந்த இரண்டு நாட்களில் சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத் திட்ட வரைபடம், தொழில் நுட்ப வல்லுநர்கள் அறிக்கை, சுகன்யா மற்றும் நாகேஷ் இவர்களின் அறிக்கைகள், இவற்றையெல்லாம் நான் படித்துப் பார்த்துள்ளேன் என்பதைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். என்னிடமிருந்து கோரப்பட்டுள்ள தொழில் நுட்ப விவரங்கள், தொழில் நுட்ட வல்லுநர்களால் மட்டுமே வழங்கப்பட முடியும். மேலும், திட்டத் தொடர்பான எல்லா ஆவணங்களும் கட்டடத் தொகுதி 'A'ஐ அடுத்துள்ள திட்டப் பணி அலுவலகத்தில் இருந்தன. கட்டடம் இடிந்து விழுந்தபோது, அத்திட்டப்பணி அலுவலகத்தை உடனே அரசு அலுவலர்கள் தம் பொறுப்பில் எடுத்துக் கொண்டு விட்டனர்.

நீதிமன்றக் காவலில் மிகுந்த மனஅழுத்தத்தில் இருந்து வருவதைக் கருதியும், உங்களுடைய தனிப்பட்ட/சொந்தப் பதிவுருக்கள் என்வசம் எதுவும் இல்லை என்றளவிலும், என்னால் தங்களுக்கு தெளிவாக நினைவுகூர்ந்து பதிலிறுக்க இயலவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்.றேன்.

தங்கள் உண்மையுள்ள,

xxxxxxxxx

(ஒப்பம்) M.பாலகுருசாமி

திரு. வெங்கடசுப்பிரமணியத்திடம் கேட்கப்பட்ட கேள்விகள்

1. சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்திடம் அளிக்கப்பட்ட வரைபடங்களில் கட்டடக் கலைஞர் திரு எஸ்.நாகேஷ் கையொப்பம் உள்ளது. அப்படியா?

2. உங்களிடம் கட்டமைப்பு வடிவமைப்பு சார்ந்த பணியை திரு.மனோகரன் கொடுத்துள்ளார். திரு. பர்கோத்ரா மனோகரனுடன் இது பற்றிப்பேசி, கட்டமைப்பு வடிவமைப்பு/வரைபடங்களை உண்மையிலேயே கட்டுமானத்திற்கு ஏற்றவாறு மாற்றிக் கொடுக்கச் சொல்லவும், திரு. நாகேஷ் கொடுத்த கட்டமைப்பு வடிவமைப்பு / வரைபடங்களில் பல்வேறு மாற்றங்களைச் செய்வதற்காகவும் மட்டுமே உங்கள் சேவையினை திரு. பர்கோத்ரா பயன்படுத்திக் கொண்டார். இது சரியா?

3. இந்த ஆணையத்தின் முன்பு திரு. எஸ்.நாகேஷ் அளித்த வாக்குமூலத்தின்படி, கட்டமைப்பு வடிவமைப்பின் அளவீடுகளில் அவர் அளித்த விவரங்களுக்கும், நீங்கள் அளித்த அளவீடுகளுக்கும் இடையில் சில வேறுபாடுகள் உள்ளன. ஆனால், திரு. நாகேஷ் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

கடைக்காலைப் பொறுத்தவரை, அடுக்கு ஆழம் 59', 20' சுற்றளவு, பாதுகாப்பான தாங்குதிறன் 105 டன்" என்று நான் குறித்திருந்தேன். திரு. வெங்கடசுப்பிரமணியத்தின் வரைபடத்தில் அடுக்கு 13" ஆழம், 12" சுற்றளவு என்று உள்ளது. பாதுகாப்பான தாங்குதிறன் கொடுக்கப்படவில்லை. 65 அடுக்குகள், ராப்ட்ஸ்லாப் (Rough slab 13" ராப்ட் பீம் Raft Beam 13" x 2' 2" உயரம் என்று அவரது அளவீடுகள் மட்டும் கொடுக்கப்பட்டு, மறு நிலைப்பு பற்றிய விவரங்கள் தெளிவாக குறிக்கப்படவில்லை. இது தவிர, என்னுடைய தூண் வடிவமைப்பில் 1'x0'x2'0' மனை மற்றும் 25 மி.மீ. குறுக்களவுள்ள 8 எண்ணிக்கையுள்ள ரீபார்கள் M35 கிரேடு கான்கிரீட்டுடன் 60 தூண்கள் மற்றும் தூண்களுக்கிடையில் அதிகளவான இடைவெளி 20' கொடுக்கப் பட்டிருந்தன. ஆனால் திரு வெங்கடசுப்பிரமணியத்தின் வரைபடத்தில், 1' x 1' 6" அளவிலும் 20 மி.மீ. சுற்றளவும் கொண்டு 8 தூண்கள் தூண் வடிவமைப்பில் கொடுக்கப்பட்டிருந்தன. M25 கிரேடு கான்கிரீட்டில் 38 தூண்கள், அதிகளவு தூண்களுக்கிடையேயான இடைவெளி 23' 0" உள்ள ரீபார்கள் (Rebars) கொடுக்கப்பட்டிருந்தன. கூடவே, மேல்மட்டத்திலிருந்து 2 மிதவை தூண்கள் (floating column) அவர்கள் எடுத்திருந்தனர். என்னுடைய வரைபடத்தில் மேற்கூரை பாளத்தின் பருமன் 5" என்று குறிக்கப்பட்டிருந்தது. ஆனால் திரு வெங்கட சுப்பிரமணியத்தின் வரைபடத்தில் மேற்கூரை பாளத்தின் பருமன் அளவு குறிக்கப்படவில்லை. என்னுடைய செயல் நோக்க வடிவமைப்பில் (design intent) ஒவ்வொரு கட்டடத்திற்கும் தனித்தனியாக கடைக்கால்கள் கொடுத்து வரையப் பட்டுள்ளது. திரு வெங்கட்சுப்பிரமணியத்தின் வரைபடத்தில், இரண்டு கட்டடங்களுக்கும் (blocks) ஒரே பொதுவான தட்டை வடிவ கடைக்கால் மட்டுமே

காட்டப்பட்டுள்ளது. இது தவிர, தடுப்புச் சுவரிலிருந்து (retaining wall) தூண் எழுப்பப் பட்டுள்ளது. எனவே, இந்த தூணின் சுமை தடுப்புச் சுவர்மீது ஏற்றப்பட்டது. இதற்கு உங்கள் பதில் என்ன?

4. திருஷ்டி கோம் ஆர்க்கிடெக்சுரல் கம்யூனிகேசன்ஸ் (பி) லிட்., இயக்குநரான திரு.பர்கோத்ரா தெரிவு செய்த கட்டடக் கலைஞர் திருமதி பி.சுகன்யா என்பார் தமது வாக்குமூலத்தில் பின்வருமாறு தெரிவித்து உள்ளார்:–

"கட்டடத்தைக் கட்டுதல் என்பது என் பணி சார்ந்த அலுவலில் சேராது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு (CMDA) ஒப்புதல் வேண்டி நாங்கள் அனுப்பிய 'பி' பிளாக்கின் வரைபடத்தில் 46 தூண்கள் இடம் பெற்றிருந்தன. அந்த வரைபடத்தின்படி கட்டடம் எழுப்பப்படவில்லை. கட்டுமானரின் வேண்டுகோளுக்கிணங்க, வாகனங்கள் செல்லும் வழியைப் பெரிதாக்கும் பொருட்டு, திரு விஜய் பர்கோத்ரா தூண்களின் எண்ணிக்கையை 37 ஆகக் குறைத்து விட்டார்.

மேலாண் இயக்குநர் திரு விஜய் பர்கோத்ராவிடம் நான் இது பற்றிப் பேசினேன். அதற்கு அவர், மகிழ்ந்து நிறுத்துமிடத்திற்காக அவ்வாறு செய்யப்பட்டதென்று தெரிவித்து, திரு வெங்கட சுப்பிரமணியத்திடம் இது பற்றிப் பேசுமாறு கூறினார். இவ்வாறு தூண்களின் எண்ணிக்கையை குறைத்தால் கட்டடத்தின் நிலைத்தன்மையை அது பாதிக்காதா என்று கேட்டேன். வாகனங்களின்பாதைக்காக தூண்களின் எண்ணிக்கையை எங்கள் மேலாண் இயக்குநர் குறைத்து விட்டார், என்று வெங்கடசுப்பிரமணியன் என்னிடம் கூறியதுடன், அதனைப் பற்றி கட்டமைப்பு வரைபடத்தில் அவர் (வெங்கடசுப்பிரமணியன்) கவனம் எடுத்துக் கொள்வார் என்றும் தெரிவித்தார். அவ்வாறு வெங்கடசுப்பிரமணியன் என்னிடம் கூறியதை மேலாண் இயக்குநரிடம் நான் தெரிவித்தேன். கட்டமைப்பு வரைபடத்தைப் பற்றிய அடிப்படை அறிவு மட்டுமே எனக்குண்டு. இது பற்றி வெங்கடசுப்பிரமணியன் கவனங்கொண்டு ஆவன செய்வார் என்று நான் நினைத்தேன். மேலும், இந்த 11 மாடிக் கட்டடம் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் ஏற்பு அளித்த வரைபடத்தின்படி கட்டப்படவில்லை. அவ்வப்போது, எங்கள் மேலாண் இயக்குநர் விஜய் பர்கோத்ராவும், பொறியாளர் வெங்கடசுப்பிரமணியனும் கலந்து பேசி திட்ட வரைபடங்களைத் தயாரிப்பார்கள். அவர்களின் தேவைக்கேற்றவாறு நான் திட்ட வரைபடங்கள் தயாரித்துக் கொடுத்தேன். ஏனெனில் நான் ஒரு சம்பளம் வாங்கும் பணியாளர்தான். கட்டுமான இடத்தை 3, 4 முறை நான் சென்று பார்த்திருக்கிறேன். பொறியாளர்கள் சங்கர் ராமகிருஷ்ணனும், தினேசும் கட்டுமான இடத்தில் இருந்து வந்தனர். நான் கடைசியாக அங்கு சென்று பார்த்தபோது, 'A' பிளாக் பாதியளவு முடிந்திருந்தது. 'B' பிளாக்கின் நில அறையும் (basement) இடைத்தளமும் முடிந்து, தரைத் தளத்திற்கான கட்டு வேலை நடந்து கொண்டிருந்தது. மேலும், 'பி' பிளாக்கில் தடுப்புச் சுவரிலிருந்து L & M தூண்களுக்கிடையில் ஒரு மிதவைத் தூண் எழுப்பப்பட்டது. இதுபோன்று, மிதவைத்தூண்

எழுப்புவது சரியா, 11 மாடிக் கட்டடத்தின் பளுவை இது தாங்குமா, கட்டடத்தின் நிலைத் தன்மையை இது பாதிக்காதா என்று வெங்கடசுப்பிரமணியத்திடம் நான் கேட்டேன். அது ஒன்றும் சிக்கலாக இருக்காதென்றும், அதனை அவர் கவனித்துக் கொள்வதாகவும், வெங்கடசுப்பிரமணியம் தெரிவித்தார். வெங்கடசுப்பிரமணியம் என்னிடம் கூறியதை நான் மேலாண்மை இயக்குநரிடம் தெரிவித்தேன்.

நாகேஷ் அளித்த கட்டுமான வடிவமைப்பின்படி, தூண் அளவு 1' x 2' என்று கொடுக்கப்பட்டு உள்ளது. ஆனால், வெங்கடசுப்பிரமணியத்தின் வடிவமைப்பில் தூண் அளவு 1' x 1' 6" என்று உள்ளது. இத்தகைய திருத்திய தூண் அளவு 11 மாடிக் கட்டடத்திற்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை என்று எங்கள் மேலாண் இயக்குநர் விஜய் பர்கோத்ராவிடம் தெரிவித்தேன். அதற்கு அவர், கட்டமைப்புப் பொறியாளர் வெங்கடசுப்பிரமணியம் அதைப் பார்த்துக் கொள்வார் என்று தெரிவித்தார். அக்கட்டடத்திற்கு அடுக்குக் கடைக்கால் (pile foundation) ஒன்றை நாகேஷ் குறிப்பிட்டிருந்தார். நாகேஷ், அவரது கட்டமைப்பு நிலைத்தன்மை சான்றில் 18 மீ, ஆழமுள்ள அடுக்குக் கடைக்காலைக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். பின்னர், வெங்கட சுப்பிரமணியன் அளித்த கடைக்கால் வடிவமைப்பில் 4 மீ. ஆழமுள்ள அடுக்குக் கடைக்காலைக் குறிப்பிட்டிருந்தார். எனவே, 18 மீட்டருக்குப் பதிலாக 4 மீட்டர் அளவுக்கே கடைக்கால் எழுப்பப்பட்டது. வெங்கடசுப்பிரமணியத்திடம் இதுபற்றிக் கேட்குமாறு நான் மேலாண் இயக்குநரிடம் கூறினேன். அதற்கு அவர், கட்டுமான ஒப்பந்தக்காரர் மனோகர் மற்றும் கட்டமைப்புப் பொறியாளர் வெங்கடசுப்பிரமணியன் ஆகியோர் இத்தகைய பொருண்மைகளைப் பார்த்துக் கொள்வார்கள் என்றும், நமக்கு ஒன்றும் இதில் செய்வதற்குப் பெரிதாக ஏதுமில்லை என்றும் கூறிவிட்டார். இக்கட்டடம் முறையாக வடிவமைக்கப் படாததாலும், தூண்களின் எண்ணிக்கை காரணமின்றிக் குறைக்கப்பட்டதாலும், அதன் கட்டட உறுதித் தன்மை பாதிக்கப்பட்டு, சுமையைத் தாங்க முடியாது நிலை குலைந்து இடிந்து விழுந்தது.

உங்கள் மறுமொழி என்ன?

5. இதுபற்றிப் புலனாய்வு செய்த சிறப்புப் புலனாய்வுக்குழு, இக்கட்டடம் இடிந்து விழுந்ததற்கு முறையற்ற திட்டமிடலும், செயலாக்கமுமே காரணம் என்று கண்டறிந்து உள்ளது. இந்த இடிபாடுகளில் சிக்கி 61 பேர் இறந்து உள்ளனர். 21 பேர் காயமுற்றுள்ளார்கள். 'பி' பிளாக் இடிந்ததால் அண்டையில் உள்ள வீடுகள் சேதமடைந்துள்ளன; அப்பாவிகள் பலர் காயமடைந்துள்ளனர். கட்டுமான ஒப்பந்தக்காரர் (builder), கட்டடக் கலைஞர்கள், பொறியாளர்கள் ஆகியோர் இவை எல்லாவற்றுக்கும் பொறுப்பானவர்கள் என்று புலனாய்வுக் குழுவினர் அறிக்கை கொடுத்துள்ளனர். இதற்கு உங்கள் மறுமொழி என்ன?

6. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் (CMDA) ஒப்புதல் பெறுவதற்காக கட்டமைப்புப் பொறியாளர் திரு நாகேஷ், கடைக்கால் அமைப்பதற்கான முதனிலை விவரங்களை அளித்துள்ளார். அதனடிப்படையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் ஒப்பந்தக்காரர்கள் அளித்த விண்ணப்பத்தை ஏற்று, பரிசீலித்து, அதற்கு திட்ட ஏற்பிசைவும் அளித்துள்ளது. அடித்தளத்திற்கும், கட்டுமானத்திற்கும் கட்டமைப்புப் பொறியாளர்கள் கொடுத்த முதனிலை விவரங்களின் அடிப்படையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமமும், அரசும் இதற்கு ஒப்புதல் அளித்துள்ளன. அதனைப் பின்பற்றி ஏன் கட்டுமானம் செய்யப்படவில்லை? இத்திட்டத்தில் கட்டமைப்புப் பொறியாளர் தொடர்ந்து பணியாற்ற ஏன் அனுமதிக்கப்படவில்லை.–

7. திரு. நாகேஷ் அல்லாத இன்னொரு கட்டமைப்புப் பொறியாளரிடம் இப்பணி ஏன் ஒப்படைக்கப்பட்டது. திரு நாகேஷால் அளிக்கப்பட்ட திட்ட வரைபட விவரங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட வரைபடத்தின்படி ஏன் இக்கட்டுமானப் பணி மேற்கொள்ளப்பட்டது?

8. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் (CMDA) ஒப்புதலுக்காக அளிக்கப்பட்ட மூலக் கருத்துருவிலிருந்து முற்றிலும் வேறுபட்ட முறையில் கடைக்கால் போடப்பட்டபோது, ஏன் இந்த மாற்றம் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, திருந்திய ஒப்புதல் பெறப்படவில்லை.

9. சென்னை, அரவிந்த் அசோசியேட்ஸ் நிறுவனம் மண் ஆராய்ச்சி செய்து, 400 மி.மீ/300 மி.மீ.சுற்றளவு உள்ள பெரிதாக்கப்பட்ட அடுக்குகளைப் பரிந்துரைத்திருக்கையில், இதிலிருந்து வேறுபட்ட, மாற்றுமுறை கடைக்கால் எவ்வாறு போடப்பட்டது. இதற்கு உங்கள் விளக்கம் என்ன?

10. கட்டமைப்பு பொறியாளர் திரு நாகேஷ் தமது தூணுக்கு ஆதரவாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடுக்குகளுடன், 18 மீட்டர் நீளத்திற்கு நிலையான அடுக்குவரை ஆழமாக துளையிடப்பட்ட அடுக்குகளுடன் கூடிய கடைக்கால் பற்றி கருத்து தெரிவித்து, அதற்கிணங்க கட்டுமான அமைப்பு வரைபடத்தைத் தயாரித்திருந்தார். அது, திட்ட வரைபட விண்ணப்பத்துடன், சென்னை பெருநர் வளர்ச்சி குழுமத்திடம் அளிக்கப்பட்டது. இது, ஏன் செயல்படுத்தப்படவில்லை. விளக்கம் அளிக்கவும்.

11. கட்டுமானம் நடைபெறும் காலத்தில், இத்திட்டத்திற்கு வடிமமைப்பு செய்தளித்த கட்டமைப்புப் பொறியாளர் இக்கட்டுமானம் குறித்து காலமுறை ஆய்வு செய்வதற்கான ஏற்பாடு எதையாவது நீங்கள் செய்து வைத்தீர்களா? அவ்வாறெனில், கட்டமைப்புப் பொறியாளர் ஆய்வு செய்த நாட்கள், அதுபற்றிய விவரங்களை நீங்கள் அளிக்க வேண்டும். இதற்கான விவரங்கள் அடங்கிய முறையான ஆவணங்கள் ஏதும் பேணப்பட்டுள்ளனவா?

12. திட்டத்தை செயல்படுத்துகையில் கட்டமைப்புப் பொறியாளரின் வரை படத்திலிருந்து மாறுபட்டு வேறுவகையில் கட்டுமானம் செய்தீர்களா? அவ்வாறெனில், கட்டமைப்புப் பொறியாளருக்கு இதனைத் தெரிவித்தீர்களா?

13. கட்டப்பட்ட கட்டமைப்புக் கூறுகள் பற்றி கட்டமைப்புப் பொறியாளரின் நோக்குக் குறிப்புகள் ஏதேனும் இருந்ததா? ஏதாவது தவறுகளைக் கண்டுபிடித்து அவற்றைத் திருத்துவதற்காக அவர் அறிவுரை ஏதும் தந்தாரா?

திரு வெங்கடகப்பிரமணியம் அளித்த பதில்கள்

வ.எண்

பதில்கள்

1. சென்னை பெருநகர் வளர்ச்சி குழும வரைபடத்தில் நான் கையெழுத்திடவில்லை.

2. நிலத்தடி நீர் மட்டம் நில அரைத்தள கீழ் தளத்திற்கு மிக அருகில் இருப்பதால், கட்டமைப்பு வரைபடங்களை, குறிப்பாக திருந்திய கடைக்காலுக்கான வரைபடங்களைத் தயாரித்துத் தருமாறு என்னிடம் திரு.மனோகரன் கேட்டுக் கொண்டார். என்னிடம் ஒரே ஒரு வகை வரைபடங்களே கொடுக்கப்பட்டது.

3. தரையடித்தளத்திற்குக் கீழ், நிலத்தடி நீர்மட்டம் 59 அடி ஆழத்திலேயே இருந்ததால் 2 அடி குறுக்களவுள்ள அல்லது under reamed அடுக்கு கடைக்கால்களை அதே இடத்தில் பயன்படுத்த இயலாது. முன் வார்ப்பு செய்த அடுக்குகள் (precast driven piles) மட்டுமே இதில் பயன்படுத்தப்பட வேண்டும். இப்பகுதியில் குடியிருக்கும் வீடுகள் மிக நெருக்கமாக இருப்பதால், சிறிய கட்டடங்களில்/வீடுகளுக்கு விரிசல் விழ வாய்ப்புண்டு. எனவே, துளையிடப்பட்ட அடுக்குகளை குறைந்த அளவு தூரம் விட்டு 13" அளவுள்ள மிதவைப் பாளத்துடன் கூடிய திட்பமான பாளப்பொதி மற்றும் 2' 2" x 13" மிதவைக் கட்டமைப்புத் தூண் (raft grid beam) ஆகியவற்றைக்கொண்டு செய்யலாம் என ஆலோசனை தரப்பட்டது. இது கட்ட உரிமையாளருக்கும், கட்டடக்கலைஞருக்கும் அவர்களின் ஏற்புக்காகவும், அவர்கள் விரும்பினால் அவ்வாறே செய்வதற்காகவும் அனுப்பப் பட்டது. தூண் தடுப்புச் சுவர்மீது எழுப்பப்படாமல், கடைக்கால் வரையில் சுவரின் ஊடாகவே செல்லும் வகையில் எழுப்பப்பட்டது. மேலும், கீழும் இருபுறங்களிலும் 10 மி.மீ. குறுக்களவில், 5" மையப்பகுதியில் தராய் (raft) சுவர் மறுவலுவூட்டப்பட்டுள்ளது.

4. இத்திட்டத்தைப் பொறுத்தவரை, என்னுடைய பணியானது ஆலோசனை தருவதாக மட்டுமே இருந்ததாலும், அவரவரின் பங்குபணி என்ன என்று ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்டதாலும், திரு பர்கோத்ரா அல்லது சுகன்யாவிடம் நான் பேசியவை என்ன என்பதைத் துல்லியமாக என்னால் நினைவு கூர முடியவில்லை. ஆனால், கட்டடக் கலைஞரால் அனுப்பப்பட்ட / வழங்கப்பட்ட வரைபடத்திற்கேற்பவே வடிவமைப்பு செய்யப்பட்டது. மேலும், சுகன்யா தமது வாக்குமூலத்தில் என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டதாகத் தெரிவித்துள்ள தொலைபேசி எண் என்னுடையது அன்று.

5. நாள்தோறும் நான் கட்டுதளத்திற்குச் செல்லவில்லை என்பதால் இது பற்றி நான் சொல்வதற்கு ஏதுமில்லை. எனக்கு தரக்கட்டுப்பாட்டு வேலைஏதும் தரப்படவில்லை.

6. இதற்கான காரணம் எனக்குத் தெரியாததால், இதுபற்றி நான் கருத்துக் கூற வியலாது.

7. இது பற்றி எனக்குத் தெரியாது.

8. கட்டடக் கலைஞர்/கட்டுமான ஒப்பந்தக்காரர் அனுப்பிய வரைபடத்தின்படி வரைபடம் உள்ளது. அதற்கான ஏற்பு/ஒப்பளிப்பு பெறுவது என்பது என்னைச் சார்ந்தது அல்ல என்று நான் எண்ணுகிறேன்.

9. கேள்வி 3-இல் உள்ளவாறு.

10. கேள்வி 9-இல் உள்ளவாறு.

11. உரிமையாளர் அழைக்கும் சமயங்களில் நான் கட்டுதளத்திற்குச் செல்வது வழக்கம். நான் பார்வையிட்ட / வருகை தந்த நாள் , பிற விவரம் குறித்து ஆவணம் ஏதும் பேணவில்லை. என் பணி ஒரு மதிப்புறு நிலையில் / ஆலோசகர் நிலையில் இருந்ததால், காங்கிரீட் கொட்டிய நேரத்தில் நான் அங்கிருக்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை என்று எண்ணினேன். உரிமையாளரும் என்னை வரவேண்டுமென்று அழைக்கவில்லை.

12. இக்கேள்வி எனக்குப் பொருந்தாது.

13. நான் சென்ற சமயங்களில், பொறியாளர்களுக்கு நான் அறிவுரை கூறுவது வழக்கம்.

14. <u>விசாரணை ஆணையத்தில் என் வேண்டுகோள்</u>

ஐயா,

பின்வரும் விவரங்களை பணிந்து தெரிவிக்க விழைகிறேன்.

கட்டமைப்பு பற்றிய பகுப்பாய்வு கட்டமைப்பு வல்லுநர்களால் அளிக்கப்பட்ட அறிக்கையின்படி அவர்களால் செய்யப்பட்டதாகும். பின் வருவனவற்றை தங்கள் கனிவான கவனத்திற்குக் கொணர விரும்புகிறேன்.

1. இரண்டு அடுக்குமாடி கட்டடங்களும், குறிப்பாக பிளாக்-'பி' யின் எல்லாத் தளங்களும் கட்டி முடிக்கப்பட்டு, 100 நாட்களுக்கும் மேலாக நன்னிலையில் இருந்தது. இந்தக் கால கட்டத்தில், பொருள்கள் விழுவதால் ஏற்படும் தாக்கம், கடும் சுமை கூட்டக்கூடிய பொருள்களின் குவிப்பு ஆகியவற்றுக்கு இந்தக் கட்டடம் உள்ளாகியிருக்கலாம்.

கட்டட அமைப்பு வலிவற்று இருந்தால் இடி, புயல் தாக்கியவுடனே ஏன் இந்த விபத்து ஏற்பட்டது?

2. என்னுடைய கூர்ந்தாய்வின்படி, அதிர்வொலியால் ஏற்பட்ட சேதத்தை வல்லுநர்கள் ஏன் கருதிப்பார்க்கவில்லை? (கட்டடத்திற்கும், இடிதாக்கத்திற்குமிடையிலான சமமான/ பொருத்தமான அதிர்வெண்) ஏன் இது காரணமாக இருக்கக் கூடாது. இந்த அம்சத்தையும் விசாரணை ஆணையம் கருதிப்பார்க்க வேண்டுகிறேன்.

3. கட்டட அமைப்பு, இடிந்து தரையில் வேகமாக விழுந்தபோது, படங்களில் பார்க்கும்போது கடைக்காலுக்கு சேதம் ஏதும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. எனவே, கடைக்கால் வடிவமைப்பு பாதுகாப்பாக இருந்ததாக ஊகித்துக் கொள்ளலாம்.

4. பிளாக் 'பி' பற்றிய பகுப்பாய்வு அறிக்கை முழுதும் கட்டி முடிக்கப்பட்ட அமைப்பு குறித்து அளிக்கப் பட்டதாகும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். உள்ளபடியான நிலை (அதாவது குடியிருப்போர் மற்றும் உடைமைகள் சார்ந்த சுமையின்மை, தரை வேலை முடியாமை, சுவர்களின் ஒரு பகுதி ஆகியவற்றை இதில் சேர்த்துக் கொள்க)யினைக் கருத்திற்கொண்டு ஆராய்வதுதான் இதற்குச் சரியான முறையாகும். (கட்டடம் இடிந்து விழுந்த) நேர்ச்சி (accident) நாளன்று ஏற்பட்ட

இடிபாட்டுக்கான காரணகாரியமுறை, அதன் நிகழ்டுக்குமுறை ஆகியவற்றை முடிவு செய்வதற்கு இவ்வாறு ஆராய்ந்தால்தான், இதன்மீது சரியாக முடிவெடுக்க முடியும்.

5. 'பி' கட்டடத் தொகுதியின் Finite Element Modelling-ஐ பொறுத்தவரை, சுமையைப் பற்றிக் கருதுங்கால், சுவர் சுமை கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. சுவர்களின், குறிப்பாக, சுமை தாங்கும் சுவர்களின் திட்பத்தைப் பற்றிக் கருதும்போது தொடர் விட்டத் (running beam)தையும் ஒரு தொகுப்பாகச் சேர்த்துக் கணக்கிட வேண்டும். அன்றாட வழக்கிலுள்ள பின்வரும் எடுத்துக்காட்டைக் கொண்டு இதனை எளிதாக விளக்கலாம். ஒரு மனிதன் நிற்கும்போது அவனுடைய எடை அவனுடைய கால்களின் வழியாக புவிக்கு மாற்றப்படுகிறது. அதனால் நீண்ட நேரம் நிற்கும்போது வலியெடுக்கிறது. ஆனால், அவன் தரையில் படுத்திருக்கும்போது அவனுடைய மொத்த எடையும் ஒரு பெரும்பரப்புக்கு சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுவதால் படர்விளைவு (creep effect) பெரிதும் குறைக்கப்படுவதால், வலியும் குறைவாகவே இருக்கும்.

இருமுனை தூண்மீது நிற்கும் உத்திரம், அதன் நீளம் முழுவதும் சுமையைத்தாங்கும். சுவர்கள் ஊடாகச் செல்வது குறித்த மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக இதனைச் சொல்லலாம். ஆகவே, உருப்போலி மாதிரியை (simulation model), மேற்காணும் அம்சங்களைக் கருத்திற்கொண்டு மாற்றியமைக்கலாம்.

இப்பணி SERC, IIT, அண்ணா பல்கலைக்கழகம் போன்ற நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படலாம்.

6. இந்த அறிக்கையை முடிப்பதற்கு முன்பாக மேற்காணும் கூறுகளைக் கருத்திற்கொள்ளுமாறு மீண்டும் மாண்பமை விசாரணை ஆணையத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு பர்கோத்ராவிடம் கேட்கப்பட்ட கேள்விகள்

1. சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்திடம் அளிக்கப்பட்ட வரைபடங்களில் கட்டடக் கலைஞர் மற்றும் திருமதி பி.சுகன்யா ஆகியோரின் கையொப்பம் உள்ளது. அப்படியா?

2. திரு வெங்கடசுப்பிரமணியம் என்பவரிடம் கட்டமைப்பு வடிவமைப்பு சார்ந்த பணியை திரு மனோகரன் கொடுத்துள்ளார். நீங்கள் திரு மனோகரனுடன் இது பற்றிப்பேசி, கட்டமைப்பு வடிவமைப்பு/வரைபடங்களை உண்மையிலேயே கட்டுமானத்திற்கு ஏற்றவாறு மாற்றிக் கொடுக்கச் சொல்லவும், திரு நாகேஷ் கொடுத்த கட்டமைப்பு வடிவமைப்பு/வரைபடங்களில் பல்வேறு மாற்றங்களைச் செய்வதற்காகவும் மட்டுமே திரு வெங்கடசுப்பிரமணியத்தின் சேவையினை நீங்கள் பயன்படுத்திக் கொண்டீர்கள். இது சரியா?

3. இந்த ஆணையத்தின் முன்பு திரு எஸ்.நாகேஷ் அளித்த வாக்குமூலத்தின்படி, கட்டமைப்பு வடிவமைப்பின் அளவீடுகளில் அவர் அளித்த விவரங்களுக்கும், திரு. வெங்கடசுப்பிரமணியம் அளித்த அளவீடுகளுக்கும் இடையில் சில வேறுபாடுகள் உள்ளன. திரு. நாகேஷ் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

கடைக்காலைப் பொறுத்தவரை, அடுக்கு ஆழம் 59' 20' சுற்றளவு, பாதுகாப்பான தாங்குதிறன் 105 டன் என்று நான் குறித்திருந்தேன். திரு வெங்கடசுப்பிரமணியத்தின் வரைபடத்தில் அடுக்கு 13" ஆழம், 12" சுற்றளவு என்று உள்ளது. பாதுகாப்பான தாங்குதிறன் கொடுக்கப்படவில்லை. 65 அடுக்குகள், ராப்ட் ஸ்லாப் (Raft slab 13" ராப்ட் பீம் Raft Beam 13" x 2' 2" உயரம் என்று அவரது அளவீடுகள் மட்டும் கொடுக்கப்பட்டு, மற்று நிலைப்பு பற்றிய விவரங்கள் தெளிவாகக் குறிக்கப்படவில்லை. இது தவிர, என்னுடைய தூண் வடிவமைப்பில் 1' x 0' x 2' 0' மனை மற்றும் 25 மி.மீ. குறுக்களவுள்ள 8 எண்ணிக்கையுள்ள ரீபார்கள் M35 கிரேடு கான்கிரீட்டுடன் 60 தூண்கள் மற்றும் தூண்களுக்கிடையில் அதிகளவான இடைவெளி 20' கொடுக்கப் பட்டிருந்தன. ஆனால் திரு வெங்கடசுப்பிரமணியத்தின் வரைபடத்தில், 1' x 1' 6" அளவிலும் 20 மி.மீ. சுற்றளவும் கொண்டு 8 தூண்கள் தூண் வடிவமைப்பில் கொடுக்கப்பட்டிருந்தன. M25 கிரேடு கான்கிரீட்டில் 38 தூண்கள், அதிகளவு தூண்களுக்கிடையேயான இடைவெளி 23' 0" உள்ள ரீபார்கள் கொடுக்கப்பட்டிருந்தன. கூடவே, மேல் மட்டத்திலிருந்து 2 மிதவைத்தூண்கள் (floating column) அவர்கள் எடுத்திருந்தனர். என்னுடைய வரைபடத்தில் மேற்கூரை பாளத்தின் பருமன் 5" என்று குறிக்கப்பட்டிருந்து. ஆனால் திரு வெங்கடசுப்பிரமணியத்தின் வரைபடத்தில் மேற்கூரை

பாளத்தின் பருமன் அளவு குறிக்கப்படவில்லை. என்னுடைய செயல்நோக்க வடிவமைப்பில் (design intent) ஒவ்வொரு கட்டடத்திற்கும் தனித்தனியாக கடைக்கால்கள் கொடுத்து வரையப் பட்டுள்ளது. திரு வெங்கடசுப்பிரமணியத்தின் வரைபடத்தில், இரண்டு கட்டடத் தொகுதிகளுக்கும் (blocks) ஒரே பொதுவான தட்டை வடிவ கடைக்கால் மட்டுமே காட்டப்பட்டுள்ளது. இது தவிர, தடுப்புச் சுவரிலிருந்து (retaining wall) தூண் எழுப்பப் பட்டுள்ளது. எனவே, இந்தத் தூணின் சுமை தடுப்புச் சுவர்மீது ஏற்றப்பட்டது.

இதற்கு உங்கள் பதில் என்ன?

4. திருஷ்டி கோம் ஆர்க்கிடெக்சரல் கம்யூனிகேசன்ஸ் (பி) லிட், இயக்குநரான திரு பார்கோத்ரா நீங்கள் தெரிவு செய்த கட்டடக் கலைஞர் திருமதி பி.சுகன்யா என்பார் தமது வாக்குமூலத்தில் பின்வருமாறு தெரிவித்து உள்ளார்.

கட்டடத்தைக் கட்டுதல் என்பது என் பணி அலுவலில் சேராது. சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்திற்கு (CMDA) ஒப்புதல் வேண்டி நாங்கள் அனுப்பிய 'பி' பிளாக்கின் வரைபடத்தில் 46 தூண்கள் இடம் பெற்றிருந்தன. அந்த வரைபடத்தின்படி கட்டடம் எழுப்பப்படவில்லை. கட்டுமானரின் வேண்டுகோளுக்கிணங்க, வாகனங்கள் செல்லும் வழியைப் பெரிதாக்கும் பொருட்டு, திரு விஜய் பார்கோத்ரா தூண்களின் எண்ணிக்கையை 37 ஆகக் குறைத்து விட்டார்.

மேலாண் இயக்குநர் திரு விஜய் பார்கோத்ராவிடம் நான் இது பற்றிப் பேசினேன். அதற்கு அவர், மகிழ்ந்து நிறுத்துமிடத்திற்காக அவ்வாறு செய்யப்பட்டதென்றும் தெரிவித்து திரு வெங்கடசுப்பிரமணியத்திடம் இதுபற்றிப் பேசுமாறு கூறினார். இவ்வாறு தூண்களின் எண்ணிக்கையைக் குறைத்தால் கட்டடத்தின் நிலைத் தன்மையை அது பாதிக்காதா என்று கேட்டேன். வாகனங்களின் பாதைக்காக தூண்களின் எண்ணிக்கையை எங்கள் மேலாண் இயக்குநர் குறைத்து விட்டார் என்று வெங்கடசுப்பிரமணியன் என்னிடம் கூறியதுடன், அதனைப் பற்றி கட்டமைப்பு வரைபடத்தில் அவர் (வெங்கடசுப்பிரமணியன்) கவனம் எடுத்துக் கொள்வார் என்றும் தெரிவித்தார். அவ்வாறு வெங்கடசுப்பிரமணியன் என்னிடம் கூறியதை மேலாண் இயக்குநரிடம் நான் தெரிவித்தேன். கட்டமைப்பு வரைபடத்தைப் பற்றிய அடிப்படை அறிவு மட்டுமே எனக்குண்டு. இதுபற்றி வெங்கடசுப்பிரமணியன் கவனங்கொண்டு ஆவன செய்வார் என்று நான் நினைத்தேன். மேலும், இந்த 11 மாடிக்கட்டடம் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் ஏற்பு அளித்த வரைபடத்தின்படி கட்டப்படவில்லை. அவ்வப்போது, எங்கள் மேலாண் இயக்குநர் விஜய் பார்கோத்ராவும், பொறியாளர் வெங்கடசுப்பிரமணியனும் கலந்து பேசி திட்ட வரைபடங்களைத் தயாரிப்பார்கள். அவர்களின் தேவைக்கேற்றவாறு நான் திட்ட

வரைபடங்கள் தயாரித்துக் கொடுத்தேன்; ஏனெனில் நான் ஒரு சம்பளம் வாங்கும் பணியாளர்தான். கட்டுமான இடத்தை 3, 4 முறை நான் சென்று பார்த்திருக்கிறேன். பொறியாளர்கள் சங்கர் ராமகிருஷ்ணனும், தினேசும் கட்டுமான இடத்தில் இருந்து வந்தனர். நான் கடைசியாக அங்கு சென்று பார்த்தபோது 'A' பிளாக் பாதியளவு முடிந்திருந்தது. 'B' பிளாக்கின் நில அறையும் (basement) இடைத் தளமும் முடிந்து தரைத் தளத்திற்கான கட்டுவேலை நடந்து கொண்டிருந்தது. மேலும், 'பி' பிளாக்கில், தாங்கு சுவரிலிருந்து L & M தூண்களுக்கிடையில் ஒரு மிதவைத் தூண் எழுப்பப் பட்டது. இது போன்று மிதவைத் தூண் எழுப்புவது சரியா? 11 மாடிக் கட்டடத்தின் பளுவை இது தாங்குமா? கட்டடத்தின் நிலைத் தன்மையை இது பாதிக்காதா? என்று வெங்கடசுப்பிரமணியத்திடம் நான் கேட்டேன். அது ஒன்றும் சிக்கலாக இருக்காதென்றும், அதனை அவர் கவனித்துக் கொள்வதாகவும், வெங்கடசுப்பிரமணியம் தெரிவித்தார். வெங்கடசுப்பிரமணியம் என்னிடம் கூறியதை நான் மேலாண் இயக்குநரிடம் தெரிவித்தேன்.

நாகேஷ் அளித்த கட்டுமான வடிவமைப்பின்படி, தூண் அளவு 1' x 2' என்று கொடுக்கப்பட்டு உள்ளது. ஆனால் வெங்கடசுப்பிரமணியத்தின் வடிவமைப்பில் தூண் அளவு 1' x 1' 6" என்று உள்ளது. இத்தனையை திருந்திய தூண் அளவு 11 மாடிக் கட்டடத்திற்குச் பொருத்தமாகத் தோன்றவில்லை என்று எங்கள் மேலாண் இயக்குநர் விஜய் பர்கோத்ராவிடம் தெரிவித்தேன். அதற்கு அவர், கட்டமைப்புப் பொறியாளர் வெங்கடசுப்பிரமணியம் அதைப்பார்த்துக் கொள்வார் என்று தெரிவித்தார். அக்கட்டடத்திற்கு அடுக்குக் கடைக்கால் (pile foundation) ஒன்றை நாகேஷ் குறிப்பிட்டிருந்தார். நாகேஷ், அவரது கட்டமைப்பு நிலைத்தன்மை சான்றில் 18 மீ. ஆழமுள்ள அடுக்குக் கடைக்காலைக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். பின்னர், வெங்கடசுப்பிரமணியன் அளித்த கடைக்கால் வடிவமைப்பில் 4மீ. ஆழமுள்ள அடுக்குக் கடைக்காலைக் குறிப்பிட்டிருந்தார். எனவே, 18 மீ.-க்கு பதிலாக 4 மீ. அளவுக்கே கடைக்கால் எழுப்பப் பட்டது. வெங்கடசுப்பிரமணியத்திடம் இதுபற்றிக் கேட்குமாறு நான் மேலாண் இயக்குநரிடம் கூறினேன். அதற்கு அவர், கட்டுமான ஒப்பந்தக்காரர் மனோகர் மற்றும் கட்டமைப்புப் பொறியாளர் வெங்கடசுப்பிரமணியன் ஆகியோர் இத்தகைய பொருண்மைகளைப் பார்த்துக் கொள்வார்கள் என்றும் நமக்கு ஒன்றும் இதில் செய்வதற்குப் பெரிதாக ஏதுமில்லை என்றும் கூறிவிட்டார். இக்கட்டடம் முறையாக வடிவமைக்கப் படாததாலும், தூண்களின் எண்ணிக்கை காரணமின்றிக் குறைக்கப்பட்டதாலும் அதன் கட்டட உறுதித் தன்மை பாதிக்கப் பட்டு, சுமையைத் தாங்க முடியாது நிலை குலைந்து இடிந்து விழுந்தது.

உங்கள் மறுமொழி என்ன?

5. இது பற்றி புலனாய்வு செய்த சிறப்புப் புலனாய்வுக் குழு, இக்கட்டடம் இடிந்து விழுந்ததற்கு முறையற்ற திட்டமிடலும் செயலாக்கமுமே காரணம் என்று கண்டறிந்து உள்ளது. இந்த இடிபாடுகளில் சிக்கி 61 பேர் இறந்து உள்ளனர். 21 பேர் காயமுற்றுள்ளனர்; 'பி' பிளாக் இடிந்ததால் அண்டையில் உள்ள வீடுகள் சேதமடைந்துள்ளன; அப்பாவிகள் பலர் காயமடைந்துள்ளனர். கட்டுமான ஒப்பந்தக்காரர் (builder), கட்டடக் கலைஞர்கள், பொறியாளர்கள் ஆகியோர் இவை எல்லாவற்றுக்கும் பொறுப்பானவர்கள் என்று புலனாய்வுக் குழுவினர் அறிக்கை கொடுத்துள்ளனர்.

இதற்கு உங்கள் மறுமொழி என்ன?

6. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் (CMDA) ஒப்புதல் பெறுவதற்காக கட்டமைப்புப் பொறியாளர் திரு நாகேஷ், கடைக்கால் அமைப்பதற்கான முதனிலை விவரங்களை அளித்துள்ளார். அதனடிப்படையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் ஒப்பந்தக் காரர்கள் அளித்த விண்ணப்பத்தை ஏற்று, பரிசீலித்து, அதற்கு திட்ட ஏற்பிசைவும் அளித்துள்ளது. அடித்தளத்திற்கும், கட்டுமானத்திற்கும் கட்டமைப்புப் பொறியாளர்கள் கொடுத்த முதனிலை விவரங்களின் அடிப்படையில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமமும், அரசும் இதற்கு ஒப்புதல் அளித்துள்ளன. அதனைப் பின்பற்றி ஏன் கட்டுமானம் செய்யப்படவில்லை? இத்திட்டத்தில் கட்டமைப்புப் பொறியாளர் தொடர்ந்து பணியாற்ற ஏன் அனுமதிக்கப்படவில்லை?

7. திரு நாகேஷ் அல்லாத இன்னொரு கட்டமைப்புப் பொறியாளரிடம் இப்பணி ஏன் ஒப்படைக்கப்பட்டது? திரு நாகேஷால் அளிக்கப்பட்ட திட்ட வரைபட விவரங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட வரைபடத்தின்படி ஏன் இக்கட்டுமானப் பணி மேற்கொள்ளப்பட்டது?

8. சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் ஒப்புதலுக்காக அளிக்கப்பட்ட மூலக் கருத்துருவிலிருந்து முற்றிலும் வேறுபட்ட முறையில் கடைக்கால் போடப்பட்டபோது, ஏன் இந்த மாற்றம் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, திருந்திய ஒப்புதல் பெறப்படவில்லை?

9. சென்னை, திருவாளர்கள் அரவிந்த் அசோசியேட்ஸ் நிறுவனம் மண் ஆராய்ச்சி செய்து, 400 மி.மீ./300 மி.மீ. குறுக்களவு உள்ள பெரிதாக்கப்பட்ட அடுக்குகளைப்

பரிந்துரைத்திருக்கையில், இதிலிருந்து வேறுபட்ட, மாற்றுமுறை கடைக்கால் எவ்வாறு போடப்பட்டது? இதற்கு உங்கள் விளக்கம் என்ன?

10. கட்டமைப்புப் பொறியாளர் திரு நாகேஷ் தமது தூணுக்கு ஆதரவாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடுக்குகளுடன் 18 மீட்டர் நீளத்திற்கு நிலையான அடுக்குவரை ஆழமாக துளையிடப்பட்ட அடுக்குகளுடன் கூடிய கடைக்கால் பற்றி கருத்து தெரிவித்து, அதற்கிணங்க, கட்டுமான அமைப்பு வரைபடத்தைத் தயாரித்திருந்தார். அது, திட்டவரைபட விண்ணப்பத்துடன், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்திடம் அளிக்கப்பட்டது. இது, ஏன் செயல் படுத்தப் படவில்லை. விளக்கம் அளிக்கவும்.

11. கட்டுமானம் நடைபெறும் காலத்தில், இத்திட்டத்திற்கு வடிவமைப்பு செய்தளித்த கட்டமைப்புப் பொறியாளர் இக்கட்டுமானம் குறித்துக் காலமுறை ஆய்வு செய்வதற்கான ஏற்பாடு எதையாவது நீங்கள் செய்து வைத்தீர்களா? அவ்வாறெனில், கட்டமைப்புப் பொறியாளர் ஆய்வு செய்த நாட்கள் அது பற்றிய விவரங்களை நீங்கள் அளிக்க வேண்டும். இதற்கான விவரங்கள் அடங்கிய முறையான ஆவணங்கள் ஏதும் பேணப்பட்டுள்ளனவா?

12. திட்டத்தை செயல்படுத்துகையில் கட்டமைப்புப் பொறியாளரின் வரைபடத்திலிருந்து வேறு வகையில் கட்டுமானம் செய்தீர்களா? அவ்வாறெனில், கட்டமைப்புப் பொறியாளருக்கு இதனைத் தெரிவித்தீர்களா?

13. கட்டப்பட்ட கட்டமைப்புக் கூறுகள் பற்றி கட்டமைப்புப் பொறியாளரின் நோக்குக் குறிப்புகள் ஏதேனும் இருந்ததா? ஏதாவது தவறுகளை கண்டுபிடித்து அவற்றைத் திருத்துவதற்காக அவர் அறிவுரை ஏதும் தந்தாரா?

திரு பர்கோத்ரா அளித்த பதில்கள்

1. வரைபடங்களை சென்னை பெருநகர் வளர்ச்சி கழகத்திடம் கொடுத்து ஏற்பு பெற வேண்டிய பொறுப்பு முழுமையும் கட்டுமான நிறுவனமான பிரைம் சிருஷ்டி உறவுசிங் பிரைவேட் லிட் நிறுவனத்தையே சாரும். திருஷ்டி கோம் ஆர்க்கிடெக்சரல் கம்யூனிகேஷன்ஸ் பிரைவேட் லிட்., என்ற எங்கள் நிறுவனம் கட்டடக்கலை ஆலோசகர் அமைப்பாக அமர்த்தப்பட்டது. திருமதி பி.சுகன்யா (பி.ஆர்க்) மூத்த கட்டடக்கலைஞர் ஆவார். அவர் தயாரித்த வரைபடங்களுடன் எல்லா வரைபடங்களும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் கழகத்தின்

ஏற்புக்காக அனுப்பப்பட்டன. அவற்றில் தேவைப்பட்டபோது உரிய மாற்றங்களும் திருத்தங்களும் செய்யப்பட்டு மீண்டும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் கழகத்தின் ஏற்புக்காக அனுப்பப்பட்டன. இவ்வெல்லா வரைபடங்களும், கட்டமைப்பு நிலைத்தன்மை அறிக்கை அளித்த திருமதி பி.சுகன்யா மற்றும் திரு எஸ்.நாகேஷ் ஆகியோரால் கையொப்பமிடப்பட்டுள்ளன.

2. திரு. மனோகர் செய்த கட்டடக்கலை சார்ந்த ஆலோசனை வழங்கும் பணி எங்களுக்கு திருஷ்டி கோம் ஆர்க்கிடெக்சுரல் கம்யூனிகேஷன் பிரைவேட் லிமிடெட், அளிக்கப்பட்டதேயொழிய திரு. வெங்கடசுப்பிரமணியத்திடம் அளிக்கப்படவில்லை. அவர் கட்டடக்கலை ஆலோசகராக இத்திட்டத்தில் திரு மனோகரால் அமர்த்திக் கொள்ளப்பட்டார். கட்டுமானப் பணிக்கான திருத்தங்கள், மாற்றி அமைத்தல் ஆகியவை உள்ளுக்குள்ளேயே செய்யப்பட்டன. அதற்குத் தக்கவாறு, சென்னை பெருநகர் வளர்ச்சிக் கழகத்தின் ஏற்பு அளிக்கப்பட்ட வரைபடத்தில் கட்டடத்தின் foot print, set back, FSI கட்டட உயரத்திற்கு ஏற்ப மாற்றங்களைச் செய்யவில்லை. தரையடித் தளத்தில் வாகனங்கள் நிறுத்துமிடத்தை விரிவு படுத்துவதற்காக கட்டுமான ஒப்பந்தக்காரர் தேவைக்கேற்ப இம்மாற்றங்கள் செய்யப்பட்டன.

3. திரு. நாகேஷ் கட்டட உறுதி அறிக்கையினைத் தமது பரிந்துரையுடன் அளிக்கும்போது அடிப்படை விவரங்களுடன் அளித்திருந்தார். அதில் விரிவான கட்டமைப்பு வரைபடம் குறிப்புகள் கொடுக்கப்படவில்லை. மண் பரிசோதனை அறிக்கை மற்றும் கட்டமைப்பு வடிவமைப்புத் தேவைப்பற்றி திரு.வெங்கடசுப்பிரமணியத்திற்குத் தெரியும். கட்டடத்தின் நில அதிர்வுத் தேவைகள் மற்றும் பிற கட்டமைப்பு உறுதித் தேவைகள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, கட்டுமான நிறுவனத்தின் இறுதி ஒப்புதல் பெற்ற வரைபடத்திற்கேற்ப அவர் தமது சொந்த வடிவமைப்பினை செய்து அளித்துள்ளார்.

4. திரு.மனோகரின் ஒப்புதலுடனும் அவருடைய தேவைக்கேற்பவும் உள் திருத்தங்கள் செய்யப்பட்டு, இத்தகு திருந்திய வரைபடங்கள் திரு. வெங்கடசுப்பிரமணியத்திற்கு அவரது கட்டமைப்பு வடிவமைப்புக்காக அனுப்பட்டன. க ட்டட உறுதித்தன்மை குறித்த அவரது ஒப்புதல் மற்றும் ஏற்புக்கு பின்னரே திரு.வெங்கடசுப்பிரமணியம் அளித்த, தூண் அமைப்பு, அதன் அளவுகளுடன் கூடிய கட்டமைப்பு வரைபடங்கள் இறுதி செய்யப்பட்டன. இவ்வாறு இறுதியான கட்டமைப்பு வரைபடங்கள் மற்றும் கட்டுமான கட்டமைப்பு ஆகியவை கட்டுமானப் பணிக்கான பிரைம் சிருஷ்டியிடம் கொடுக்கப்பட்டன. கட்டமைப்பு வடிவமைப்பு மற்றும் கட்டமைப்பு உறுதி ஆகியவை சார்ந்து முழுப்பொறுப்பும் திரு. வெங்கடசுப்பிரமணியத்தையும், கட்டுமான நிறுவனத்தாரையுமே சாரும். சுகன்யாவின் இறுதிக் குறிப்பு என்பது போகிறபோக்கில் அளித்த அவரது கருத்தாக இருக்கலாம். ஏனெனில் கட்டமைப்பு உறுதியைப்பற்றிக் கருத்துரைக்க அவர்

போதிய வல்லமை பெற்றவரல்லர். அந்த வல்லமை திரு.வெங்கடசுப்பிரமணியத்திற்குத் உரியதாகும்.

5. கட்டமைப்பு ஆலோசகர் என்ற முறையில் செய்யப்பட்ட எந்தவித உள் திருத்தங்களானாலும், பிரைம் சிருஷ்டியின் தேவைக்கேற்ப அவர்களின் ஒப்புதலுடனும், அதற்குப் பிறகு திரு.வெங்கடசுப்பிரமணியத்தின் இறுதி கட்டமைப்பு ஏற்புடனும் செய்யப்பட்டவையே. கட்டுமான செயலாக்கமும், கட்டுமானத்தரமும், கட்டுமான நிறுவனத்தையும் அவரது கட்டுமான அணியையும் சார்ந்த முழுப்பொறுப்பாகும். கட்டமைப்புக் குழுமம் என்ற முறையில் நாங்கள் அநேக முறை கட்டுமானத் தளத்திற்குச் சென்று ஒருங்கிணைப்பையும், பணி முன்னேற்றத்தையும் பார்த்து வந்தோம். எங்களுக்குத் தெரிந்தவரை கட்டுமானப் பணி மனநிறைவளிப்பதாக இருந்தது. ஆனாலும், பல உயிர்களைக் காவு கொண்ட பலருக்கும் காயம் விளைவித்த இந்த நோ்ச்சியானது தீயூழால் விளைந்த துன்பியல் நிகழ்வாகும். உடன் நிகழ்வான புயல் தாக்கத்தையும், கட்ட இடிபாட்டுடன் இணைத்துப் பார்க்க வேண்டும் என்பது எங்கள் தாழ்மையான வேண்டுகோளாகும்.

6. வரைபட ஒப்புதல் பெறுவதற்கான கட்டமைப்பு உறுதி அறிக்கையைத் தமது அடிப்படை வரைபடம் மற்றும் பரிந்துரையுடன் திரு. நாகேஷ் அளித்திருந்தார். ஆனால் அதில் விவரமான கட்டமைப்பு வரைபடக் குறிப்புகள் இல்லை. அதற்குப் பின்னர், கட்டுமான நிறுவனத்தாரின் முந்திய திட்டங்களில் பணியாற்றியுள்ள திரு. வெங்கடசுப்பிரமணியத்தைக் கட்டமைப்பு ஆலோசகராக கட்டுமானதாரர் அமர்த்திக் கொண்டார். இத்திட்டத்தில் திரு. வெங்கடசுப்பிரமணியத்தை ஆலோசகராக அமர்த்துவதற்கு முன்பாகவே திரு. நாகேஷ்–க்குரிய ஆலோசனைக் கட்டணத்தையும் அளித்துவிட்டார்.

7. கட்டுமானத்திற்குரிய விவரமான வரைபடங்கள் ஏதுமின்றி திரு. நாகேஷ் கட்டட உறுதி அறிக்கை அளித்திருந்தார். திரு.மனோகரின் ஒப்புதலுடன் செய்யப்பட்ட உள் திருத்தங்களுடன், கட்டுமானத்திற்கான விவரமான கட்டமைப்பு வடிவமைப்பு கொடுக்கப்பட்ட பிறகே, கட்டுமானதாரரால் இத்திட்டம் செயலாக்கப்பட்டது. இதற்கு முன்னரே சில கட்டுமானங்களை திரு.மனோகரும், வெங்கடசுப்பிரமணியமும் சேர்ந்து மேற்கொண்டுள்ளதால், திரு.வெங்கடசுப்பிரமணியத்தை கட்டுமான ஆலோசகராக திரு.மனோகர் அமர்த்திக் கொண்டுள்ளார்.

8. இதற்கேற்ப set back, foot print, FSI கட்டட உயரம் ஆகியவற்றில் உரிய மாற்றங்கள் செய்யாமலேயே மாற்றங்களும், திருத்தமைவுகளும் உள்ளுக்குள் செய்யப்பட்டன. எனவே, இது பற்றிய முடிவு பிரைம் சிருஷ்டி அவுசிங் பிரைவேட் லிட். நிறுவனத்தின் கருத்திற்குமே விடப்பட்டது.

9. திரு.மனோகரிடம் இருந்த மண் சோதனை அறிக்கைகள் திரு.வெங்கடசுப்பிரமணியத்திடம் காண்பிக்கப்பட்டு, அதன்படி கட்டமைப்பு வடிவமைப்பு செய்வதன்பொருட்டு ஆலோசிக்கப்பட்டுள்ளது. திரு.வெங்கடசுப்பிரமணியம்தான் அவருடைய வடிவமைப்பு நோக்கம் பற்றி விளக்கம் தருவதற்கு சரியான நபர் ஆவார்.

10. திரு. வெங்கடசுப்பிரமணியன் மண்பரிசோதனை அறிக்கையின்படி தமது வடிவமைப்பைச் செய்து வழங்கியதுடன், கட்டமைப்பு உறுதி அறிக்கையில் தமது அடிப்படை பரிந்துரைகளையும் அளித்துள்ளார். கட்டுமான நிலத்தின் நிலைக்கேற்ப, அவரது வடிவமைப்பு அனுகுமுறை திரு.நாகேஷின் கட்டமைப்பு அறிக்கையிலிருந்து வேறுபட்டதாக இருக்கலாம். இதுபற்றி பதில் தர அவர்தான் சரியான நபராவார்.

11. கட்டுமானச் செயலாக்கமும், கட்டமைப்பு வடிவமைப்பு ஒருங்கிணைப்பும் கட்டுமானதாரர் மற்றும் நிறுவனப் பணியாளர்களின் பொறுப்பாகும். கட்டமைப்பு சார்ந்த கள ஆய்வுகள் போன்ற இப்பணிகள் கட்டுமான நிறுவனத்தாரின் கட்டுப்பாடுகளுடன் அடங்குவனவாகும்.

12. கட்டமைப்பு ஆலோசனை மற்றும் கட்டுமான நிறுவனத்துடனான ஒருங்கிணைப்புப் பணிகளை நாங்கள் மேற்கொண்டோம். கட்டமைப்பு வரைபடங்களில் நாங்கள் எந்தத் திருத்தத்தையும், மாற்றத்தையும் செய்யவில்லை.

13. எனக்குப் பொருந்தாதது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(ஒப்பம்) பர்கோத்ரா
நாள்: 20.08.2014

பொறியாளர்களிடமும் கட்டுமானத்தளத்திலுள்ள பணியாளர்களிடமும் கேட்கப்பட்ட கேள்விகள்

1. இதுபற்றி புலனாய்வு செய்த சிறப்பு புலனாய்வுக் குழு, இக்கட்டடம் இடிந்து விழுந்ததற்கு முறையற்ற திட்டமிடலும் செயலாக்கமுமே காரணம் என்று கண்டறிந்துள்ளது. இந்த இடிபாடுகளில் சிக்கி 61 பேர் இறந்துள்ளனர். 21 பேர் காயமுற்றனர். 'பி' பிளாக் இடிந்ததால் அண்டையில் உள்ள வீடுகள் சேதமடைந்துள்ளன. அப்பாவிகள் பலர் காயமடைந்துள்ளனர். கட்டுமானதாரர், கட்டடக் கலைஞர்கள், பொறியாளர்கள் எல்லாருமே இதற்குப் பொறுப்பானவர்கள் என்று புலனாய்வுக் குழுவினர் அறிக்கை கொடுத்துள்ளனர்.

இதற்கு உங்கள் மறுமொழி என்ன ?

2. பிளாக் "A" மற்றும் பிளாக் 'B' கட்டடங்களின் கட்டுமானதாராராகிய திரு.மனோகரனால் உங்களுக்குத் தரப்பட்ட குறிப்பான பணி என்ன ?

3. இப்பணி செயலாக்கத்தில் உண்மையிலேயே நிங்கள் பின்பற்றிய கட்டுமான வரைபடம் எது ?

4. அடுக்குக் கடைக்கால் (pile foundation) அமைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்ட திரு.அய்யப்பன் மற்றும் திரு.ஏழுமலை ஆகியோர் தம் வாக்குமூலத்தில், அடுக்குக் கடைக்கால் போடும்போது, அந்த இடம் மணற்பாங்காக இருந்ததால் 3 மீட்டர் நீளத்திற்குள்ள அடுக்குகள் மட்டுமே போட முடிந்ததாகவும், அடுக்குக் கடைக்கால் பணியை செம்மையாகச் செய்து முடிக்கமுடியவில்லை என்று தெரிவித்துள்ளார். நிங்கள் என்ன சொல்கிறீர்கள் ?

5. மணலுக்கு பதிலாக சிமெண்ட் கலவை போடுவதற்கு நிலக்கரிச் சாம்பல் பயன்படுத்தப்பட்டதெனில், பூச்சு வேலைகளுக்கும், கான்கிரீட் கலவைக்கும் என்னென்ன வீதத்தில் அவ்வாறு சேர்க்கப்பட்டது ?

6. கட்டுமானத்தில் பயன்படுத்தப்பட்ட நிலக்கரிச் சாம்பல் கற்களின் அளவு, எடை ஆகியவற்றைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா ?

அனுப்புநர்

20.08.2014

ஆர். துரைசிங்கம்
த/பெ எம். இராதாகிருஷ்ணன்,
கட்டுமானப் பொறியாளர்.

பெறுநர்

மாண்புமிகு நீதியரசர் ஆர். ரெகுபதி, விசாரணைக்குழு
(மௌலிவாக்கம்)
NCB 1 பி.எஸ்.குமாரசாமி ராசா சாலை
சென்னை. 28.

மதிப்பிற்குரிய ஐயா,

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத் திட்ட வரை படம் (CMDA Plan) தொழில்நுட்ப வல்லுநர்களின் அறிக்கைகள், சுகன்யா மற்றும் நாகேஷ் ஆகியோரின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை கடந்த 2 நாள்களில் நான் படித்துப் பார்த்தேன். என்னிடம் கேட்கப்பட்டுள்ள தொழில்நுட்பம் சார்ந்த கேள்விகளுக்குத் தொழில்நுட்ப வல்லுநர்கள் மட்டுமே பதில் அளிக்க முடியும்.

எனவே, நான் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டு, கடும் மன உளைச்சலுக்கு உள்ளாகியிருப்பதாலும், எம் சொந்த ஆவணங்கள் ஏதும் என்னிடம் இல்லாததாலும், முழு மனத்தையும் இதில் செலுத்தி, தக்க பதிலை அளிக்கவியலாத நிலையில் நான் உள்ளேன் என்று தெரிவித்து கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

(ஆர். துரைசிங்கம்)

பொறியாளர்களிடமும் கட்டுமானத்தளத்திலுள்ள பணியாளர்களிடமும் கேட்கப்பட்ட கேள்விகள்

1. இதுபற்றி புலனாய்வு செய்த சிறப்பு புலனாய்வுக் குழு, இக்கட்டடம் இடிந்து விழுந்ததற்கு முறையற்ற திட்டமிடலும் செயலாக்கமுமே காரணம் என்று கண்டறிந்துள்ளது. இந்த இடிபாடுகளில் சிக்கி 61 பேர் இறந்துள்ளனர். 21 பேர் காயமுற்றனர். 'பி' பிளாக் இடிந்ததால் அண்டையில் உள்ள வீடுகள் சேதமடைந்துள்ளன. அப்பாவிகள் பலர் காயமடைந்துள்ளனர். கட்டுமானதாரர், கட்டடக் கலைஞர்கள், பொறியாளர்கள் எல்லாருமே இதற்குப் பொறுப்பானவர்கள் என்று புலனாய்வுக் குழுவினர் அறிக்கை கொடுத்துள்ளனர்.

இதற்கு உங்கள் மறுமொழி என்ன ?

2. பிளாக் "A" மற்றும் பிளாக் 'B' கட்டடங்களின் கட்டுமானதாராகிய திரு.மனோகரனால் உங்களுக்குத் தரப்பட்ட குறிப்பான பணி என்ன ?

3. இப்பணி செயலாக்கத்தில் உண்மையிலேயே நீங்கள் பின்பற்றிய கட்டுமான வரைபடம் எது ?

4. அடுக்குக் கடைக்கால் (pile foundation) அமைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்ட திரு.அய்யப்பன் மற்றும் திரு.ஏழுமலை ஆகியோர் தம் வாக்குமூலத்தில், அடுக்குக் கடைக்கால் போடும்போது, அந்த இடம் மணற்பாங்காக இருந்ததால் 3 மீட்டர் நீளத்திற்குள்ள அடுக்குகள் மட்டுமே போட முடிந்ததாகவும், அடுக்குக் கடைக்கால் பணியை செம்மையாகச் செய்து முடிக்கமுடியவில்லை என்று தெரிவித்துள்ளார். நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ?

5. மணலுக்கு பதிலாக சிமெண்ட் கலவை போடுவதற்கு நிலக்கரிச் சாம்பல் பயன்படுத்தப்பட்டதெனில், பூச்சு வேலைகளுக்கும், கான்கிரீட் கலவைக்கும் என்னென்ன வீதத்தில் அவ்வாறு சேர்க்கப்பட்டது ?

6. கட்டுமானத்தில் பயன்படுத்தப்பட்ட நிலக்கரிச் சாம்பல் கற்களின் அளவு, எடை ஆகியவற்றைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா ?

அனுப்புநர்

20.08.2014

எஸ். சங்கர் ராமகிருஷ்ணன்,
த/பெ சீதாராமன்,
கட்டுமானப் பொறியாளர்.

பெறுநர்

மாண்புமிகு நீதியரசர் ஆர். ரெகுபதி விசாரணைக்குழு,
(மௌலிவாக்கம்)
NCB 1 பி.எஸ்.குமாரசாமி ராசா சாலை,
சென்னை. 28.

மதிப்பிற்குரிய ஐயா,

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத் திட்ட வரை படம் (CMDA Plan) தொழில்நுட்ப வல்லுநர்களின் அறிக்கைகள், சுகன்யா மற்றும் நாகேஷ் ஆகியோரின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை கடந்த 2 நாள்களில் நான் படித்துப் பார்த்தேன். என்னிடம் கேட்கப்பட்டுள்ள தொழில்நுட்பம் சார்ந்த கேள்விகளுக்குத் தொழில்நுட்ப வல்லுநர்கள் மட்டுமே பதில் அளிக்க முடியும்.

எனவே, நான் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டு, கடும் மன உளைச்சலுக்கு உள்ளாகியிருப்பதாலும், எம் சொந்த ஆவணங்கள் ஏதும் என்னிடம் இல்லாததாலும், முழு மனத்தையும் இதில் செலுத்தி, தக்க பதிலை அளிக்கவியலாத நிலையில் நான் உள்ளேன் என்று தெரிவித்து கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

(எஸ். சங்கர் ராமகிருஷ்ணன்)

பொறியாளர்களிடமும் கட்டுமானத்தளத்திலுள்ள பணியார்களிடமும் கேட்கப்பட்ட கேள்விகள்

1. இதுபற்றி புலனாய்வு செய்த சிறப்பு புலனாய்வுக் குழு, இக்கட்டடம் இடிந்து விழுந்ததற்கு முறையற்ற திட்டமிடலும் செயலாக்கமுமே காரணம் என்று கண்டறிந்துள்ளது. இந்த இடிபாடுகளில் சிக்கி 61 பேர் இறந்துள்ளனர். 21 பேர் காயமுற்றனர். 'பி' பிளாக் இடிந்ததால் அண்டையில் உள்ள வீடுகள் சேதமடைந்துள்ளன. அப்பாவிகள் பலர் காயமடைந்துள்ளனர். கட்டுமானதாரர், கட்டடக் கலைஞர்கள், பொறியாளர்கள் எல்லாருமே இதற்குப் பொறுப்பானவர்கள் என்று புலனாய்வுக் குழுவினர் அறிக்கை கொடுத்துள்ளனர்.

இதற்கு உங்கள் மறுமொழி என்ன ?

2. பிளாக் "A" மற்றும் பிளாக் 'B' கட்டடங்களின் கட்டுமானதாராகிய திரு.மனோகரனால் உங்களுக்குத் தரப்பட்ட குறிப்பான பணி என்ன ?

3. இப்பணி செயலாக்கத்தில் உண்மையிலேயே நீங்கள் பின்பற்றிய கட்டுமான வரைபடம் எது ?

4. அடுக்குக் கடைக்கால் (pile foundation) அமைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்ட திரு.அய்யப்பன் மற்றும் திரு.ஏழுமலை ஆகியோர் தம் வாக்குமூலத்தில், அடுக்குக் கடைக்கால் போடும்போது, அந்த இடம் மணற்பாங்காக இருந்ததால் 3 மீட்டர் நீளத்திற்குள்ள அடுக்குகள் மட்டுமே போட முடிந்ததாகவும், அடுக்குக் கடைக்கால் பணியை செம்மையாகச் செய்து முடிக்கமுடியவில்லை என்று தெரிவித்துள்ளார். நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ?

5. மணலுக்கு பதிலாக சிமெண்ட் கலவை போடுவதற்கு நிலக்கரிச் சாம்பல் பயன்படுத்தப்பட்டதெனில், பூச்சு வேலைகளுக்கும், கான்கிரீட் கலவைக்கும் என்னென்ன வீதத்தில் அவ்வாறு சேர்க்கப்பட்டது ?

6. கட்டுமானத்தில் பயன்படுத்தப்பட்ட நிலக்கரிச் சாம்பல் கற்களின் அளவு, எடை ஆகியவற்றைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா ?

அனுப்புநர்

20.08.2014

கே. கார்த்திக்

த/பெ பி. குத்தாலிங்கம்,

பெறுநர்

மாண்புமிகு நீதியரசர் ஆர். ரெகுபதி, விசாரணைக்குழு

(மௌலிவாக்கம்)

NCB 1 பி.எஸ்.குமாரசாமி ராசா சாலை

சென்னை. 28.

மதிப்பிற்குரிய ஐயா,

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத் திட்ட வரை படம் (CMDA Plan) தொழில்நுட்ப வல்லுநர்களின் அறிக்கைகள், சுகன்யா மற்றும் நாகேஷ் ஆகியோரின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை இன்று நான் படித்துப் பார்த்தேன். என்னிடம் கேட்கப்பட்டுள்ள தொழில்நுட்பம் சார்ந்த கேள்விகளுக்குத் தொழில்நுட்ப வல்லுநர்கள் மட்டுமே பதில் அளிக்க முடியும்.

எனவே, நான் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டு, கடும் மன உளைச்சலுக்கு உள்ளாகியிருப்பதாலும், எம் சொந்த ஆவணங்கள் ஏதும் என்னிடம் இல்லாததாலும், முழு மனத்தையும் இதில் செலுத்தி, தக்க பதிலை அளிக்கவியலாத நிலையில் நான் உள்ளேன் என்று தெரிவித்து கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

(கே. கார்த்திக்)

நிகழ்வுப் பின்னணித் தொகுப்பு விபரங்களுடன் எழுவினாக்கள் மீதான முடிவு / ஆழ்ந்தாராய்வு அறிக்கை.

இந்த விசாரணை, காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் வட்டம் மௌலிவாக்கம் கிராமம் புல எண்கள் 17/7A, 17/7B, 17/7C, 17/8B4B ஆகியவற்றில் Messrs. Prime Sristi Housing Private Limited என்னும் கட்டுமானதாரரால் `பெய்த்` மற்றும் `பிலீ.ப் என்னும் பெயர்களில் முறையே `ஏ` மற்றும் `பி` என இரு கட்டடத் தொகுதிகளாகக் கட்டப்பட்டுக் கொண்டிருந்த அடுக்கு மாடி இரட்டைக் குடியிருப்புகளில் `பி` கட்டடத் தொகுதி 28.06.2014 அன்று கட்டுமானப் புலத்தில் கட்டுமானப் பணியாளர்களாக இருந்தவர்களில் அதிகமானோரும் மற்றும் ஓரிருவருமாக 63 நபர்களின் உயிர்களைப் பலி வாங்கியும் 27 நபர்களை மிக மோசமான காயங்களுக்குட்படுத்தியும் பேரிழப்பு ஏற்படுத்தி இடிந்து விழுந்தது தொடர்பானது.

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் வட்டம் மௌலிவாக்கம் ஊராட்சி புல எண்கள் 17/7A, 17/7B, 17/7C, 17/8B4B ஆகியவற்றில் அமைந்த மனைப்பிரிவில் தரைநடுத்தளம் மற்றும் 11 மாடிகளைக் கொண்ட (Stilt plus 11 floors) `பெய்த்` மற்றும் `பிலீ.ப் என்னும் பெயர்களில் முறையே `ஏ` மற்றும் `பி` என இரு கட்டடத் தொகுதிகளாக, அடுக்கு மாடிக் குடியிருப்புகள் அமைந்த இரட்டைக்கட்டடம் கட்டும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்துக்கு Messrs. Prime Sristi Housing Private Limited கட்டட வரைபட ஒப்பளிப்பு கோரி மனுச் செய்தனர். சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் அடுக்குமாடிக் கட்டடக் குழுவின் உறுப்பினர் செயலர் உள்ளிட்ட 11 உறுப்பினர்கள் மற்றும் இதர அலுவலர்கள் கட்டட வரைபட ஒப்பளிப்பு கோரிய மனுவுடன் சமர்ப்பிக்கப்

பட்டிருந்த, தொடர்புடைய அனைத்து ஆவணங்களையும், பரிசீலனை மற்றும் கூர்ந்தாய்வு செய்ததின் அரசுக்கு ஒப்பளிப்பு வழங்குமாறு பரிந்துரை செய்திருந்த அறிக்கை அடிப்படையில் அரசு ஆணை நிலை. எண் 239 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி(UD1)த் துறை, நாள் 08.11.2012 மற்றும் அரசு ஆணை. நிலை. எண் 106 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி(UD1)த் துறை, நாள் 28.05.2013 ஆகியவற்றில் ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்பட்டது. அதைத் தொடர்ந்து, மௌலிவாக்கம் ஊராட்சி, அதன் மூ.மு. எண். 24/2013 – 14, நாள் 03.07.2013 செயல்முறைகளில் வழங்கியுள்ள கட்டட அனுமதி பெற்றபின், கட்டுமானதாரர் கட்டுமானப் பணியினைத் தொடங்கியுள்ளார். கட்டுமானப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே, கட்டுமானதாரர் இரு கட்டடத் தொகுதிகளிலும் அநேகமாக அனைத்து குடியிருப்புப் பகுதிகளை/ அடுக்கக இல்லங்களையும் விற்றுவிட்டிருக்கிறார். ஏறக்குறைய 49 நபர்கள் வங்கிக் கடன் பெற்று அல்லது அவாகளது சொந்த நிதியில இந்த அடுக்கக இல்லங்களைக் கிரயம் பெற்றுள்ளனர். இந்த நிலையில், நற்பேறிழந்த நாளான 28.06.2014 அன்று சனிக்கிழமையெனபதால் தொழிலாளர்கள் பலரும் ஊதியம் பெறுவதற்காக 'பி' கட்டடத் தொகுதியிலும், அப்போது மழை பெய்து கொண்டிருந்ததால் நனையாமலிருப்பதற்காக வேறு பலர் 'ஏ' கட்டடத் தொகுதியிலுமாக, அவர்களில் பலருக்கு அந்த நாளே இறுதி நாளாகப் போகிறதெனத் தெரியாமலேயே நின்று கொண்டிருந் திருக்கின்றனர். என்ன நிகழ வேண்டுமென்றிருந்ததோ, அது நிகழுமாறு, மாலை 5.30 க்கு இரட்டைக் கட்டடங்களில் ஒன்றான 'பி' கட்டடத் தொகுதி திடீரெனக் கண்ணிமைக்கும் நேரத்தில் வீசியெறியப்பட்ட கட்டுச் சீட்டுகளைப் போல தரையில் இடிந்து விழுந்து, தரைமட்டமாகி அதன் அவலப் பேற்றினைச் சந்தித்தது.

இதயத்தைப் பிழியும் இந்தச் சோக விபத்து நிகழ்ந்த தகவல் கிடைக்கப்பெற்றதும் தமிழக அரசு, உடனடியாக அரசு இயந்திரத்தைப் போர்க்கால அடிப்படையில், தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தி விரைவு நடவடிக்கை மேற்கொண்டது. தமிழ்நாடு நிவாரண ஆணையரான தமிழக அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையாளர், சென்னை, அவரது குழுவினருடன் மாலை 7.00 மணியளவில் சம்பவ இடத்திற்குச் சென்றடைந்துள்ளார். அரசின் உடனடி ஆணைகளுக்கேற்ப, சிறப்பு அணிகளான தேசிய பேரிடர் மீட்புப்பணிக் குழு, மாநில பேரிடர் மீட்புப்பணிக் குழு மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், மற்றும் வருவாய்த் துறை மற்றும் காவல் துறையினரான வழக்கமான அலுவலர்களும் தேடல் மற்றும் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். சம்பவ இடத்திலிருந்த சென்னை மாவட்ட ஆட்சியர் இரவு பகல் வேறுபாடின்றி எவ்விதத் தொய்வும் நேராத வண்ணம் மீட்புப் பணியைக் கண்காணித்து மேற்பார்வையிட்டார். அக்கறையுடனும், தீவிரமாகவும் மேற்கொண்ட மீட்புப்பணிகளால் இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த 61 சடலங்கள் மீட்கப்பட்டன; காயமுற்றுக் கிடந்த 27 நபர்களை உயிருடன் மீட்க முடிந்தது. மீட்கப்பட்ட நபர்கள் மிக மோசமாகக் காயமுற்றிருந்ததால் உடனடி சிகிச்சைக்காக அருகிலுள்ள மருத்துவமனைகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். தமிழக அரசின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விபத்து குறித்த அடித்தள நிலைமைகளைத் தெரிந்துகொள்ள விபத்து நடந்த இடத்தை 29.06.2014 அன்று தணிக்கையிட்டதோடு, காயமுற்றவர்கள் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த மருத்துவ மனைகளுக்கும் சென்று பார்வையிட்டு, விபத்துக்காளானோர் மற்றும் அவர்களது உறவினர்களுக்கு ஆறுதல் தெரிவித்து, காயமுற்றோருக்கு அரசு செலவில் மிகச் சிறந்த சிகிச்சை அளிக்கப்படுமென்று உறுதியளித்துள்ளார். மாண்புமிகு முதல்வர் அவர்கள், இடிபாடுகளுக்கிடையில் உயிருடன் சிக்கியிருக்கும் கடைசி நபர்

மீட்கப்படும் வரையில் இடைவிடாமல் தேடல் மற்றும் மீட்புப்பணி நடைபெறவேண்டுமென்றும் அதிகாரிகளுக்கு ஆணைகள் பிறப்பித்துள்ளார். விபத்தில் உயிரிழந்தோரின் உறவினர்கள் அருகிலுள்ள பள்ளியில் தங்கவைக்கப்பட்டனர். அடையாளம் காணப்பட்டபின், சடலங்கள் அவரவர் சொந்த ஊர்களுக்கு அரசு செலவிலேயே அனுப்பிவைக்கப்பட்டன. விபத்து நிகழ்ந்ததன் பேரதிர்ச்சி மற்றும் பெருந்தாக்கத்தின் விளைவாக அருகிலிருந்த கட்டடங்களும் பாதிக்கப்பட்டு அவற்றில் குடியிருந்தவர் களும் காயமுற்றிருந்தனர். அவ்வாறு காயமுற்றவர் களுக்கும் மீட்புப் பணிகள் மேற்கொண்டதோடு அத்தகைய பாதிப்புக் கட்டடங்களி லிருந்தவர்கள் வேறு பாதுகாப்பான பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். விபத்து நிகழ்ந்த இடத்துக்கு அருகில் குடியிருந்தவர்களின் பாதுகாப்பினை மேலும் உறுதிப்படுத்துவதற்காக பாதிப்புக்குள்ளான கட்டடங்களைச் சுற்றியுள்ள பகுதி தனிமைப்படுத்தப்பட்டு பாதுகாப்பு வளையத்துக்குள் கொணரப்பட்டு, அங்கு குடியிருந்தவர்கள் அனைவரும் உடனடியாக வெளியேற வேண்டுமென்றும் கண்டிப்பான எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. பிற மாநில முதல்வர்கள் உள்ளிட்ட உயர் பதவியாளர்கள் மற்றும் பெருந்தகையினர் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு காயமுற்றோருக்கு ஆறுதல் தெரிவித்ததோடு தேவையான உதவிகளைச் செய்வதாகவும் வாக்களித்துள்ளனர். மீட்புப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அதே நேரத்திலேயே இயன்ற அளவுக்கான அனைத்து மறுவாழ்வு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு தமிழக அரசு அதன் அலுவலர்களுக்கு ஆணைகள் வழங்கியுள்ளது. மாநில அரசு மற்றும் அதன் முகமைகள் மேற்கொண்ட அனைத்துப் பணிகளும் அத்தியாயம் - II இல் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் நிகழ்ந்த பின்னர், சென்னை, மாங்காடு காவல்நிலையத்தில், இதச 304(ii), 336, 337 மற்றும் 338 பிரிவுகளின் கீழ் கு.எண்.751/14 ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டு, புலனாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மிகமிக மோசமான நிலையில் அச்சம் விளைவித்துள்ள இந்த விபத்தினால் ஏற்பட்டுள்ள பேரழிவின் கொடுந்தாக்கத்தைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு சம்பவங்கள் குறித்து விசாரணை மேற்கொள்ள சிறப்புப் புலனாய்வுக் குழு ஒன்றினை ஏற்படுத்த முடிவாற்றியது. அதன் அடிப்படையில் சென்னை, வேப்பேரி, காவல் துறை ஆணையாளரின் ந.க.எண்.201/காதுஆ/முகாம்/2014 நாள் 15.07.2014 செயல்முறைகளில் சென்னை வடக்கு, சட்டம் மற்றும் ஒழுங்கு கூடுதல் காவல் ஆணையாளரின் நேரடி கண்காணிப்பின் கீழ் வடக்கு மண்டல காவல் இணை ஆணையாளரின் தலைமையில் சிறப்புப் புலனாய்வுக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. புலனாய்வு எவ்விதத் தடங்கலுமின்றி நேர்முறையில் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மேலும் பல உயர்மட்ட காவல் துறை அலுவலர்களும் மேற்படி குழுவில் இணைக்கப்பட்டு பொறுப்பாக்கப்பட்டனர். உயிரிழந்தவர் ஒவ்வொருவருக்கும் தனித்தனி புலனாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டது. உயிழந்தவர்களுக்கான இறப்பு விசாரணைகள்/பிரேத விசாரணைச் சான்றுகள் மற்றும் காயமடைந்தவர்களுக்கு காயச் சான்றுகள் பெறுவதற்கு புலனாய்வுக் குழுவினரால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. விபத்து இடத்தில் இடிபாடுகளுக்கிடையிலிருந்து காங்கிரீட் மாதிரிகள் சேகரித்து தடயவியல் நிபுணரின் கருத்துரை பெறுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டன. விபத்து இடத்தில் மீண்டும் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அண்ணா பல்கலைக்கழக நிபுணர்களின் கருத்துரை பெறுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டன.

இந்த விசாரணை ஆணையம், அதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் பணியினை, -

அ) கட்டடம் இடிந்து விழுந்ததற்கான காரணங்களைக் கண்டறிதல்;

ஆ) இந்த விபத்து யார் யாருடைய கருத்தின்மை மற்றும் கவனக்குறைவினால் ஏற்பட்டதோ அந்த நபர்களைப் பொறுப்பாக்குதல் மற்றும்

இ) இத்தகைய துயரங்கள் எதிர்காலத்தில் ஏற்படாவண்ணம் மேற்கொள்ளப்பட வேண்டிய சீரமைப்பு நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்,

திறம்பட நிறைவேற்றுவதற்காக, அதிகபட்சப் பொது முக்கியத்துவம் சார்ந்த இந்தப் பிரச்னைகளுக்குத் துல்லியமாகப் பதிலளிக்கும் விதத்தில் அடித்தளத்திலிருந்து மேல்மட்டம் வரையிலான ஒவ்வொரு தகவல்களையும் நுணுக்கமாக ஆராய்வதற்கு அனைத்து முயற்சிகளையும் உண்மையான அக்கறையுடன் மேற்கொண்டது. இத்தகவுநோக்குடன் விசாரணை ஆணையம் 11.07.2014 அன்று இடிந்து விழுந்த பகுதி மற்றும் அதனையடுத்த 'ஏ' கட்டடத் தொகுதிப் புலத்துக்குச் சென்று மேற்சொன்ன கட்டுமானங்களின் கட்டட உறுதி குறித்து அறிந்து கொள்வதற்காக, தொடர்புடைய அலுவலர்கள் முன்னிலையில் புலத்தணிக்கை மேற்கொண்டது. இந்த ஆணையம், அடிப்படையில் ஒரு உண்மை அறியும் குழு என்ற உணர்வில், தொழில் நுட்ப விபரங்களைப் புரிந்துகொள்வது மற்றும் பகுப்பாய்வு செய்வதில் எவ்விதச் சிரமமும் ஏற்படாமலிருக்க, தொழில் நுட்ப நிபுணர்களின் குழு ஒன்றினை அமைப்பது அவசியம் எனக் கருதியது. அதன் காரணமாக 1952 ஆம் ஆண்டு, விசாரணை ஆணையங்கள் சட்டத்தின் 5B பிரிவின் கீழ் 21.07.2014 நாளிட்ட செயல்முறைகளின்படி தொழில் நுட்ப நிபுணர்குழு அமைக்கப்பட்டது. அதே

வேளையில், தொடர்புடைய அலுவலர்களுக்கு இது குறித்த அனைத்து ஆதாரங்களையும் திரட்டுமாறு உத்திரவிடப்பட்டது. இச் சம்பவம் குறித்த தகவல் மற்றும் சூழ்நிலை விபரங்கள் அறிந்த தனிநபர்களிடமிருந்து தகவல்களை வரவேற்றும், அவர்கள் விசாரணை ஆணையத்தின் முன்பு முன்னிலையாகி அவர்களது வாக்கு மூலங்கள் மற்றும் தகவல்களை ஆணையுறுதி ஆவணங்களாகத் தாக்கல் செய்யுமாறும் தெரிவிக்கும் விளம்பரங்கள் 24.07.2014 அன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் (ஆங்கிலம்) மற்றும் தினத்தந்தி (நாட்டு மொழி – தமிழ்) என்ற இரு நாளிதழ்களில் வெளியிடப்பட்டன.

அதே தடத்தில் தொடர்ந்து, கட்டப்பட்டுக்கொண்டிருந்த போதே இடிந்த கட்டடத் தொகுதி தொடர்பான கட்டட வரைபட ஒப்பளிப்பு ஆணைகளின் அசல் ஆவணங்களை சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்/ அரசிடமிருந்து பெறப்பட்டன. கட்டுமானத்திற்கு அனுமதி வழங்கி அரசு ஆணைகள் பிறப்பித்த வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அலுவலர்கள் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர்-செயலர் உள்ளிட்ட அடுக்குமாடிக் கட்டடக்குழுவின் 11 உறுப்பினர்கள் மற்றும் ஒப்பளிப்பு/அனுமதி வழங்கப்பட்டுள்ளது தொடர்பான அனைத்து நபர்களிடமிருந்தும் ஆணையுறுதி ஆவணங்கள் பெறப்பட்டன.

விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதே, ஆய்வு வினாக்களுக்குப் பதிலளிக்கும் வகையில் தொடர்புடைய வாய்மொழித் தகவல்கள் மற்றும் ஆவணங்களைத் திரட்டுவதற்கு சிறப்புப் புலனாய்வுக் குழுவுக்கு விசாரணை ஆணையங்கள் சட்டத்தின் 5-A பிரிவில் தெரிவித்துள்ளபடி, 24.07.2014 நாளிட்ட செயல்முறைகளில் அதிகாரமளித்து, திரட்டப்பட்ட ஆவண ஆதாரங்களை இவ்விசாரணை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி, இதில் தொடர்புடைய தகவல்கள் மற்றும் சூழல்கள் அறிந்த தனிநபர்கள் விசாரணைக்காக முன்னிலையாக்கப்பட்டனர். பின்னர், இறப்பு விசாரணை அறிக்கைகள், பிரேத பரிசோதனை அறிக்கைகள், காயச் சான்றுகள், விபத்து இடம் குறித்த புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் அடங்கிய குறுந்தகடுகள்(C.Ds), நிபுணர்களின் கருத்துரைகள் மற்றும் காங்கிரீட் மற்றும் மண் தன்மை குறித்த தடயவியல் அறிக்கைகள் உள்ளிட்ட ஆவணச் சான்றுகள் மற்றும் அசல் கட்டட வரைபடம் தயாரித்த கட்டடக் கலைஞர், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடம் அளிக்கப்பட்டிருந்த மனுக்கள் மீதான நடவடிக்கைக்கு கட்டுமானதாருக்கு உதவியாக இருந்த மற்றொரு கட்டடக் கலைஞர், நிலத்தூண் அமைப்பவர் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் உள்ளிட்டவர்கள் அளித்துள்ள ஆணையுறுதி ஆவணங்கள் அனைத்தும் பெறப்பட்டன. சிறப்புப் புலனாய்வுக் குழு திரட்டிய ஆதாரங்களின் அடிப்படையில் அதன் கருத்துரையினை அறிக்கையாக இவ் விசாரணை ஆணையத்தின் முன் தாக்கல் செய்துள்ளனர். இந்த அறிக்கை அத்தியாயம் – v இல் உள்ளது.

இந்த ஆணையத்தின் பணி, கட்டட உறுதி மற்றும் கட்டுமானத் தரத்தின் தொழில் நுட்பம் குறித்து ஆழ்ந்த ஆராய்வு மேற்கொள்வதாக இருப்பதால் அக்கருத்துக்களை எவ்விதக் குறைபாடுமின்றிப் புரிந்துகொள்ளவும் முழுமையான மதிப்பாய்வு செய்யவும் உயர்மட்ட நிபுணர் குழு ஒன்றினை அமைக்கவேண்டுமெனக் கருதியது. அதன்படி, அண்ணா பல்கலைக்கழகம், இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் மற்றும் மத்திய அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் திறமைமிக்க தொழில் நுட்ப நிபுணர்கள் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்ட நிபுணர் (Former Planner) ஆகியோரின் பணித்திறனும் பயன்படுத்திக்கொள்ளப்பட்டது.

மேற்சொன்ன நிபுணர் குழு விசாரணை ஆணையத்துடன் முறையான அலுவல பூர்வமாக விவாதித்தது. மேற்சொன்ன நிபுணர் குழுவுக்கு கட்டுமான வரைபடங்கள் மற்றும் தொடர்புடைய ஆவண ஆதாரங்கள் அடிப்படையில் சம்பவம் பற்றி முழுமையான தகவல்கள் அளிக்கப்பட்டன. விசாரணைக்குக் கிடைத்திருக்கின்ற அனைத்து ஆவணங்களின் அடிப்படையில் பலமுறை விவாதங்கள் நடத்திப் பரிசீலித்த நிபுணர்கள் விபத்து நிகழ்ந்த இடத்தினைப் பல முறை தணிக்கையிட்டு ஆய்வுகள் மேற்கொண்டனர். புலத்தணிக்கை மற்றும் தல ஆய்வு அடிப்படையில் நிபுணர்களின் கருத்துக்களை இதர நிபுணர் கருத்துக்களுடன், குறிப்பாகக் காங்கிரீட் மற்றும் மண் மாதிரிகள் ஆய்வு தொடர்பான பரிசோதனை அறிக்கைகளுடன் பகுப்பாய்வு செய்யுமாறு நிபுணர்கள் வலியுறுத்தப்பட்டனர். நிபுணர்கள் அவர்களது ஒருமித்த கருத்தினை அளித்துள்ளனர். அக்கருத்துக்களின் அடிப்படையில் கட்டடம் இடிந்து தரைமட்டமானதற்கான காரணங்கள், தற்போது புலத்திலுள்ள 'ஏ' பிளாக் கட்டிடத்தின் உறுதி குறித்த கருத்துக்கள், கவனக்குறைவு மற்றும் கருத்தின்மையுடன் செயலாற்றிய தனியார்களின் மீது பொறுப்பு சுமத்துதல் முதலியன குறித்த ஒவ்வொரு நிபுணரின் தனியறிக்கைகளை இணைப்பாகக் கொண்ட தொகுப்பு அறிக்கை ஒன்று ஆணையத்திற்கு அளித்துள்ளனர். மேற்குறிப்பிட்ட நிபுணர் குழு அமைப்புவிபரங்கள், அவர்களது ஆய்வு, பகுப்பாய்வு மற்றும் ஆய்வு முடிவுகள் தொடர்பாக அத்தியாயம் – VI இல் விவாதித்துப் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. ஒப்பளிக்கப்பட்ட திட்ட வரைபடத்திற்கு முரணாக அதனிலிருந்தும் கட்டுமானதாரர் மீறியுள்ள விபரங்கள் அத்தியாயம் IV இல் விவாதிக்கப்பட்டுள்ளன.

மேலும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்/ அரசிடம் திட்ட வரைபட ஒப்பளிப்பு கோரி கட்டுமானதாரர் தாக்கல் செய்திருந்த

ஆவணங்களை சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து அசலாகப் பெற்று உரிய முறையில் பரிசீலனை மற்றும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் / அரசு / ஊராட்சி அலுவலர்களிடமிருந்து ஆணையுறுதி ஆவணங்கள் பெறப்பட்டு, அவை தொடர்பான பரிசீலனை அத்தியாயம் III இல் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளன.

ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள கட்டடத்திட்ட அசல் வரைபடம், உண்மையில் கட்டுமானம் கட்டப் பயன்படுத்தப்பட்டதும் பிறிதொரு கட்டடக் கலைஞர் தயாரித்ததுமான பிறிதொரு கட்டடத் திட்ட வரைபடம், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத் திட்டத்தை மீறி கட்டுமானதாரர் மேற்கொண்டுள்ள செயல்கள் மற்றும் பணி/கட்டுமானப் பொருட்களின் தரம் ஆகியன குறித்து கட்டுமானத்துடன் தொடர்புள்ள தனியர்களின் வாய்மொழி வாக்குமூலம் அடிப்படையில் விசாரணை ஆணையம் மிக ஆழ்ந்து ஆராய்ந்தது. இத்தகவு நோக்குடன் ஆணையம் எய்தியுள்ள முடிவு, ஆணையம் நியமித்த மேற்குறிப்பிட்ட நிபுணர் குழுவினரின் அறிவியல்/தொழிலநுட்பப் பகுப்பாய்வு முடிவுடன் மிகக் கச்சிதமாகப் பொருந்துகிறது. இதனையே வேறு வகையில் சொல்வதானால், ஆணையத்தின் விசாரணை மற்றும் ஆய்வில் தவறுகளை விளைவித்துவிடக்கூடிய உட்குறை எதனையும் முழுமையாகத் தவிர்க்கவேண்டுமென்பதற்காக ஆணையம் நிபுணர்களுடன் மேற்கொண்ட ஆழ்ந்தாராய்வு மற்றும் விசாரணையின் போது ஆணையத்திற்கு வரப்பெற்ற அபிப்பிராயங்கள் மற்றும் கருத்துக்கள் அடிப்படையிலான தொழில் நுட்பப் புரிதலுடன் ஆணையம் அதனளவில் மேற்கொள்கிற பரிசீலனைக்கு அப்பாற்பட்டு, உயர்மட்ட நிபுணர் குழு அதன் தனித்தடத்தில் ஆய்வு மேற்கொள்ளுமாறு கோரப்பட்டு, அதன் முடிவினைப் பெற்று ஆணையம் பரிசீலிக்கையில், அது நிபுணர்குழுவின் ஒருமித்த கருத்தாக,

துல்லியமாகவும் தெளிவாகவும் தெரிவிக்கப்பட்டதாக இருந்த அம்முடிவுடன், ஆணையம் அதனளவில் விசாரணை மூலம் வந்தடைந்த முடிவினை ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் பரிசீலிக்கையில் இரு முடிவுகளும் ஒன்றுக்கொன்று துணையாக, பக்கவலிமை அளிப்பதாக இருப்பது தெரியவருகிறது. இதனால் மிகத்தெளிவான, பொருள் மயக்கம் எதுவுமில்லாத ஒரு முடிவினை ஆணையம் எய்த இயலும். இத்தகவு நோக்குடன் விரிவான விவாத விவரணைகள் அத்தியாயம் -VI இல் தரப்பட்டுள்ளன.

கட்டுமானத் திட்டமிடுபவர்களின் சங்கம் ஒன்றிலிருந்தும் தனிநபர்களிடமிருந்தும் விபத்து தொடர்பான சில விபரங்கள் தெரிவித்தும் சில பரிந்துரைக் கருத்துக்களும் கொண்ட முறையீடுகள் ஆணையத்துக்கு வரப்பெற்றுள்ளன. அடுக்கக இலலத்துக்காகப் பதிவு செய்துள்ள தனிநபர்கள் தனித்தனி ஆணையுறுதி ஆவணம் தாக்கல் செய்துள்ளதுடன், அதற்கான சங்கத் தலைவரும் ஒருங்கிணந்த ஆணையுறுதி ஆவணம் ஒன்றைத் தாக்கல் செய்து, அவர்களது குறைகளைக் குறிப்பிட்டு, இழப்பீடு கோரியுள்ளனர். இவறறைத் தவிர, விபத்தின் காரணமாக பாதிப்பு ஏற்பட்ட இதர கட்டட உரிமையாளர்கள் மற்றும் இதர கட்டடங்களில் குடியிருந்து இந்த விபத்தினால் காயமுற்றவர்களும் முறையீடுகள் அளித்துள்ளனர். அனைத்து முறையீட்டு மனுக்களையும் கவனமாகக் கருதிப்பார்த்து, அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள முறையீடுகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் அத்தியாயம் - VII இல் தரப்பட்டுள்ளன.

இடிந்து தரைமட்டமான கட்டுமானத்துக்குப் பொறுப்பான தனிநபர்களான கட்டுமானதாரர், கட்டடக் கலைஞர்கள் மற்றும் இதர பொறியாளர்களின் நிலைப்பாட்டினை உறுதியாக அறிந்துகொள்வதற்கான நடவடிக்கையாக, குற்ற வழக்கு பதியப்பட்டபின், கைதாகி, அவ்வழக்கில் புலன் விசாரணை முடிவடையும் வரையில் வேலூர் மத்திய சிறையில்

நீதிமன்றக் காவலிலிருந்த அந்த நபர்களை இந்த ஆணையத்தில் முன்னிலையாக்குமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. அதன் விளைவாக மனோகரன், முத்துக் காமாட்சி, பாலகுருசாமி, வெங்கடசுப்பிரமணியம், பர்கோத்ரா, துரைசிங்கம், கார்த்திக் மற்றும் சங்கர் ராமகிருஷ்ணன் என்ற தனிநபர்கள் இந்த ஆணையத்தில் முன்னிலையாக்கப்பட்டனர். இந்த ஆணையத்தின் முன்பாக அவர்கள் முன்னிலையானவுடன், அவர்களுக்கு இந்த நடவடிக்கை எழுவதற்குக் காரணமாக அமைந்த தக்வல்கள் மற்றும் சூழல் விரிவாக எடுத்துரைக்கப்பட்டு, ஆணையத்திடம் அளிக்கப்பட்டிருந்த அனைத்து ஆதாரங்கள், குறிப்பாக ஆணையத்தின் முன்பாக தாக்கல் செய்யப்பட்டிருந்த ஆணையுறுதி ஆவணங்கள், நிபுணர்களின் கருத்துகள், சிறப்புப் புலனாய்வுக் குழுவின் அறிக்கை, கட்டடத் திட்ட வரைபட அனுமதி கோரப்பட்ட மனு மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் முழுக் கோப்பு விபரங்கள் அனைத்தும் ஒரு வினாப்படிவமும் இணைத்து அளிக்கப்பட்டது. அனைத்துத் தனியர்களும் அந்த ஆவணங்களைப் பரிசீலனை செய்வதற்காக கால அனுமதி தேவையென ஒருமித்த நிலையில் கோரினர். அதன் காரணமாக அவர்கள் அனைவரும் ஆவணங்களை நிதானமாகப் பரிசீலனை செய்வதற்கான அனைத்து வசதிகளையும் ஆணையத்தில் செய்து கொடுக்கப்பட்டது. ஆனாலும் அவர்கள் அனைத்து ஆவணங்களையும் படித்துப் புரிந்து வினாப்படிவத்திற்கான பதில்களை அளிப்பதற்கான தயாரிப்புகளைச் செய்துகொள்ள மேலும் அதிக நேரம் தேவையெனத் தெரிவித்தனர். அவர்களது கோரிக்கையை ஏற்று, மறுநாள் அதாவது, 19.08.2014 அன்று முன்னிலையாகுமாறு பணிக்கப்பட்டது. அன்று இடை ஓய்வு முடிந்த பின்னும், அவர்கள் தங்களால், வினாக்களுக்கான பதில்களைத் தயாரிக்க இயலவில்லையென்று தெரிவித்து மீண்டும் கால அனுமதி கோரினர். அதன் காரணமாக மீண்டும் 20.08.2014 அன்று

அவர்களை முன்னிலையாக்குமாறு பணிக்கப்பட்டது. அன்று அவர்கள் வினாப்படிவத்திற்குப் பதிலளிக்கத் தயாராகியிருந்தனர். அந்த வினாப்படிவங்களுக்கான அவர்களது பதில்களைத் தட்டச்சு செய்தும் தட்டச்சு நகல்களை அவர்கள் சரிபார்த்துக் கையொப்பமிடவும் அவர்களுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்பட்டன. பதிலளிக்கப்பட்ட படிவங்களில் விசாரணை ஆணையத்தின் நீதிமன்ற அலுவலர் சான்றொப்பமிட்டு அதன் நகல்கள் அவர்கள் அனைவருக்கும் அளிக்கப்பட்டன. மேற்குறிப்பிட்ட நபர்களை ஆணையத்தின் முன்பு முன்னிலையாக்குதல் முதல் அவர்களது பதில்களைப் பதிவு செய்வது வரையிலான நடவடிக்கைகள் அத்தியாயம் – VIII இல் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன.

ஆய்வுக் கட்டடம் துரதிர்ஷ்டவசமாக இடிந்து தரைமட்டமாகிவிட்ட நிகழ்ச்சிக்குக் காரணமாக அமைந்த பொருண்மைத் தகவல்கள் மற்றும் சூழமைவுகளை, ஏராளமாக மற்றும் திணறடிக்கும் அளவுக்கு வரப்பெற்றுள்ள வாய்மொழி மற்றும் ஆவண ஆதாரங்களின் வெளிச்சத்தில், அதிலும் குறிப்பாக, எவ்விதமான திசை திருப்பல் மற்றும் முரண்பாடுகளுக்கு ஒரு சிறிது கூட இடமளிக்காத வகையில் பொருந்துகிற நிபுணர்களின் கருத்து அடிப்படையில் விரிவாகப் பரிசீலித்துக் கருதிப் பார்த்துள்ள இந்த ஆணையம்/உண்மை அறியும் குழு, அரசு கேட்டுள்ள மூன்று வினாக்களுக்கும் முடிவான பதிலை அளிப்பதற்குத் தக்க முடிவுரையை உருவாக்குவது தகுதியானதெனக் கருதுகிறது.

ஏ) கேட்பு வினா – 1 குறித்துப் பரிசீலிக்கையில், அதன் கருத்துச் சுருக்கம்

"28.06.2014 அன்று மாலையில், காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், *மௌலிவாக்கத்தில்* அடுக்குமாடிக் கட்டடம் இடிந்து விழுமளவுக்கு அடிப்படையாக அமைந்த

காரணங்கள் மற்றும் சூழமைவுகள் குறித்து அனைத்து அம்சங்களிலும் விசாரணை மேற்கொள்ள,"

என அமைந்துள்ளதால், அந்தக் குறிப்பிட்ட காலப்பகுதியில் நேரடியாக அந்தக் கட்டுமானத்தில் பணியாற்றிய தனிநபர்களிடம் இந்த ஆணையம் பெற்றுள்ள வாக்குமூலப் பதிவுகளைக் கொண்டு கட்டுமானத்திட்டத்தின் முதற் தோற்றம், வளர்ச்சி மற்றும் கட்டுமானத் தொடர் பணி ஆகியவற்றைத் தெரிவிக்கும் பின்னணியினை முனைப்பான ஒளிபாய்ச்சி விளக்கமாகத் தெரிவிக்க வேண்டியது அவசியமாகிறது.

கட்டுமானதாரர், மெஸ்ஸர்ஸ் ப்ரைம் ஸ்ரீஸ்ட்ரி ஹவுசிங் லிட் காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் வட்டம் மௌலிவாக்கம் ஊராட்சி புல எண்கள் 17/7A, 17/7B, 17/7C, 17/8B4B ஆகியவற்றில் அமைந்த மனைப்பிரிவில் தரைநடுத்தளம் மற்றும் 11 மாடிகளைக்கொண்ட `பெய்த்` மற்றும் `பிலீ::ப் என்னும் பெயர்களில் முறையே `ஏ` மற்றும் `பி` என இரு கட்டடத் தொகுதிகளாக, அடுக்கு மாடிக் குடியிருப்புகள் அமைந்த இரட்டைக்கட்டடம் கட்டும் மாபெரும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்துக்கு Messrs. Prime Sristi Housing Private Limited கட்டுமான ஒப்பளிப்பு கோரி, கட்டுமான வடிவமைப்பு வரைபடம் உள்ளிட்ட தேவையான அனைத்து ஆவணங்களையும் இணைத்து, மனுச் செய்தனர். மனுவுடன் இணைத்துச் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுமான வடிவமைப்பு வரைபடம் திரு.நாகேஷ் என்ற கட்டடக் கலைஞரால் தயார் செய்யப்பட்டதென்பதும், அந்த வரைபடமே மனுவுடன் இணைத்து சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டதென்பதும் ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மைத் தகவலாகும். மனுவுடன் இணைத்துச் சமர்ப்பிக்கப்பட்ட வரைபடத்தை திரு. நாகேஷ், அவரே வரைந்து தயாரித்ததாகவும் அவரது ஆணையுறுதி ஆவணத்தில் ஒப்புதல் தெரிவித்துள்ளார்; அந்த வரைபடம் தொடர்பாக

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அதிகாரிகள் எழுப்பிய வினாக்களுக்கு விளக்கம் தெரிவிப்பதற்காக கட்டடக் கலைஞர் செல்வி.சுகன்யா கட்டுமானதாரருடன் பலமுறை சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அலுவலகத்துக்குச் சென்றார்; அந்த வரைபடத்தில் சில விதிமீறல்கள் இருந்ததால் இரண்டாவதாக ஒரு கட்டுமான வடிவமைப்பு வரைபடம் தயாரிக்கப்பட்டு அதில் அவரும் செல்வி. சுகன்யாவும் கையொப்பமிட்டுச் சமர்ப்பித்தனர்; அவரால் தயாரிக்கப்பட்ட கட்டுமான வடிவமைப்பு வரைபட அடிப்படையிலேயே சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் கட்டுமான ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அவரால் தயாரிக்கப்பட்ட கட்டுமான வடிவமைப்பு வரைபட அடிப்படையில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் கட்டுமான ஒப்பளிப்பு பெற்ற பின்னர், கட்டுமானதாரர், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் கட்டுமான ஒப்பளிப்பு வரைபடத்தைத் தூக்கியெறிந்துவிட்டு, அவரது ஆலோசகர் திரு. விஜய் பர்கோத்ரா மூலம் திரு. எஸ். வெங்கடசுப்ரமணியம் என்ற வேறொரு கட்டடக் கலைஞரை நியமித்து, கட்டடக் கலைஞர் – திரு. எஸ். வெங்கடசுப்ரமணியத்திடம் வேறொரு கட்டுமான வடிவமைப்பு வரைபடத்தினைப் பெற்று, அந்தப் புதிய வரைபடத் திட்டத்தின் அடிப்படையில் கட்டுமானப் பணியைத் தொடங்கியதாக திரு. நாகேஷ் அவரது ஆணையுறுதி ஆவணத்தில் உறுதிபடத் தெரிவித்துள்ளார். அவரது வாக்குமூலத்தின்படி, ஒப்பளிக்கப்பட்ட வரைபடம் அவருக்கும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அலுவலர்களுக்கும் தெரிவிக்காமலேயே முழுவதுமாகக் கைவிடப்பட்டுள்ளது. திரு. நாகேஷ், அவரால் தயாரிக்கபட்டு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரைபடத்தினையும் ஒப்பளிக்கப்பட்ட அசல் வரைபடத்துக்குப் பதிலாகக் கட்டுமானதாரர் இடிந்த கட்டடத்தைக் கட்டுவதற்குப் பயன்படுத்தியுள்ள திரு. வெங்கடசுப்ரமணியத்தின் வரைபடத்தினையும் ஒப்பு நோக்கிய பின்னர்,

இந்த மிக முக்கியமான விபரங்களை ஆணையத்தின் முன்பாக அளித்துள்ளார். திரு. நாகேஷ், அவரது ஆணையுறுதி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள வாக்குமூலத் தகவல் பகுதியினைப் பிரித்தெடுத்து, இந்த இடத்தில், அவரது வாக்கியங்களாலேயே சுட்டுவது பொருத்தமானது:

"அடிமானத்துக்கு, 59` ஆழமும் 20` விட்டமும் பாதுகாப்புத் தாங்குதிறன் 105 டன்" எனவும் நிலத்தூண் அளவு குறிப்பிட்டிருந்தேன். திரு. வெங்கடசுப்பிரமணியத்தின் வரைபடத்தில் 13`` ஆழமும் 12`` விட்டமும் நிலத்தூண் அளவாகக் குறிப்பிட்டு, பாதுகாப்புத் தாங்குதிறன் எதுவும் குறிப்பிடவில்லை. 65 நிலத்தூண்கள், தெப்பப்பலகம் 13`` தெப்ப உத்திரம் 13``X 2'2`` உயரம் அவரால் கருதப்பட்டுள்ளது. வலுவூக்க விபரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. இது தவிர, என்னுடைய தூண் வடிவமைப்பாக 1'X0'X2'0' தளம் 25 மிமீ விட்டம், 8 வலுவூட்டப்பட்ட முறுக்குக் கம்பிகள் M35 கிரேடு காங்கிரீட், 60 தூண்கள், தூண்களுக்கிடைப்பட்ட தூரம் 20' எனக் குறிப்பிட்டுள்ளேன். ஆனால், திரு. வெங்கட சுப்ரமணியத்தின் வரைபடத்தில் தூண் வடிவமைப்பாக 1'X1'6`` அளவு, 20 மிமீ விட்டம், 8 வலுவூட்டப்பட்ட முறுக்குக் கம்பிகள் M25 கிரேடு காங்கிரீட், 38 தூண்கள், தூண்களுக்கிடைப்பட்ட தூரம் 23' போதுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் மேல் மட்டத்திலிருந்து 2 மிதவைத் தூண்கள் அமைத்துள்ளனர். எனது வரைபடத்தில் கூரைப் பலகத்தின் தடிப்பு 5`` எனக் குறிப்புள்ளது. ஆனால், திரு. வெங்கடசுப்ரமணியத்தின் வரைபடத்தில் கூரைப்பலகத்தின் தடிமன் அளவு எதுவும் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. எனது வடிவமைப்பில் ஒவ்வொரு கட்டடத்துக்கும் தனித்தனியாக கடைகால்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. திரு. வெங்கடசுப்ரமணியத்தின்

வரைபடத்தில் இரு கட்டடத் தொகுதிகளுக்கும் பொதுவான இணைப்புக் கடைகால் அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர, மிதவைத்தூண் தாங்கு சுவற்றிலிருந்து எழுப்பப்பட்டுள்ளது. எனவே இந்தத் தூண் அழுத்தும் சுமையும் தாங்கு சுவற்றில் அமைகிறது."

நறுக்கெடுத்துத் தரப்பட்டுள்ள திரு. நாகேஷ் வாக்குமூலம் கட்டுமானதாரரின் ஒளிவுமறைவு நடவடிக்கைகளைத் தெளிவாகக் காட்டுகிறது. இதில், கட்டுமான வரைபடத்தை விதிமுறைகள் மீறியதல்லவெனச் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் ஒப்புதலைப் பெறும் வரையில் திரு. நாகேஷின் தொழில் நுட்ப நிபுணத்துவத்தைப் பயன்படுத்திக்கொண்ட அவர்கள், கட்டுமானதாரரின் மறைமுகத் திட்டமான ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தைக் கைவிடுவதை வேறொரு கட்டடக் கலைஞரான திரு.வெங்கடசுப்ரமணியம் மூலம் நிறைவேற்றிக்கொள்வதற்காக, ஒப்புதல் கிடைத்தபின், அவர்களது கட்டுமானப் பணியில் முன்னணியாக நிறுத்தியிருக்க வேண்டிய திரு. நாகேஷை வெளியேற்றியுள்ளனர். திரு.நாகேஷின் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய அம்சமான பாதுகாப்புத் தாங்குதிறன் 105 டன் என்பது திரு. வெங்கடசுப்ரமணியத்தின் வரைபடத்தில் இடம்பெறவேயில்லையென்பது மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது. அது போலவே, மிக முக்கிய அம்சங்களான வலுவூக்க விபரங்கள், கூரைப்பலகத் தடிப்பு அளவு முதலியன கட்டுமானத்துக்குப் பயன்படுத்தியுள்ள புதிய வரைபடத்தில் மிக வசதியாகத் தவிர்க்கப்பட்டுள்ளன. எனவே, கட்டுமானதாரர் திட்டத் தொடக்கத்திலேயே, ஒப்பளிக்கப்பட்ட மூல வரைபடத்தை மீறிச் செயல்படுவதென்றும் அவரது திட்டத்துக்குப் பொருத்தமாக வேறு வரைபடத்தைப் பயன்படுத்துவதென்றும் முடிவெடுத்துள்ளதைக் காணும்போது, உலகியல் அறிவு வாய்ந்த எந்த ஒரு நபரும், `ஆரம்பமே சரியில்லையே` என

முடிவெடுத்துவிட இயலும். அதைத் தொடர்ந்து, ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திலிருந்தும் மீறுதல் மற்றும் அதனை முற்றாகக் கைவிட்டு, வேறு வரைபடத்தை அடிப்படையாகக் கொள்ளுதல் மூலம் கட்டுமானதாரர் மற்றும் கட்டடக் கலைஞர் திரு. வெங்கட சுப்ரமணியம் இருவரும் மேற்கொண்ட செயல்பாடுகளே ஆய்விலுள்ள கட்டுமானம் இடிந்து விழுந்ததற்கான முக்கியமான அடிப்படைக் காரணமாக அமைகின்றன.

மேற்குறிப்பிட்ட முடிவு கட்டுமானதாரரால் நியமிக்கப்பட்ட ஆலோசகர்/திரு. விஜய் பர்கோத்ராவால் பதிலிப்பணியாளராக அனுப்பப்பட்டு, பணியாற்றிய ஆலோசகர் மற்றும் கட்டடக் கலைஞர் செல்வி. சுகன்யாவின் வாக்கு மூலத்தால் மேலும் வலுப்பெறுகிறது. அவரது முக்கியப் பணி சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்துடன் ஒத்திசைவித்து, ஒருங்கிணைப்பதாக இருந்தது. அவரது ஆணையுறுதி ஆவணத்தில், அவர், பலமுறை சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்துக்கு கட்டுமானதாரருடன் பலமுறை சென்றுள்ளதாகவும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஒப்பளித்த கட்டுமான வடிவமைப்பு வரைபடம் திரு. நாகேஷ் தயாரித்ததென்றும், கட்டுமானதாரர் மற்றும் திரு. விஜய் பர்கோத்ரா இருவருமே திரு. நாகேஷ் தயாரித்து சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடம் சமர்ப்பித்த வரைபடங்கள் மற்றும் வடிவமைப்புகளைப் பின்பற்ற வேண்டாமெனத் தெரிவித்திருந்ததாகவும், இடிந்து விழுந்த கட்டடத்தைக் கட்டுவதற்கு திரு.வெங்கடசுப்ரமணியம் தயாரித்த வரைபடத்தை அடிப்படையாகக் கொள்ளுமாறு அறிவுறுத்தியதாகவும் வாக்குமூலம் அளித்துள்ளார். மேலும் அவர், குறிப்பாக, ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள வரைபடத்துக்கும் திரு. வெங்கடசுப்ரமணியத்தின் வரைபடத்துக்கும் மிகுந்த வேறுபாடு இருப்பதை, கட்டுமானதாரர் மற்றும் திரு.விஜய் பர்கோத்ரா இருவருக்குமே சுட்டிக் காட்டி வினாக்கள் எழுப்பிய போது, அவர்கள் ஒப்பளிக்கப்பட்ட மூல

வரைபடத்தைப் பற்றிக் கவலைகொள்ளாமல் அவர்களது உத்தரவுகளையே பின்பற்றுமாறு அறிவுறுத்தியதாகவும் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவரது வாக்குமூலப்பகுதியை அவரது ஆணையுறுதி ஆவணத்திலுள்ளவாறே மீண்டும் ஒருமுறை கீழே குறிப்பிடுவது அவசியமாகிறது.

"கட்டடக்கட்டுமானப் பணி எனது வேலைத்திட்ட வரையறையில் ஒரு பகுதி அல்ல. சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு 'பி' கட்டடத்தொகுதிக்கான ஒப்புதல் கோரி நாங்கள் அனுப்பியிருந்த வரைபடத்தில் 46 தூண்கள் இருந்தன. கட்டடம் மேற்குறிப்பிட்ட வரைபடத்தின்படி கட்டப்படவில்லை. கட்டுமானதாரர் கேட்டுக்கொண்டதற்கு இணங்கி, திரு. விஜய் பார்கோத்ரா ஊர்தி வழிப்பாதை அமைப்பதற்காகத் தூண்களின் எண்ணிக்கையை 37 ஆகக் குறைத்தார்.

நான் என்னுடைய மேலாண் இயக்குநர் திரு. விஜய் பார்கோத்ராவிடம் இது குறித்துப் பேசினேன். ஊர்தி நிறுத்துமிடம் அமைப்பதற்காக அவ்வாறு செய்யப்பட்டுள்ளதாகவும் இது குறித்து வெங்கடசுப்ரமணியத்திடம் பேசுமாறும் என்னிடம் கூறினார். நான் வெங்கடசுப்ரமணியத்திடம் பேசும்போது, தூண்களின் எண்ணிக்கையைக் குறைப்பதால் கட்டடத்தின் உறுதி பாதிக்கப்படாதா எனக் கேட்டேன். அதற்கு வெங்கடசுப்ரமணியம் என்னிடம் எனது மேலாண் இயக்குநர் தான் ஊர்தி வழிப்பாதைக்கு இடம் வேண்டி தூண்களின் எண்ணிக்கையைக் குறைத்ததாகவும் இது குறித்து அவரே (வெங்கடசுப்ரமணியம்) கட்டுமான வடிவமைப்பின்போது கவனமெடுத்துப் பார்த்துக்கொள்வதாகவும் தெரிவித்தார். வெங்கடசுப்ரமணியம் என்னிடம் கூறியதை நான் எனது மேலாண் இயக்குநரிடம் தெரிவித்தேன். கட்டுமான

வடிவமைப்பு குறித்து எனக்கு அடிப்படை அறிவு மட்டுமே உள்ளது. இப்பிரச்னை குறித்து வெங்கடசுப்ரமணியம் பார்த்துக்கொள்வார் என நான் நினைத்தேன்.

மேலும், 11 மாடி கட்டடம் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஒப்பளிப்பு வழங்கிய வரைபடத்தின்படி கட்டப்படவில்லை. அவ்வப்போது, எனது மேலாண் இயக்குநர் திரு. விஜய் பர்கோத்ராவும் வெங்கடசுப்ரமணியமும் விவாதித்து வரைபடங்களைத் தயார் செய்தனர். நான் ஊதியத்திற்குப் பணி புரியும் ஒரு பணியாளராக இருந்ததால் அவர்கள் கூறியபடி வரைபடங்களைத் தயாரித்தேன். கட்டுமானம் நடைபெறுகின்ற புலத்திற்கு நான் மூன்று நான்கு முறைகள் சென்று பார்த்தேன். பொறியாளர்கள் சங்கர் ராமகிருஷ்ணனும் தினேஷும் வழக்கமாக கட்டுமானப் புலத்தில் இருப்பார்கள். நான் கடைசி முறையாகப் புலத்துக்குச் சென்ற போது 'ஏ' கட்டடத்தொகுதிக்கான அடிமானப் பணி பாதி முடிவடைந்திருந்தது. 'பி' கட்டடத்தொகுதிக்கான அடித்தளம் மற்றும் தரைநடுத்தளம்(Stilt) கட்டி முடிக்கப்பட்டிருந்தது. தரைத்தளத்திற்கான செங்கற்பணி நடைபெற்றுக்கொண்டிருந்தது. மேலும் 'பி' கட்டடத்தொகுதியில் 'எல்' மற்றும் 'எம்' தூண்களுக்கு நடுவில் தாங்கு சுவற்றில் மிதவைத்தூண் ஒன்று எழுப்பப்பட்டிருந்தது. **மிதவைத்தூண் அமைப்பது சரியா என்றும், அது கட்டடத்தின் உறுதிப்பாட்டினைப் பாதிக்காதா என்றும், அது 11 மாடிக்கான சுமையைத் தாங்குமா என்றும், நான் வெங்கடசுப்ரமணியத்தைக் கேட்டேன்.** அதற்கு வெங்கடசுப்ரமணியம் அது ஒரு பிரச்சினையே இல்லையென்றும் அதை அவர் பார்த்துக்கொள்வதாகவும் கூறினார்.

வெங்கடசுப்ரமணியம் என்னிடம் கூறியதை நான் எனது மேலாண் இயக்குநருக்குத் தெரிவித்தேன்.

நாகேஷின் கட்டுமான வடிவமைப்பின்படி தூணின் அளவு 1'x2'. ஆனால் வெங்கடசுப்ரமணியத்தின் கட்டுமான வடிவமைப்பின்படி தூணின் அளவு 1'x1'6'' எனக் கொடுக்கப்பட்டிருந்தது. **மாற்றியமைக்கப்பட்ட தூண் அளவு 11 மாடிக் கட்டடம் ஒன்றுக்கு பொருத்தமற்றதாகத் தோன்றுகிறது என** நான் எனது மேலாண் **இயக்குநர்** திரு. விஜய் பர்கோத்ராவிடம் கூறினேன். அதற்கு எனது மேலாண் இயக்குநர், அதை கட்டுமானப் பொறியாளர் வெங்கடசுப்ரமணியம் பார்த்துக்கொள்வார் எனத் தெரிவித்தார். கட்டடத்துக்கு நிலத்தூண் அடிமானம் ஒன்றினையும் நாகேஷ் குறிப்பிட்டிருந்தார். நாகேஷ், அவரது கட்டட உறுதிச் சான்றில் 18 மீ ஆழமுள்ள நிலத்தூண் அடிமானத்தைக் காட்டியிருந்தார். பின்னாளில், வெங்கடசுப்பிரமணியம், அவரது அடிமான வடிவமைப்பில் 4 மீ ஆழமுள்ள நிலத்தூண் அடிமானத்தைக் குறிப்பிட்டுள்ளார். எனவே, அடிமானம் 18 மீட்டருக்குப் பதிலாக 4 மீ மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. இது குறித்து வெங்கடசுப்ரமணியத்திடம் பேசுமாறு எனது மேலாண் இயக்குநரிடம் கூறினேன். அதற்கு, கட்டுமானதாரர் மனோகரும் கட்டுமானப் பொறியாளர் வெங்கடசுப்ரமணியமும் இப்பிரச்னைகள் குறித்துப் பார்த்துக்கொள்வார்களென்றும், நாம் இதில அதிகமாகச் சொல்லிக்கொள்வதற்கில்லையென்றும் எனது மேலாண் இயக்குநர் கூறினார். கட்டடம் உரிய முறையில் வடிவமைக்கப்படாததாலும் எவ்விதக் காரணங்களும் இன்றித் தூண்களின் எண்ணிக்கையைக் குறைத்ததாலுமே கட்டட உறுதி பாதிக்கப்பட்டு, சுமையைத் தாங்கவியலாமல் கட்டடம் இடிந்து விழுந்தது."

ஆணையுறுதி ஆவணத்திலுள்ள அவரது வாக்குமூலத்தைக் கவனமாகக் கருதிப்பார்க்கும்போது, ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தை முற்றிலுமாகக் கைவிடுவதென்ற கட்டுமானதாரின் மறைமுகத் திட்டம், மேலாண் இயக்குநர் திரு. பர்கோத்ராவுக்கும் மிக நன்றாகத் தெரியும் என்ற கூடுதல் தகவலினையும் அவரது வாக்குமூலம் தெரிவிப்பது தெரியவருகிறது. செல்வி.சுகன்யா ஒரு முறைக்கும் மேலாக மிதவைத்தூண் அமைப்பது சரியா என்றும், அது கட்டடத்தின் உறுதிப்பாட்டினைப் பாதிக்காதா என்றும், அது 11 மாடிக்கான **சுமையைத் தாங்குமா** என்றும் திரு.வெங்கடசுப்ரமணியத்திடம் மட்டுமல்லாமல் அவரது மேலாண் இயக்குநர் விஜய் பர்கோத்ராவிடமும் மாற்றியமைக்கப்பட்ட தூண் அளவு, 11 மாடிக் கட்டடம் ஒன்றுக்குப் பொருத்தமற்றது எனக் கூறி நிலைமைகுறித்து எச்சரிப்பதாக அவரது கவனத்துக்குக் கொண்டுவந்தும், படுகேடான கூட்டு மேற்கொண்டிருந்த அந்த மூவரும், என்னவிலை கொடுத்தாயினும் மிக அதிக லாபம் அடையவேண்டுமென்கிற பேராசையில், குறைந்தபட்சம் அந்தக் கடைசி நேரத்திலாவது எச்சரிக்கை அடையாளத்தைக் கண்டு கொள்ளுமளவுக்குக் கூட அவர்கள் சிரத்தை கொள்ளவோ அல்லது அதனைக் காது கொடுத்துக் கேட்கும் நிலையிலோ இல்லாமலிருந்துள்ளனர். அதன் விளைவாக, திருத்த நடவடிக்கைகள் வேண்டுமென்றே தவிர்க்கப்பட்டுள்ளதோடு, அச்சுறுத்திக்கொண்டிருந்த பேரிடர் விபத்தும் நிகழ்ந்துவிட்டிருக்கிறது.

முதலாளாக (Foreman) நியமிக்கப்பட்டிருந்த திரு. அய்யப்பன் என்பவர் அவரது ஆணையுறுதி ஆவணத்தில், தூண் அமைக்கும் பணியைச் செம்மையாகச் செய்யமுடியாதபடி கட்டுமானப் புலத்திலிருந்த மண் மிக இளகிய தன்மைகொண்டதாகவும் மணல் செறிந்தும் இருந்ததால், அவர் பணியிலிருந்தும் நிற்கவேண்டியதானதென்று வாக்குமூலம் அளித்துள்ளார். கட்டுமானதாரரால், நிலத்தூண் அடிமானப்பணிக்காக பிற்பாடு

நியமிக்கப்பட்ட திரு.ஏழுமலை என்பவர் மண் மிகவும் மணல் செறிந்ததாக இருந்ததால், அவர் செய்திருந்த நிலத்தூண் அடிமானம் சுற்றுச் சுவர் அமைப்பதற்கோ அல்லது ஒற்றைத் தளக் கட்டடம் அமைக்கவோதான் தகுதியானதென்றும் 11 தளங்கள் கொண்ட அடுக்குமாடிக் கட்டடத்திற்கு முற்றிலும் தகுதியற்றதெனத் தெரிவித்துள்ளார். கட்டுமானப் புலம் மணற் பகுதியாக இருந்தது மற்றும் மிக இளகிய தன்மை கொண்டதாக மண் இருந்ததென்ற உண்மைநிலை தெரிவிக்கப்பட்டிருந்தும் கட்டுமானதாரரும் அவரது கூட்டாளிகளும் பிற்பாடு விதிமீறல்களுடன் தயாரித்த வரைபடத்தின் படியே கட்டுவதென ஏற்கெனவேயே தீர்மானித்திருந்ததாலேயே, கூடுதல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குப் பதிலாக, தடித்தனமாகச் சுரணையற்றுப் பணியைத் தொடர்ந்தனர், என்பதை மேற்கண்ட தனிநபர்களால் முனைப்புடன் அளிக்கப்பட்டுள்ள அடித்தளப் பொருண்மைத் தகவல்கள் சுட்டுகின்றன.

மேலும் உறுதிப்படுத்தும் விதமாக, கட்டுமானதாரரால் பணியமர்த்தப்பட்ட திரு மணி – கொத்தர், அவரது ஆணையுறுதி ஆவணத்தில், மணலுக்குப் பதிலாக நிலக்கரிச் சாம்பலும், செங்கலுக்குப் பதிலாக பயன்பாட்டிலுள்ள செங்கலுக்குப் பதிலாக சாம்பற் கட்டிக் கற்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் அதிக எடையின காரணத்தாலும் போதுமான தூண்கள் அமைக்கப்படாத தாலும், கட்டுமானம் சுமை தாங்காமல் இடிந்து விழுந்ததென வாக்குமூலம் அளித்துள்ளார். காங்கிரீட் பலகங்கள் நீரேற்று இறுகுங்காலமாக வழக்கமாக 25 நாட்களுக்குப் பின்னரே பயன்படுத்தப்படுவதாகவும், அந்த நடைமுறை 15 நாட்களுக்குள்ளாகவே முடிக்கப்பட்டதென்றும் அதாவது காங்கிரீட் சரிவர இறுகுவதற்குக் கூட கால அவகாசமளிக்கப்படவில்லையென்றும் அவர் குறிப்பாகத் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட தனிநபர்கள் அளித்துள்ள வாக்குமூலங்களிலிருந்து வெளிப்படுகிற அடித்தள உண்மைநிலையானது, ஒரு புதிய வரைபடத்தை திருட்டுத்தனமாக செயற்படுத்தியதன் மூலம் ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தை முழுமையாகத் தவிர்த்ததோடு, ஒவ்வொரு நிலையிலும் விதிமீறல்களும் விலகல்களும் கட்டுமானதாரரின் நடவடிக்கைகளில் விரவிப்பரந்துகிடப்பதையும் அவரது திட்டமிட்டுத் தெரிந்தே செய்யப்பட்டுள்ள சட்டப்புறம்பான செயல்களுக்கு கட்டடக் கலைஞர் எஸ். வெங்கடசுப்ரமணியம் மற்றும் ஆலோசகர் விஜய் பர்கோத்ரா ஆகிய இருவரும் இடிந்து விழும் அபாயம் இருப்பதை செல்வி சுகன்யா ஒன்றுக்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் எச்சரித்தும் அதற்கும் எதிராகத் தெரிந்தே உதவியிருப்பதையும் தெளிவாகத் தெரிவிக்கிறது.

அடித்தள நிலையில் என்ன நிகழ்ந்திருந்ததென்பதை நேரடியாகத் தெரிவிக்கும் மேற்கண்ட சான்றாவணம் தவிர, மெய்நடப்பினை தொழில் நுட்பத் தகவு நோக்கிலும் ஐயமறத் தெரிந்துகொள்வதற்காக, இந்த ஆணையம் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, இந்த ஆணையத்திற்கு அதன் முன்பாக ஆய்விலுள்ள வினாக்களுக்கான பதில்களை அளிப்பதற்கு உதவும்பொருட்டு பொறியியல் நிபுணர்கள் கொண்ட தொழில் நுட்ப நிபுணர் குழு ஒன்று 1952 ஆம் ஆண்டு, விசாரணை ஆணையங்கள் சட்டத்தின் 5B பிரிவின் கீழ் அமைக்கப்பட்டது. அந்த நிபுணர் குழு நபர்வாரியாக தனித்தனி அறிக்கைகள் மற்றும் கருத்துக்களைத் தாக்கல் செய்துள்ளதற்கும் அப்பால், 'பி' கட்டடத்தொகுதி ஏன் இடிந்து விழுந்தது? என்ற தலைப்பில் 'பி' கட்டடத்தொகுதி இடிந்து விழுவதற்குக் காரணமாக அமைந்த அடிப்படைகள் குறித்த திடமான முடிவினை, பயன்படுத்தப்பட்ட கட்டுமானப் பொருட்கள், அவற்றின் தரம், விதிவிலகல்கள், முறைகேடுகள் மற்றும் இடறுகுழிகள் முதலியன உள்ளிட்ட முக்கியமான கருத்துநிலைகளை அறிவியல் – தொழில் நுட்ப வரையறைகளோடு

ஒருங்கிணைத்துத் தொகுப்பு அறிக்கை ஒன்றினையும் அளித்துள்ளனர். அந்த நிபுணர் குழு மேற்கொண்ட ஆய்வு மற்றும் பகுப்பாய்வுகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு இந்த அறிக்கையின் ஒரு இணைப்பாகத் தரப்பட்டுள்ள போதிலும், தற்போது விவாதிக்கின்ற கருத்து மீது முழு கவனம் செலுத்துகிற முயற்சியாக, நிபுணர்குழுவின் தொகுப்பு அறிக்கையில் பொருத்தமான பின்வரும் பகுதியினை மட்டும் மீண்டும் இங்கே தரப்படுகிறது:-

`பி` கட்டடத்தொகுதி ஏன் இடிந்து விழுந்தது?

ஒரு கட்டடக் கட்டுமானம் அதன் முழு எடையையும் ஈடுகொடுத்துத் தாங்கி நிற்பதற்கு, அதில் வசிக்கவிருக்கிற நபர்களின் இயங்கு சுமை மற்றும் காற்று, நில அதிர்வு போன்றவற்றால் ஏற்படும் கிடைமட்ட அழுத்தச் சுமை ஆகியவற்றுக்கும் சேர்த்து வடிவமைக்கப்படவேண்டும். கட்டிடம் தகர்ந்து விழுந்த போது அதிலிருந்த அடுக்கக இல்லங்களில் குடியிருப்பு ஏதும் இல்லை. அடித்தள அளவில் தூண்களில் ஏற்பட்டிருந்த சுமையினைக் கணக்கிட்டு அறிந்துகொள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்/அண்ணா பல்கலைக்கழகத்தால் கணினிப் பகுப்பாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அங்கிருந்த மொத்த தூண்களின் எண்ணிக்கை 37 என்பது கண்டறியப்பட்டது. அவற்றில் அதிக அளவிலான சுமை அழுத்திய தூண் எல்19. ஆகும். இந்தத் தூண் தாங்கும் சுமை, இதர சுமைக்கூறுகளைக் கருத்திலெடுக்காமல், நிலைச் சுமையாக மட்டும் கணிக்கப்பட்ட எடை 420 டன் ஆகும். இதனைக் கைமுறையாகக் கணக்கிட்டு அதனோடு ஒப்பிட்டுப் பார்த்தும் உறுதிசெய்யப்பட்டது. வரைபடங்களில் கொடுக்கப்பட்டிருந்த தூண்களின் பரிமாண அளவுகள் மற்றும் வலிவூட்டல்கள் புலத்தில் நேரடித் தணிக்கையிட்டு உற்று நோக்கிச் சரிபார்க்கப்பட்டன. தூணின் அளவு 1`-0``x 1`6``. தூணுக்குள் 20 மி.மீ. விட்டமுள்ள 8 எ.ஃகுக் கம்பிகள் புகுத்தப்பட்டிருந்தன. இந்தத் தூணின்

மொத்தத் தகர்வு தாங்குதிறன் கணக்கிட்டபோது அது 220 டன் மட்டுமே ஆகிறது. தூணின் மொத்தத் தாங்குதிறன் 220 டன் ஆக இருக்கும்போது, தற்போதய சுமையாக, நிலைச்சுமை மட்டிலும் (இயங்கு சுமை எதனையும் கணக்கில் கொள்ளாமல்) கணக்கிடும்போது அதுவே 420 டன் ஆகிறது. இதுவே, தளங்களில் இயங்கு சுமை சேரும்போது, 500 டன் என அதிகமாகிவிடும். தூணின் மீதான மொத்தச் சுமையைக் கணக்கிட, மேற்குறிப்பிட்ட 500 டன் என்பதை 1.5 என்ற காரணி கொண்டு பெருக்கவேண்டும். எனவே தூண்களின் மீதான மொத்த அழுத்தச் சுமை ஏறக்குறைய 740 டன் ஆகிறது. இப்பெருமளவு எடைப் பெருக்கத்தினை, தூணிண் தாங்குதிறனான 220 டன் என்பதோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் தூணின் தாங்குதிறன் எவ்விதத்திலும் போதுமானதில்லை என்பது கண்கூடாகத் தெரிகிறது. இதனை புலத்தணிக்கையின் போது எல்19 தூண் நசுங்கி அதன் எஃகுக் கம்பிகள் பிதுங்கி நெளிந்து அதன் கட்டுகள் அனைத்தும் பிரிந்து, தாங்கவியலாத அதிகச் சுமையின் காரணமாகத் தகர்ந்ததைச் சுட்டிக்காட்டியதை நேரடியாகவும் காணமுடிந்தது.

தூண்கள் மீதான சுமை (நிலைச்சுமை மட்டிலுமே) கணக்கிட்டபோது, 37 தூண்களில் 22 தூண்களின் சுமை அவற்றின் மொத்தத் தாங்கு திறனைவிட அதிகப்பட்டிருந்தது என்பதை இங்கு குறிப்பிட வேண்டியிருக்கிறது.

4. வடிவமைப்பு மற்றும் கட்டுமானத்தின் போதான மீறல்கள்:

கட்டுமான ஆவணங்களைப் பரிசீலனை செய்ததன் மூலமும் கட்டுமானப் புலங்களைத் தணிக்கையிட்டபோது நேரடியாகக் கண்டறிந்ததிலிருந்தும் கீழ்க்காணும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன:

a) ஐஎஸ் விதிமுறை 456:2000, குத்துக்கோட்டு நிலையிலும் பக்கவாட்டு நிலையிலும் உறுதிநிலைச் சரிபார்ப்பினை, பகுதி 204 மற்றும் 205 பக்கம் 33ன் படி மேற்கொள்ள வேண்டுமென விதிக்கிறது. இது நிறைவேற்றப்படவில்லை. விதிமுறையின் இப்பகுதி, அனைத்துக் கிடை மட்ட விசைகளையும் அடிமான அமைப்புக்குத் திறம்பட மாற்றிச் செலுத்தும் குறுக்குச் சட்ட அமைப்பின் போதிய அளவுக்கான திறன் தேவையை வலியுறுத்துகிறது.

b) பக்கவாட்டு அசைவுச் சோதனை மேற்கொள்ளப்பட வில்லை. மாறும் காற்று வீச்சுச் சுமையின் காரணமான பக்கவாட்டு அசைவு H/500 என்ற அளவுக்கு அதிகமாகக்கூடாது. இதில் H என்பது கட்டுமானத்தின் மொத்த உயரத்தைக்குறிக்கும். இது சரிபார்க்கும் சோதனை செய்யப்பட்டிருக்கவில்லை.

c) இதுபோன்ற அடுக்குமாடிக் கட்டிடங்களாகிய பெரிய திட்டங்களுக்கு வடிவமைப்பு அடிப்படையிலான அறிக்கை (Design Basis Report – DBR) ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். அந்த அறிக்கை தே.க.ச. (தேசிய கட்டடச் சட்டம்) 2005 -இன் பகுதி 4.1 மற்றும் பகுதி 4.2 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட விதிமுறைகளின் படியான போதிய காப்பு மிகைவரம்புகளின் விபரங்களைத் தெரிவிக்க வேண்டும். இந்த அறிக்கை தயாரிக்கப்படவில்லை.

d) தே.க.ச. 2005-இன் பகுதி 4.1 பக்கம் -6 இன் சாரம்சம் :

"பல்துறை நுட்பம் தேவைப்படுகிற திட்டங்களின் பல்வேறு வடிவமைப்பு நுட்பங்களுக்கான ஒன்றிணைவுக்கு பணி அலுவலர்களுக்கிடையே ஒருங்கிணைந்த அணுகுமுறை தேவைப்படுகிறது. இதற்காகவும் பல்துறைத் தேவைகளின் சிக்கல்களைச் சரிசெய்துகொள்வதற்கும் எந்தெந்த துறை தேவைப்படுகிறதோ அத்துறைகளின் அலுவலர்களைக் கொண்ட குழு ஒன்றினை சரியான நேரத்தில் அமைத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறான பல்துறை ஒன்றிணைப்பினை கருதுகோள் நிலையிலேயே அமைத்துக்கொள்வது விரும்பத்தக்கதாகிறது. அக்குழுவின் உறுப்பினரமைப்பு அந்தத் திட்டத்தின் தன்மை மற்றும் பரிமாணப் பெருக்க அளவின் அடிப்படையில் அமையும். வடிவமைப்பு என்பது புரட்சிகரமானதும் பங்களிப்புகளாலானதுமான நடைமுறையாக இருக்கும்போது உரிமையாளரின் பங்களிப்பு ஒவ்வொரு நிலையிலும் மிக முக்கியமான கருத்தாக அமைகிறது என்பதுடன் வடிவமைப்புக் குழு, அதனை உறுதி செய்து கொள்ளவும் வேண்டும்.

வடிவமைப்பு முறையாகச் செயலாக்கம் பெறுவதை உறுதிப்படுத்திக்கொள்ள, வடிவமைப்புக் குழு கட்டுமான/ நிறைவேற்றுகையின் ஒவ்வொரு

கட்டத்திலும் இணைந்து செய்லபடுமாறு இணைவிக்கப்படவேண்டும்'.

e) தேகச 2005-இன் பகுதி 4.2 வலியுறுத்தும் பின்வரும் வரையறை பின்பற்றப்படவில்லை:

"பெருந்திட்டங்களுக்கு, அத்திட்டங்களின் சிக்கலான தன்மையைப் பொறுத்து, தேவைப்படும் பல்வேறு துறைகளிலும் அந்தந்தத் துறைகளில் பயிற்சியும் அனுபவமும் மிக்க அலுவலர்களைக் கொண்டு, திட்ட மேலாண்மைக்கும் கட்டுமான மேலாண்மைக்கும் தனித்தனிக் குழுக்கள் அமைக்கப்படவேண்டும்.

அத்திட்டங்களின் சிக்கலான தன்மை மற்றும் பரிமாண அளவினைப் பொறுத்து திட்ட மேலாண்மை/கட்டுமான மேலாண்மைக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், அவர்களது கல்வித்தகுதி மற்றும் அத்துறையில் அவர்களின் அனுபவம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நியமிக்கப்படவேண்டும்.

f) தே.க.ச. 2005-வின் பகுதி 6 கட்டுமான வடிவமைப்பு பிரிவு 1 சுமை விசைகள் மற்றும் விளைவுகள் என்பதன்படி கட்டுமான வடிவமைப்பு இல்லை.

g) ஐஎஸ் விதிமுறை 456:2000 – இன் பகுதி 17 கட்டுமானம், பணித்திறமை, ஆவணங்கள், மற்றும் கட்டுமானப் பொருட்கள் அனைத்தையும் சோதனை செய்வதற்கான ஆய்வு நடைமுறையினை வரையறுத்து வலியுறுத்துகிறது. தற்போது கிடைத்திருக்கும் ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில், அந்தவிதி

முறைகள் பின்பற்றப்படவில்லையென்பதைக் காட்டுகின்றன.

h) இப்போது, உள்ளகம் மற்றும் கட்டுமானப் பொருட்கள் ஆய்வகங்களுக்கு அனுப்பப்பட்டு அவற்றின் ஆய்வு முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

5. திடீரெனத் தகர்ந்து விழுந்தமைக்கு சட்ட விதிமுறைகளைப் பின்பற்றாமையே காரணம் என்பதற்கான கண்டறி கருத்துக்கள்:

I. பயன்படுத்தப்பட்ட காங்கிரீட் 20 மி.மீ பரல் தன்மை கொண்ட தாகத் தெரியவில்லை. இது ஆய்வகச் சோதனைகளில் சரிபார்க்கப்பட வேண்டும்.

II. ஐஎஸ் 13920:1993 6.3.5 பகுதியின்படி நெகிழிக் கீல் பகுதிகளில் அடிக்கொளுவிகளின் இடைவெளி d/4 என இருக்கவேண்டும். இந்தச் சட்டப் பகுதி 2d நீளத்திற்கு அமைக்கப்படும் வளையங்களின் (அடிக்கொளுவிகள்) இடைவெளி, உத்தரத்தின் இரு முடிவெல்லைகளிலும் காங்கிரீட் கட்டுறுத்தல் மற்றும் வளையத்தின் நீட்சித்தன்மையுமாகச் சேர்ந்து ஒடிந்து விடாமலிருக்க, d/4 க்கு அதிகமாகக்கூடாது என வலியுறுத்துகிறது. இதனைக் கணக்கிடும்போது ஏறக்குறைய 100 மி.மீ ஆகிறது. வரைபடம் மற்றும் புலத்தணிக்கையில் கண்டவாறும், அந்த இடைவெளி 200 மி.மீ ஆக இருக்கிறது.

III. ஐஎஸ் 13920:1993 8.1 பகுதியின்படி தூண்களின் இணைப்பு விபரங்கள் பின்பற்றப்படவில்லை. தூண்களின் முடிவெல்லையில் சிறப்பான இறுக்கம் கொண்ட வலிவூக்கம் 'இணைப்பு' மூலம் செய்யப்படவேண்டும்.

IV. ஐஎஸ் 13920:1993 6.2.6 பகுதியின்படி நெகிழிக் கீல் பகுதியில் தரங்கு இணைப்புகள் பொருத்தக்கூடாது. ஆனால், இந்தப் பகுதிகளில் தரங்கு இணைப்புகள் செய்யப்பட்டு கம்பிகள் இணைப்பிலிருந்தும் நழ்வி வெளிப்பட்டுள்ளன. இணைப்பு முகத்திலிருந்து 2d தூரத்துக்குள் தரங்கு ஒட்டிணைவு செய்யக்கூடாது. மேற்குறித்த சட்டப் பகுதியின் விதிமுறை மீறப்பட்டுள்ளதை இணைப்பிலுள்ள புகைப்படம் 3 சுட்டிக்காட்டுகிறது.

V. இணைப்பிடங்களில் அடிக்கொளுவிகளின் இடைவெளி தூரம் 150மிமீ c/c அளவுக்கு அதிகமாகக்கூடாது. நீளவாக்குக் கம்பிகள் நழுவும்போது பிடிமானம் கொள்வதற்காக அடிக்கொளுவிகளின் இடைவெளி 150 மி.மீ தூரத்துக்கு அதிகமாகக்கூடாது. ஆனால், இந்த விதிமுறை மீறியிருப்பதை இணைப்பிலுள்ள புகைப்படம் 3 காட்டுகிறது.

VI. ஐஎஸ் 13920:1993 7.2.1 பகுதியின்படி அனைத்து தரங்கு இணைவுகளையும் ஒரே குறுக்குவெட்டுப் பரப்பில் அமைக்க அனுமதிக்கவில்லை. இச் சட்டப் பகுதிக்கூற்றின்படி 50 %க்கும் அதிகமான கம்பிகள் ஒரே பக்கத்தில் ஒட்டிணைப்பு செய்யக்கூடாது.

VII. ஐஎஸ் 13920: 6.3 பகுதியின்படி வலை வலிவூக்கம் (135 டிகிரி) இல்லை.

VIII. விரிவாக்க நீளங்கள் ஐஎஸ் 13920:1993 6.2.5 பகுதியின்படி இல்லை. (காண்க ஐஎஸ் 13920: பக்கம் 3 இல் உருவப் படம். 1)

நிபுணர் குழுவின் அறிக்கையினை மிக உன்னிப்பாகப் பரிசீலனை செய்கையில் அரை டஜனுக்கும மேற்பட்ட விதிமீறல்கள் குறிப்பிடப்பட்டுள்ளதும் கட்டடம் தகர்ந்து விழுந்ததற்கு 8 காரணங்கள் அளிக்கப்பட்டுள்ளதையும் காண முடிகிறது. முதற் பார்வையிலேயே, இந்த விபத்து நிகழ்ந்ததற்கான முக்கியமான காரணமாக இந்த ஆணையம் முழுக்க முழுக்கக் கருதுவது, கட்டுமானதாரர், மேற்குறிப்பிட்ட அவரது துணையாளர்கள் கட்டடக்கலைஞர் திரு. எஸ். வெங்கடசுப்ரமணியம் மற்றும் ஆலோசகர் திரு.விஜய் பர்கோத்ரா ஆகியோர் செல்வி. சுகன்யாவால் விதிமீறல்கள் சுட்டிக்காட்டப்பட்ட நிலையிலும் வேண்டுமென்றே அதற்குக் காதுகொடுக்காமல், திரு. நாகேஷ்/ கட்டடக்கலைஞர் தயாரித்ததும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக்குழுமம் ஒப்பளித்ததுமான அசல் வரைபடத்திலிருந்தும் முழுமையாக விலகியதும் கட்டுமானச் செயல்பாடுகளின் போது மேற்கொண்ட ஏறுமாறான நடவடிக்கைகளினாலுமே.

<u>ஆய்வில் உள்ள இரண்டாவது பிரச்னை குறித்து</u> அதாவது,

"ஏராளமான கட்டடத் தொழிலாளர்கள் இறந்து போனதற்கும் ஏனையோர் பலர் காயமடைந்ததற்கும் காரணமாக அலட்சியப் போக்குடன் செயல் புரிந்தவர்களைக் கண்டறியும்" பொருட்டு விசாரணை ஆணையம் கீழ்கண்டவற்றைப் பதிவு செய்கிறது.

கட்டடம் இடிந்து விழுந்ததற்கான காரணங்களைக் கண்டறியும் ஆய்வில் உள்ள முதலாவது பிரச்சினைக்குத் தீர்வு காணும்பொழுதே இவ்வாணையம் கட்டடம் கட்டிய நிறுவனத்தின் உரிமையாளரையும் அவருடைய கூட்டாளிகளையும் சுட்டிக்காட்டியுள்ளது. ஏனெனில், விதிகளையும் ஒழுங்குமுறைகளையும் சற்றும் பொருட்படுத்தாமல் ஏற்பளிக்கப்பட்ட கட்டட வரைவுத் திட்டத்திலிருந்து வேறுபட்டதொரு வரைவுத் திட்டத்தை வறட்டுத் துணிச்சலுடன் பின்பற்றிய அவர்களுடைய திரைமறைவு வேலைகளே அதற்கான காரணங்கள். இவ்வாணையம் ஆய்ந்து அறிந்தவற்றின்படி கட்டுமான நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரான திரு மனோகரன் முழுமையாகக் குற்றம் சுமத்தப்பட வேண்டியவர். மேற்சொல்லப்பட்ட நிறுவனத்திற்கு எம்.பாலகுருசாமி, திருமதி முத்துக்காமாட்சி என்கிற மேலும் இரண்டு இயக்குநர்கள் உண்டு. திரு.எம்.மனோகரன் ஓர் இளமறிவியல் பட்டதாரி. தொழில்நுட்ப முறையில் தகுதி பெற்றவர் அல்ல. கட்டடக் கட்டுமானத் தொழிலில் துணிந்து இறங்கி மதுரையில் சில கட்டுமான வேலைகளில் ஈடுபட்ட பின்னர் மேற்சொல்லப்பட்ட இரு இயக்குநர்களுடன் ஆய்வில் உள்ள இந்தத் திட்டத்தினை துவக்கினார். கட்டுமானப் பொறியாளர் திரு.எஸ். நாகேஷ், கட்டடக்கலை ஆலோசகர் செல்வி சுகன்யா ஆகிய இருவரும் ஒரே குரலாக அவர்கள் தனித்தினியே அளித்த உறுதிமொழி ஆவணத்தில், கட்டடக்கலைஞர்களை நியமித்தல்/மாற்றியமைத்தல் அனைத்து பணிகளிலும், குறிப்பாக

ஏற்பளிக்கப்பட்ட கட்டட வரைவுத்திட்டத்திலுருந்து மாறுபட்டு செயல்படுத்துவதில் அனைவருக்கும் அறிவுறுத்தல்களை வழங்கியவர் திரு.மனோகரன் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளனர்.

06.02.2012 மற்றும் 15.2.2012 நாளிட்ட மூல கட்டுமான வடிவமைப்புத் திட்டங்கள் முறையே திரு.எஸ். நாகேஷ் என்பவராலும் செல்வி பி.சுகன்யா என்பவராலும் தயாரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டு, ஆய்வில் உள்ள பல அடுக்கு இரட்டைக் கட்டடங்களைக் கட்டும் பொருட்டு திட்ட ஒப்புதல் கோரும் விண்ணப்பத்துடன் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், வரையறைகளுக்கும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் முன்னிலையில் அளித்த உறுதிமொழிக்கும் புறம்பாக, திரு.மனோகரன் புதியதொரு திட்டத்தைத் தயாரித்து அப்புதிய திட்டத்தின்படி கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு திரு.எஸ்.நாகேஷ்குத் தெரியாமல் மற்றொரு கட்டடக்கலைஞரைத் தேர்ந்தெடுத்துள்ளார். தான் திட்டமிட்டிருந்தவாறு கட்டுமானப்பணியை மேற்கொள்ளும் விதத்தில் மூலத் திட்டத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டதொரு திட்டத்தை தயாரிப்பதற்கு வேறொரு கட்டடகலைஞரை நியமித்த திரு.மனோகரனின் திரைமறைவு செயல்பாடு, இவ்விசாரணை ஆணையத்தின் முன்னிலையில் வாய்மொழி மற்றும் ஆவண சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மூலத்திட்டத்திலிருந்து மேலும் முனைப்புடன் வேறுபடும் விதமாக ஆலோசனைக் கட்டடக்கலைஞர் திரு விஜய் பர்கோத்ரா என்பவரை திரு.மனோகரன் நியமித்தார். அவருடன் திட்டக் கட்டடக்கலைஞராக செல்வி சுகன்யா பணியாற்றினார். திரு.நாகேஷ் தயாரித்த கட்டுமான/கட்டடக்கலை வடிவமைப்புத் திட்டத்தை தொடக்கத்தில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்குச் சமர்ப்பிக்கும்படியும், ஒப்புதல் பெறப்பட்டபின்னர், விசாரணையில் உள்ள கட்டடத்திட்டத்திற்கான வேறொரு திட்டத்தை திரு.எஸ்.வெங்கிடசுப்பிரமணியன் மூலமாகத் தயாரிக்குமாறு திரு விஜய் பர்கோத்ராவிற்கு மனோகரன் அறிவுறுத்தினார் என்றும் சுகன்யா தெளிவுபடத் தெரிவித்துள்ளார். செல்வி சுகன்யா விதிமீறல்களைச் சுட்டிக்காட்டியபோதும், கட்டிடமே இடிந்துவிழக்கூடிய விதத்தில் மூலத்திட்டத்தினின்று விலகிச்சென்றதைச் சுட்டிக்காட்டியபோது, திரு. மனோகரன் அறிவுரைப்படி செயல்படுமாறு கட்டாயப்படுத்தப்பட்டார் என்பது அவருடைய சான்றுரை வாயிலாகப் புலனாகிறது. கட்டுமானத்தைப் பொறுத்தவரை அனைத்துச் செயல்பாடுகளுக்கும் முழுப்பொறுப்பு வகித்தவர் திரு. மனோகரன் மட்டுமே என்கிறது உண்மை. செல்வி சுகன்யாவின் கூற்றிலிருந்தும் திரு. மனோகரனுடைய குடும்ப உறுப்பினரும் நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவருமான திரு. பாலகுருசாமி கேள்விப்பட்டியலுக்கு அளித்த பகுதியிலிருந்தும் தெரியவருகிறது. கட்டடக்

கட்டமைப்புப் பொறியாளர் திரு. எஸ்.வெங்கடசுப்பிரமணியம், கேள்விப்பட்டியலுக்கு அளித்த பதிலில் திரு. மனோகரனின் அறிவுறுத்தலின் பேரிலேயே கட்டட வரைவுத்திட்டத்தைத் தயாரித்ததாகத் தெரிவித்துள்ளார். பணியிடப் பொறியாளர்களாகப் பணியாற்றிய திருவாளர்கள். ஆர்.துரைசிங்கம், கே.கார்த்திக், எஸ்.சங்கர் ராமகிருஷ்ணன் ஆகியோர் இத்தகைய மாபெரும் கட்டமைப்புத் திட்டத்தைக் கண்காணிக்கும் அளவிற்கு அத்துறையில் தகுதிபெற்றவர்கள் அல்லர் என்பதும் புலனாகிறது. அவர்களுடைய பணி திரு. மனோகரனின் அறிவுறுத்தல்களை நிறைவேற்றுவது மட்டுமே. விசாரணையில் வெளிப்பட்ட உண்மையின் போக்கினைச் சற்றே நிறுத்திவிட்டு, இப்பொழுது, கட்டுமான நிறுவனத்தின் உரிமையாளர் திரு.மனோகரன், கட்டடத்தின் அமைப்புத் திட்டத்திற்கு அனுமதி கோரிய விண்ணப்பத்தில் எழுத்துமூலமாக அளித்த உறுதிமொழிகளை நினைவுகூர்வது மிகவும் பொருத்தமாக இருக்கும். கட்டடத்தின் அமைப்புத் திட்டத்திற்கு அனுமதி கோரும் விண்ணப்பத்தில் DR No.4 (1)(c)-யின் இணைப்பு II, படிவம் 'B'-யில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தையும் பின்பற்றுவதாக அவர் ஒப்புக்கொண்டுள்ளார். அவை கீழ்க்கண்டவாறு தொடர்கின்றன:

"..... ஒப்பளிக்கப்பட்ட பணியிட, கட்டட அமைப்புத் திட்டத்தின்படி அல்லாமல் வேறுவிதமான மாறுதல்களையோ அல்லது சட்டம் 22/1974–இன்படி திருத்தியமைக்கப்பட்ட தமிழ்நாடு, 1971–ஆம் ஆண்டு, நகரமைப்பு, நாட்டுப்புற அமைப்புச் சட்டம் (சட்டம் 35/1972)–இன் எந்தவொரு வழிவகைகள் அல்லது எந்தவொரு விதி, துறை விதிகள், ஆணைகள் அல்லது அவற்றின்கீழ் ஏற்படுத்தப்பட்ட உறுதிமொழிகள் அல்லது ஏதேனுமொரு நெறிகாட்டல், அல்லது சட்டப் பூர்வமாக அளிக்கப்பட்ட அல்லது மேற்சொல்லப்பட்ட சட்டம், விதிகள், துணை விதிகளின்கீழ் ஏற்படுத்தப்பட்ட வேண்டுகோளுக்குப் புறம்பான செயல்பாடுகளையோ மேற்கொள்ளமாட்டேன்".

அதேபோல, DR.No.4(1)(d), இணைப்பு III, படிவம் C-இல் (நில உரிமையாளர் அல்லது பொது அதிகாரம் பெற்றவர் அல்லது கட்டுமான நிறுவனத்தின் உரிமையாளர், அல்லது ஊக்குவிப்பவர் தனிப்பட்டமுறையில் உறுதிமொழி நிறைவேற்றுவதற்கான படிவம்) குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைத் தவறாமல் கடைபிடிப்பதாக குறிப்பாக ஒப்புக்கொண்டுள்ளார். அதாவது,

"..... ஒப்பளிக்கப்பட்ட கூட்ட அமைப்புத் திட்டத்திற்கிணங்க, எவ்வித மாறுபாடுமின்றி கட்டுமானப் பணியை மேற்கொள்வேன் என்றும் உறுதியளிக்கிறேன். ஒப்பளிக்கப்பட்ட கட்டட அமைப்புத் திட்டத்திற்கு மாறாக ஏதேனும் கட்டுமானம் அல்லது ஏற்பளிக்கப்படாத கூடுதல் கட்டுமானம் கண்டறியப்பட்டால் கட்டட அமைப்புத் திட்டத்திற்கு அனுமதி வழங்கியபோது வசூலிக்கப்பட்ட காப்புத் தொகையை இழப்பதற்கு

ஒப்புக்கொள்கிறேன். அத்துடன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினால் வரம்புமீறிக் கட்டப்பட்ட கட்டடப்பகுதி ஏதேனும் குறிக்கப்பட்டால் அதற்குரிய அறிவிப்புக் கிடைத்த பின்னர் முப்பது நாட்களுக்குள் அத்தகைய பகுதியை நீக்கிவிடுவதற்கு ஒப்புக்கொள்கிறேன். அவ்வாறு செய்யத்தவறினால், என்னால் செலுத்தப்பட்ட காப்புத்தொகையைப் பறிமுதல் செய்வதுடன், அத்தகைய பகுதியை அகற்றுவதற்கு சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நடவடிக்கை மேற்கொண்டால் அதற்குரிய செலவுத் தொகையையும் செலுத்திவிட ஒப்புக்கொள்கிறேன்".

"..... அளிக்கப்பட்டுள்ள அனுமதிக்கு இணங்க கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கும், மேம்பாட்டுக் கட்டணங்கள், காப்புத்தொகை, காப்புக்கட்டணம் அலுவலர்களால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற அனைத்துக் கட்டணங்களையும் செலுத்துவதற்கும், மேம்பாட்டு ஒழுங்குமுறைகளுக்குப் புறம்பாகச் செய்யப்படும் மேம்பாட்டுக்கு உரிய சட்டமுறையான தண்டனைகளுக்கு உட்படுவதற்கும் நான் தனிப்பட்ட முறையிலும், நில உரிமையாளர் / பொது அதிகாரம் பெற்றவர் / கட்டுமான நிறுவன உரிமையாளர் / ஊக்குவிப்பவருடன் இணைந்தும் உறுதி ஏற்கிறேன்".

மேற்சொல்லப்பட்டவை மட்டுமின்றி, தமிழ்நாடு, 1997–ஆம் ஆண்டு, ஊராட்சிக் கட்டட விதிகளின் கீழுள்ள வழிவகைகளையும் அவர் நன்கு அறிந்திருந்தார். விசாரணைக்கு உட்பட்டுள்ள கட்டடத்தின் கட்டுமானத்திற்கும் அவை பொருந்தக்கூடியவை; ஏற்பளிக்கப்பட்ட அமைப்புத்திட்டத்திலிருந்து விலகிச்செல்வதை அவை கண்டிப்புடன் தடைசெய்கின்றன. விதிகளின் தொடர்புடைய பகுதிகள் கீழே தருவிக்கப்பட்டுள்ளன:

"33 மனித உயிருக்கு ஊறுவிளைவிக்கக்கூடிய பணிகளை நிறுத்திவைத்தல்:-

சட்டத்தினுடைய முந்தைய பகுதியில் அடங்கப்பெற்றுள்ளவை எவையாக இருந்தபோதிலும், சட்டத்தை செயல்படுத்துவதற்கான அதிகாரம் பெற்றவர், எந்தவொரு கட்டடத்திலும் நடந்துகொண்டிருக்கும் கட்டுமானம் அல்லது மறுகட்டுமானத்தை அத்தகைய பணியின் முன்னேற்றம் மனித உயிருக்கு ஊறு விளைவிக்கக்கூடியது என்று அவர் கருதுவாரானால் எந்த நேரத்திலும் நிறுத்தி வைக்கலாம்.

"34. சட்டத்திற்குப் புறம்பாகத் தொடங்கப்பட்ட, மேற்கொள்ளப்படுகின்ற அல்லது நிறை–வேற்றப்பட்ட கட்டடப் பணிகளை அகற்றுதல் அல்லது மாற்றியமைத்தல்:-

(1) செயல்படுத்தும் அதிகாரம் பெற்ற அலுவலர் கீழ்க்கண்டவாறு ஐயமற தெளிவாராயின்

(i) எந்தவொரு கட்டடத்தினுடைய கட்டுமானம் அல்லது மறு கட்டுமானம்,

(a) செயல்படுத்தும் அலுவலருடைய அனுமதி பெறப்படாமல் தொடங்கப்பட்டுள்ளது, அல்லது

(b) ஒப்புதல் அல்லது ஆணை பிறப்பிக்கப்பட்ட கட்டட அமைப்புத்திட்டத்திற்கு புறம்பாக பணிமேற்கொள்ளப்பட்டு வருகிறது அல்லது நிறைவேற்றப்பட்டு விட்டது, அல்லது

(c) இவ்விதிகளின் எந்தவொரு வழிவகையையும் மீறி கட்டுமானப்பணி மேற்கொள்ளப்படுகிறது அல்லது நிறைவேற்றப்பட்டுவிட்டது,

(ii) இவ்விதியின்கீழ் வெளியிடப்பட்ட ஏதேனுமொரு அறிவிப்பு வாயிலாக மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய மாற்றங்கள் முறையாக நிறைவேற்றப்படவில்லை; அல்லது

(iii) ஏதேனும் நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனும் பணிகுறித்து ஏதேனும் கட்டடத்தில் ஏதேனும் மாற்றம் அல்லது சேர்க்கை ஏதேனும் கட்டடத்தின் உள்ளே அல்லது வெளியே விதிகளுக்கு மாறாக தொடங்கப்பட்டுள்ளது அல்லது மேற்கொள்ளப்பட்டு வருகிறது அல்லது முடிக்கப்பட்டு வருகிறது எனில், செய்யப்பட்டுள்ள வேலையை இடிக்குமாறு கட்டட உரிமையாளர் அல்லது கட்டுநரை பணிக்கின்ற வகையில் தற்காலிகமானதோர் ஆணை பிறப்பிக்கலாம் அல்லது நிருவாக அலுவலரின் கருத்தின்படி, அது சட்டத்திற்குப் புறம்பாக நிறைவேற்றப்பட்டுள்ளதாகக் கருதினால், எந்த விதிகள், ஆணைகளின்பேரில் அப்பணிக்குரிய அமைப்புத் திட்டவரைபடங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டதோ அதற்கிணங்க அக்கட்டடத்தை மாற்றியமைக்குமாறு கட்டட உரிமையாளரை அல்லது கட்டுநரைப் பணிக்கலாம்; அத்துடன், மேற்சொல்லப்பட்ட ஆணைகளுக்கு இணக்கமாக மாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றவரையில் கட்டட உரிமையாளர் கட்டடம் கட்டுநர் தொடர்ந்து கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளலாகாது என்றும் ஆணையிடலாம்.

எந்தவொரு விதத்திலும் மாறுபாடுகள் நிகழ்ந்துவிடாமல் இருக்கும்பொருட்டு, விதிகளையும் ஒழுங்குமுறைகளையும் கடைப்பிடிப்பதாக எழுத்துமூலமாக, உறுதிமொழிகளும், வாக்குறுதிகளும் அளித்தபின்னர், கட்டுமானத்தினுடைய தரத்தைப் பற்றியோ அதில் வசிக்கவிருந்த மக்களுடைய பாதுகாப்புப்பற்றியோ அக்கறை கொள்ளாமல் வலுவற்றதொரு கட்டடத்தை கட்டியெழுப்புவதிலேயே திரு.மனோகரன் முனைப்புடன் செயல்பட்டுள்ளார். கட்டுமானப்பணிகள் நடந்தேறிய காலம் நெடுகிலுமே, ஏற்பளிக்கப்பட்ட அமைப்புத்திட்டத்திலிருந்து மாறுபாடுகளையும் விதிமீறல்களையும் செயல்படுத்தும் நோக்கத்துடன் கட்டுமான வேலைகளுடன் தொடர்புடைய ஒவ்வொருவருக்கும் அறிவுறுத்துவதையே பெரும் முயற்சியுடன் தனது கடமையாகக் கொண்டிருந்திருக்கிறார். ஆகவே, ஆய்வில் உள்ள இரட்டை கட்டடத்திட்டத்தின் சட்டத்திற்குப் புறம்பான

கட்டுமானத்திற்கு சென்னை, திருவாளர்கள். பிரைம் சிருஷ்டி வீட்டுவசதி தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.மனோகரன், அவருடன், திரு.மனோகரன் கட்டுமானத் துறையில் தகுதியற்றவர் அல்ல என்பதையும், கட்டுமானப்பணிகள் சட்டத்திற்குப் புறம்பாக மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும் நன்கு அறிந்திருந்தும் அவருக்கு தொடர்ந்து உதவிபுரிந்து உறுதுணையாக இருந்த மற்ற இரண்டு இயக்குநர்கள் எம்.முத்துக்காமாட்சியும், எம்.பாலகுருசாமியும் பொறுப்பாளிகளாவர் என்பதில் ஐயமில்லை. விசாரணை நடவடிக்கைகளின்போது இம்மூவரும் கேள்விப்பட்டியல்களுக்கு பதிலளிக்க முன்வரவில்லை. அத்துடன், தாம் நீதிமன்றகாவலில் வைக்கப்படுவதால் மன உளைச்சலுக்கு ஆளாகிப் போனதாகவும், தொழில் நுணுக்கப் பிரச்சினைகள் தொடர்பாக தம்மால் விளக்கமளிக்க இயலாது என்றும் தொழில்நுட்ப வல்லுநர்களால் மட்டுமே அவற்றை அளிக்க முடியும் என்றும் பதிலளித்துள்ளனர்.

விஜய் பர்கோத்ராவைப் பொறுத்தவரை, திருத்தங்களும் / மாறுபாடுகளும் கொண்ட புதிய அமைப்புத் திட்டம் மனோகரனின் தூண்டுதலால் கட்டடக்கலைஞர் வெங்கடசுப்பிரமணியம் தயாரித்தார் என்று சாதுர்யமாகப் பதிலளித்தபோதிலும், கட்டுமானப் பணி நெடுகிலும் கட்டுமான நிறுவன உரிமையாளருக்கு உதவுவதில் முனைப்புடன் செயல்பட்டதை செல்வி சுகன்யா மிகத்தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். கட்டடம் இடிந்து விழக்கூடிய அளவிற்குக் கடுமையான மாறுபாடுகளுடன் கட்டுமானப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டதை அவர் மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தியுள்ளார். அதற்கு கட்டுமான நிறுவன உரிமையாளருடைய கட்டளைப்படி பணிகளை நிறைவேற்றுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார். ஆகவே, கட்டடம் இடிந்து விழுந்ததற்குப் பொறுப்பாளிகள் என்று இந்த ஆணையத்தால் கண்டறியப்பட்டுள்ள ஏனையோரிடமிருந்து அவரை வேறுபடுத்திப் பார்க்க முடியாது.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கட்டட அமைப்புத் திட்டம் தன்னால் தயாரிக்கப்பட்டதல்ல என்றும், திரு.மனோகரனின் வேண்டுதலின்பேரில் மேற்சொல்லப்பட்ட புதிய திட்டம் தயாரிக்கப்பட்டது என்றும் கட்டுமான அமைப்புப் பொறியாளர் திரு.எஸ்.வெங்கடசுப்பிரமணியம் ஒப்புக்கொண்டபோதிலும், ஒப்பளிப்புப் பெறுவதற்காக சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட கட்டட அமைப்புத்திட்டத்திலிருந்து மாறுபட்டவை, மீறிச்செயல்பட்டவை குறித்த கேள்விகளுக்கு ஏனையோரைப் போலவே அவரும் பதிலளிக்க முன்வரவில்லை. கட்டடம் நூறு நாட்களுக்கும் மேலாக நின்றிருந்ததாகவும், "A கட்டடத் தொகுதி" இன்னமும் நிலைத்து நிற்பதாகவும் வாதிடும் அவர், விபத்து நிகழ்ந்த நாளில் உரத்த இடிமுழக்கங்களுடன் கடுமையான மழை பொழிந்ததாகவும் கட்டடத்தை இடி தாக்கி விழச்செய்திருக்கலாம் என்றும் வினோதமானதொரு காப்புரையை முன்வைத்தார். அதுபோன்ற வாதத்திற்கு கிஞ்சித்தும் ஆதரவளிக்கும்

விதத்தில்கூட எதுவுமே நடக்கவில்லை என்பதனுடன் அதுபோன்றதொரு கற்பனைத்திட்டம் கட்டுமான நிறுவன உரிமையாளருடைய மூளையில்கூட உதிக்கவில்லை; சான்றளிக்க முன்வந்த அண்மைப்பகுதிவாழ் மக்களும்கூட அதுபோன்றதொரு தகவலை அளிக்கவில்லை. ஆகவே, தண்டனையிலிருந்து தப்பிப்பதற்காக தமது பொறுப்பினைத் தட்டிக்கழிக்கும் முயற்சியாக இவர்களனைவரும் சாதுர்யமாகப் பதிலளித்ததை இவ்வாணையம் மிக எளிதாகப் புரிந்துகொண்டுள்ளது.

பணியிடப் பொறியாளர்களும் இதுபோன்ற அணுகுமுறையைக் கைக்கொண்டுள்ளனர். அவர்களிடம் பதிலளிக்குமாறு கோரப்பட்ட கேள்விகள் அனைத்திற்கும் தொழில்நுட்ப வல்லுநர்களால் மட்டுமே அத்தகைய கேள்விகளுக்கு பதிலளிக்கக்கூடும் என்றும் அவர்களை நீதிமன்றக் காவலில் வைப்பதற்கு ஆணையிடப்பட்டுள்ளபடியால் மனஉளைச்சலில் அல்லற்படுவதாகவும் மிகவும் பாதுகாப்புணர்வுடன் தெரிவித்துள்ளனர்.

தம்மிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்கத் தயக்கம் காட்டியமை, விசாரணையின் போக்கினை தவறான திசையில் இட்டுச்செல்லும் விதத்தில் காரணங்கள் அளித்தமை, பொறுப்பினை ஒருவர் மாற்றி மற்றொருவர் மீது சுமத்த முற்பட்டமை போன்ற மேற்கண்ட நபர்களின் மனக்போக்கு, தம்முடைய தீய எண்ணம் கொண்ட / சட்டத்திற்குப் புறம்பான / அலட்சிய மனப்பான்மையால், கட்டடம் இடிந்து விழுந்ததுடன், 61 பேர் உயிரிழப்பதற்கும், 27 பேர் கடுமையான காயங்கள் அடைந்ததற்கும், அத்துடன் அண்மையில் இந்த கட்டடங்கள் பாதிக்கப்படுவதற்கும், அங்கிருந்த மக்கள் காயமடையவும் காரணமான கோர விளைவுகளை ஏற்படுத்தப்பட்டுவிட்டதே என்கிற வருத்தம் கிஞ்சித்தும் அவர்கள் மனத்தில் தோன்றவில்லை என்பதையே உணர்த்துகிறது. கட்டுமானப் பணியில் பழுத்த அனுபவம் பெற்ற இரண்டாம் கட்டடக்கலைஞரும், ஆலோசகரும், தீவினை காரணமாக, தவறான வழிகாட்டப்பட்டதாகச் சொல்லிக்கொள்கிற உரிமையாளருடனும் அவருடைய இரண்டு இயக்குநர்களுடனும், கட்டுமானப்பணியின் தரத்தைப் பணயம் வைத்து அதன்மூலம் கிடைக்கக்கூடிய பாவப்பணத்தில் பங்குபெறும் நோக்கத்துடன் கூட்டுச்சதியில் ஈடுபட்டுள்ளனர். ஆகவே, இவ்வாணையம், கட்டடம் இடிந்துவிழுந்தமைக்கான பொறுப்பினை கீழ்க்கண்ட நபர்கள்மீது சுமத்துவதென்று சான்றுகளின் அடிப்படையில் முழு மனதுடன் முடிவு செய்துள்ளது:-

அ) திரு. மனோகரன், இயக்குநர், திருவாளர்கள் பிரைம் சிருஷ்டி வீட்டுவசதி தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனம்;

ஆ) திருவாளர்கள். எம்.முத்துகாமாட்சி மற்றும் எம்.பாலகுருசாமி, இயக்குநர்கள், பிரைம் சிருஷ்டி வீட்டுவசதி தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனம்;

இ) திரு. எஸ்.வெங்கடசுப்பிரமணியம், கட்டுமான அமைப்புப் பொறியாளர் மூல அமைப்புத் திட்டத்துடன் மாறுபாடுகளும் விதிமீறல்களும் முழுமையாகக்

கொண்ட புதிய கட்டட அமைப்புத் திட்டத்தைத் தயாரித்தவர். அத்திட்டத்தின் அடிப்படையில், கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன; சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் ஏற்பளிக்கப்பட்ட கட்டட அமைப்புத் திட்டத்திற்குப் பதிலியாகப் பயன்படுத்தப்படும் என்பதை நன்கு அறிந்திருந்தும் சட்டத்திற்குப் புறம்பானதொரு அமைப்புத் திட்டத்தைத் தயாரித்துள்ளார்;

ஈ) திரு. விஜய் பர்கோத்ரா, கட்டடக்கலை ஆலோசகர், கட்டுமான நிறுவனத்தின் உரிமையாளர் முற்றிலும் மாறுபட்டதொரு கட்டட அமைப்புத்திட்டத்தைப் பின்பற்றுவதால் கட்டடம் இடிந்துவிழுக்கூடும் என்று செல்வி. சுகன்யா நினைவுபடுத்திய போதிலும், சட்டத்திற்கு புறம்பான கட்டுமானத்திற்கு நெடுகிலும் திரு. மனோகரனுக்கு உதவிபுரிந்தவர்; மற்றும்

உ) திருவாளர்கள். ஆர்.துரைசிங்கம், கே.கார்த்திக் மற்றும் எஸ்.சங்கர் ராமகிருஷ்ணன், பணியிடப் பொறியாளர்கள், சட்டத்திற்குப் புறம்பான கட்டடம் எழுப்புவதில் கட்டுமானப்பணியைக் கண்காணித்து நிறுவன உரிமையாளருக்கு உதவியோர்.

C) இறுதியாக ஆய்வு வரம்பு மூன்றின் அம்சம்:-

"எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துக்கள் மீண்டும் நிகழ்வதைத் தவிர்க்கும் விதத்தில் எடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்துப் பரிந்துரைத்தல்".

எஞ்சிநிற்கின்ற A – கட்டடத்தொகுதி குறித்த விவாதத்தையும் முடிவுகளையும் முதலில் பதிவுசெய்துகொண்டு இப்பிரச்சினை குறித்து தீர்வுகாண்பது பொருத்தமாக இருக்குமென்று இவ்வாணையம் கருதுகிறது.

I. ஆய்வில் உள்ள இப்பகுதியின்மீது விவாதிக்கும்பொழுது, எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில் உள்ள மற்றொரு துயர நிகழ்வினைத் தடுப்பதுதான் முதல் கவலையாகவும் கருத்திற்கொள்ள வேண்டியதாகவும் இருக்கும். இது தொடர்பாக, 'A' கட்டடத்தொகுதியின் நிலைமை குறித்த வல்லுநர் குழுவின் அறிக்கையை ஆய்வுசெய்வது பயனுள்ளதாகும். அறிக்கைப்பகுதி வருமாறு:-

8 – A – கட்டடத் தொகுதியின் நிலைமை:

A – கட்டடத் தொகுதியின் தூண்களின்மீது தற்பொழுது செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற பளுவை (கட்டடத்தின் தன்னியல்பான பளு – dead load) அண்ணா பல்கலைக்கழக வல்லுநர்கள் கணினி நிரலைப் பயன்படுத்திக் கணக்கிட்டனர். கட்டமைப்பு வரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ள தூண்களின் நிலைப்பாடுகளின்படி தூண்கள் M5, மற்றும் M9 உயர்ந்த அளவு பளுவைத் தாங்கக்கூடிய தூண்களாகக் கண்டறியப்பட்டுள்ளன.

கட்டடத்தொகுதியின் தன்னியல்பான பளு மட்டிலுமே இத்தூண்களின்மீது 350 டன் செயல்படுவதாக மதிப்பிடப்பட்டுளளது. இத்தூண்களின் இடிந்துவிழும் அளவிற்கான தாங்குதிறன் 210 டன் மட்டுமே. கட்டடத் தொகுதியின் தன்னியல்பான நிலைமையிலேயே இத்தூண்களின்மீது அவற்றின் உச்சநிலை தாங்குதிறனுக்கும் கூடுதலாக அளவுக்கு அதிகமான சுமை ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாகப் புலனாகிறது. குடிபுகக்கூடிய மக்கள் மற்றும் உடமைகளுடன் நிலஅதிர்வினால் ஏற்படக்கூடிய பளுவும் சேர்ந்து செயல்படும்போது மொத்த பளுவின் அளவு 460 டன்னாக அதிகரித்துவிடும். அத்துடன், பெரும் கட்டடத்தொகுதிகளில் தூண்களின்மீது செயல்படக்கூடிய பளுக்காரணி என்கிற கணக்கீட்டுமுறையில் 1.50 அளவைக்கொண்டு கணக்கிடும்போது இத்தூண்களின்மீது செயல்படக்கூடிய பளு 690 டன் என்று கொள்ளலாம். இத்தூண்களின் இடிந்துவிழும் நிலைக்கான தாங்கக்கூடிய திறன் 210 டன் மட்டிலுமே என்கிற நிலையில், கட்டமைப்பு உருக்குலைந்து போகுமளவிற்கு இத்தூண்கள் இடிந்துவிழுவதற்கான வாய்ப்புகள் வெளிப்படையாகத் தெரிகின்றன. இத்தூண்களுடன், இதேபோல தாங்கக்கூடிய திறனுக்கும் கூடுதலாக அளவுக்கு அதிகமான சுமைகள் ஏற்றப்பட்டுள்ளனவாக மதிப்பிடப்பட்டுள்ள ஏனைய தூண்கள் ஆறு உள்ளன. ஆகவே, 'A' கட்டடத்தொகுதியும் எந்த நேரத்திலும் இடிந்துவிழலாம்.

இந்தக் கட்டடத் தொகுதியிலும், 'B' கட்டடத்தொகுதிக்கு அமைக்கப்பட்டிருந்த அதே அடித்தள அமைப்பு முறைதான் பின்பற்றப்பட்டுள்ளது. Raft-னுடைய பருமன் போதுமானதாக இல்லை; Piles திறம்பட்டமுறையில் அமைக்கப்படவில்லை. முழுமையான பளு செயல்படும்போது, ஒட்டுமொத்த அடித்தள அமைப்பு சிதைவறும் அளவிற்கு raft பெருமளவில் பாதிப்படையக்கூடும்.

'B' கட்டடத்தொகுதியைப் போலவே, 'A' கட்டடத்தொகுதி முழுமையும் பாதுகாப்பின்றியும் திடீரென இடிந்துவிழுக்கூடிய அச்சத்தை ஏற்படுத்துவதாகவும் உள்ளது. 'A' கட்டடத்தொகுதியை பிரித்தெடுத்துவிடுமாறு (Dismantle) பரிந்துரைக்கப்படுகிறது. அவ்வாறு பிரித்தெடுக்கும்பொழுது, அண்மைக்கால தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, அதிர்வு ஏற்படாவண்ணம், உயர்ந்து நிற்கும் அக்கட்டடத்தொகுதியை கீழிறக்கவேண்டும். கட்டடத்திற்கு புதுவலுவேற்றும் முயற்சி விரும்பத்தக்கதல்ல; புது வலுவேற்றும் செயல்பாடுகளின்போது அல்லது சிறிய அளவில் இடையூறு விளைந்தால்கூட ஒட்டுமொத்த கட்டடத்தொகுதியும் இடிந்துவிழக்கூடும்".

'B' கட்டடத்தொகுதி இடிந்து விழுந்ததற்கான தமது கருத்துரைகளை மேற்கண்டவாறு நல்கியுள்ள வல்லுநர் குழுவினர், 'A' கட்டடத்தொகுதியின் உறுதிநிலை தொடர்பாகவும் தமது கருத்துரையினை கீழ்க்கண்டவாறு வழங்கியுள்ளனர் :—

6. A கட்டடத்தொகுதியில் விதி மீறல்கள்.

1) விட்டத்தினுடைய கனம் தொடர்ச்சியாக ஒரே சீராக இல்லை (இணைக்கப்பட்டுள்ள தொடர்புடைய ஒளிப்படத்தைக் காண்க). இணைப்பு வழியாக ஒரு விட்டத்திலிருந்து மற்றொரு விட்டத்திற்கு கட்டுறுதித் தன்மையைக் கொண்டுசெல்ல இயலாது.

2) A கட்டடத்தொகுதியில் கட்டுமானம் செயலிழந்ததன் அறிகுறியாக தூண்களில் விரிசல்கள் காணப்படுகின்றன.

3) தூண்களின் ஆதரவில்லாத துணைநிலை விட்டங்களின் கனம் முதனிலை தூண்களின் அளவிலேயே உள்ளது (ஒளிப்படம் இணைக்கப்பட்டுள்ளது). ஆகவே, துணைநிலை தூண்களினால் முதனிலை தூணுக்கு பளுவைத் திறம்படக்கடத்த இயலாது.

4) ஒரிடத்தில் விட்டத்தின் கனம் நடுப்பகுதியில் குறைக்கப்பட்டுள்ளமை தென்பட்டது.

5) விட்டங்கள் வலுவிழக்கும் வகையில் துளையிடப்பட்டுள்ளன (ஒளிப்படம் இணைக்கப்பட்டுள்ளது).

6) தூண் ஏடாகூடமான அடி ஆதாரத்தின்மீது நிற்கிறது (ஒளிப்படம் இணைக்கப்பட்டுள்ளது). ஒளிப்படத்தில் கண்டுள்ளபடி, ஆதரவான அடிக்கட்டமைப்பிலிருந்து ஒருபக்கமாக வெகுவாகத் தொங்கிய நிலையில் தூண் எழுப்பப்பட்டுள்ளது. இத்தூணினுடைய இருமருங்கிலும் திறவையாக உள்ளபடியால் செம்மையாக அமைக்கப்படவில்லை.

7) தூணின் ஆதாரமற்றதொரு துணைநிலை விட்டம், ஏறத்தாழ 30'-0" நீளமுள்ள குறுக்கு விட்டத்தைத் தாங்குமாறு அமைக்கப்பட்டுள்ளது (ஒளிப்படம் இணைக்கப்பட்டுள்ளது). 109 no P.112

7. ஏனைய தொழில் நுட்பப் பிரச்சினைகள்.

1) நில அதிர்வு மண்டலம் III–க்கான உலகத்தரச்சான்று 1893 : 2002–இல் (IS 1893 : 2002) வரையறுக்கப்பட்டுள்ளவாறு, A, B இரு கட்டடத் தொகுதிகளுமே முறையற்ற விதத்தில் கட்டப்பட்டுள்ளன. ஆகவே, பொருத்தமான இயங்குநிலை ஆய்வுமுறையைப் பயன்படுத்தி, 1893 உலகத்தரச்சான்று பரிந்துள்ளவாறு, அவை வடிவமைக்கப்படல் வேண்டும்.

2) மிக அண்மையில் மீதுயர்ந்த இரு கட்டடத் தொகுதிகள் கட்டப்படுவதால் காற்றுச் சூழலில் மாற்றம் ஏற்படும். ஆகவே, கட்டடம் வடிவமைக்கப்பட்டபோது, உலகத்தரச்சான்று 875–ன்படி (IS 875) காற்றின் விசைகளையும் கருத்திற்கொண்டு செயல்பட்டிருக்க வேண்டும் (பகுதி 3).

வல்லுநர்களின் மேற்கண்ட ஒருமித்த கருத்துரைகளை மிகக்கவனமாகக் கருத்திற்கொண்ட இவ்வாணையம் இருப்பிலுள்ள கட்டடத்தொகுதி மிகவும் அண்மைக்காலத்தில் நிகழக்கூடிய பேரழிவாக (near future calamity) கட்டமைப்பு வடிவில் நின்றுகொண்டிருக்கிறது என்கிற கருத்தினை வெளியிட முனைகிறது. அதற்கான காரணங்களைப் பதிவு செய்ய முற்படும்பொழுது, சில கருத்துக்களை வலியுறுத்த விழைகிறது. B கட்டடத்தொகுதியின் கட்டமைப்பு உறுதியின்மை விவாதிக்கப்பட்ட அனைத்துக் கருத்துக்களும் A கட்டடத்தொகுதிக்கும் முழுமையாகப் பொருந்தக்கூடியவை. "A" கட்டடத்தொகுதியின் கட்டமைப்பு உறுதியாக உள்ளது; ஆகவே, அது நீடித்திருக்க அனுமதிக்கலாம் என்று குறிப்பிடுவதற்கு எந்தவொரு காரணமும் பிடிபடவில்லை. ஒவ்வொரு கட்டடத் தொகுதிக்கும் தனித்தனி அடிக்கட்டுமானம் அறிவுறுத்தப்பட்ட போதிலும், இரண்டாவது கட்டடக் கலைஞர் திரு.எஸ்.வெங்கடசுப்பிரமணியத்தின் அறிவுரையின்பேரில் "A", "B" இரு கட்டடத் தொகுதிகளுக்கும் பொதுவானதொரு 'raft' அடிக்கட்டுமானம் அமைக்கப்பட்டுள்ளது. இரு கட்டடத் தொகுதிகளுக்கும் அடிக்கட்டுமானம் மற்றும் அடித்தளத்தைப் பொறுத்தவரை ஒரேமாதிரியான வடிவமைப்பும், கட்டமைப்பு முறையும் பின்பற்றப்பட்டுள்ளன. குறைபாடுடையதும் போதுமானதற்றதுமான கடைக்கால் முறைகளாலும், தூண்கள் எழுப்பப்பட்டதாலும், வலுவற்ற தூண்களாலும் வெற்றுக்கட்டிடத்தின் சுமையையே தாங்க முடியாமற் போனதால் B–கட்டடத்தொகுதி இடிந்து விழுந்துவிட்ட காரணத்தால், B கட்டடத்தொகுதியின் அதே கட்டுமானப் பொருட்களாலும் தரத்துடனும் கட்டியெழுப்பப்பட்டுள்ள A கட்டடத்தொகுதியிலும் அதேநிகழ்வுதான் இறுதியில் நிகழக்கூடும். அத்தகைய அச்ச உணர்வினை உறுதிப்படுத்தும் விதமாக, வல்லுநர் குழுவினர் தமது ஆய்வின்போது, பற்றாக்குறையான கட்டுறுதிச் சோர்க்கையையும், விரிசல்களையும், தூண்களில் துளைகளையும் இன்னபிற குறைபாடுகளையும் கண்டறிந்துள்ளனர். ஆகவே, A கட்டடத் தொகுதியில் எஞ்சியுள்ள 26 குடியிருப்புப் பகுதிகளையும் கட்டிமுடிக்க அனுமதித்து அவற்றின் உரிமையாளர்கள் தத்தமது பகுதியில் குடியேறவும் செய்வார்களானால், சாத்தியமாகத்தக்க அழிவினைச் சுமந்து நிற்கின்ற அக்கட்டடத் தொகுதியால் எந்த நேரத்திலும் அவர்களுடைய உயிருக்கு ஆபத்து நேரக்கூடும். குடியேறிய பின்னர் இடிந்துவிழ நேர்ந்தால், கற்பனைக்கு எட்டாத அளவு பேரழிவு ஏற்படக்கூடும். ஏனெனில், எதிர்காலக் குடியிருப்பாளர்களுடன், நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வாழுகின்ற கட்டடங்களும், ஏராளமான மாணவர்கள் பயிலுகின்ற பள்ளிகளும் அண்மையில் சூழ்ந்துள்ளன என்பதைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும். ஏற்கனவே, ஆய்வில் உள்ள இடத்திற்கு அண்மையில் வசித்த ஏராளமானோர் காயமடைந்தனர்; அவர்களுடைய கட்டடங்கள் பாதிப்படைந்தன. தற்பொழுது, மறுக்கவொண்ணா வாய்மொழி மற்றும் ஆவணங்களின் பருண்மையான சான்றுகள் வாயிலாகவும் வல்லுநர்களின் அறிக்கைகள் / கருத்துரைகள்

வாயிலாகவும் எஞ்சியிருக்கக்கூடிய கட்டடத்தொகுதி நீடித்து நிற்க அனுமதிக்கலாகாது என்று கண்கூடாக நிரூபித்துக்காட்டப்பட்டுவிட்டது. அனைத்திற்கும் மேலாக, சட்டத்தின்படி, A கட்டடத்தொகுதி சட்டத்திற்குப் புறம்பான கட்டமைப்பு என்பதனால் அகற்றத்தக்கது. மேலே விவரிக்கப்பட்ட அனைத்துக் காரணங்களுக்கு அப்பாலும், A கட்டடத்தொகுதி நீடித்திருக்க அனுமதிக்கப்படுமானால், அப்பட்டமான சட்டவிரோதச் செயல்களுக்கு ஊக்கமளிக்கும் விதத்திலான முன்னுதாரணத்தை உருவாக்கிவிட்ட நிலை ஏற்படும். ஆகவே, கூறியது கூறல் என்கிற பிழை நேர்ந்த போதிலும் இவ்வாணையம் சில கருத்துக்களை மீண்டும் வலியுறுத்த முற்படுகிறது. "A", "B" இரு கட்டடத் தொகுதிகளுக்கும், ஒரே பட்டகத்தால் 'raft' அடித்தளம் அமைக்கப்பட்டுள்ள நிலையில், 'B' கட்டடத்தொகுதி இடிந்து விழுந்துவிட்டபோது, அதனால் ஏற்பட்ட பெருமளவிலான கழிவுப்பொருட்களை முந்நூறுக்கும் மேற்பட்ட சரக்குந்துகளைக் (300 lorry loads) கொண்டு அப்புறப்படுத்திய காரணத்தால், எஞ்சியுள்ள 'A' கட்டடத்தொகுதியையும் அகற்றியாக வேண்டும். ஏனெனில், 'B' கட்டடத்தொகுதிக்கு நேர்ந்த விபத்திற்கு பங்களிப்பு நல்கிய குறைபாடுகளும் மூல அமைப்புத்திட்டத்தினின்று விலகிய மாறுபாடுகளும் அனைத்து விதங்களிலும் ஒத்திருப்பதனால் இடிந்த கட்டடத் தொகுதியையும், இருக்கும் கட்டடத் தொகுதியையும் எவ்விதத்திலும் வேறுபடுத்திப் பார்க்க இயலவில்லை. அத்துடன், முகாமையான எதிர்ப்பலன்களாக தளர்வான மண்வகு, மணற்பாங்கான பூமி, சொதசொதப்பானது என்கிற அமைவிடத்தின் தன்மைகளுடன், திரு.நாகேஷ் அறிவுறுத்தியவாறு 18 மீட்டர் ஆழத்திற்குக் கடைக்கால்களைச் செலுத்தவில்லை என்பது போன்ற கூடுதல் குறைபாடுகளும் அச்சுறுத்துகின்றன. ஆகையால், இவ்வாணையம், இத்தகைய அனைத்துப் புறநிலை அழுத்தங்களின் காரணமாக, A கட்டடத்தொகுதி மிகவும் விரைவாக அகற்றப்படவேண்டும் என்கிற முடிவிற்கு வரவேண்டிய கட்டாயத்திலுள்ளது. அதிலும் முக்கியமாக, அத்தகைய பணி, அண்மையில் குடியிருப்போர், அவர்தம் கட்டடங்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் விதத்தில், வல்லுநர்கள் அறிவுறுத்தியுள்ளவாறு நவீன தொழில் நுட்பத்தைக் கைக்கொண்டு ஆற்றப்பட வேண்டும்.

II. உணவு, உடை, உறையுள் மனித இனம் உயிர்த்திருப்பதற்கு இன்றியமையாத அடிப்படைத் தேவைகள். இத்தகைய இன்றியமையாதனவற்றைத் தேடும்பொழுது, வீட்டுவசதியைப் பொறுத்தவரை ஏராளமானோர் பெருத்த இன்னலுக்கு ஆளாகின்றனர். நவீன காலத்தில், பெருந்தொகைகளை வீட்டுவாடகையாகச் செலுத்துவதிலிருந்தும் வீட்டின் உரிமையாளர்கள் விதிக்கக்கூடிய அன்றாட கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுபட்டு அமைதியான வாழ்க்கை வாழ்வதற்காக ஒவ்வொருவரும் தமக்கென வீடு ஒன்றினைச் சொந்தமாக்கிக்கொள்வதற்குப் பேராவல் கொள்கின்றனர். சுற்றிச்சூழ்ந்துள்ள புறநகர்ப் பகுதிகளையும் தன்னகமாக்கிக் கொண்டு நாளுக்குநாள் விரிவடைந்துகொண்டிருக்கின்ற

சென்னை போன்ற நகரங்களில் இத்தகைய காட்சிகளை சொல்லால் விவரிக்கத் தேவையில்லை. மிகச்சிறிய அளவிலேனும் ஒரு வீடு அல்லது குடியிருப்புப் பகுதியைச் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும் என்கிற கனவுகளில் மூழ்கியிருக்கும் மக்களை தன்வசப்படுத்திக் கொண்டிருக்கும் வீடு, மனை வாங்கி விற்கும், அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டிவிற்கும் நிறுவனங்களின் கவர்ந்திழுக்கும் அன்றாட விளம்பரங்களே உண்மை நிலையைப் பறைசாற்றுகின்றன. நமது நாட்டில் மட்டுமின்றி, உலக அளவிலும் மீப்பெரும் அளவில் கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால், நல்ல காலமாக, அங்கெல்லாம் விதிகளையும் ஒழுங்குமுறைகளையும் மீறியதன் காரணமாக இடிந்துவிழுவதும் நொறுங்கிப் போவதுமான நேர்வுகள் மிகவும் குறைவு. ஏனெனில், அந்நாடுகளில் திறம்பட்ட சட்டங்கள் இயற்றப்பட்டதோடு அச்சட்டங்களில் அனுமதிக்கப்பட்ட கட்டுமானப்பணிகளைக் கட்டுப்படுத்தவும் கண்காணிக்கவும், விதிமீறல்களும், மாறுபாடுகளும் காணப்படும்பொழுது கடுமையான நடவடிக்கை மேற்கொள்வதற்கும் கூரியமுனைகள் கொண்ட வழிவகைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தாம் பதிவுசெய்திருந்த குடியிருப்பு பகுதிகளைப் பெற இயலாமற்போன பாதிக்கப்பட்ட நபர்களையும், அண்மைப் பகுதியிலிருந்த கட்டடங்களில் குடியிருந்தோரையும் விசாரித்தபொழுது, இவ்வாணையம் கசப்பான உண்மைகள் பலவற்றைக் கண்டறிந்தது. ஏறத்தாழ கட்டுமான நிறுவனங்கள் அனைத்துமே பெருத்த ஆதாயமடைவது ஒன்றையே இலக்காகக்கொண்டு, அதனை அடைவதற்காக, கட்டுமானத்தின் தரத்தினையும் விலைமதிப்பில்லா மனித உயிர்களையும் பிணையமாக்கும் அளவிற்குத் தரம்தாழ்ந்து நடந்துகொள்வதாகக் குற்றம் சாட்டினர். ஒருசில நேர்வுகளில், குற்றப்பின்னணி கொண்ட நபர்கள் தம்மை கட்டுமானத் தொழிலில் ஈடுபடுத்திக்கொண்டுள்ளனர். குடியிருப்புப்பகுதியைப் பதிவுசெய்து பணத்தைச் செலுத்திய பின்னர், வாடிக்கையாளர் தம்முடைய ஐயப்பாட்டினைத் தெளிவுபடுத்திக்கொள்வதற்கோ தாம்பற்றிய கேள்வியெழுப்புவதற்கோ முடிவதில்லை; ஏனெனில், எங்கே தாக்கப்பட்டுவிடுவோமோ என்கிற அச்ச உணர்வு பீடித்துக்கொள்கிறது என்று அவர்கள் மேலும் குற்றம்சாட்டினர். இத்தகைய மூன்றாம்தர கட்டுமானநிறுவனத்தார், ஊராட்சி / சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் கடைமட்டப் பணியாளர்களுடைய அலட்சியப் போக்கினைப் பயன்படுத்திக்கொண்டு, இத்துறையில் மிக எளிதாக நுழைந்துவிடுவதுடன், அத்தொழிலில் கோலோச்சவும் துணிந்துவிடுகின்றனர் என்கிற குற்றச்சாட்டு அவர்கள் முன்வைத்த முறைப்பாடுகளிலேயே அதிர்ச்சியளிக்கக்கூடியதாக இருந்தது. கட்டுமான நிறுவனத்தினர் சிலர் தமது தொழில் பரப்பினை விரிவுபடுத்திக் கொள்வதற்கான விளம்பரமும், செல்வாக்கும் பெறுகின்ற முயற்சியாக, முதலிரண்டு திட்டங்களை 'சிறந்தவைபோல்' தோன்றும் வகையில் ஆனால் உண்மையில் 'சராசரியான தரத்தை' யொட்டி நிறைவேற்றி,

அதன்வாயிலாகக் கிட்டும் நற்பெயரைப் பயன்படுத்திக்கொண்டு, ஏதுமறியாத வாழ்க்கையாளர்களுடைய நலன்களையும் உயிரையும் கூட நாசப்படுத்தும் விதத்தில் கொள்ளை ஆதாயம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு மாபெரும் திட்டங்களை அறிவிக்கின்றனர். விதிமீறல்களின் காரணமாக வெள்ளையுடைக் கொள்ளையுடன் அதன் விளைபயனான மரண ஓலங்களும் எவ்விதத்தங்குதடையுமின்றி தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. தற்போதைய துயர நிகழ்வு தன்விளக்கமளிக்கின்ற, மேற்சொல்லப்பட்ட அகிலங்களையெல்லாம் வெட்டவெளிச்சமாகக் கண்முன் நிறுத்துகின்ற நீதிநெறிக்கதை போன்றதொன்றாகும். சட்டத்தின் பிடிக்குள் அகப்படாமல் திரைமறைவில் இதுபோன்ற எத்தனை திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுவிட்டனவோ, செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றனவோ தெரியவில்லை.

இவ்வாணையத்தால், மேற்சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்தும், தமது சொந்த அனுபவத்திலிருந்தும், அத்தகைய குற்றச்சாட்டுகளுக்குள் பொதிந்துள்ள வலுவான உண்மையின் அடிஆழத்தைக் கண்டுணர முடிகிறது. ஐயமின்றி, தற்போதைய கோர நிகழ்வு, பணம் ஒன்றையே இறுதி இலக்காகவும் வாழ்க்கையின் குறிக்கோளாகவும் கொண்டு, தாம் எழுப்புகின்ற வலுவற்ற கட்டடங்களுடைய வாழ்நாள் நீளத்தைச் சோதிப்பதற்கு வாடிக்கையாளர்களான மனித உயிர்களின் வாழ்நாளைப் பணையமாகக் கருதுகின்ற வீடு, மனை வாங்கிவிற்கும் அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டி விற்கும் நிறுவனங்களுக்குப் பின்னால் மறைந்துள்ள இருண்ட பகுதிக்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. துயர நிகழ்வு நேரிட்ட நாளில் இயற்கை தனது போக்கில் செயல்படாமல் போயிருந்தால், வலுவிழந்த அந்தக் கட்டமைப்பு கட்டிமுடிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட குடும்பங்கள் தமக்குரிய பகுதிகளில் குடியேறியிருந்தால், மனித உயிர்களின் இழப்பு பலமடங்கு அதிகரித்திருக்கக்கூடும்; விளைவுகளும் படுபயங்கரமாகவும் கொடூரமாகவும் ஏற்பட்டிருக்கும். மேற்கண்ட காட்சிப் பின்புலத்தில் நாம் உய்த்துணர்ந்து கொள்ளவேண்டியதெல்லாம், இதுபோன்ற துயர நிகழ்வுகளைத் தடுத்து நிறுத்துவது எப்படி? உருக்குலைந்துபோன கட்டடத்தை ஒத்தவிதத்தில் தொடரக்கூடிய கட்டுமானச் செயல்பாடுகளின்மூலம் எழக்கூடிய துயர விளைவுகள் இனியும் நிகழாவண்ணம் உடனடியாகக் கட்டுப்படுத்துவது எவ்விதம்? என்பது மட்டுமே.

கட்டுமானத்துறையை ஆளுமை புரியும் சட்டங்களும், பாதிக்கப்பட்டோர் தமது முறைப்பாடுகளுக்குத் தீர்வுகாண்பதற்கு ஏதுவாக நுகர்வோர் நீதிமன்றம், நகர உரிமையியல் நீதிமன்றம், உயர்நீதிமன்றம் போன்ற பல்வேறு மன்றங்களும் உள்ளன என்பதில் ஐயமில்லை. ஆனால், கட்டிமுடிக்கப்பட்ட கட்டடங்களின் உறுதிப்பாட்டினையே கேள்விக்குறியாக்கும் விதமாக, கட்டிமுடிக்கப்பட்ட பின்னர் வெளிப்படுத்தப்படுகின்ற உறுதியற்ற தன்மை போன்ற

புகார்கள் எண்ணற்ற அளவில் சட்டச்சிக்கல்களாக அலைமோதும்பொழுது, அரசு, தனது சட்ட அலுவலர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற அறிக்கைகளைக்கொண்டு நிலைமை சீர்குலைந்து போய்விட்டதை கணக்கிட்டு, மேலும் கூடுதல் திறமிக்கச்சட்டங்களை இயற்றுவதற்கோ, உரிய சட்டத்திருத்தங்கள் மூலம் செயலாக்கத்திலுள்ள சட்டங்களை வலுப்படுத்துவதற்கோ தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள முற்படுவதில் இடர்பாடு ஏதுமில்லை. அத்தகைய கோணத்தில் இப்பிரச்சினையை ஆய்வுசெய்வதற்கு, அயல்நாடுகளில் கையாளப்படுகின்ற செயல்பாட்டு முறைகளையும் ஆய்வுசெய்யலாம். மிகவும் கறைபடிந்த பகுதி எனப் புகார் பெறப்படுகின்ற அரசின் அடிமட்டப் பணியாளர்கள் நிலைமையைச் சரிசெய்வதில் பெரிதும் கருத்தூன்றிச் செயல்படவேண்டும். கட்டட அமைப்புத் திட்டங்களுக்கு ஏற்பளிக்கின்ற பிரிவில் பணியாற்றும் அலுவலர்கள் சிலரைத் தவிர, பொறுப்பில் உள்ள அதிகாரிகள் எவரும், கட்டடக் கட்டுமானத்தின் தொடக்கநிலையில் உரிமையாளர்கள் கையாளக்கூட முறையற்ற செயல்பாடுகளைக் கண்டறியும் அளவிற்கு தொழில் நுணுக்க முறையில் தேர்ச்சிபெற்றவர்களாக இல்லை என்பது விளங்கிக்கொள்வதற்கு கடினமான கசப்பான உண்மை. அதேபோல, ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பின்னர், கட்டுமானப்பணியின் தரத்தை மதிப்பிடுவதற்கும், மூலத்திட்டத்திலிருந்து மாறுபாடு ஏற்படுவதைக் கண்டறிவதற்கும் காலமுறைப்படியும், திடீரென்றும் ஆய்வு மேற்கொள்ளும் வகையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ள போதிலும், அத்தகைய தொடர் நடவடிக்கை எதுவும் வளமையாக மேற்கொள்ளப்படுவதில்லை என்பதுதான் உண்மையான நிலைமை. ஊராட்சியாக இருப்பினும் நகராட்சி எல்லைக்குள்ளாக இருப்பினும் மாநகர எல்லைக்குள்ளாக இருப்பினும், கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற இடங்களிலெல்லாம் அத்தகைய தொடர்நடவடிக்கை முற்றிலும் தேவையானது என்றபோதிலும், கெட்டபயமாக, கட்டுமானப் பணியில் முகாமையான நிலைகளில் அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த பணிகளை மேற்கொள்ளத்தக்க மனிதவளம் அக்குழுக்களிடம் இல்லை. மற்றுமொரு இருண்ட பகுதி என்னவெனில், நீர்நிலைகளையும், புறம்போக்கு நிலங்களையும், கேட்பாரற்ற இடங்களையும், இன்ன பிறவற்றையும் தொடர்புடைய அலுவலர்களைத் தம்வசப்படுத்திக்கொண்டு முதலாம்தரக் குற்றவாளிகள் அத்துமீறி ஆக்கிரமித்துக் கட்டடங்கள் எழுப்புவதற்கு முற்படுகின்ற அவர்களுடைய சூழ்ச்சித்திறன். ஆகவே, கையூட்டு / அலட்சியப் போக்கு / ஒருதலைச் சார்பு / செல்வாக்கு போன்ற புற அழுத்தங்களுக்கு இடமளிக்காத வகையில் முறையாகக் கூர்ந்தாய்வு செய்து கட்டட அமைப்புத் திட்டங்களுக்கு ஒப்புதல் / அனுமதி அளிக்கும் வகையில் தொடர்புடைய அதிகார அமைப்பினை வலுப்படுத்துவது மட்டுமின்றி, ஒப்புதல் பெற்றபின்னர் தொடங்கப்படுகின்ற கட்டுமானப் பணிகள் மூலத்திட்டத்திலிருந்து கிஞ்சித்தும் மாறுபடாமல் மேற்கொள்ளப்படுவதைக் கடுமையான கண்காணிப்புக்கு உட்படுத்துவதுடன், தவறிழைக்கும் அலுவலர்களைக் கடுமையாகத் தண்டிக்கும் வகையிலான சட்டங்களையும் இயற்றவேண்டும்.

மற்றொரு விநோதமான சூழ்நிலையையும் இடிந்துவிழுந்த இக்கட்டடத்தொகுதி உருவாக்கியுள்ளதை இவ்வாணையம் கண்டுகொண்டது. வாடிக்கையாளர்கள், இன்னல்பட்டு ஈட்டி ஆண்டுக்கணக்கில் சேமித்த பணத்தை கட்டுமான நிறுவனத்தாரிடம் ஒப்படைத்துவிட்டு தற்பொழுது நிவாரணம் தேடிக்கொள்வதற்கு வழியேதுமின்றிப் பரிதவிக்கின்ற நிலையை உருவாக்கிய பெருந்திட்டம் இது ஒன்று மட்டுமே! மாபெரும் கட்டுமானத் திட்டம் ஒன்றைத் தொடங்குகின்ற நிறுவனத்தார், தனது நலனையும் குடியிருப்புப்பகுதிகளைப் பதிவுசெய்துள்ள வாடிக்கையாளர்களுடைய நலனையும் பாதுகாப்பதற்காக ஒட்டுமொத்தத் திட்டத்திற்கும் காப்புறுதி பெறுவது இயல்பாகவும் வழக்கமாகவும் கைக்கொள்ளப்படுகின்ற நடைமுறையாகும். இந்நேர்வில், அப்படியொரு காப்புறுதி பலன்கள் கட்டுமான நிறுவனத்தாரால் பெறப்படவில்லை. இத்துறையைக் கட்டுப்படுத்துகின்ற நடப்பிலுள்ள சட்டத்தில், இருசக்கர வாகனங்கள், இயக்கூர்திகள், பெட்டிக்கடைகள் போன்றவற்றிற்கு நடைமுறைப்படுத்தப்படுவதைப் போல, காப்புறுதி பெறுவது கட்டாயமாக்கப்பட்டிருந்தால் வாடிக்கையாளர்கள் ஒட்டுமொத்த இழப்பினாலும் நிவாரணம் தேட இயலாத இடர்பாட்டினாலும் அல்லலுற நேர்ந்திருக்காது என்பதற்காகவே இக்கருத்து சுட்டிக்காட்டப்படுகிறது. இத்தகைய யதார்த்த நிலையிலிருந்து, இதுபோன்ற பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நேர்வுகளில், நுகர்வோர் / வாடிக்கையாளர்கள் நலன்களைத் திறம்படப் பாதுகாக்கும் விதத்தில் அனைத்து வகையான எதிர்பாராத சூழமைவுகளையும் எதிர்கொள்ளத்தக்க முழுமையானதொரு செயலமைப்பு முறையை சட்டம் வழங்கவேண்டும் என்பது அறியக்கிடைக்கிறது. ஆகவே, எதிர்காலத்தில் உருவாக்கப்படவுள்ள சட்டமானது, வாடிக்கையாளர் இன்னல்பட்டு ஈட்டி கட்டுமான நிறுவனத்தாரிடம் ஒப்படைத்த பணம் பாதுகாக்கப்படுதல்; கட்டுமான நிறுவனத்தார் உறுதியளித்தவாறு தாம் பதிவு செய்த குடியிருப்புப் பகுதியினைத் தரம் குறையாமலும் குறித்தநேரத்திலும் வாடிக்கையாளர்கள் பெறுதல்; நிறுவனத்தாருடைய தவறு காரணமாக பாதிப்பு ஏதேனும் ஏற்பட்டால் நிறுவனத்தாரிடமிருந்து வாடிக்கையாளர் உடனடி நிவாரணம் பெறுதல் போன்ற அனைத்தும் தனது ஆளுகைக்குள் அடக்கப்பெற்றதாக அமையவேண்டும். ஆகவே, கட்டுமான நிறுவனத்தார் காப்புறுதிப் பலன்களுக்கு ஏற்பாடு செய்வதைக் கட்டாயமாக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. மேலும், கடன்வழங்கக்கூடிய வங்கிகளும் காப்புறுதிப் பலன்கள் பெறுவதற்கான வாய்ப்புள்ளதா என்பதைச் சரிபார்த்துக்கொள்ளவேண்டும் என்கிற பொறுப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும். அதுமட்டுமின்றி கட்டுமான நிறுவனத்தார் ஒவ்வொருவரும், ஒவ்வொரு திட்டத்தைப் பொறுத்தும், குறைந்தது பத்தாண்டு காலத்திலாவது ஒரு பெருந்தொகையை நிலை வைப்பாகச் செலுத்திவரவேண்டும். ஏனெனில், எதிர்காலத்தில், பாதிப்பிற்கு உள்ளாகக்கூடிய வாடிக்கையாளர்கள், முறையிடும்பொழுது அவர்களை அங்குமிங்குமாக அலைக்கழிக்காமல் அந்த வைப்பு நிதியிலிருந்து உரிய இழப்பீட்டினை வழங்கலாம்.

III. நிவாரண நடவடிக்கைகள் கீழ்க்கண்டவாறு தொகுக்கப்படுகின்றன:-

a) A கட்டடத்தொகுதி வல்லுநர் குழுவின் ஆலோசனைப்படி நவீன தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்தி இடிக்கப்படல் (Demolished) வேண்டும்;

b) காப்புறுதிப் பலன்கள், வங்கி, கட்டுமான நிறுவனத்தார் மற்றும் வாடிக்கையாளர் ஆகியோரிடையே (முக்கோண) மும்முனைப் பொறுப்புக்களை உருவாக்குதல், தனிவகை தண்டனைச் சட்டப் பிரிவுகளை அறிமுகப்படுத்துதல், மாபெரும் திட்டங்களை மேற்கொள்கின்ற கட்டுமான நிறுவனத்தார் ஒரு குறிப்பிட்ட அளவு தொகையினை குறைந்தது பத்தாண்டு காலத்திற்கு வைப்பு நிதியாகச் செலுத்துமாறு வலியுறுத்தல் போன்ற இன்றியமையாத அம்சங்கள் அடங்கப்பெற்ற விரிவானதொரு சட்டத்தை வகுத்தல் அல்லது செயலாக்கத்தில் உள்ள சட்டத்தை அவ்வாறு வலுப்படுத்துதல் வேண்டும்;

c) மிகப்பெரிய கட்டுமானத் திட்டங்கள் அனைத்தையும் கட்டாயமாகக் கண்காணித்து மேற்பார்வையிடும் பொருட்டு, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் தொழில்நுட்ப அலுவலர், சட்ட அலுவலர், மண் பரிசோதனை வல்லுநர்கள், அடிக்கட்டுமான வடிவமைப்பு, கட்டடக் கட்டுமான அமைப்புப் பொறியாளர் ஆகியோர் அடங்கிய குழு ஒன்றை அடிமட்ட நிலையில் அமைக்கும் வகையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மாற்றியமைக்கப்படல் வேண்டும்;

d) தரம், விதிகளைக் கடைப்பிடித்தல் போன்றவற்றை உறுதிப்படுத்துவதுடன், அக்குழுவினர், கட்டுமானப் பணியின் முக்கியமான கட்டங்கள் அனைத்திலும் ஆய்வு மேற்கொள்வதை முக்கியப் பணியாகக் கொள்ளவேண்டும். குறிப்பாக, அடிக்கட்டுமானத்திற்கான மண்தோண்டும் வேலை நடைபெறும்பொழுது, அடிக்கட்டுமானத்தினை உருப்படுத்தும் பணியின்போது, அடித்தளத்திற்கான மூடும் பணி (கூரை அமைக்கும் பணி) நடைபெறும்போது, ஒவ்வொரு தளத்திற்கும் கூரைத்தளம் மூடப்படும்போது;

e) கட்டுமானப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும்பொழுதே, கட்டுமான நிறுவனத்தின் அடுத்தடுத்த கட்டடப் பணிகளைத் தொடங்குவதற்கு ஒவ்வொரு கட்டடப்பணி நன்முறையில் முடிக்கப்பட்டதற்கான சான்று வழங்கும் அதிகாரம் அக்குழுவிற்கு அளிக்கப்பட வேண்டும். அதன்மூலம் மூலத்திட்டத்திலிருந்து மாறுபடுவதையும் விதிமீறல்களையும் திறம்படத் தடுக்க முடியும்;

f) பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தும் பொருட்டு மீண்டும், கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த பின்னர், கீழ்க்கண்ட சான்றுகளை வழங்கும் முகத்தான் அக்குழு கட்டடத்தின் முழுக் கட்டமைப்பினையும் ஆய்வு செய்யவேண்டும். – தடையில்லாச் சான்றிதழ் – இதன் அடிப்படையில்தான் நிலையான மின்சார, நீர், வடிகால் இணைப்புகள் பெறப்பட வேண்டும், – குடியேறுவதற்கான தகுதிச் சான்றிதழ், பதிவுசெய்யப்பட்ட குடியிருப்புப் பகுதிகளில் அவரவர் பாதுகாப்பாக குடியேறிக் கொள்வதற்கானது;

g) தற்போதைய துயரநிகழ்வுக்குக் காரணமான கட்டடத்தைப் போலவே கேள்வி கேட்பாரின்றி பலகட்டடங்களின் கட்டுமானப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதாகப் புகார்கள் எழுந்தவண்ணம் உள்ள காரணத்தால் இதுபோன்ற துயரநிகழ்வு மீண்டும் நிகழாவண்ணம் உடனடியாகத் தடுக்கும் பொருட்டு, சிறப்பு தணிக்கைப் படை ஒன்றை அமைத்து மாநகர எல்லைக்கு உள்ளும் புறமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பெருந்திட்டங்களை ஆய்வு செய்ய வேண்டும்:

h) தொடர்புடைய துறைகளில் பல்வேறு நிலைகளில் பணியாற்றுகின்ற அலுவலர்களுக்கும், கட்டுமான நிறுவனத்தாருக்குமிடையே திரை மறைவாகவும், வெளிப்படையில்லாமலும் நடைபெறக்கூடிய நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கெனத் தனிப்பட்ட முறையில் ஒரு சிறப்புப்படையினை உருவாக்கி விழிப்புப்பணித் துறையைக் கூர்மைப்படுத்த வேண்டும்.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைத்ததுடன், இவ்வாணையம் ஆய்வுக்கு உட்படுத்தப்படாத இன்னுமொரு பிரச்சினை குறித்தும் குறிப்பிட வேண்டியது அவசியமானது எனக்கருதுகிறது. அதன்மூலம், அரசு இவ்வாணையம் முன்வைத்துள்ள குறைதீர் நடவடிக்கைகள் மீது இறுதியானதொரு முடிவினை எடுக்கும்போது இப்பிரச்சினை குறித்தும் கருத்திற்கொள்ளலாம். விசாரணையின்போது, ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளதுபோல், 'B' கட்டடத்தொகுதி இடிந்துவிழுந்ததனால் தாம் பதிவுசெய்திருந்த குடியிருப்புப்பகுதி பறிபோனவர்களும் தமது கட்டடங்களும் பாதிக்கப்பட்ட அண்மையில் வாழும் மக்களும் அவர்களுள் காயமடைந்தோரும் இவ்வாணையத்திடமும் அதன்வழி தமிழ்நாடு அரசிடமும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் மற்றும் பாதிப்புகளுக்கும் குறைதீர் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு முறையிட்டுள்ளனர். அவர்களுடைய முறைப்பாட்டில் முழுக்க முழுக்க நியாயமிருப்பதாக இவ்வாணையம் கருதுகிறது. ஆகவே குடியிருப்புப்பகுதிகளைப் பதிவு செய்தவர்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்பின் அளவையும்,

அண்மைப்பகுதிகளில் வாழும் மக்களுக்கும், அவர்களுடைய கட்டடங்களுக்கும் ஏற்பட்டுள்ள காயங்கள் / பாதிப்புகள் அளவினையும் மதிப்பிடுவதற்காகவும் அரசுக்குப் பரிந்துரைகள் செய்வதற்காகவும் அரசு குழு ஒன்றினை அமைக்கலாம் எனப் பரிந்துரைக்கப்படுகிறது. குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், பாதிப்படைந்தோருக்கு ஏற்பட்டுள்ள இழப்பு மற்றும் பாதிப்புக்கு ஏற்றாற்போல் அரசு இழப்பீடு வழங்குவது குறித்து அறுதிசெய்யலாம். குடியிருப்புப் பகுதிகளைப் பதிவுசெய்தோர் தமது கையிருப்பினைக்கொண்டு அல்லது கடன்வசதி பெற்று குடியிருப்புப்பகுதிக்குரிய தொகையைச் செலுத்திய பின்னரும் தமக்குரிய உடமையைப்பெற இயலாத நிலையில் வல்லமை மிகுந்த வங்கிக்கும் சிறைக்குள் அடைக்கப்பட்டுள்ள கட்டுமான நிறுவனத்தாருக்கும் இடையே சிக்கித் தவிக்கின்ற வினோதமான சூழ்நிலையைக் கருத்திற்கொண்டே, இவ்வாணையம், அத்தகையோருக்கும் அண்மைப்பகுதிகளில் வாழும் காயமடைந்தோருக்கும் தமது கட்டடங்கள் பாதிக்கப்பட்டோருக்கும் இழப்பீடு வழங்குமாறு பரிந்துரைக்கவேண்டியது முழுக்க முழுக்க நியாயமானதும் தேவையானதுமாகும் என்று கருதுகிறது. அரசு, பொருத்தமானதென்று தோன்றிடின், மாநிலப் பேரிடர் நிவாரண நிதி மூலமாக இச்செலவினத்தை மேற்கொள்ளலாம். விடைபெறும் முன்னர், இவ்வாணையம், மீட்புப்பணிகளை அளவுகடந்த வேகத்துடன் விரைந்து மேற்கொண்டமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு அரசுக்குத் தனது பாராட்டுகளைப் பதிவுசெய்வது பொருத்தமாக இருக்குமெனக் கருதுகிறது. தகவல்கிடைத்த உடனேயே, அனைத்துத் துறைகளைச் சார்ந்த அலுவலர்களும் இடர் களைவு மற்றும் சீரமைப்பு பணிகளில் முடுக்கிவிடப்பட்டனர். இடிபாடுகளுக்குள் சிக்கிகொண்டு உயிர்த்திருந்தோர் அனைவரையும் எவ்வாறேனும் உயிருடன் மீட்டாக வேண்டும் என்கிற உறுதிப்பாட்டுடன் இதுவரை கேள்விப்பட்டிராத அதி நவீன தொழில்நுட்பங்களெல்லாம் கையாளப்பட்டன. இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்தோர் மற்றும் காயமடைந்தோர் குடும்பங்களுக்கு நிதிஉதவி வழங்கப்பட்டது. அரசினுடைய கட்டுப்பாட்டுணர்வுடன் கூடிய முயற்சிகள் மட்டும் இல்லாது போயிருப்பின், அத்துணை பெரிய மிகக்கடுமையான பணி அத்துணை குறுகிய காலத்திற்குள் நிறைவேற்றப்பட்டிருக்க முடியாது.

தொழில் நுட்ப வல்லுநர்களைப் பற்றி மிகவும் சிறப்பாகக் குறிப்பிட்டாக வேண்டும். மிகக்கடுமையான தொழில் நுணுக்கக் கருத்துக்களுக்கும் துல்லியமான விடைதேடிக் கொடுத்த அவர்தம் மதிநுட்பத்தால் இவ்வாணையத்திற்குப் பெரிதும் பாராட்டத்தக்க விதத்தில் துணைபுரிந்துள்ளனர். காலங் கருதாமல், விவாதங்களிலும், நேரடி ஆய்வுகளிலும், தனிப்பட்டவையும் ஒருங்கிணைக்கப்பட்டவையுமான அறிக்கைகளைத் தயாரிப்பதிலும், இன்னபிற பணிகளிலும் தமது மதிப்புமிகுந்த நேரத்தைச் செலவிட்டுள்ளனர். அவர்கள் ஆற்றிய பணிகள் உண்மையிலேயே வெகுவாகப் பாராட்டத்தக்கவை.

அதேபோன்று, சிறப்புப் புலனாய்வுக் குழுவினர், உயர்நிலை அலுவலரிலிருந்து சார்நிலைப் பணியாளர்கள் வரை, பிரச்சினையினுடைய உணர்வுக்கூர்மையையும் பொது முக்கியத்துவத்தையும் கருத்திற்கொண்டு, கால நேரங் கருதாமல் அல்லும் பகலும் அயராமல் பாடுபட்டு, இவ்வாணையம் தனது பணிகளைத் திறம்பட நிறைவேற்றுவதற்குப் பேருதவி நல்கும் விதத்தில் தொடர்புடைய பொருண்மைகள் அனைத்தையும் திரட்டிக் கொணர்வதில் வெற்றி கொண்டனர். அயர்வறியா அவர்தம் அரும்பணி தனித்துவம் மிக்கது; சாலச் சிறந்தது.

இவ்வாணையத்தின் ஒட்டுமொத்த அலுவலகப் பணியாளர்களும், தமது தனிப்பட்ட வேலைப்பளுவைப் பற்றிக் கவலைப்படாமல், வரையறுக்கப்பட்டிருந்த காலத்திற்கு முன்பாகவே அறிக்கையைத் தயாரித்து நிறைவு செய்யும் வகையில் விசாரணை ஆணையத்திற்கு உதவிபுரிவதில் தமது பெரும்பான்மை நேரத்தைச் செலவிட்டனர். செயல்திறமிக்க அவர்களுடைய உதவியும் ஒத்துழைப்பும் இல்லாது போயிருப்பின், இத்துணை பெரிய பணியை எளிதாகவும் ஏதுவாகவும் நிறைவேற்றிட இவ்வாணையத்தால் இயலாமற் போயிருக்கும். அவர்கள் அனைத்து வகையிலும் பாராட்டிற்குரியவர்கள்.

(ஒப்பம்)

மாண்பமை நீதியரசர் ஆர்.ரெகுபதி,

விசாரணை ஆணையம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கழுக்கம்



சுருக்கம்

விசாரணை ஆணையம் – 28.06.2014 அன்று மாலை 55 பேர் உயிரிழப்பதற்கும், பலர் காயமுறுவதற்கும் காரணமாக அமைந்த காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், மௌலிவாக்கத்திலுள்ள பன்மாடிக் கட்டடம் இடிந்து விழுந்த நிகழ்ச்சி குறித்து 1952–ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின்கீழ் (மத்தியச்சட்டம் LX 1952) விசாரணை மேற்கொள்ள திரு.ஆர்.ரெகுபதி, சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதியரசர் அவர்களை நியமித்தல் – விசாரணை ஆணைய முடிவுகள் – ஆணைகள் – வெளியிடப்பட்டன.

பொது (மிகக்கழுக்க)த் துறை

அரசாணை (நிலை) எண்.1052 நாள்:22.08.2015

படிக்கப்பட்டது:-

1. அரசாணை நிலை எண்.557, பொதுத் (சட்டம் மற்றும் ஒழுங்கு– F) துறை, நாள் 03.07.2014.
2. அரசாணை நிலை எண்.997, பொதுத் (மிகக் கழுக்கம்) துறை, நாள் 07.11.2014.

ஆணை:

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், மௌலிவாக்கத்தில் 28.06.2014 அன்று மாலை பன்மாடிக் கட்டடம் இடிந்து விழுந்து நொறுங்கி 55 பேர்கள் உயிரிழக்கவும், பலர் காயமடையவும் காரணமாக அமைந்த நிகழ்வு குறித்து 1952ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் LX 1952) கீழ் விசாரணை மேற்கொள்ளும் விசாரணை ஆணையமாக சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதியரசர் திரு.ஆர்.ரெகுபதி அவர்கள் மேலே குறிப்பிட்டுள்ள அரசு ஆணை ஒன்றில் கண்டுள்ளபடி நியமிக்கப்பட்டார்.

விசாரணை ஆணையத்தின் ஆய்வு வரம்புகள் பின்வருமாறு:–

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், மௌலிவாக்கத்தில் 28.06.2014 அன்று மாலை 55 பேர் உயிரிழக்கவும், பலர் காயமுறவும் காரணமாய் அமைந்த பன்மாடிக் கட்டடம் இடிந்து விழுந்து நொறுங்கிய நிகழ்வு குறித்து அதன் பல்வேறு கூறுகள், நிகழ்வுக்கான காரணங்கள் மற்றும் சூழ்நிலைகளை விசாரித்தல்;

A

(ஆ) அதிக எண்ணிக்கையிலான கட்டுமானத் தொழிலாளர்கள் உயிரிழப்பதற்கும், பலர் காயம் அடைவதற்கும் வழிவகுத்த துயரச்சம்பவத்திற்கு எவருடைய கவனக்குறைவு காரணமாக இருந்ததோ, அந்த நபர்கள் மீது பொறுப்பு நிர்ணயித்தல்; மற்றும்

(இ) இனிவருங்காலத்தில், இத்தகைய துயரச்சம்பவம் மீண்டும் நிகழ்வதைத் தவிர்ப்பதற்கு எடுக்கப்படவேண்டிய குறைதீர் நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்.

2. ஆணையம், 25.08.2014 அன்று தனது அறிக்கையை அரசிடம் வழங்கியுள்ளது. ஆணையம், தனது அறிக்கையில், தன் முன்பாக அளிக்கப்பட்ட வாய்மொழி மற்றும் ஆவண சான்றுகளின் அடிப்படையில் கண்டறிந்த முடிவுகளைக் கீழ்க்கண்டவாறு பதிவுசெய்துள்ளது:-

ஆய்வு வரம்பு எண்.(A)

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், மௌலிவாக்கத்தில் 28.06.2014 அன்று மாலை 55 பேர் உயிரிழக்கவும், பலர் காயமுறவும் காரணமாய் அமைந்த பன்மாடிக் கட்டடம் இடிந்து விழுந்து நொறுங்கிய நிகழ்வு குறித்து அதன் பல்வேறு கூறுகள், நிகழ்வுக்கான காரணங்கள் மற்றும் சூழ்நிலைகளை விசாரித்தல்.

முடிவுகள்:-

திரு. நாகேஷ் என்னும் கட்டமைப்புப் பொறியாளர் விசாரணை ஆணையத்திடம், தான் அளித்திருந்த கட்டமைப்பிற்குரிய வடிவமைப்புத் திட்ட வரைபடம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் ஏற்பளிப்பு வழங்கப்பட்ட பிறகு, கட்டடம் கட்டுபவர் (Builder), தன் ஆலோசகர் திரு. விஜய் பர்கோத்ரா வாயிலாக திரு. எஸ்.வெங்கடசுப்ரமணியம் என்ற வேறொரு கட்டடக்கலை வல்லுநரை நியமித்துக்கொண்டு, ஏற்கெனவே சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (C.M.D.A.) ஏற்பளிப்புச் செய்திருந்த திட்ட வரைபடத்தை புறந்தள்ளிவிட்டு, புதிய திட்ட வரைபடத்தைப் பெற்று அதன்படி கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கருதியிருந்ததாகக் கூறியதாக ஆணையம் தெரிவித்தது. கட்டுமானப்பணிகள் செயல்படுத்தப்பட்ட நிலையில், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கும், திரு.நாகேஷுக்கும் தெரியாமல் முன்னதாக ஏற்பளிப்புச் செய்யப்பட்ட திட்ட வரைபடம் முற்றிலுமாகக் கைவிடப்பட்டது.

(ii) விசாரணை ஆணையம், வடிவமைப்பிலும், பணியை நிறைவேற்றுவதிலும் பல்வேறு விதிமீறல்கள் நிகழ்ந்துள்ளதைப் பின்வருமாறு பட்டியலிட்டுள்ளது:-

(a) திரு. எஸ்.நாகேஷால் தயாரிக்கப்பட்டு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடம் அளிக்கப்பட்ட திட்ட வரைபடத்தில் பாதுகாப்புத் திறன் 105 டன் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இது திரு. எஸ்.வெங்கடசுப்பிரமணியம் அவர்களால் நிறைவேற்றப்பட்ட திட்டவரைபடத்தில் இடம்பெறவில்லை. அதைப்போன்றே, வளையங்களுக்கு இடையே இடைவெளி விடுதல், மேற்கூரை பாளத்தின் பருமன் போன்ற முக்கியமான கூறுகள் கட்டுமானத்திற்காக ஒப்புதலளிக்கப்பட்ட புதிய திட்ட வரைபடத்தில் விட்டுவிடப்பட்டன.

(b) ஒப்புதலளிக்கப்பட்ட திட்டவரைபடத்தில் 46 தூண்கள் இடம் பெற்றிருந்ததற்கு மாறாக 37 தூண்கள் நிறுவப்பட்டுள்ளன. 37 தூண்களுள் 22 தூண்களுக்கு (சுமை ஏற்றப்படாத நிலையில் மட்டும்) மேல் மதிப்பீடு செய்யப்பட்ட சுமையின் அளவு, தூணின் இறுதிநிலை தாங்குதிறனையும் விஞ்சியுள்ளது. L19 தூணுக்குரிய அதிகபட்ச சுமைதிறன் 220 டன் மட்டுமே இருந்தது என்று மனித முயற்சியாலான கணக்கீடு உறுதிசெய்தது. ஆனால் சுமை ஏற்றப்படாத நிலையில் 420 டன் அளவு சுமை இருக்கவேண்டும். பெரும்பாலான தூண்களின் இறுதிநிலைத் தாங்குதிறன், மதிப்பீடு செய்யப்பட்ட சுமை அளவைக் காட்டிலும் கணிசமான அளவுக்குக் குறைவாக இருந்தது. இது, கட்டடமும் தூண்களும் இடிந்து விழுவதற்கு வழிவகுத்தது .

(c) IS 456: 2000 விதிக்கோவை 204 மற்றும் 205 பகுதியின்படி செங்குத்தான மற்றும் கிடைமட்டமான சுமைகள் ஆகிய இரண்டிற்கும் உறுதித்தன்மை குறித்த சோதனைகள் செய்யப்பட வேண்டும். கடைக்கால் அமைப்பிற்கு கிடைமட்டமான வலுவை செம்மையான முறையில் ஏற்படுத்துவதற்கு போதுமான அளவில் பற்றவைப்புப் பணிக்கும் ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்று இப்பகுதி வரையறுக்கிறது. இவைகள் செய்யப்படவில்லை.

(d) கிடைமட்டமான ஊசலாட்ட சோதனையும் செய்யப்படவில்லை. 'H' கட்டுமானத்தின் மொத்த உயரமாக இருக்கிறபோது, நிலையற்ற அந்தச் சுமையின்கீழ் கிடைமட்ட ஊசலாட்டம் H/500–க்கு மேற்படக்கூடாது. இவைகள் தணிக்கை செய்யப்படவில்லை.

(e) பன்மாடிக் கட்டடங்கள் போன்ற இத்தகைய பெரிய திட்டங்களுக்கு வடிவமைப்பின் அடிப்படை அறிக்கை **(Design Basis Report)** ஒன்று இருக்கவேண்டும். இது, NBC 2005–ன் 4.1 மற்றும் 4.2 ஆகிய பகுதியின்படி விதிக்கோவையில் சொல்லியுள்ளவற்றிற்கு இணக்கமான முறையில் போதுமான பாதுகாப்பான விளிம்புகள் பற்றி விவரமாகத் தெரிவிக்கவேண்டும். ஆனால், இந்த நிபந்தனைக்கு இணக்கமாக பணிகள் அமையவில்லை.

(f) NBC கட்டுமான வடிவமைப்புப் பிரிவு–1 சுமை ஆற்றல்கள் மற்றும் விளைவுகள் குறித்த பாகம் 6–ற்கு இணக்கமாக வடிவமைப்பு செய்யப்படவில்லை.

(g) பொருட்கள், பதிவுருக்கள், வேலைப்பாடு மற்றும் கட்டுமானம் ஆகியவற்றைச் சோதனை செய்வதற்காக ஆய்வு நடைமுறை இருக்கவேண்டுமென்று IS: 456 : 2000–ன் பகுதி 17 வரையறுக்கிறது. கிடைத்துள்ள பதிவுருக்களின்படி இந்த வழிவகைகள் பின்பற்றப்படவில்லை என்பது தெளிவாகிறது.

(h) பயன்படுத்தப்பட்ட கற்காரை, மொத்தம் 20 மில்லி மீட்டர் அளவிற்கு போதிய பருமன் அளவைக் கொண்டிருக்கவில்லை எனத் தோன்றுகிறது.

AA

(i) IS : 13920 : 1993–ன் 6.3.5 ஆம் பகுதியின்படி குழைமத்தின் கீழ் பகுதியில் மதிப்புகளுக்கான இடைவெளி D/4 ஆக இருக்கவேண்டும். கற்காரை வெளியேறாமல் இருப்பதற்கும், கம்பிகள் வளைந்து கொடுக்கும் இயல்புடையதாக இருப்பதற்கும் ஏற்றவாறு உத்தரத்தின் இரு புறங்களிலும் 2d நீளத்திற்குமேல் வளையங்களின் இடைவெளி d/4–க்கு மேற்படக்கூடாது என்று இப்பகுதி வரையறுக்கிறது. இது, சுமார் 100 மி.மீ. என்று கணக்கிடப்பட்டுள்ளது. களச்சரிபார்ப்பு மற்றும் திட்ட வரைபடத்தின்படி, விடப்பட்டுள்ள இடைவெளி, 200 மி.மீட்டருக்கு மேற்பட்டதாக உள்ளது.

(j) இணைப்பு வேலைப்பாட்டிற்கான IS: 13920 : 1993–ன் பகுதி 8.1 இதில் பின்பற்றப்படவில்லை. தூண்களின் இறுதியில் கோரியுள்ளவாறு கற்காரை வெளியே வராமல் இணைப்பின் மூலம் சிறப்பு மறுவலுவூட்டல் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(k) IS:13920 : 1993–ன் பகுதி 6.2.6–ன்படி குழைமத்தின் (பிளாஸ்டிக்) கீழ் பகுதியில் மடிப்புகள் அனுமதிக்கப்படுவதில்லை. இந்தப் பகுதிகளில் மடிப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. அதிலிருந்து கம்பிகள் நழுவி விட்டன. இணைத்தளத்திலிருந்து 2d தொலைவிற்குள் மடிப்பு புரியிணைவு செய்யப்படக்கூடாது. இது, ரீபார்களை வெளியே வரச்செய்து, கட்டடம் திடீரென்று தகர்ந்து விழுவதற்கு வழிவகுத்தது.

(l) மடிப்புகள் அமைக்கப்பட்ட இடத்தில், 150 மி.மீ. c/c–க்கு மேற்பட்ட இடைவெளியில் வளையங்கள் அமைக்கப்பட வேண்டும். நீளவாக்கில் உள்ள கம்பிகளை முறுக்கி இணைக்கிறபோது, அவை 150 மில்லி மீட்டருக்கு மேற்படாத இடைவெளியில் வளையங்களைக் கொண்டிருக்க வேண்டும். இந்த விதி மீறப்பட்டுள்ளது.

(m) IS:13920 : 1993 பகுதி 7.2.1–ன்படி ஒரே குறுக்குப் பிரிவில் அனைத்து மடிப்புகளும் அனுமதிக்கப்படுவதில்லை. 50 சதவீதத்திற்கு மேற்பட்ட கம்பிகள் ஒரு பிரிவில் புரியிணைவு செய்யப்படக்கூடாது என்பதற்கு பகுதி 7.2.1 வகை செய்கிறது.

(n) IS:13920 பகுதி 6.3–ன்படி வலை மறுவலுவூட்டல் **(web reinforcement)** செய்யப்படவில்லை (135 கோணங்கள்).

(o) மேம்பாட்டு நீளம் **(Development length)**, IS: 13920 : 1993 பகுதி 6.2.5–ன்படி அமையவில்லை.

(iii) மேற்கூறிய முடிவுகளின் அடிப்படையில் இந்த துயரசம்பவத்திற்குப் பின்னணியாக உள்ள முக்கிய காரணமாவது கட்டடம் கட்டியவரும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள அவருடைய கூட்டாளிகளான கட்டடக்கலை வல்லுநர் திரு.எஸ்.வெங்கடசுப்பிரமணியம் மற்றும் ஆலோசகர் திரு. விஜய் பர்கோத்ரா ஆகியோரும் ஒவ்வொரு நிலையிலும் ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட வரைபடம் மற்றும் கட்டுமான நடவடிக்கை ஆகியவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டு செயல்பட்டதே என்றும் மேலும் இவர்கள், செல்வி சுகன்யா சுட்டிக் காட்டிய முக்கியமான மாறுபாடுகளை வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் கருத்திற்கொள்ளவில்லை என்றும், திரு. நாகேஷ் என்ற கட்டடக்கலை வல்லுநரால் தயாரிக்கப்பட்டு, சென்னைப்

பெருநகர வளர்ச்சிக்குழுமத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட அசல் திட்ட வரைபடத்தை, தெரிந்தே மீறியுள்ளனர். அதாவது திட்ட வரைபடத்திற்கு மாறாகச் செயல்பட்டுள்ளனர் என்றும் விசாரணை ஆணையம் முடிவுக்கு வந்துள்ளது. வேறுவகையில் சொல்வதாயின், இது மாறுபட்ட எண்ணம் கொண்ட ஒரு குழுவினரின் திட்டமிட்ட மாறுபாடு ஆகும் (**'Planned deviation perpetrated by a set of deviated minds'**). கட்டுமானத்தின் தரம் மற்றும் பாதுகாப்பு அம்சங்களைப் புறந்தள்ளிவிட்டு, பெருமளவில் ஆதாயம் பெறுகிற நோக்கத்துடன், அவர்களுடைய விருப்பத்திற்கேற்றவாறு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது, கட்டடம் தகர்ந்து விழுவதற்கு முடிவான காரணமாக உள்ளது.

ஆய்வு வரம்பு எண்.(B)

அதிக எண்ணிக்கையிலான கட்டுமானத் தொழிலாளர்களின் இறப்பிற்கும், ஏனைய பலர் காயமுறுவதற்கும் **வழிவகுத்த** துயர சம்பவத்திற்கு **எவருடைய அக்கறையின்மை** காரணமாக இருந்ததோ அந்த நபர்கள் மீது பொறுப்பு நிர்ணயித்தல்.

முடிவுகள்:-

கட்டடம் கட்டியவரும் அவருடைய கூட்டாளிகளும் விதிகளையும், விதிமுறைகளையும் ஒட்டுமொத்தமாக புறக்கணித்து இரகசியமாக பணிகள் மேற்கொண்டது, ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட வரைபடத்திற்கு மாறாக, வேறொன்றை மாற்றிய இழி செயல் ஆகியவற்றை விசாரணை ஆணையம் சுட்டிக்காட்டியுள்ளது.

(ii) பிரச்சினைக்குரிய பன்மாடி இரட்டை கட்டடங்களை கட்டுவதற்கான திட்ட வரைபடத்திற்கு ஒப்புதல் கோருகிற விண்ணப்பத்துடன், திரு. எஸ்.நாகேஷ் மற்றும் செல்வி பி.சுகன்யா ஆகியோரால் தயாரிக்கப்பட்டு, கையொப்பமிடப்பட்ட 6.2.2012 மற்றும் 15.2.2012 ஆகிய நாட்களிட்ட அசல் கட்டுமான வடிவமைப்பு திட்டவரைபடங்கள், சென்னைப்பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடம் அளிக்கப்பட்டன. சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடம் அளிக்கப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட வரையறைகள், நிபந்தனைகள் மற்றும் உறுதிமொழி ஆகியவற்றுக்கு மாறாக, புதிய திட்ட வரைபடம் ஒன்றின் அடிப்படையில் கட்டடம் கட்டுவதற்காக, அனுமதியளிக்கப்பட்ட திட்ட வரைபடத்திற்கு மாறாக, புதிய திட்டவரைபடம் ஒன்றைத் தயாரிப்பதற்காக திரு. எஸ்.நாகேஷ் என்ற கட்டடக்கலை வல்லுநருக்குத் தெரியாமல், மற்றொரு கட்டடக்கலை வல்லுநரை, பிரைம் சிருஷ்டி ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரான திரு. மனோகரன் அமர்த்தினார். அதற்கிணங்க, கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

(iii) கட்டடம் தகர்ந்து விழுந்ததற்கு, கீழ்க்காணும் தனிநபர்கள் மீது ஆணையம், பொறுப்பு நிர்ணயித்தது:-

(a) திரு. மனோகரன் – திருவாளர்கள் பிரைம் சிருஷ்டி ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர்;

(b) திருவாளர்கள் எம்.முத்துகாமாட்சி மற்றும் எம்.பாலகுருசாமி – திருவாளர்கள் பிரைம் சிருஷ்டி ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர்கள்.

(c) திரு. எஸ்.வெங்கடசுப்ரமணியம், கட்டுமானப் பொறியாளர்– இவர் முழுவதும் விதிமுறைகளுக்கு முரணான வகையில் புதிய கட்டட வரைபடத்தை தயாரித்திருந்தார். இதன் அடிப்படையில் கட்டுமானப்பணி மேற்கொள்ளப்பட்டது. ஏற்கெனவே சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்தின் ஒப்புதலை பெற்ற வரைபடத்திற்கு மாறாக கட்டுமானதாரர் பயன்படுத்தக்கூடிய வகையில் சட்டத்திற்கு புறம்பான வரைபடத்தை தான் தயாரித்திருப்பதை அவர் முழுமையாக நன்கு அறிந்திருந்தார்.

(d) திரு. விஜய் பர்கோத்ரா – கட்டடக்கலை ஆலோசகர்– கட்டுமானதாரர் விதிமுறைகளுக்கு முரணான வரைபடத்தை பயன்படுத்தி கட்டுமானம் மேற்கொண்டதால் கட்டடம் இடிந்து விழுந்துவிடலாம் என செல்வி சுகன்யா நினைவுபடுத்தியபோதிலும்கூட, சட்டத்திற்கு புறம்பான கட்டுமானப்பணி முழுவதற்கும் திரு. மனோகரனுக்கு உதவி செய்துள்ளார்; மற்றும்

(e) திருவாளர்கள் ஆர்.துரைசிங்கம், கே.கார்த்திக் மற்றும் எஸ்.சங்கர் ராமகிருஷ்ணன், பணிநடைபெறும் இடப் பொறியாளர்கள்– இவர்கள் கட்டுமானத்தை மேற்பார்வையிட்டு வந்ததுடன் சட்டத்திற்கு புறம்பான கட்டுமானத்தை எழுப்புவதில் கட்டுமானதாரருக்கு உதவியுள்ளனர்.

ஆய்வு வரம்பு எண்.(C):

இனிவருங்காலங்களில் இத்தகைய தவறுகள் நடைபெறுவதை தவிர்ப்பதற்கு எடுக்கப்படவேண்டிய தீர்வுகாண் நடவடிக்கைகளை பரிந்துரைத்தல்.

முடிவுகள்:-

இந்த ஆணையம், இனிமேல் இத்தகைய தவறு நடைபெறுவதை தவிர்ப்பதற்கு பின்வரும் தீர்வுகாண் நடவடிக்கைகளை பட்டியலிட்டுள்ளது. அவைகள் பின்வருமாறு:-

(அ) வல்லுநர் குழு தெரிவித்தவாறாக நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கட்டட தொகுதி-A (Block-A)-ஐ இடித்துவிடவேண்டும்;

(ஆ) காப்புறுதி தொகுப்புத் திட்டம், வங்கி, கட்டுமானதாரர் மற்றும் வாடிக்கையாளர் ஆகியோரிடையே முக்கோண பொறுப்புகளை உருவாக்குதல், சிறப்பு தண்டனை விதித்துறைகளை அறிமுகப்படுத்துதல், குறைந்தளவாக 10 ஆண்டுகளுக்கு குறித்த கால வைப்பீட்டில் குறிப்பிட்ட தொகையை வைப்பீடு செய்யுமாறு பெருந்திட்டப்பணிகளை மேற்கொள்கின்ற கட்டுமான நிறுவனங்களை வலியுறுத்தல் முதலியன போன்ற இன்றியமையாத அம்சங்களுக்காக விரிவான சட்டமொன்றினை இயற்றுதல் அல்லது நடைமுறையிலுள்ள சட்டத்திற்கு வலுவூட்டுதல்;

(இ) பெருந்திட்டங்கள் அனைத்தையும் கட்டாயமாக கண்காணித்து மேற்பார்வையிடுவதற்காக, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் தொழில்நுட்ப அதிகாரி ஒருவர், சட்ட அதிகாரி ஒருவர் மற்றும் மண் பரிசோதனை, கடைக்கால் வடிவமைப்பு, கட்டுமான பொறியியல் ஆகியவற்றில் வல்லுநர்கள் ஆகியோரைக் கொண்ட குழுவினை **(Committee to be formed by CMDA)** அடிப்படை நிலையிலேயே சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் ஏற்படுத்த இயலும்;

(ஈ) தரத்தினை உறுதிசெய்து, பணி நிறைவேற்றுகை தொடர்பான பிரச்சினைகளை களைவதுடன், குறிப்பாக கடைக்காலுக்கான மண் தோண்டும் பணி, கடைக்காலுக்கு கான்கிரீட் அமைத்தல், அடித்தளத்திற்கு மேற்கூரை அமைத்தல், ஒவ்வொரு தளத்திலும் மேற்கூரை அமைத்தல் ஆகிய அனைத்து முக்கிய நிலைகளிலும் பணி நடைபெறும் இடத்தை ஆய்வு செய்வதே இத்தகைய குழுவின் முதன்மை பணியாக இருக்கவேண்டும்;

(உ) விதிமுறைகளுக்கு மாறாக கட்டடங்கள் கட்டப்படுவதையும், விதிமீறல்களையும் முனைப்புடன் தடுக்கும்பொருட்டு, கட்டுமானதாரர்கள் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு பணியைத் தொடர அனுமதிப்பதற்கு நிலை வாரியான கட்டுமான சான்றிதழ்களை வழங்குவதற்கு இக்குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்படவேண்டும்;

(ஊ) பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டும் தீவிரப்படுத்துவதற்கு, கட்டுமானப்பணி முடிவடைந்த பின்னர், தடையின்மை சான்றிதழ் (இதன் அடிப்படையில் மட்டுமே நிரந்தர மின்சாரம் / குடிநீர் / கழிவுநீர் இணைப்புகளை பெற இயலும்) மற்றும் அனுபோக சான்றிதழ் (அடுக்குமாடி குடியிருப்பினை பதிவுசெய்கின்ற நபர்கள் அவர்கள் பகுதியினை பாதுகாப்பாக அனுபோகம் செய்ய உதவுவது) ஆகியவற்றை வழங்குவதற்கான செயல்நோக்கத்திற்காக இக்குழு, முழுமையான கட்டமைப்பினை மீண்டும் ஆய்வு 'செய்யவேண்டும்;

(எ) இதுபோன்ற பல கட்டுமானங்கள் யாதொரு ஆய்வும் மேற்கொள்ளப்படாமல் தொடர்ந்து கட்டப்பட்டு வருகின்றன என்ற புகார் தொடர்பாக, மாநகர எல்லைக்குள்ளும் அதனைச் சுற்றிலும் நடைபெற்று வருகின்ற அனைத்து பெருந்திட்டப்பணிகளையும் தொடக்க நிலையிலேயே ஆய்வு செய்வதற்கு உடனடியாக சிறப்புக்குழு ஏற்படுத்தப்படலாம் என்றும், இதனால் யாதொரு விரும்பத்தகாத சம்பவங்கள் மீண்டும் ஏற்படுவதை உடனடியாக தடுக்க இயலும் என்றும் பொறுப்புணர்வுடன் தெரிவிக்கப்படுகிறது;

(ஏ) பல்வேறு நிலைகளில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் மனைவிற்பனையாளர்களுக்கும் / கட்டுமானதாரர்களுக்குமிடையே நடைபெறுகின்ற மறைமுகமான பரிவர்த்தனைகள்மீது பிரத்யேகமான நடவடிக்கை எடுப்பதற்கு சிறப்புப் பிரிவு **(Special squad)** ஒன்றை ஏற்படுத்துவதன் வாயிலாக, விழிப்புப்பணித்துறையின் திறன் நூட்பத்தை பெருக்குதல்;

மேலும் அடுக்ககங்கள் வாங்கியோருக்கு ஏற்பட்ட இழப்புகள் மற்றும் அருகிலுள்ள குடியிருப்போருக்கு ஏற்பட்ட காயங்கள் மற்றும் சேதங்களைக் கருத்திற்கொண்டு, இவ்வாணையம் இதற்காக ஒரு குழுவை அமைக்கலாம் என்று பரிந்துரைத்தது. அடுக்குமாடி வீடுகளை வாங்குவதற்குப் பதிவுசெய்துள்ளவர்களுக்கும், அருகமைந்த வீடுகளில் குடியிருப்போருக்கும், கட்டடங்களுக்கும் ஏற்பட்ட இழப்பினை மதிப்பீடு செய்து இக்குழு அரசுக்கு உரிய பரிந்துரைகளை அளிக்கும். அதன்மீது அரசு இழப்பு / சேதத்துக்கு ஏற்றவாறு இழப்பீடு வழங்குவதற்கு மாநில பேரிடர் நிவாரண நிதியில் **(State Disaster Relief Fund)** உள்ள தொகைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

3. அரசு மிகக்கவனமாக ஆராய்ந்த பின்னர், ஆய்வு வரம்புகள் **(A)** மற்றும் **(B)**-ல் உள்ளவாறு, விசாரணை ஆணையத்தின் முடிவுகளை ஏற்றுக்கொள்வதென தீர்மானித்துள்ளது.

4. ஆய்வு வரம்புகள் **'C'** சார்ந்து விசாரணை ஆணையம் அளித்துள்ள பரிந்துரைகளைப் பொறுத்தவரை பன்மாடிக் கட்டடத் தொகுதி 'A'-வை இடிப்பது தொடர்பான பரிந்துரையை ஏற்கெனவே ஏற்று அரசாணை நிலை எண்.997, பொது (மி.க.) த்துறை, நாள் 07.11.2014–இல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

5. ஆய்வு வரம்பு **'C'**–இன் கீழ் உள்ள பிற பரிந்துரைகளைப் பொறுத்தவரை, அதாவது **(அ)** முதல் **(எ)** வரையுள்ள பரிந்துரைகளின்படி ஒரு விரிவான சட்டம் இயற்றவும், இத்தகைய பெரும் அனைத்து திட்டங்கள் குறித்து சட்டப்படியான ஆய்வினை மேற்கொள்வதற்கு ஒரு குழு அமைப்பது பற்றியும், மற்றும் ஒரு சிறப்பு குழுவை அமைத்து தற்போது நடைபெற்றுவரும் அத்திட்டங்களின் செயலாக்கம் பற்றி ஆராய்ந்து தக்க ஆணைகள் பிறப்பிப்பதற்காக வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைக்கு அனுப்பப்படுகிறது.

6. அதேபோன்று, ஆய்வு வரம்பு **'C'**–யின் கீழ் உள்ள 'ஏ'–இல் காணும் முடிவுகளைப் பொறுத்தவரை, அதாவது, கட்டுமான ஒப்பந்தக்காரர்களுக்கும், அலுவலர்களுக்கும் இடையேயான மறைமுக நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக விழிப்புப்பணி கண்காணிப்புத்துறைக்குள்ளேயே **(Vigilance Department)** ஒரு சிறப்புப் பிரிவை உருவாக்குவதுபற்றி தக்க ஆணைகள் வெளியிட பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (பயிற்சி)த்துறை ஆராயும்.

7. அடுக்குமாடி வீடுகளை வாங்கியோருக்கும், அருகில் குடியிருப்போருக்கும் ஏற்பட்ட இழப்பை மதிப்பீடு செய்து மாநில பேரிடர் நிவாரண நிதி **(SDRF)**-யிலிருந்து இழப்பீடு வழங்குவதைப் பொறுத்தவரை, ஏற்கெனவே அரசு உயிரிழந்தவர்களுக்கு ரூ.2 இலட்சம் முதல் ரூ.7 இலட்சம் வரை கருணைத் தொகையினையும், காயம்பட்டவர்களுக்கு ரூ.50,000/- வீதம் இழப்பீடும் வழங்கியுள்ளது. பணியாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ், அவர்களுக்கு வழங்கத்தக்க உரிய இழப்பீட்டுத் தொகையை வழங்குவதற்கு அரசும் விரைந்து நடவடிக்கை எடுத்துவருகிறது. அரசு மற்றும் பொது மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சை தேவைப்பட்டவர்களுக்கு, அரசு

அதன் சொந்த செலவில் அவர்களுக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சையும் வழங்கியுள்ளது. கட்டடம் இடிந்து விழுந்ததால் பாதிக்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பு வாங்கியோர் மற்றும் அதனருகில் குடியிருப்போருக்கும், இழப்புகளை மதிப்பீடு செய்து, இழப்பீட்டுத் தொகை மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்குவதற்கு, அதன் வழிகாட்டி குறிப்புகள் அனுமதிக்கவில்லை என்பதால் சாத்தியமில்லை. ஆயினும், இழப்புக்கு காரணமானவர்களிடமிருந்து, இழப்பீட்டைப் பெறுவதற்காக, அடுக்குமாடிக் குடியிருப்பு வாங்கியோருக்கும், அதனருகில் குடியிருப்போருக்கும் / குடியிருந்தோருக்கும் உதவிபுரிவதற்கான சட்டப்படியான வழிவகைகளை அரசு ஆராயும்.

(ஆளுநர் அவர்களின் ஆணைப்படி)

கு. ஞானதேசிகன்
தலைமைச் செயலாளர்.

பெறுநர்:-

முதன்மைச் செயலாளர், பொதுத் (சட்டம் மற்றும் ஒழுங்கு-F) துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.

முதன்மைச் செயலாளர்,
உள், மதுவிலக்கு (ம) ஆயத்தீர்வைத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.

முதன்மைச் செயலாளர்,
பணியாளர் (ம) நிர்வாகச் சீர்திருத்த (பயிற்சி)த்துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.

முதன்மைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.

செயலாளர்,
வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.

செயலாளர், சட்டத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.

காவல்துறை இயக்குநர்,
தமிழ்நாடு, சென்னை–4.

உறுப்பினர் செயலாளர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
சென்னை-8.

நகல் பெறுவோர்:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர்–I.
சென்னை–9.

மேதகு ஆளுநர் அவர்களின் முதன்மைச் செயலாளர்,
ராஜ்பவன், சென்னை–25.

மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் மாவட்டம்.




தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS